வரு.72 இல. 49 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமன்ஜரி

2020 டிசம்பர் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 06 Sunday, 2020

32பக்கங்கள் 40/-

கொவிட் 19 ஐ முறியடிக்கும் காலம் தொலைவில் இல்லை 03

கலவரத்துக்கு தூண்டப்பட்டனரா சிறைக் கைதிகள்? 06

துர்தேவதையாக வந்த புரவி 13

வித்யா பாலனை இரவு விருந்துக்கு அழைத்த மந்திரி 18

நீண்ட நாட்களாக முடக்கப்பட்டுள்ள பகுதிகள் விடுவிப்பது குறித்து இன்று இறுதி தீர்மானம்

மதிப்பீடு மேற்கொண்டு நடவடிக்கை என்கிறார் இராணுவத் தளபதி சவேந்திர

லோரன்ஸ் செல்வநாயகம்

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் முடக்கப்படாத பகுதிகள் என்பவற்றில் தொற்றாளர்கள் இனங்காணப்படும் எண்ணிக்கை தொடர்பில் வார இறுதி நாட்களில் மதிப்பிட்டு தனிமைப்படுத்தல் தொடர்பில் இன்று இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நீண்ட நாட்களாக முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமை மற்றும் முடக்கப்படாத பகுதிகளில் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமை என்பவற்றால் தனிமைப்படுத்தல் குறித்து எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது குறித்து விளக்கமளிக்கும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது முடக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் முடக்கப்படாத பகுதிகளில் எவ்வாறு தொற்றாளர்கள் இனங்காணப்படுகிறார்கள் என்பதை வார இறுதி நாட்கள் வரை மதிப்பிட்டதன் பின்னர் தனிமைப்படுத்தல் குறித்து தீர்மானிக்கப்படும்.

அத்தோடு அடுத்த வாரமளவில் முடக்கப்பட்டுள்ள கிராம சேவகர் பிரிவுகளை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி 04

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஆளுந்தரப்பு தமிழ் உறுப்பினர்கள் மகஜர்

நேற்று நீதியமைச்சர் அலி சப்ரியிடம் கையளித்தனர்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மகஜரொன்று நேற்றையதினம் (05) அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. மகஜரை குழுக்களின் 04

ஜனாதிபதி தேர்தலில் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை ஏன் எடுத்தார்?

சம்பந்தன் இனியாவது சொல்வாரா? ஆனந்த சங்கரி கேள்வி

ஜனாதிபதித் தேர்தலில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை என்ன நலனை கருத்தில் கொண்டு எடுத்தாரென்பதை இன்றேக்கேனும் இரா. சம்பந்தன் வெளிவிடுவாரா? என தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது யுத்தத்தை தான் திட்டமிட்டு முடித்ததாக கூறியுள்ளார். இது தொடர்பில் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய எல்லாவற்றையும் கலைத்து விடுவதே சிறந்ததாகும் என்றும் 04

நீர்த்தேக்கத்தை பார்வையிட சென்ற 18 வயது இளைஞன் மாயம்

தேடுதல் தீவிரம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா, புதுக்குளம் பகுதியிலமைந்துள்ள நீர்த்தேக்கத்தை பார்வையிடுவதற்கு சென்ற இளைஞன் நீரில் அடித்து செல்லப்பட்டு மாயமாகியுள்ளார். வவுனியாவில் பெய்த கனமழையின் காரணமாக வவுனியா புதுக்குளத்திலமைந்துள்ள நீர் தேக்கம் நிரம்பியதுடன் மேலதிக நீர் சுருங்கை வழியாக 04

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் நிறைவு; ஆவணங்கள் அனைத்தும் சட்ட மாஅதிபரிடம்

விரைவில் வழக்கு தாக்கல்; 257 பேர் விளக்க மறியலில்

ஷம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

ஈஸ்டர் தற்கொலை குண்டு தாக்குதல்களுடன் தொடர்புபட்ட 08 சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துவிட்டன. 257 பேர் விளக்கமறியலிலுள்ளனர். ஆவணங்கள் அனைத்தும் சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இனி சட்ட மாஅதிபர்தான் வழக்கு தொடுக்க வேண்டும். அதனை துரிதப்படுத்துமாறு அவரை 04

இந்து குருமாருக்கு தேவையான உதவிகளும் அங்கீகாரமும் வழங்கப்படும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

இந்து ஆலய சிவாச்சாரியார்களுக்கு தேவையான அங்கீகாரம் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் வாழ்வாதார அபிவிருத்தியும் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று கடற்றொழில் அமைச்சரை சந்தித்த சர்வதேச இந்து மத பீடத்தின் 04

சரத் பொன்சேகாவுக்கு பதிலடி இருக்கிறது

என்னிடம் மாட்டியுள்ளார் மனோ

சரத்பொன்சேகா MP, என்னை பற்றி நேற்று சபையில் நானில்லாத வேளையில், பேசியுள்ளார் என்பது என் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மரங்கொத்தி, மரம் மரமாக கொத்தி விட்டு, கடைசியில் வாழை மரத்துக்கு கொத்தி மாட்டிக்கொள்ளுமாம். அதுபோல், இவர் என்னிடம் மாட்டிக் கொண்டுள்ளார்.

நான் அரசியல் "பொடியன்" அல்ல, அவரைவிட "சீனியர்" என்ற அடிப்படையில், அவருக்கு 04

வடக்கில் தொடரும் அடைமழை, வெள்ளம்;

சீரற்ற காலநிலையால் யாழில் பல பகுதிகள் நீரில்

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்யும் கனமழை காரணமாக யாழ்ப்பாணம் பஸ் நிலையம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் மக்கள், தங்களது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

'புரவி' புயல் தாக்கத்தினை 04

தாழமுக்க மழை காரணமாக

மன்னாரில் பெரும்போக செய்கை முற்றாக பாதிப்பு

வங்கக்கடலில் நிலை கொண்ட தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வந்த நிலையில், பெரும் போகநெற்செய்கைபாதிப் படைந்துள்ளது.

கடும் மழை 04

அர்ஜுனை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை

சட்ட மாஅதிபரினால் சிங்கப்பூருக்கு விளக்க குறிப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக சட்ட மாஅதிபர் டப்புல டி லிவேரா நேற்று சிங்கப்பூருக்கு விளக்கக்குறிப்பு ஒன்றை சமர்ப்பித்துள்ளார். சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜெயரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விளக்கக் குறிப்பு தொடர்பில் நீதி அமைச்சின் 04

பாதசாரிகள் கடவையில் நடந்த கொடூரம்;

மோட்டார் சைக்கிள் மோதி கர்ப்பிணி தாய் படுகாயம்; இரு சிறுமிகள் பலி

மொரட்டுவ பகுதியில் நேற்று முன்தினமிரவு சம்பவம்

மொரட்டுவை எகொடஉயன புதிய காலி வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு சிறுமிகள் உயிரிழந்துள்ளதோடு, கர்ப்பிணி பெண்ணொருவர் பலத்த காயமடைந்த நிலையில் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.ஒரு வயது மற்றும் ஏழு வயதுடைய இரு சிறுமிகளே மரணமடைந்துள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,... 04

நோர்வூட் முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து

காணாமல் போன அம்மன் சிலை 4 மாதங்களின் பின் கண்டுபிடிப்பு

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நோர்வூட் கிழ்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் காணாமல் போன அம்மன் சிலை நான்கு மாதங்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 03 ஆம் திகதி நோர்வூட் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே அம்மன் 04

விக்கல் வீராச்சாமி

தமிழ் மக்களின்ர வயதுமுதிர்ந்த அனுபவசாலி தலைவர்கள எவரையும் பாராளுமன்ற பக்கமே காணக்கிடைக்கல.....

கொரோன பயத்தால போக வேண்டாம் எண்டு வெளிநாட்டில இருக்கிற பிள்ளைகள் சொல்லி இருப்பினம்....!!!

இலங்கையில்

நரம்பியல் சத்திர சிகிச்சையில் மற்றொரு மைல்கல்

குறைந்த மருத்துவ வளங்களைக் கொண்டுள்ள இலங்கை போன்ற ஒரு நாடு மருத்துவ திருப்பு முனை பற்றிய அறிவிப் பொன்றை பெருமையுடன் மேற்கொள்ளும் நிலை எப்போதாவது ஒரு முறைதான் வரும். எனவே அவ்வாறான ஒரு அறிவிப்பு வெளிவந்தால் நிச்சயம் அது விசேடமான ஒன்றாகத்தான் இருக்கும்.

நோயாளி அறியும் ஆற்றலுடன் விழித்திருக்கும் போதே மண்டையோட்டைப் பிளந்து உள்ளே மூளையில் ஏற்பட்டுள்ள கட்டியொன்றை அகற்றும் தேவை மருத்துவர்களுக்கு ஏற்படும்போது *Awake Craniotomy* என்ற மருத்துவ தொழில் நுட்பம் பயன்படுத்தப் படுகிறது. அவ்வாறான சத்திரசிகிச்சையொன்றின்போது நோயாளியின் அறியும் திறனை தெரிந்து கொள்ள வேண்டிய தேவை மருத்துவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வாறான *"AWAKE CRANIOTOMY"* என்ற மருத்துவ தொழில் நுட்பத்தை முதல் முறையாக இலங்கையின் அரச துறையில் பயன்படுத்தி அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திர சிகிச்சைப்பிரிவு டாக்டர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

மூளையில் கட்டி ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த விஜேரட்ன என்ற நோயாளிக்கே இந்த சத்திரசிகிச்சை கடந்த முதலாம் திகதி (2020 டிசம்பர் 1 வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்த டாக்டர்கள் குழுவில் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் மதுசங்க கோமஸ் தலைமையில் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ரொஹான் பீரிஸ் இடம் பெற்றார். நோயாளிக்கு தேவையான மயக்க மருந்தை மயக்க மருந்து வைத்திய நிபுணர் டாக்டர் லெவன் காரியவசமும் அவரது குழுவினரும் வழங்கியிருந்தனர். நோயாளிக்கு முதலில் தீவிரமான மயக்க மருந்து கொடுக்கப்பட்டு மண்டையோட்டின் ஒரு பகுதி அகற்றப்பட்டது.

அதன் பின் கட்டி அகற்றப்படவேண்டியிருந்த நிலையில் மயக்க நிலையில் இருந்து நோயாளி எழுப்பப்பட்டு அவரிடம் சில சோதனைகளை செய்து காட்டுமாறு கேட்கப்பட்டது. மூளையின் பகுதிகள் மற்றும் செயற்பாடுகளை பாதிக்காதவாறு இந்த சோதனை நடவடிக்கைகள் செய்யப்பட்டன.

இந்த செயற்பாடானது இவ்வாறான சந்தர்ப்பங்களில் சாதாரணமாக செய்யப்படும் சத்திர சிகிச்சையைப் போலன்றி நோயாளிக்கு சிறப்பான வாழ்க்கையை மேற்கொள்ளவும், சீக்கிரம் குணமாகவும் மற்றும் வைத்தியசாலை செலவைக் குறைக்கவும் வழி வகுக்கிறது. சத்திர சிகிச்சையின்

டாக்டர் **நதுன் யொஹான் போரா.**
வைத்திய அதிகாரி,
அனுராதபுரம் போதனா வைத்தியசாலை.

பின்னர் எந்தவொரு பின் விளைவுகள் பற்றியும் அறிவிக்கப்படாத நிலையில் நோயாளி வீட்டுக்குச் செல்ல தயாராகி வருகிறார்.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

தொல்பொருள் திணைக்களம்

வழங்குநர்கள் பதிவு செய்தல் – 2021 ஆம் ஆண்டு

தொல்பொருள் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்வதற்கு விரும்புகின்ற வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ உள்நாட்டு முகவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் வர்த்தகர் பட்டியலில் (Rainbow Pages) ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் வழங்குநர்கள் இந்த விளம்பரத்திற்கு அமைய பதிவு செய்வது அத்தியாவசியம் இல்லை.

1. அனைத்து வகையான அலுவலக எழுதுபொருட்கள் (Stationery)
2. அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் (Office Equipment & Machinery)
3. கணினி இயந்திரங்கள் மற்றும் துணைப் பொருட்கள்.
4. வீட்டு மின் உபகரணங்கள் (House Holding)
5. அலுவலக தளபாடங்கள் (Office Furniture)
6. இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயன உபகரணங்கள் (தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைக்காக)
7. துணிகள் (Material Clothing/ Uniforms)
8. அனைத்து வகையான டோனர்கள் (தொலைநகல்/ நிழற்பிரதி இயந்திரம்/ அச்சுப்பொறி)
9. துப்புரவு உபகரணங்கள் மற்றும் பொருட்கள்.
10. புகைப்படமெடுத்தலுடன் தொடர்புபட்ட கெமரா மற்றும் கருவிகள்.
11. கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தொல்பொருள் பாதுகாப்பு/ பராமரிப்பு/ ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக)
12. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பை தயாரித்தல்.
13. புல் வெட்டும் இயந்திரம்.
14. வாகன பராமரிப்பு மற்றும் வாகனம் பழுதுபார்த்தல்.
15. வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்.
16. வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்கல் - வேன்/ லொறி/ கார்/ டிரக்டர்/ கலி பௌசர் மற்றும் வேறு.
17. புத்தகம் அச்சிடல்.
18. மொழிபெயர்ப்புப் பணி (சிங்களம் - தமிழ், சிங்களம் - ஆங்கிலம்)
19. மரச்சாமான்கள் சீரமைப்பு.
20. கற்சிற்ப/ மரச் சிற்ப வேலைகள்.
21. தொழிலாளர் வழங்கல் மற்றும் துப்புரவு சேவைகள் (பயிற்சி பெற்ற/ பயிற்சியற்ற)
22. ஓவியர்கள்/ சிற்பக் கலைஞர்/ தச்சர்கள்.
23. கணினி, நிழற்பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் நன்னிலைப்படுத்தல்.
24. உருக்கியொட்டல், இரும்பு வேலைகள்.
25. கருவி உபகரணங்கள் வாடகை அடிப்படையில் வழங்கல்.
26. பகல் உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கல்.
27. பூச்சிக் கட்டுப்பாடு (Exterior Bolting System)
28. வளிச்சீராக்கி நன்னிலைப்படுத்தல்.
29. CCTV கெமரா கட்டமைப்பை பொருத்துதல்.
30. மின் ஒளியூட்டும் கட்டமைப்பின் ஏற்பாடு மற்றும் பொருத்துதல்.
31. கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் முக அடையாள இயந்திரம் வழங்கல்.
32. வாடகை அடிப்படையில் நிகழ்ச்சிப் பொருட்கள் வழங்கல்.
33. அலுவலக / கட்டிடங்கள் பாட்டிசன் செய்தல்.

நிபந்தனைகள்

1. 2020.12.07 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொழும்பு பிரதான அலுவலகத்தில் அல்லது கீழுள்ள பிராந்திய அலுவலகங்களில் இருந்து ஒரு பணிக்கு 1,000 ரூபாவாக மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப்பணமாக செலுத்தி விண்ணப்ப படிவம் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் ஏற்கப்படுவது 2020.12.31 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முடிவுறும்.
2. உங்களின் விண்ணப்பங்களுடன் வர்த்தகப் பதிவு சான்றிதழை சமர்ப்பிப்பது அவசியம் என்பதோடு கருங்கல், மணல், பலகை, வாகனங்களை வாடகைக்குப் பெறல் ஆகிய வழங்கல்களுக்காக குறித்த சிறப்பு சட்ட உரிமம் விலைமனுக்கள் கோரப்படும் சந்தர்ப்பங்களில் பரீட்சிக்கப்படும். பதிவு செய்வதற்காக எந்த ஒரு விண்ணப்பப் படிவத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் வசமானதாகும்.
3. நீங்கள் இதற்கு முன்னர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பப் படிவங்களை பெற முடியுமான இடங்கள்

1.	தலைமை அலுவலகம், சர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07	0112694728
2.	பிராந்திய அலுவலகம் (வட மத்திய), அநுராதபுரம்	025-2222411
3.	பிராந்திய அலுவலகம் (மத்திய), கண்டி	081-2222336
4.	பிராந்திய அலுவலகம் (வயம்ப), படுவஸ்நுவர	037-2220475
5.	பிராந்திய அலுவலகம் (மேல்), கொழும்பு - 07	011-2667377
6.	பிராந்திய அலுவலகம் (தெற்கு), காலி	091-2234071
7.	பிராந்திய அலுவலகம் (சபரகமுவ), அவிசாவளை	036-2232674
8.	பிராந்திய அலுவலகம் (கிழக்கு), அம்பாறை	063-2222017
9.	பிராந்திய அலுவலகம் (ஊவா), பதுளை	055-2222637
10.	பிராந்திய அலுவலகம் (வடக்கு), யாழ்ப்பாணம்	021-2224574
11.	பிராந்திய அலுவலகம் (வடக்கு), வவுனியா	024-2224805
12.	பிராந்திய அலுவலகம் (கிழக்கு), திருகோணமலை	026-2221530
13.	பிராந்திய அலுவலகம் (ஊவா), மொனராகலை	055-2277738
14.	பிராந்திய அலுவலகம் (தெற்கு), ஹம்பாந்தோட்டை	047-2256688
15.	பிராந்திய அலுவலகம் (சபரகமுவ), இரத்தினபுரி	045-2233737
16.	பிராந்திய அலுவலகம் (வடமத்திய), பொலன்னறுவை	027-2050448

தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்
தொல்பொருள் திணைக்களம்
சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு - 07.

இலங்கையின் அம்பாறை, மொனராகலை மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கான மொபைல் விற்பனை மையங்களை கொள்முதல் செய்தல்

பெண் தொழில்முனைவோருக்காக மூன்று வகையான மொபைல் விற்பனை மையங்களை உருவாக்கக்கூடிய சாத்தியமான ஏலதாரர்களுக்கு ஐ.நா. பெண்கள் அமைப்பு அழைப்பு விடுக்கின்றது. மிதித்துச் செல்லக்கூடிய, தள்ளிச்செல்லக்கூடிய மொபைல் வண்டிகள் மற்றும் தற்காலிக இடங்கள் இவற்றில் அடங்கும். மிதிவண்டிகள் மற்றும் தள்ளிச்செல்லக்கூடிய வண்டிகள் சிறிய சூரியசக்தி அலகுகளால் இயக்கப்பட வேண்டும். (ஏலம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கீழே தரப்பட்டுள்ள இணைப்புகளுக்குச் (link) சென்று பார்க்கவும்). மொபைல் சந்தைகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் நிலையான வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாக, பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியே இதுவாகும்.

அதற்கு மேலதிகமாக, இது ஒரு அடிப்படை உரிமை என்பது மட்டுமன்றி, அதன் தாக்கம் தனிநபர், சமூகம் மற்றும் தேசிய மட்டங்களில் பரவுவதால், பாலின சமத்துவத்தின் கீழ் பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டல் நீண்ட காலமாக "ஸ்மார்ட் பொருளாதாரங்கள் - Smart economies" என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியில் பெண்களின் தொழில்முனைவு என்பது பெண்களின் சொந்த யோசனைகள், புத்தாக்கம் மற்றும் வளங்களை அடிப்படையாகக் கொண்ட வேலை வாய்ப்புகளை வழங்குவது மட்டுமன்றி பெண்களின் கௌரவம், சுயமதிப்பு மற்றும் சமூக அங்கீகாரத்திற்கான அத்தியாவசியமான கட்டமைப்பான பொருளாதார வலுவூட்டலுக்கும் உதவுகின்றது. பெண்களின் பொருளாதார வலுவூட்டலின் விளைவாக அது சமூக மட்டத்திற்கு விரிந்து செல்கின்றது. காரணம், தமது குடும்ப வருமானத்தின் பெரும்பகுதியை குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்தில் முதலீடு செய்வதற்கு ஆண்களை விட பெண்கள் அதிகமாக ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

ஐ.நா பெண்கள் அமைப்பின் மின்-கொள்முதல் இணைய முகப்பு, ஐ.நா.வின் உலகளாவிய சந்தை தளம் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பின் இணையத்தளத்தில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு 2020 நவம்பர் 18ஆம் திகதிமுதல் 2020 டிசம்பர் 12ஆம் திகதிவரை ITB/APA30/2020/01906 விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆர்வமுள்ளவர்களுக்கு நாம் தெரிவித்துக்கொள்கின்றோம். தயவுசெய்து மின்-கொள்முதல் முறையின் **(e-procurement system)** ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

- ஐ.நா. பெண்கள் அமைப்பின் மின்-கொள்முதல் இணைய முகப்பு (UN Women e-Procurement portal): https://unorganiser.intend.co.uk/unwomen/aspx/ITFramework.aspx?SK=09a05ec4-fe57-40bf-997d-d630317ca16c
- ஐ.நா.வின் உலகளாவிய சந்தை தளம் (UNGM): https://ungm.in-tend.co.uk/unwomen/aspx//ProjectManage/1906
- ஐ.நா. பெண்கள் அமைப்பின் இணையத்தளம்: http://www.unwomen.org/en/about-us/procurement

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவம் தொடர்பான நோக்குநிலையின் அடித்தளமாக விளங்கும் ஐ.நா. பெண்கள் அமைப்பு, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை இல்லாதொழிக்கவும், பெண்களை வலுவூட்டவும், அபிவிருத்தி, மனித உரிமைகள், மனிதாபிமான நடவடிக்கை, சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் பங்காளிகளாகவும் அபிவிருத்தி, மனித உரிமைகள், மனிதாபிமான நடவடிக்கை, அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் பங்காளிகளாகவும் பயனாளிகளாகவும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையிலான சமத்துவத்தை அடைந்துகொள்ளவும் செயற்படுகின்றது.

இலங்கை சனத்தொகையில் 20 வீதத்தினருக்கு கொவிட் 19 தொற்று தடுப்பு மருந்து இலவசமாக வழங்கப்படும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ள சூழலில் இத்தொற்றுக்கான தடுப்பு மருந்தை எமது நாட்டுக்கும் வழங்கும் நடவடிக்கையை பிரித்தானியா அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளது. தடுப்பு மருந்து இலங்கையர்கள் அனைவருக்கும் கிடைக்குமா, எப்போது கிடைக்கும் போன்ற மக்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய விசேட பேட்டி....

கொவிட் 19 தடுப்பு மருந்து வந்தாலும் சுகாதார நடைமுறைகளை கைவிடக்கூடாது

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர

கேள்வி - கொவிட் 19 தொற்றுக்கான தடுப்பு மருந்தை தம் மக்களுக்கு வழங்க பிரித்தானியா நடவடிக்கை எடுத்துள்ள தற்போதைய சூழலில் அம்மருந்து தொடர்பில் குறிப்பிடுவதாயின்?

பதில் - அமெரிக்க, ஜேர்மன் நிறுவனங்களான பைஸர் பயோன்டெக் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள தடுப்பு மருந்தை தமது மக்களுக்கு அடுத்த வாரம் முதல் வழங்க பிரித்தானியா அங்கீகாரம் அளித்துள்ளது. இத்தடுப்பு மருந்து மைனஸ் 70 டிகிறி செல்லியஸில் வைத்திருக்க வேண்டும். அதாவது கடும் குளிரில் தான் அதனைக் களஞ்சியப்படுத்த வேண்டும். அவ்வாறான தடுப்பு மருந்தைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி எமது நாட்டில் இல்லை. அவ்வாறான தடுப்பு மருந்தைப் பெறுவதாயின் அதற்கான விஷேட களஞ்சியப்படுத்தல் மற்றும் குளிரூட்டல் வசதிகளை புதிதாக ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக எமது மத்திய மருந்து களஞ்சியப்படுத்தல் நிலையம், மாவட்ட களஞ்சியப்படுத்தல் நிலையம் மற்றும் வைத்தியசாலைகளில் இவ்வசதிகள் ஏற்பாடுத்தப்பட வேண்டும். இது எம்மைப் போன்ற நாடுகளுக்கு அதிக செலவான காரியமாகவே இருக்கும்.

அதேதேரம் இதனை விடவும் மைனஸ் 20 டிகிறி செல்சியஸில் களஞ்சியப்படுத்தக்கூடிய மற்றொரு தடுப்பு மருந்தும் உள்ளது. அத்தடுப்பு மருந்துக்கும் கூட மேலே குறிப்பிட்ட குளிரூட்டல் வசதி மிகவும் அவசியமானது.

எமது நாட்டில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற தடுப்பு மருந்துகள் 4 முதல் 8 டிகிறி செல்சியலில் தான் சாதாரணமாகக் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. இதற்கு சாதாரண குளிரூட்டி வசதி போதுமானது. இவ்வசதியை எமது மத்திய மருந்துக் களஞ்சியசாலையும், மாவட்ட மருந்துக் களஞ்சியசாலையும், வைத்தியசாலைகள், மருத்துவ அதிகாரி அலுவலகம் என எல்லா இடங்களுமே கொண்டிருக்கின்றன. ஆனால் போலியோ போன்ற தடுப்பு மருந்துகள் மைனஸ் 20 செல்ஸியசிலும் களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

கேள்வி - இவ்வாறான நிலையில் கொவிட் 19 தடுப்பு மருந்து தொடர்பில் மேற்கொள்ள வேண்டியவை யாவை ?

பதில் - கொவிட் 19 தொடர்பான பெரும்பாலான மருந்துகள் இன்னும் ஆராய்ச்சி மட்டத்தில் தான் உள்ளன. என்றாலும் தடுப்பு மருந்து கிடைக்கப் பெறுவதற்கு ஏற்ப வாகனங்கள், ஆளணி மற்றும் குளிரூட்டல் வசதிகள் போன்ற தேவைப்பாடுகள் தொடர்பில் திட்டமிட்ட அடிப்படையில் தயாராக வேண்டும்.

உலக சுகாதார ஸ்தாபனம், கெவி நிறுவனம், ஈ.பி.ஐ. செபி நிறுவனம் ஆகிய மூன்றும் இணைந்தே தடுப்பு மருந்தை உலகிற்கு வழங்கக்கூடிய நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. எம்மைப் போன்ற நாடுகளுக்கு சனத்தொகையில் 20 வீதத்தினருக்கு கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பு மருந்தை இலவசமாக வழங்க அவர்கள் தீர்மானித்துள்ளனர். முழு நாட்டுக்கு மக்களுக்கும் இத்த டுப்பு மருந்தை வழங்குவதாயின் ஏனைய 80 வீதத்தையும் நாம் பணம் செலுத்தி தான் கொள்வனவு செய்ய வெண்டும். இது தொடர்பில் நாம் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை.

இதேவேளை தடுப்பு மருந்தை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கும் அனுமதி என்பது வழி காட்டல்களே. நாடுகள் தான் அந்த தடுப்பு மருந்தை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் பிரித்தானியா தீர்மானம் எடுத்திருக்கின்றது. இலங்கையில் எந்தவொரு தடுப்பு மருந்து வழங்குவதென்றாலும் அது தொடர்பில் தொற்று நோய்கள் தொடர்பான தேசிய ஆலோசனைக் கமிட்டி தான் முடிவு எடுக்கும். அதற்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கேள்வி - இத்தடுப்பு மருந்து கிடைக்கப்பெற்றால் கொவிட் 19 அச்சுறுத்தல் நீங்குமா?

பதில் - இல்லை. இல்லை. தடுப்பு மருந்து கிடைக்கப்பெற்ற போதிலும் இத்தொற்றுலிருந்து உடனடியாக பாதுகாப்பு பெற்றிட முடியாது. அதனால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடுகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை சில வருடங்களுக்கு தொடர்ந்தும் பேண வேண்டும். அவற்றை எவ்வகையிலும் குறைக்கவோ, கைவிடவோ முடியாது. இவற்றைப் பேணியபடி தான் தடுப்பு மருந்து வழங்கலை முன்னெடுக்க வேண்டும். என்றாலும் இத்தடுப்பு மருந்து எம்மைப் போன்ற நாடுகளுக்கு வந்து சேர 2021 ஜூன், ஜூலை மாதமாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால் தற்போதைய ஏற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

கேள்வி - இத்தடுப்பு மருந்து இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதும் எவ் அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்படும்?

பதில் - இரு விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும். அவற்றில் ஒன்று இத்தொற்று ஏற்பட்டால் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றவர்கள். குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், நீரிழிவு போன்ற நாட்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர். அதாவது இத் தொற்றினால் மரண அச்சுறுத்தலை எதிர்கொள்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இதனை வழங்குவது குறித்து கலந்துரையாடப்படுகின்றது. அடுத்தபடியாக இத்தொற்றுக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தலை பெரிதும் எதிர் நோக்குபவர்களாவர். குறிப்பாக சுகாதார துறை உத்தியோகத்தர்கள், பொலிஸ், பாதுகாப்பு தரப்பினர் உட்பட பொருளாதார நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றுவர்கள், பொருளாதாரத்திற்கு அதிகம் பங்களிக்கும் முதலீட்டு சபையின் கீழுள்ள தொழிற்சாலைகளில் தொழில் புரிபவர்கள் என்ற படி முன்னுரிமை அடிப்படையில் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்கள் தெரிவு செய்யப்படுவர். இத்தடுப்பு மருந்தின் மூலம் அதிகம் பிரதிபலன்கள் கிடைக்கப்பெறக்கூடிய வகையில் வழங்குவது குறித்து முதலில் தீர்மானம் எடுக்கப்படும்.

ஆகவே இம்மருந்தும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதாவது இம்மருந்தை எவருக்கு வழங்கலாம்? எவருக்கு வழங்கக்கூடாது? எந்த வயது மட்டத்தினருக்கு இம்மருந்தினை பயன்படுத்தலாம்? எந்த வயது மட்டத்தினருக்கு வழங்கினால் வேறு பாதிப்புக்கள் ஏற்படாது? என்பன தொடர்பில் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதனால் இது தொடர்பில் விரைவாக ஆய்வு செய்யவென பேராசிரியர்கள் குழுவென்று நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் குறுகிய காலத்திற்குள் ஆராய்ச்சிக்காக திட்டமிடலை மேற்கொள்வர். அதற்கு ஏற்ப ஒழுங்குமுறையாக இவ்வாராய்ச்சியை விரைவில் மேற்கொண்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும்.

மர்லின் மரிக்கார் ...

இத்தடுப்பு மருந்தை மைனஸ் 70 டிகிறி செல்ஸியஸில் வைத்திருக்க வேண்டும்

கொவிட் 19 அச்சுறுத்தலை முறியடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை

மர்லின் மரிக்கார்

இன்றைய நவீன யுகத்தில் உலகிற்கே பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்றுக்கான தடுப்பு மருந்தை தம் மக்களுக்கு வழங்க பிரித்தானியா அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் ஊடாக இத்தொற்றுக்கான தடுப்பு மருந்தை அங்கீகரித்த முதல் நாடு என்ற பெருமையைப் பெற்றுக்கொண்ட பிரித்தானியா வரலாற்றிலும் தனியிடம் பிடித்துவிட்டது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க அங்கீகாரம் 2020.12.03 ஆம் திகதி பிரித்தானியாவின் மருந்துகள் மற்றும் சுகாதார பராமரிப்பு உற்பத்திகள் ஒழுங்குபடுத்தல் முகவரக நிபுணர்களால் வழங்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்காவின் பைஸர் நிறுவனம் ஜேர்மனியின் பயோஎன்டெக் நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்து உருவாக்கி தயாரித்துள்ள தடுப்பு மருந்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ள பிரித்தானியா அடுத்த வாரம் முதல் தடுப்பு மருந்தை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் நிமித்தம் 40 மில்லியன் சொட்டு தடுப்பு மருந்தை பிரித்தானியா கொள்வனவு செய்துள்ளதோடு 20 மில்லியன் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவும் ஏற்பாடு செய்திருக்கின்றது.

இதேவேளை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் கொவிட் 19 தொற்று தடுப்பு மருந்தை மக்களுக்கு வழங்கவும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த தகவல்கள் கொவிட் 19 தொற்று தொடர்பில் பெரும் பீதிக்கு உள்ளாகி இருக்கும் உலகுக்கு ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகும்.

சீனாவின் வுஹான் நகரில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்ற கொவிட் 19 வைரஸ் மிகவும் குறுகிய காலப்பகுதியில் உலகின் எல்லா நாடுகளுக்கும் பரவியதோடு இற்றை வரையும் 06 கோடியே 55 இலட்சத்து 37 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ளது. அத்தோடு 15 இலட்சத்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் மரணத்துக்கும் காரணமாக அமைந்துள்ளது. இத்தொற்றுக்கு உள்ளானவர்களில் 04 கோடியே 53 இலட்சத்து 77 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அந்த வகையில் இலங்கையில் இத்தொற்றுக்கு இற்றை வரையும் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உள்ளாகியுள்ளதோடு 19 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர். என்றாலும் 129க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர்.

இவ்வாறு குறுகிய காலப்பகுதிக்குள் அதிக பாதிப்புக்களையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ள இத்தொற்றினால் எல்லா நாடுகளுமே சமூக, பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்திருக்கின்றன. அவற்றில் வளர்முக நாடுகள் மாத்திரமல்லாமல் அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூட பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகியுள்ளன.

என்றாலும் இத்தொற்றின் பரவுதல் வேகம், தாக்கம், பாதிப்புக்கள் என்பன தொடர்பில் ஆரம்பத்திலேயே கவனம் செலுத்திய உலக சுகாதார ஸ்தாபனம் இத்தொற்றைத் தவிர்ப்பதற்கான அல்லது கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க உலகம் முன்வர வேண்டும் என்று இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியிலேயே பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தது. அந்தளவுக்கு மருத்துவ விஞ்ஞானத் துறைக்கு இத்தொற்று பெரும் சவாலாக விளங்கியது.

இந்த பின்புலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் மொடர்னா நிறுவனம் கொவிட் 19 தடுப்பு மருந்தொன்றைத் கண்டுபிடித்து தயாரித்ததோடு அம்மருந்தை பரீட்சிப்பதற்காக சுயமாக முன்வந்த ஜெனிபர் ஹல்லர் என்ற 43 வயது பெண்மணி முதன் முதலாக கடந்த மார்ச் 16 ஆம் திகதி தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்டார். இதுவே கொவிட் 19 தடுப்பு மருந்துக்கான ஆரம்ப தடமாகும்.

அதேநேரம் இத்தொற்றினால் உலகம் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து உருவாக்குவதில் உலகின் பல நாடுகள் மாத்திரமல்லாமல் நிறுவனங்களும் கூட முயற்சியில் இறங்கின. இந்தப் பின்புலத்தில் கடந்த ஜூலை மாதமாகும் போது உலகில் 140 க்கும் மேற்பட்ட தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு பல்வேறு மட்ட பரிசோதனை நிலைகளை அடைந்திருந்தன. அவற்றில் சுமார் 20 தடுப்பு மருந்துகள் மனிதனில் செலுத்தி பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ரஷ்யா, 'கொவிட் 19 தடுப்புக்கான தமது தடுப்பு மருந்து வெற்றியளித்துள்ளதாக' அறிவித்தது. இந்தப் பின்னணியில் செப்டம்பர் இறுதியாகும் போது இத்தொற்றுக்கான தடுப்பு மருந்து புழக்கத்திற்கு வந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒக்டோபர் மாதம் கடந்தும் கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பு மருந்து வரவில்லை.

இந்த நிலையில் பைஸர் பயோஎன்டெக் நிறுவனம், 'நாம் தயாரித்துள்ள கொவிட் 19 தடுப்பு மருந்து 90 வீதம் பயனளிக்கக்கூடியது' என்றும் 'இதனை 70 மைனஸ் செல்சியஸ் வெப்பநிலையில் வைத்திருக்க வேண்டும்' என்றும் நவம்பர் நடுப்பகுதியில் உலகிற்கு அறிவித்தது. அம்மருந்தை கண்டுபிடித்து தயாரித்துள்ள ஜேர்மனியில் வசிக்கும் துருக்கியைப் பூர்வீகமாகக் கொண்ட விஞ்ஞானி ஊகுர் ஷாஹீன் தமது தடுப்பு மருந்து கொவிட் 19 சவாலுக்கு முடிவு கட்டும்' என்றும் அது அறிவியலுக்கும், மனிதக் குலத்திற்கும் கிடைத்த பெருவெற்றி' என்றும் குறிப்பிட்டார்.

அதேநேரம் பி.பி.சி. சர்வதேச சேவைக்கு அவர் அளித்த பேட்டியில், 'இத்தடுப்பு மருந்து ஆறு நாடுகளில் 43 ஆயிரத்து 500 பேரிடம் பரிசோதிக்கப்பட்டது. இது தொடர்பில் எந்த பாதுகாப்பு அச்சங்களும் எழவில்லை. இத்தடுப்பூசி விரைவில் உலகை இயல்பு நிலைக்கு கொண்டு வரும். இதற்கு இத்தொற்றை வெற்றி கொள்ளும் திறன் உள்ளது என்பதை உலகம் விரைவில் அறிந்துகொள்ளும்' என்று குறிப்பிட்டார். மருத்துவ விஞ்ஞானிகளான ஊகுர் ஷாஹீனும் அவரது மனைவி ஒஸ்லம் துரேஜியும் தான் ஜேர்மனியின பயோ என்டெக் நிறுவனத்தின் ஸ்தாபகர்கள்.

இத்தடுப்பு மருந்து தொடர்பான அறிவிப்பு வெளியான இரண்டொரு தினங்களில் ரஷ்யா, 'தாம் உற்பத்தி செய்துள்ள கொவிட் 19 தவிர்ப்புக்கான ஸ்புட்னிக் 5 என்ற தடுப்பு மருந்து 92 வீதம் பயனளிக்கும்' என்றும் 'இதனை மைனஸ்18 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்' என்று அறிவித்தது. அத்தோடு அமெரிக்காவின் மொடர்னா நிறுவனம், 'தாம் தயாரித்துள்ள தடுப்பு மருந்து 94.5 வீதம் பயனளிக்கும்' என்றும் அதனை மைனஸ் 20 வெப்பநிலையில் வைத்திருக்கலாம் 'என்று குறிப்பிட்டது. இந்த நிலையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், 'தாம் தயாரித்துள்ள மருந்து 70 வீதமான மக்களுக்கு நன்மை பயக்கும்' என்று கூறியது.

இந்த அறிவிப்புக்கள் உலகிற்கு ஒரு ஆறுதலாக அமைந்தது. இந்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் சனத்தொகைக்கு ஏற்ப சில நாடுகளுக்கு குறிப்பிட்ட வீதம் கொவிட் 19 தடுப்பு மருந்தை இலவசமாக வழங்குவதாக அறிவித்தது. அந்தவகையில் இலங்கையின் சனத்தொகையில் 20 வீதத்தினருக்கு 4.4 மில்லியன் தடுப்பு மருந்துகள் கிடைக்கப்பெறவுள்ளன.

இவ்வாறான சூழலில் தான் பிரித்தானியா கொவிட் 19 தடுப்பு மருந்துக்கு அங்கீகாரம் வழங்கி அதனை எதிர்வரும் வாரம் முதல் மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

பொதுவாக ஒரு புதிய வைரஸுக்கு எதிராக தடுப்பு மருந்து தயாரிப்பது என்பது இலகுவான காரியமல்ல. அதற்கு நீண்ட காலம் எடுக்கும். ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் சில தடுப்பு மருந்துகளை கண்டுபிடிக்கவும் தயாரிக்கவும் பத்து வருடங்கள் கூட சென்றுள்ளன. ஆனால் கொவிட் 19 தடுப்பு மருந்து தான் தடுப்பு மருந்து வரலாற்றில் மிக குறுகிய காலத்தில் மக்களுக்கு வழங்கப்படுவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அந்தளவுக்கு இத் தொற்று மனித சமூகத்திற்கு சவாலாக அமைந்திருப்பதே அதற்கான காரணமாகும்.

பிரித்தானியா அங்கீகாரம் வழங்கி இருக்கும் தடுப்பு மருந்து உள்ளிட்ட ஏனைய தடுப்பு மருந்துகளும் ஒரு வருக்கு இரு தடவைகள் ஏற்றப்பட வேண்டியவையாகும். அதாவது முதல் தடுப்பூசி ஏற்றப்பட்டு குறிக்கப்பட்ட காலத்திற்குள் அடுத்த தடுப்பூசியை வழங்க வேண்டும். ஆனால் பெல்ஜியம் நாட்டின் கே.யூ. லுவனி லுள்ள ரெகா என்ற நிறுவன விஞ்ஞானிகள் கொவிட் 19 தொற்றுக்கென ஒரு சொட்டு வழங்கக்கூடிய தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்திருக்கின்றனர். இது இத்தொற்றுக்கான தடுப்பு மருந்து கண்டுபிடிப்பில் மற்றொரு முன்னேற்றமாகும். இந்த விஞ்ஞானிகள் கொவிட் 19 வைரஸின் மேற்பரப்பில் காணப்படும் ஸ்பைக் புரோட்டீன் எனும் மரபணு வரிசையை மஞ்சள் காய்ச்சல் தடுப்பூசியில் செலுத்தி இத் தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர். இதற்கு 'ரெகாவெக்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளதோடு வெள்ளை எலிகள் மற்றும் குரங்குகளுக்கு செலுத்தி பரீட்சிக்கப்பட்டுமுள்ளது. அதன் மூலம் அவற்றுக்கு கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்பு கிடைத்துள்ளது. இதனையடுத்து இத்தடுப்பூசியை அடுத்த கட்டப் பரிசோதனைக்கு உட்படுத்த விஞ்ஞானிகள் தாராகியுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய வகையிலான மருந்தொன்றை கேகாலை மாவட்ட ஆயுர்வேத மருத்துவரான தம்மிக பண்டார தயாரித்துள்ளார். இம்மருந்தை பரீட்சித்துள்ள சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இம்மருந்து தொடர்பில் மருத்துவ விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பேராசிரியர் சேனக பிலேபிட்டிய தலைமையில் குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஆகவே கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தலை மருத்துவ விஞ்ஞான உலகம் முடிவுக்கு கொண்டு வரும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது தெளிவாகிறது.

புழக்கத்தில் இருக்கும் சில தடுப்பு மருந்துகளை கண்டு பிடிக்க பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பிடித்திருக்கிறது

மருத்துவ விஞ்ஞானிகளான ஊகுர் ஷாஹீனும் அவரது மனைவி ஒஸ்லம் துரேஜியும்

அக்குறணையில் 94 கொரோனா தொற்றாளர்கள்;

அக்குறணை பிரதேச சபைத் தலைவர் தலைமையில் விழிப்புணர்வு செயற்பாடு

அக்குறணையில் 94 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அபாய வலயமாக காணப்படும் இப்பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டம் நேற்று அக்குறணை பிரதேச சபைத் தலைவர் இஸ்திஹார் இமாமுதீன் தலைமையில் இடம்பெற்றது.

அக்குறணையிலுள்ள சிவில் சமூக அமைப்புடன் இணைந்து முன்னெடுக்கும் இவ்வேலைத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் அக்குறணை நகரில் புளுகொஹொதென்னையில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் அக்குறணை பிரதேச செயலாளர் இந்திகா அபேசிங்க மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி சன்ஜீவ குருந்துகஹமட உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் கருத்து தெரிவிக்கையில்,.....

கொரோனா தொற்று அக்குறணைப் பிரதேசத்தில் பரவுவதற்கான அபாயகரமான சூழல் காணப்படுகிறது. அதில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அக்குறணைப் பிரதேசத்திலுள்ள சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுபாட்டுக் கொண்டும் வருவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி சன்ஜீவ குருந்துகஹமட கருத்து தெரிவிக்கையில்,..

கொரோனா தொற்று நோயாளர் தற்போது இப்பிரதேசத்தில் அதிகரித்துச் செல்கிறது.தொற்றுப் பரவலை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக அக்குறணை பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செயலாளர் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

தற்போது புளுகொஹொதென்னை மற்றும் தெலும்பு கஹவத்த ஆகிய இரு கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகள் முடக்கப் பட்டுள்ளன.

அக்குறணை நகர் மற்றும் கிராம மட்டத்திலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் ஸடிக்கர்கள் ஒட்டப்பட்தோடு முச்சக்கர வண்டிகள், கடைகளுக்கு சனிடைசர் இலவசமாக வழங்குதல் போன்ற விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டன.

இக்பால் அலி

பொன்சேகாவுக்கு பதிலடி...

உரிய பதிலை,'சிங்கள பௌத்த வாக்குகள் எமக்கு தேவை, ஆனால் அது தமிழ், முஸ்லிம் வாக்குகளை இழந்து, இனவாதம் பேசி பெற முடியாது' என சிங்கள மொழியில், அவருக்கு புரியும் முகமாக இரண்டொரு தினங்களில் நான் பகிரங்கமாக கொடுப்பேன்.

மோட்டார் சைக்கிள் மோதி கர்ப்பிணி...

பாதசாரிகள் கடவையில் குறித்த பெண் இரு பிள்ளைகளுடன் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவர்களை மோதி தள்ளியுள்ளது.மோட்டார் சைக்கிள் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 1 கிலோ மீட்டருக்கு அப்பால் கிடந்துள்ளது. மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுமிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.படுகாயமடைந்த கர்ப்பணி பெண் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞன் கைது செய்யப்பட்டு மொரட்டுவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை டிசம்பர் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிரப்பித்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் நிறைவு?...

எதிர்வரும் திங்கட்கிழமை நேரில் சந்தித்து கோரிக்கை விடுக்கவுள்ளேனென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் சி.ஐ.டி., ரி.ஐ.டியின் கீழ் 171 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக 257 பேர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

08 சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. ஆணவங்கள் அனைத்தும் சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. மனிதப் படுகொலைகள், சூழ்ச்சித் திட்டம் ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக சட்ட மாஅதிபரே வழக்கு தொடுக்க வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் வெளிவரவுள்ளது.

சட்ட மாஅதிபரை திங்கட்கிழமை நேரில் சந்திக்கவுள்ளேன். அதன் போது இதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுப்பேன். எஞ்சிய ஓர் ஆவணவமும் ஒப்படைக்கப்படும்.

அவ்வாறு வழக்கு தொடுக்கப்பட்ட பின்னர் பணம் வழங்கியவர்கள் யார்?, சூத்திரதாரிகள் யார்? என்பது தொடர்பான அனைத்து தகவல்களும் தெரியவரும். வழக்கு விசாரணைகள் நடைபெறுகையில் இந்த பாராளுமன்றத்தில் உள்ளவர்கள்கூட கைதாகலாம். சில இரகசிய தகவல்களை வெளியிட முடியாது.

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் நேரில் சந்தித்து நிலைமையை தெளிவுபடுத்தவுள்ளேன்.அதேவேளை, கடந்த அரசாங்கம் புலனாய்வுதுறையை பலவீனப்படுத்தியதாலேயே இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றது என்றார்.

சீரற்ற காலநிலையால்...

தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 13 ஆயிரத்து 707 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 318 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை, சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்து குருமாருக்கு தேவையான...

செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் மற்றும் உப தலைவர் இராமநாத திருச்செந்தி நாதக் குருக்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சரினால் குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் போது, ஆலயப் பணிபுரிகின்ற ஆலய சிவாச்சாரியார்கள் சமூக பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய காலச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கான அரசாங்க அங்கீகாரத்தினை வழங்கும் வகையில் சமாதான நீதவான் பதவிகளை வழங்கி கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிவாச்சாரியார்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் வகையில் முதற்கட்டமாக சுமார் 50 வீடுகளை கொண்ட அந்தணர் குடியிருப்பு தொகுதியையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் கடற்றொழில் அமைச்சரிடம் முன்வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு...

பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி இராமேஸ்வரன், காதர் மஸ்தான் ஆகியோர் நீதி அமைச்சரிடம் கையளித்தனர்.

தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தால், சட்ட மாஅதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இதுபற்றிக் கலந்துரையாட முடியும் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசியல் கைதிகள் விடயத்தில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டால் இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அமைச்சர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி புதிய அரசியலமைப்புத் தயாரிப்பு விடயத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்களின் நிலைப்பாடுகளும் உள்வாங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் எழுத்து மூலமான யோசனைகளை முன்வைக்குமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கைதிகள் விடுதலை மாத்திரமன்றி சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதியிடம் எடுத்துச் செல்வதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

நீர்த்தேக்கத்தை பார்வையிட...

வெளியேறி வருகின்றது. இதனை பார்வையிடுவதற்காக அதிகமான பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் நீர்தேக்கத்திற்கு தினமும் சென்ற வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் நீர்த்தேக்கத்தை பார்வையிடுவதற்காக தி.தனுசன் எனும் பதினெட்டு வயது இளைஞர் தனது நண்பர்களுடன் நேற்றையதினம் மதியம் அங்கு சென்றுள்ளார். இதன்போது நீர் வழிந்தோடும் பகுதியில் அவர் இறங்கிய நிலையில் நீரில் மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த அவரது நண்பர்கள் நீருனுள் இறங்கி இளைஞரை நீண்ட நேரம் தேடியும் அவரை கண்டறிய முடியவில்லை.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிசாருக்கும் தெரியப்படுத்தப் பட்டதுடன், பொலிசார் மற்றும் கிராம மக்களால் இளைஞரை தேடும் பணி இரவிரவாக முன்னெடுக்கப்பட்டிருந்தும் தேடுதல் பணி தோல்வியுற்றிருந்த நிலையில் காணாமல் போன இளைஞனை நேற்றும் எட்டு மணி தொடக்கம் கடற்படையினர், பொலிஸார், இராணுவம், மற்றும் கிராமத்து இளைஞர்கள் இணைந்து தேடும் பணியில் ஈடுபட்டிருந்தும் குறித்த காணாமல் போன இளைஞனை இதுவரை கண்டுபிடிக்கவில்லை ஆகவே தொடர்ந்தும் தீவிரமாக தேடும் பணி இடம் பெற்று வருகின்றது.

சம்பவத்தில் தோணிக்கல் பகுதியை சேர்ந்த, பண்டாரிக்குளம் விபுலாநந்தா கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே இவ்வாறு காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலில்...

அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உண்மைகள் அழிவதில்லை! என்றோ ஒரு நாள் வெளிவந்தே ஆக வேண்டுமென்பதே உலகளாவிய நீதியில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

பல உண்மைகள் வெளிவர வேண்டியவையாக இருந்தும் திட்டமிட்ட சிலரின் செயலால் சில உண்மைகள் மறைக்கப்படுகின்றன. அண்மையில் பாராளுமன்ற விவாதத்தின் போது முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவும் செயற்படுகின்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா, கடந்த 03ஆம் திகதி தன் வீரசெயல்களில் ஒன்றாக ஒரு பெரும் இரகசியத்தை வெளியிட்டுள்ளார்.

பல விடயங்களில் ஒன்றாகிய யுத்தத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிவுக்கு கொண்டு வருவதாக தான் உறுதியளித்ததாகவும், அதனை முடிவுக்குக் கொண்டு வந்ததாகவும், திட்டமிட்ட செயற்பாடுகளே அதற்கு காரணம் என்றும் கூறியுள்ளார்.

சரி பிழை ஒரு புறமிருக்க வெளிப்படையாக அவர் கூறியதை பாராட்ட வேண்டும். அரசியல் புரிந்தவர்களுக்கு இது பெரிய புதினமல்ல. ஏனெனில் 10 ஆண்டுகளுக்கு முன்பே சம்பந்தன் ஐயா, தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் உரக்கக் கூறிய கருத்து 'எமது மக்களின் நலனை கருத்தில் கொண்டே பொன்சேக்காவை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம்.' என பொன்சேக்கா யுத்தம் முடிந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேளையில் சம்பந்தனால் உரக்கக் கூறப்பட்டது.

நான் கூறும் விடயங்கள் பல தீர்க்கதரிசனமாக அமைந்துள்ளன. தமிழரசுக் கட்சிக்கு மீள உயிர் கொடுத்த சம்பந்தன், சேனாதிராஜா போன்றவர்கள் தந்தை செல்வநாயகத்திற்கும் பார்க்க தமிழர்களுக்கு பெரும் தூரோகம் இழைத்துள்ளார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

பாராளுமன்றத்தில் சிலரால் கூறப்பட்டது போல, தமிழ் தேசிய கூட்டமைப்பும், நான் கூறிவருவது போல தமிழரசுக் கட்சியும் உடனடியாக தடை செய்யப்பட வேண்டுமென்று நான் கூறிவரும் கருத்திற்கு வலுவூட்டக் கூடிய உண்மைகள் பல வெளிக் கொண்டு வரவுள்ளேன். அதற்கு முன்பே தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய எல்லாவற்றையும் கலைத்து விடுவதே சிறந்ததாகும்.

என்ன நலனை கருத்தில் கொண்டு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவை ஆதரிக்கும் முடிவை எடுத்தாரென இன்றேக்கேனும் சம்பந்தன் வெளிவிடுவாரா? என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கரிகாற்சோழன் விருது பெறுகிறது ஞானசேகரனின் எரிமலை நாவல்



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின், சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை சார்பாக நிறுவப்பட்டுள்ள தமிழ்வேள் கோ. சாரங்கபாணி ஆய்விருக்கையின் மூலம் அளிக்கப்படும் 2018ஆம் ஆண்டிற்கான கரிகாற்சோழன் விருதுக்கு இலங்கையின் மூத்த எழுத்தாளர் தி.ஞானசேகரனின் எரிமலை என்ற நாவல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வெளிவந்த நூல்களுக்கு தனித்தனி விருதுகள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் இருந்து 14 நூல்கள் விருதுக்கான போட்டியில் பங்கேற்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முதல்வர் கோ.பாலசுப்பிரமணியனால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் நடுவர்களான, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் தமிழ்ப் படைப் பாளருமான சு.பாலசுப்பிரமணியனும்(பாரதிபாலன்), திருச்சி பிஷப் ஈபர் கல்லூரித் தமிழ்த்துறையின் பேராசிரியர் முனைவர் இரா. விஜயராணியும் திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழ்த் துறையின் முன்னாள் பேராசிரியர் ப. சுப்பிரமணியன் ஆகியோரும் செயல் பட்டு சிறந்த படைப்புகளைத் தேர்ந்தெடுத்தனர். இலங்கையில் இருந்து போட்டியில் பங்கேற்ற தி.ஞானசேகரனின் எரிமலை என்ற நாவல் விருதுபெறும் நூலாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது. விருதுத்தேர்வு மற்றும் விழா குறித்த ஏற்பாடுகளை அயல் நாட்டுத் தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் குறிஞ்சிவேந்தன் மற்றும் துறையின் பேராசிரியர்கள் செய்து வருகின்றனர்.

கே.பொன்னுத்துரை.

சேருவிலவில் கைகுண்டுகள் மீட்பு

ரொட்டவெவ குரூப் நிருபர்

திருகோணமலை சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலபொல காட்டுப் பகுதியில் 5 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கைக்குண்டுகள் நேற்று முன் தினம் (04) மீட்கப்பட்டுள்ளது.

சேருவில இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து ஐந்து கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் மீட்கப்பட்ட கைக்குண்டுகளை திருகோணமலை சர்தாபுர விஷேட பொலிஸ் அதிரடி படையினர் செயலிழக்கச் செய்துள்ளதாகவும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர். இக் கைக்குண்டுகள் வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட எஸ்.எப்.87 வர்க்கத்தை சேர்ந்தது எனவும் சேருவில போலீசார் தெரிவித்தனர்.

அர்ஜுனை இலங்கையிடம்...

செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அர்ஜுன் மகேந்திரனை ஒப்படைக்கும் கோரிக்கை இன்னும் நிலுவையில் உள்ளது என்றும் சட்ட மாஅதிபர், நீதி அமைச்சின் செயலாளரிடம் தெரிவித்துள்ளார். மத்திய வங்கி பிணை முறி மோசடி வழக்கு தொடர்பாக முக்கிய சந்தேக நபர்களில் அர்ஜுன் மகேந்திரனும் ஒருவர்.

நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைப்பது குறித்து சட்ட மாஅதிபரிடம் அறிக்கை கோரியதாக பாராளுமன்றில் கூறினார்.இதன்படி சட்ட மாஅதிபரினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 2019 இல், அர்ஜுன் மகேந்திரனை இலங்கையிடம் ஒப்படைப்பதற்கான கோரிக்கையை வெளியுறவு அமைச்சு சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பியது. இந்த கோரிக்கை பின்னர் தேவையான நடவடிக்கைகளுக்காக சிங்கப்பூர் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டது.

தேவையான ஆதரவு தகவல்கள் மற்றும் ஆவணங்கள் கிடைத்த வுடன் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை சிங்கப்பூர் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சிங்கப்பூரின் வெளியுறவு அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தது.

காணாமல் போன அம்மன் சிலை...

சிலை கெசல்கமுவ ஓயாவின் அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சிலை திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது சந்தேக நபரை 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஜெயராம் ட்ரெஸ்கி உத்தரவிட்டார்

குறித்த சந்தேக நபர் அம்பேவெல பகுதியினை சேர்ந்தவர் எனவும் இவர் தலவாகலை பகுதியில் இரண்டு ஆலயங்கள், வெளிமடை அக்கரபத்தனை பகுதியில் உள்ள ஆலயங்கள் உடைப்பு மற்றும் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுட்டுள்ளவர் என பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த 14.08.2020 நோர்வூட் கிழ் பிரிவு தோட்டத்தில் உள்ள ஆலயம் உடைக்கப்பட்டு அதில் இருந்த அம்மன் சிலை திருடப்பட்டது.

மேலும் மீட்கபட்ட அம்மன் சிலையினை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தபட்ட போது குறித்த சிலையினை ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய நேற்று சனிக்கிழமை நோர்வூட் பொலிஸார் அம்மன் சிலையை ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைத்ததுடன் விசேட பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன.

மன்னாரில் பெரும்போக...

காரணமாக 90 வீதமான பெரும்போக நெற் செய்கை நீரில் மூழ்கியுள்ளது. தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்பு ஏற்படுமானால் முற்றாக விவசாய செய்கை அழிவடையும் சாத்திய முள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை சுமார் 23 ஆயிரத்து 953 ஏக்கர் பெரும்போக நெற் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பெரும் போக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ள விவசாய நிலங்களில் சுமார் ஒரு அடிக்கு மேலாக வெள்ள நீர் தேங்கியுள்ளது. தொடர்ந்தும் குறித்த நிலை காணப்பட்டால் பெரும் போக விவசாயம் முழுவதும் பாதிப்படையும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 1061 ஏக்கர் விவசாய செய்கையும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4826.5 ஏக்கர் விவசாய செய்கையும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 3274 ஏக்கர் விவசாய செய்கையும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 11925 ஏக்கர் விவசாய செய்கையும், மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் 2867 ஏக்கர் விவசாய செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் சின்ன வலயன் கட்டு சிறிய நீர்ப்பாசனக் குளம் உடைப்பெடுத்துள்ளதோடு, முருங்கன், நானாட்டான் இரணை இழுப்பைக்குளம், மறிச்சுக்கட்டி, பாலம்பிட்டி சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் உடைப்பெடுக்கும் ஆபத்தான நிலையில்.

நீண்ட நாட்களாக முடக்கப்பட்டுள்ள...

கோட்டாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கமைய இன்று காலை தனிமைப்படுத்தல் குறித்த தீர்மானத்தை எடுகக் கூடியதாகவிருக்கும்.

அட்டலுகம பிரதேசத்தில் முதலாவதாக தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட போதே அந்த பிரதேசம் அபாயம் மிக்கது என்றும் , அங்குள்ள மக்கள் இதனை விட கூடுதலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தோம். அங்குள்ள மக்கள் முதலாவது தினத்திலேயே எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

ஆனால் நால்வரில் ஆரம்பித்து நேற்று வரை 329 ஆக உயர்வடைந்துள்ளது. எனவே இப்போதாவது அப்பகுதி மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்காவிட்டால் அட்டலுகம பிரதேசத்தை நீண்ட நாட்களுக்கு தனிமைப் படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். குறித்த ஒரு பிரதேசத்தினால் முழு களுத்துறை மாவட்டத்துக்கும் அபாயம் ஏற்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

இவ்வாறு ஒரு சிலர் பொறுப்பற்று செயற்படுகின்ற போதிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள தொடர்மாடி குடியிருப்புக்களில் உள்ள மக்கள் எமக்கு பாரியளவில் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர். இவ்வாரம் தொடர்மாடி குடியிருப்பொன்றில் மேற்கொள்ளப்பட்ட 300 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 4 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான இடங்கள் காணப்படுமாயின் அவற்றை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்க முடியும் என்றார்.

மாற்று அரசியல்; மாற்றத்துக்கான அரசியல் 2

தமிழ் மக்களுக்கான அரசியல் குறித்த விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் சூழலில் ஒரு பார்வையை இந்தக் கட்டுரைத் தொடர் முன்வைக்கிறது. இது தொடர்பான தொடர் விவாதத்துக்குரிய கருத்துகளும் மறுபார்வைகளும் வரவேற்கப்படுகின்றன. கடந்த வாரத்தின் தொடர்ச்சி.

முரண்பட்டுப் பிளவுண்ட மன நிலைகளை வரலாற்று ரீதியாகக் கொண்டிருக்கும் சமூகங்களிடையே சமாதானத்துக்கான பாதைகளைத் திறப்பதும் மாற்றங்களுக்கான வழிகளை உண்டாக்குவதும் எளிதான விசயமல்ல. பதிலாக மேலும் எதிர்ப்பையும் பகைமை உணர்வையும் ஊட்டி வளர்ப்பது சுலபம். அதிலும் போரிலே வெற்றி – தோல்வி என்ற இரண்டு எதிரெதிர் நிலைகளைக் கொண்டிருக்கும் சூழலில் இது இன்னும் வசதி. கூடவே அரசுடைய தரப்பு ஒன்றாகவும் அரசற்ற தரப்பினராக ஏனையோரும் நீடிக்கின்ற நிலையில் இது இன்னும் வாய்ப்பாகும்.

எனவேதான் போரினாலும் அரசாட்சியினாலும் பின்னடைவைச் சந்தித்த மக்களிடத்திலே சிங்களப் பெரும்பான்மையைக் குறித்த கேள்விகள் எழுந்து கொண்டேயிருக்கின்றன. கூடவே நம்பிக்கையீனமும்.

"அவர்கள் (ஆட்சித்தரப்பினர்) அப்படித்தானிருப்பார்கள். அரசியல் அதிகாரம் என்பது அப்படித்தான் அவர்களைச் சிந்திக்க வைக்கும்" என்று சொல்லப்படும் நியாயங்கள் யதார்த்தமாக இருந்தாலும் நீதியின் பொருட்டு ஏற்புடையதல்ல. "அரசியல் எங்கே நீதியின் நரம்பில் ஓடுகிறது?" என்று யாரும் எள்ளலோடு கேட்கலாம். நீதியை மறுத்து ஓடுமாக இருந்தால் அது நிச்சயமாக மக்கள் விரோத அரசியலாக, தேச விரோத அரசியலாகவே இருக்கும். அதை எந்த நியாயங்களையும் சொல்லிச் சமாதானப்படுத்த முடியாது.

ஆகவேதான், அரசைக் குறித்தும் அதனோடு நெருங்கிய உறவைக் கொண்டிருக்கும் சிங்களப் பெரும்பான்மையினரைக் குறித்தும் ஏராளம் கேள்விகள் எழுந்த வண்ணமே உள்ளன. இவ்வளவுக்குப் பிறகும் இந்த நாட்டுக்குப் பொருத்தமான – பன்மைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட, பல்லினத் தன்மையை உறுதி செய்யும் ஒரு அரசியலமைப்பை ஏன் உருவாக்க முடியாதுள்ளது என்பது தொடக்கம் ஏராளம் கேள்விகள்.

இவையெல்லாம் நியாயமான கேள்விகளே! இவ்வளவும் உண்மையே. ஏறக்குறைய இவை கண்ணி வெடி, கிளைமோர், ஆட்லெறி, மல்ரி பெரல் பீரங்கிக் குண்டுகள், விமானக் குண்டு வீச்சுப் போன்றவற்றையும் விட அபாயகரமானவையே.

ஆனாலும் வேறு வழியில்லை. இந்த நெருக்கடிகள், இந்த யதார்த்தம், இந்த உண்மைகள், இந்த அபாய நிலைகளின் மத்தியில்தான் பொறுமையோடு சமாதானத்துக்காக வேலை செய்ய வேண்டியுள்ளது. மிக நிதானத்தோடும் மிகச் சாதுரியத்தோடும் நமது வெற்றியை நோக்கி நகர வேண்டியுள்ளது. அது ஒன்றே நமக்கு – சிறுபான்மைத் தேசிய இனத்தினருக்கு) பாதுகாப்பானது. மற்றும்படி இந்தியாவோ சர்வதேச சமூகமோ எமக்கு நிரந்தரப் பாதுகாப்பைத் தந்து விட முடியாது. இந்தத்தரப்புகள் சூழமைவுக்கேற்ப வரையறுக்கப்பட்ட எல்லையில் சில அனுசரணைகளை மட்டுமே வழங்க முடியும். அதுவும் அரசு என்ற அடையாளத்தையும் அதிகாரத்தையும் கடந்து நம்மை நோக்கிச் சாய்வதென்பது இலகுவானதல்ல.

எனவே மாற்று அரசியலை, மாற்றத்துக்கான அரசியலைச் செய்வதற்கு பகை மனதோ, எதிர் நிலைப் பாடோ பொருந்தவே பொருந்தாது. அதைப்போல தற்போது கூறப்படும் இணக்கப்பாடும் பொருத்தமில்லை. இந்த இணக்கப்பாடு என்பது பீடத்தில் கால் மேல் காலைத் தூக்கி வைத்துக் காலாட்டிக் கொண்டிருப்போரின் கீழே கைகளைக் கட்டியவாறு சரணடைந்து நிற்பதற்குச் சமமானது. எந்தச் சூழலிலும் எதிர்க் குரலையோ நியாயக் குரலையோ எழுப்ப முடியாத பணிவு நிலை அரசியல் இது.

ஆகவே இதற்குப் பொருத்தமானது, போருக்குப் பிந்திய அரசியல் மட்டுமே.

"அதென்ன போருக்குப் பிந்திய அரசியல்?" என்று சிலர் கேட்கிறார்கள்.

மட்டுமல்ல, "இணக்க அரசியல், எதிர்ப்பு அரசியல், போருக்குப் பிந்திய அரசியல் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அடையாளம், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித் தனிப் பெட்டியா?" என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

அதாவது ஒவ்வொரு அரசியல் முறைக்கும் ஒவ்வொரு பெயரைச் சொல்லி அடையாளப்படுத்தும் முயற்சிகள் நடக்கிறதே தவிர, அரசியல் நெருக்கடியிலிருந்தும் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் மக்கள் மீள்வதாகக் காணவில்லையே என்பதாக.

வெளித்தோற்றத்திற்கு அப்படித்தான் தோன்றும். அதில் தப்பில்லை. ஏற்கனவே இவ்வாறான ஒரு கசப்பான வரலாற்று அனுபவம் நம்முடைய மனதில் உள்ளது. அதனால் புதிய அரசியல் முறைமையைப் பற்றிப் பேசும்போதும் அது அப்படித்தான் தோன்றும்.

ஆனால், முன்பு கையாளப்பட்ட எதிர்ப்பு அரசியல், இணக்க அரசியல் இரண்டுக்கும் இதற்கும் (போருக்குப் பிந்திய அரசியலுக்கும்) பெரிய வேறுபாடுகள் உண்டு. அவை இரண்டுக்குமான பண்புகளும் மட்டுப்பாடுகளும் நாமறிந்தவை. மட்டுமல்ல, அவை காலம் கடந்து விட்டவையும் கூட. வரலாற்றுப் பாடங்களைப் படிப்பினையாகக் கொள்வதற்குத் தயாரற்றவை.

இது அப்படியானதல்ல. இது முழுக்க முழுக்க வரலாற்றுப் படிப்பினையையும் நிகழ்கால யதார்த்தத்தையும் எதிர்காலச் சிந்தனையையும் உள்ளடக்கமாகக் கொண்டது. முக்கியமாகக் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் செயற்பட முனைவது. அதனால் இது தனியே தமிழ்த்தரப்பிற்குள் மட்டும் நின்று செயற்பட முடியாதது. அப்படிச் செயற்பட்டால் அதனால் எந்த நல் விளைவுகளையும் உண்டாக்கவே முடியாது. ஆகவே முழு இலங்கையையும் செயற்பாட்டுக் களமாகக் கொண்டு இயங்க வேண்டியது.

கருணாகரன் ...

இன்றைய இலங்கையின் அரசியல் என்பது முழு இலங்கையையும் உள்ளடக்கியதாகவே மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். அந்த நோக்கிலேயே கையாளப்பட வேண்டியதும். இதை யாரும் மறுத்துரைக்கவே முடியாது. புலிகள் கூட இவ்வாறுதான் செயற்பட்டுள்ளனர். அவர்கள் தனிநாட்டுக்காகப் போராடிக் கொண்டிருந்தபோதும் முழு இலங்கையின் அரசியலில் இடையீடு செய்தே வந்தனர். ஆனால், அது அவர்களுடைய நோக்கில். ஜனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்களில் புலிகளின் தலையீடும் செல்வாக்கும் எப்படியிருந்தது என்பதை நினைவுள்ளோர் மீளெடுத்துப் பார்த்துக் கொள்ள முடியும். ஏனையோர் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் படித்தறிந்து கொள்ளலாம்.

தவிர, யுத்தத்திற்குப் பின்னர் நடந்த அத்தனை ஜனாதிபதித் தேர்தல்களிலும் சிறுபான்மையினச் சமூகங்கள் எப்படித் தொழிற்பட்டன? என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் இதை மேலும் விளங்கிக் கொள்ள முடியும். அதிலும் 2010 க்குப் பின்னர் வந்த அத்தனை ஜனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்களின் போதெல்லாம் முழு இலங்கைக்குமான ஆட்சியைப் பற்றிய சிந்தனையோடுதானே அரசியல் கையாளப்பட்டுள்ளது. அதாவது தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அரசியல். ஆனால், இது ஏற்கனவே உள்ள எதிர்ப்பு அரசியல் அல்லது இணக்க அரசியல் என்ற அடையாளங்களுக்குட்பட்டே இருந்துள்ளது. போருக்குப்பிந்திய அரசியலாக இல்லை. என்பதால்தான் எந்த முன்னேற்றத்தையும் காண முடியாமல் உள்ளது.

ஆகவேதான் போருக்குப் பிந்திய அரசியலை மாற்று அரசியலாக – மாற்றத்துக்குரிய அரசியலாக இந்த இடத்தில் முழு இலங்கைக்குமுரியதாக முன்னெடுக்க வேண்டும் என்கிறோம். இலங்கை முழுவதற்குமானது எனும்போது அனைத்துச் சமூகங்களையும் இது உள்ளடக்கும். அனைத்துத் தரப்பினரையும் இது உட்சேர்க்கும். எல்லாத் தரப்பையும் மெல்ல மெல்ல உள்ளீர்த்து இந்த அரசியலை மேற்கொள்ள வேண்டும். இது கடினமானதே. மிக மிகக் கடினமானது.

எல்லாம் சரிதான். பகை வளர்ப்பு அரசியலில் ருசிகண்ட அல்லது எதிர்ப்பு அரசியலை வணிக அரசியலாகக் கையாண்டு வெற்றியடைந்தவர்கள் எப்படி போருக்குப் பிந்திய அரசியலை ஏற்றுக் கொள்வர் என்று நீங்கள் கேட்கலாம். இது நியாயமான கேள்வியே.

இந்த இடத்தில்தான் நாம் மாற்று அரசியல், மாற்று அணி என்பதைப் பற்றிப் பேசுகிறோம். சிந்திக்கிறோம். இந்த மாற்று என்பதே புதிய சிந்தனை, புதிய அரசியற் பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட அர்ப்பணிப்பான செயற்பாட்டைக் குறித்து நிற்கும். அதாவது பகை வளர்ப்புக்கு – எதிர்ப்புக்குச் செலவிடப்பட்ட காலம், மனித உயிர்கள், சொத்தி முப்புகள், வளச் சிதைவு போன்றவற்றை மனங்கொண்டு, அதற்கும் மேலான உழைப்பையும் பொறுதியையும் நுட்பங்களையும் இந்த மாற்று அரசியலில் மேற்கொள்ள வேண்டும். அதை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். களச் செயற்பாடுகள் இதற்கு அவசியம். ஆனால், இது என்.ஜீ.ஒ அரசியற் செயற்பாடாகவே கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதனால் இதற்கு அதன் வழியான அடையாளமும் நிதி சார்ந்த எதிர்பார்ப்பும் உருவாகியுள்ளது. இது தவறு. இந்தப் போக்கினால் ஒரு போதுமே மக்களிடம் செல்லும் பொறிமுறைகளை உருவாக்க முடியாது. மாற்றங்களை நோக்கி நகரவும் முடியாது.

இதில் முதலில் செய்ய வேண்டியது, மாற்று அரசியல், மாற்று அணி என்ற பெயரில் புதிய லேபலோடு வணிக அரசியலைச் செய்வோரை அம்பலப்படுத்துவது. அவர்கள் தொடர்ந்தும் செய்து கொண்டிருப்பது வெறுமனே பகை வளர்ப்பான எதிர்ப்பு அரசியலையே என்பதை நிறுவுவது. இதனால் எந்த மாற்றங்களையும் நல் விளைவுகளையும் உருவாக்க முடியாது என்பதை.

அடுத்ததாக மாற்று என்றால் என்ன என்பதையும் அதன் வழிமுறைகள் என்ன என்பதையும் மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும். இதற்கு முதலில் மாற்று அரசியல் விருப்புடையோருடன் உரையாடல்களை நடத்தி, அவர்களை ஒரு வலுவான கட்டமைப்பாக்கம் செய்ய வேண்டும். இதில் புலம்பெயர்ந்திருப்போரையும் இணைக்க வேண்டும்.

அடுத்தது, மாற்று அரசியலின் மூலமே ஜனநாயகமும் அமைதியும் உருவாகும். அதன் மூலமே பன்மைத்துவத்தை உறுதிப்படுத்த முடியும். பன்மைத்துவமே பல்லினத்தன்மைக்கு ஆதாரமானது.

முஸ்லிம் சமூகத்தின் சிந்தனை ஒருமுகப்படுவது எப்போது?

சந்தர்ப்பம் சறுக்கியதற்காக உழைப்பை நிறுத்திவிட்டு பெருமூச்சு விடுமளவிற்கு, எம்மை, நமது நம்பிக்கைகள் விடுவதில்லை. நீதி, நிராகரித்தாலும் நிதானம், நம்மைச் சுறுசுறுப்பாக்கி இருக்கிறது. சட்டம் வேறு, கருணை வேறு என்பார்களே, இதை, ஒட்டுமொத்த சமூகமே ஒன்றாகக் கண்டு கொண்ட சூழலிது தான்.

ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கான முஸ்லிம்களின் மத உரிமை,சட்டத்தின் பார்வைக்கு, சங்கடமாகத் தென்பட்டுள்ளது. கொடிய கொரோனாச் சூழலில் சகல சமயத்தவரும் ஒவ்வொன்றை இழக்கையில், முஸ்லிம்களுக் கென்று வேறு நீதியா? சட்டத்திற்கு முன்னால் சகலதும் சமம்தான்.

ஆனால், ஜனாஸா விடயத்தில், மூன்றையிழந்த முஸ்லிம்கள் ஒன்றுக்குத்தானே ஓடோடி உழைக்கின்றனர். 'அடக்குவதற்கு மட்டுமாயினும் அனுமதியுங்கள்'என்ற, இறைஞ்சுதலுக்கு, சட்டம் கருணை காட்டவில்லை. எனவே, கருணையால், இதைச் சாத்தியமாக்குவதுதான் உள்ள வழி. சாத்வீக வழிகளிலான கருத்துப் பரிமாற்றங்கள், கலந்துரையாடல்களை பரவலாக்கி, அரசாங்கத்தின் உச்ச மட்டத்தில் இது பற்றிப் பேசப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமளவுக்கு மூன்றாம் தேசியத்தின், சிந்தனைச் சக்தி பலப்படாதுள்ளது. ஆத்மீகம், அரசியல், சமூகத் தொண்டுமற்றும்கல்விப்பணியென ஒவ்வொரு வட்டத்திற்குள் செயற்படும் சக்கரங்களாகத்தான், மூன்றாம் தேசியத்தின் சிந்தனை சக்திகள் (சிந்தனைப் பெருவெளி) உள்ளன. வருடமொன்றுக்காவது,இச்சக்திகள் சந்திப்பதாகவும் இல்லையே! இந்நிலையில் எப்படி?மூன்றாம் சமூகத்தின் சிந்தனைகளை ஒரு முகப்படுத்துவது?. ஏதாவது அதியவசர நெருக்கடிகளில், இச் சக்கரங்கள் ஒன்றுபட்டாலும், ஒரே கருத்தில் ஒன்றுபடாது, விமர்சிப்பவர்களாக விலகிச் செல்கின்றனர்.

இத்தனை அழுத்தங்களுக்கு மத்தியில், எத்தனை நாட்களுக்கு எரிக்கும் நிலைப்பாட்டில் நிலைத்து நிற்பது?. நீதித் துறையின் மன நிலையில், நிர்வாகத் துறையும் சிந்தித்தால், கொரோனா ஜனாஸாக்களின் சாம்பலைத் தவிர்க்க முடியாதுதான். ஆனால், நிர்வாகத்துறை இந்த இறுகிய மன நிலையில் இல்லை என்பது மட்டும்தான் இன்று, மூன்றாம் சமூகத்துக்குள்ள சின்ன ஆறுதலாகும். இந்த ஆறுதலில்தான், இச்சமூகத்தின் சிந்தனைச் சக்திகள், நல்லடக்கத்திற்கான பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

சுஜப் எம். காசிம் ...

மறு உலக வாழ்க்கைக்கான தயார் படுத்தலின் விளைநிலம்தான் இவ் வுலகம். முஸ்லிம்களின் நம்பிக்கை, இவ்வுலகை இவ்வாறுதான் பார்க்கிறது. அவ்வாறானால் இச் சமூகத் திற்குள் இத்தனை பிளவுகள், எண்ணிலடங்கா அமைப்புக்கள் ஏன் வந்தன? இதுதான், ஏனையோரின் பார்வைகள். எனவே, மூன்றாம் சமூகம் முதலில் களைய வேண்டியது, மாற்று மதத்தாரின் இந்தப் பார்வையைத்தான். எடுத்ததெற் கெல்லாம் ஆத்மீகச் சாயம் பூசாமல், சிந்தனை மற்றும் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்பை வெளிக் காட்டுவதும் வெற்றிக்கு வழிவகுக்கவே செய்யும். கையேந்தும் (பிரார்த்தனை) மார்க்கமாக மட்டும் இஸ்லாத்தை காண்பிக்காது, களம் காணும் சமயமாகவும் இஸ்லாத்தைக் காட்ட வேண்டிய கடப்பாடு மூன்றாம் சமூகத்துக்கு உள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள சகல முஸ்லிம் எம்பிக்களதும் வேதனைகள் மட்டுமல்ல, இச்சமூக முன்னோடிகள், உலமாக்கள் சகலரது வேதனைகளும் எரித்தல் விடயத்தில், ஒன்றுக்கொன்று சளைத்ததில்லை. ஆனால், சந்திப்புக்கள்தான் நடக்கவில்லை. இங்குள்ள, அரசியல், ஆத்மீக மற்றும் சிவில் தலைமைகள், ஆளுமை இழந்துள்ளமையே இதற்கான அர்த்தம். விட்டுக் கொடுக்கவே, முடியாத ஒரு மத நம்பிக்கைக்காக, விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு, இச் சமூகத்தின் சிந்தனைச் சக்திகள் ஒன்றுபட்டதாகத் தெரியவில்லையே! ஒன்றுபட்டு எதைச் சாதிப்பதென்றா?சிந்திக்கிறார்கள். அரசியல்தரப்பு என்றோ விட்ட தவறுக்கு, இன்று பழிவாங்க வேண்டாமெனக் கோருவதற்காக அல்லது மத நம்பிக்கைகளில், எங்களிடம் மாறுபட்ட கருத்துக்களே கிடையாதெனக் காட்டுவதற்காக, இல்லாவிடின் இனியாவது சமூகத்தின் சிந்தனைச் சக்திகளை இணைத்துப் பலப்படுவதைச் சாதிக்கவாவது ஒன்றுபடவே வேண்டும்.

இருப்பைத் தக்க வைக்கும் பிழைப்பு அரசியல் கலாசாரம், எங்கோ மாட்டிக் கொண்டதால், வந்த வினைகள் இவை. இதற்கு விடைகாணும் பரீட்சையில், தேற வேண்டிய நிலைக்குள் மூன்றாம் சமூகமும் மாட்டிக் கொண்டதுதான், பெருங் கவலை.

எனவே பணிந்து, குனிந்து, நெளிந்து,சமைந்து நடந்துதான், நல்லடக்கத்தை சாத்தியமாக்க வேண்டியுள்ளது.

முதலாவதாக இதற்கு நாவடக்கமே தேவை. முகநூலாளர்கள் இதை, முதலில் புரிவதுதான் பொருத்தமானது. சந்தர்ப்பம் சறுக்கினாலும் சாத்தியச் சூழல் வருமென்ற நம்பிக்கையில், முஸ்லிம் எம்பிக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் புத்திஜீவிகள் உழைப்பதாக இப்போது வரும் செய்திகளை, உண்மையாக்க இறைவன் போதுமானவன். கருணை கண் திறக்கும். சட்டம் மனம் திறக்கும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

40 ஆண்டுகள்

கல்வி இளமாணி (இயற்கை விஞ்ஞானங்கள்)
சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
மட்டங்கள் 5/6களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்

கல்வி இளமாணி (இயற்கை விஞ்ஞானங்கள்) சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5/6களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வி இளமாணி (இயற்கை விஞ்ஞானங்கள்) சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டமானது விஞ்ஞான கணித ஆசிரியர்களுக்கென திட்டமிட்ட 4 வருட கற்கை நெறியாகும் இவ்நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டங்கள் 5/6 கல்விப்பீடத்தினால் நடாத்தப்படுகின்கிறது. விண்ணப்பதாரிகள் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டங்கள் 5/6களுக்கு பதிவுசெய்வதற்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.0 மட்டம் 5 இற்குப் பதிவுசெய்வதற்கான தகைமைகள்

அ. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி/ கல்விமாணி மாணவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 3, 4/ 5 (மட்டம் 5 இலிருந்து ஆகக்கூடியது 6 திறமைச் சித்திகள்) களில் 45 திறமைச்சித்திகளைக் கொண்டிருக்கக்கூடிய பாடங்களில் சித்தியினையும் 60 திறமைச்சித்திகள்வரை அனுமதித் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

ஆ. ஏனையோர்

அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்திலிருந்துவிஞ்ஞானமாணி(இயற்கைவிஞ்ஞானம்) பட்டத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இயற்கை விஞ்ஞான பீடத்திலிருந்து விஞ்ஞான டிப்ளோமா தகைமையை கொண்டிருத்தல்.

2.0 மட்டம் 6 இற்குப் பதிவுசெய்வதற்கான தகைமைகள்

அ. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டங்கள் 3, 4/ 5 (மட்டம் 5 இலிருந்து ஆகக்கூடியது 6 திறமைச் சித்திகள்) களில் 45 திறமைச்சித்திகளுக்குச் சமனான பாடநெறிகளில் சித்தியினையும் சகல பாடநெறிகளுக்கும் 60 திறமைச்சித்திகள் தகைமையினையும் கொண்டிருத்தல்.

ஆ. கல்விமாணி (இயற்கைவிஞ்ஞானம்) சிறப்புப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5 இன் சகலபாடங்களிலும் 32 திறமைச் சித்திகள் தகைமைகளைக் கொண்டிருத்தல் அல்லது கல்விமாணி (இயற்கைவிஞ்ஞானம்) சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5 இன் சகல பாடங்களிலுமிருந்தும் விலக்களிக்கப்பட்டிருத்தல்.

3.0 மட்டம் 5 இலிருந்து விலக்களிப்பு

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 3வருட ஆசிரியர் கல்விக் கற்கையினை வெற்றிகரமாக நிறைவுசெய்து விஞ்ஞானம் /கணிதம் பாடங்களைக் கற்பிப்பதற்கான தேசிய கற்பித்தல் டிப்ளோமாவினைக் கொண்டிருப்பவர்கள் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5 இலிருந்து விலக்களிக்கப்படுவர்.

Apply Online

பின்வரும் எங்கள் வலையமைப்புக்குள் சென்று நிகழ்நிலை மூலம் விண்ணப்பிக்கவும் - https://reginfo.ou.ac.lk/applyonline/
விண்ணப்பக் கட்டணம் - ரூபா. 350/-
06.12.2020 முதல் 06.01.2021 வரை நிகழ்வழி மூலம் விண்ணப்பிக்க முடியும். இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள் அடங்கிய கையேட்டினைப் பின்வரும் இணையத்தளம் மூலம் பதிவிறக்கம் செய்யமுடியும் - **www.ou.ac.lk**

விண்ணப்பத்திற்குரிய பணம் டெபிட்/கிரடிட்அட்டை/ eZcash / mCash பணம் மூலம் நிகழ் நிலையினூடாக செலுத்த முடியும்.

டெபிட் கிரடிட்அட்டை வசதி இல்லாதோர் நிகழ்வழி மூலம் விண்ணப்பித்துவிட்டு பின்னர் அருகிலுள்ள திறந்த பல்கலைக்கழக பிரதேச/ கற்கை நிலையத்தில் பணம் செலுத்த முடியும். நிகழ் நிலை மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுவோர் பின்வரும் திறந்த பல்கலைக்கழகப் பிரதேச/ கற்கை நிலையங்களில் உதவி பெற்று விண்ணப்பிக்கலாம்.
கொழும்பு(நாவல), அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி(பொல்கொல்ல), மாத்தறை(நுபே), பதுளை, குருநாகல், அம்பலாங்கொடை, அம்பாறை, பண்டாரவல, கம்பஹா, காலி, அம்பலான்தோட்டை, ஹற்றன், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை, கேகாலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், மன்னார், குளியாப்பிட்டிய, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் வவுனியா

குறிப்பு:

அ. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் தற்போதைய விஞ்ஞானமாணி மாணவர்கள் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டம் 5, 6 களுக்கு பதிவு செய்யவிரும்பின் பதிவிலக்கம், பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, கல்வித்தகைமைகள் (விஞ்ஞானமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டங்கள் 3, 4/ 5ஆகியவற்றின் பெறுபேறுகள்) ஆகியவற்றை உள்ளடக்கிய சுயவிண்ணப்பப் படிவங்களை தலைவர், இடைநிலை, மூன்றாம் நிலைக்கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட என்ற முகவரிக்கு 2021/01/06 இற்கு முன் அனுப்பிவைத்தல் வேண்டும். (தற்போதைய விஞ்ஞானமாணி மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களைக் கொள்வனவு செய்யவேண்டியதில்லை)

ஆ. கல்விமாணி நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவுசெய்த மாணவர்கள் விஞ்ஞானமாணி (இயற்கைவிஞ்ஞானம்) பட்டப்படிப்பினை மேலும் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு

1. நாவல, நாரஹேன்பிட்ட வீதியிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுத்தொடர்பு அலுவலகத்தில் அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:
2. ஏனைய பிராந்திய/கற்கை நிலையங்களில் (அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த) செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரையிலான நாட்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை:

பொதுத்தகவல் காரியாலயம் : தொலை. (+94) 70 1235770 / (+94) 70 1235772 (8:30 a.m - 4:30 p.m)
மின்னஞ்சல் : pio@ou.ac.lk

பதிவாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329
சார்வரி வருடம் காத்திகை மாதம் 21ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரபீஉனில் ஆகிர் பிறை 20

மஹர சிறையில் நடந்தது திட்டமிட்ட சூழ்ச்சியா?

LDஹர சிறைச்சாலை சம்பவத்தில் பத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உயிரிழந்து நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களுள் எட்டுப்பேருக்குக் கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிலவேளை, கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில், நூற்றுக்கும் அதிகமான கைதிகள் தப்பிச்சென்று சமூகத்தில் நுழைந்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும்? என்று கேட்கிறார்கள் அதிகாரிகள்!

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தற்போது அளவுக்கு அதிகமான கைதிகள் தங்க வைக்கப்பட்டிருப்பதால், இடைக்கிடை இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவது சகஜமே என்றாலும், 2012 இல் வெலிக்கடை சிறைச்சாலையில் நடந்த சம்பவத்தில் பத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உயிரிழந்ததன் பின்னர் இரண்டாவது பாரிய சம்பவமாக மஹர சிறைச்சாலை சம்பவம் கருதப்படுகிறது.

கைதிகள் சிலருக்குக் கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதன் பின்னர், அது ஏனையவர்களுக்கும் பரவாமல் தடுப்பதற்காக சிறைச்சாலை நிர்வாகம் முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அதன்போது கைதிகள் சிலர் களேபரம் ஏற்படுத்திக்கொண்டு தப்பிச்செல்ல முனைந்ததால், பிரச்சினை பூதாகரமானதாக சிறைச்சாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் ஆயிரத்திற்கும் அதிகமான கொவிட் 19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் அதற்கமைய எல்லா சிறைச்சாலைகளிலும் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருக்கிறார். மஹரவில் மாத்திரமன்றி நாட்டிலுள்ள எல்லா சிறைச்சாலைகளிலும் ஒரு கலவர அலை உருவாகியிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். போதைப்பொருள் கடத்தல், பாவனையாளர்கள் சிறைகளில் அதிகம் காணப்படுகின்ற நிலையில், கொவிட் 19 நிலவரத்தையும் கருத்திற்கொண்டு சிறைகளில் சில கட்டுப்பாடுகளை விதித்திருப்பதால், இந்தச் சூழல் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

எவ்வாறாயினும் மஹர சிறைச்சாலை சம்பவத்தைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென ஐவர்கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. அண்மையில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் கைதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. தற்போது மஹர சிறைச்சாலை சம்பவத்தை வைத்தும் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கத்தரப்பினர் கூறுகின்றனர்.

மஹர சிறைச்சாலையில் நடந்தது ஒரு திட்டமிட்ட சூழ்ச்சியாகும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ச. வெலிக்கடைச் சிறைச்சாலையைக் கொலைக்களமாக மாற்றுவதற்கு முயற்சித்ததுபோலவே மஹர சிறைச்சாலையிலும் திட்டம் தீட்டப்பட்டிருப்பது பற்றிய தகவல் தமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அமைச்சர் கூறியிருக்கிறார். அதாவது, சிறையில் உள்ள ஒரு கைதி சக கைதிகளுக்குப் போதை மாத்திரையைக் கொடுத்து இவ்வாறான வெறித்தனமான ஒரு சம்பவத்தை அரங்கேற்றியிருக்கிறார் என்றும் இஃது உண்மையில் ஜனாதிபதிக்கு சர்வதேச ரீதியாக ஓர் அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியாகும் என்கிறார் அமைச்சர் வீரவன்ச.

மனித சமுதாயத்தில் சிறைச்சாலைகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. பண்டைக் காலத்தில் மன்னர்கால ஆட்சியின் போது சிறைச்சாலைகள் குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்கும் ஓர் இடமாகவே இருந்தது.

ஒருவன் சிறையில் அடைக்கப்பட்டால் அவன் விடுதலை பெற்று சிறையில் இருந்து வெளிவர முடியாது, அவன் பல்லாண்டு காலம் சிறையில் ஒரு மிருகத்தைப் போன்று அடைக்கப்பட்டு உண்பதற்கு போதியளவு உணவும், உறக்கமும் இன்றி நடைப்பிணமாக இருந்து இறுதியில் மடிந்து போவான்.

அன்று ஒருவன் சிறையில் அடைக்கப்பட்டால், அவன் இருக்கிறானா, இல்லையா என்று கூடச் சிறை அதிகாரிகள் பார்க்க மாட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒரு கைதிக்குப் பல நாட்களாக உணவும், அருந்துவதற்கு நீரும் கிடைக்காமல் பசியோடு வாட வேண்டி இருந்தது. 20ஆம் நூற்றாண்டில் ஜனநாயகம் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் சிறைச்சாலைகளை சீர்திருத்த நிலையங்களாக மாற்றி குற்றம் இழைத்தவன் தண்டனைக் காலம் முடியும் வரையில் அங்கு நல்ல முறையில் பராமரிக்கப்படுதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இலங்கையிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிறைச்சாலைகள் இவ்விதம் குற்றம் இழைத்தவனை திருத்தி மீண்டும் அவனை நல்ல மனிதனாக சமுதாயத்தில் வாழ வைப்பதற்கான சீர்திருத்த நிலையங்களாக இருந்தன. ஆயினும், சனத்தொகை பெருக்கம், குற்றம் புரிவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற காரணங்களினால் சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு இருந்த வசதிகள் குறைந்தன.

முன்னர் 100 கைதிகள் வைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் இப்போது சுமார் 300 கைதிகள் வைக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்தமாக சுமார் 25 ஆயிரம் கைதிகள் நாடு முழுவதிலும் உள்ள 22 சிறைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குற்றம் இழைத்துவிட்டுச் சிறைசெல்லும் எல்லோருமே கெட்டவர்களும் அல்லர், நல்லவர்களும் அல்லர். ஆனால், தீய பழக்கங்களைக்கொண்டவர்கள் மேலும் ஒருபடி அதிகமாகக் குற்றம் இழைப்பதற்குக் கற்றுக்கொள்ளாமலும் நல்லவர்கள் தீயவர்களாக மாறிவிடாமலும் சிறையிலிருந்து வெளியில் வர வழியேற்படுத்தப்பட வேண்டும்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

கலவரத்துக்கு தூண்டப்பட்டனரா மஹர சிறைக் கைதிகள்?

திடீரென வெடித்த வன்முறையின் பின்னணியில் அரசுக்கு எதிரான சக்திகளா? இன்றேல் போதைப் பொருள் மாபியாக்களின் திட்டமிட்ட சதியா?

கொவிட்19 தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சிறைச்சாலை கொத்தணி பரவலில் ஏற்பட்ட அதிகரிப்பானது வன்முறையாக உருவெடுத்து உயிர்ப் பலிகளுக்குக் காரணமாகியுள்ளது. மஹர சிறைச்சாலை சம்பவமானது பெரும் பரபரப்பை நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் ஒரு சில கைதிகளுக்கு கொவிட்19 தொற்று உறுதியான நிலையில், இது தற்பொழுது கொத்தணியாக மாறி சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்து விட்டது.

சிறைச்சாலை கைதிகள் மத்தியில் கொவிட்19 பரவுவதைத் தடுக்கும் நோக்கில், சிறு சிறு குற்றங்களைப் புரிந்த 600 கைதிகளுக்குப் பொதுமன்னிப்பளித்து விடுவித்தும், புதிதாக சிறைக்குச் செல்பவர்களுக்கு 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தல் வழங்கியும் இத்தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருந்தது.

இவ்வாறான நிலையிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மஹர சிறைச்சாலையிலிருந்த கைதிகள் கலவரத்தில் ஈடுபடத் தொடங்கினர். அங்குள்ள கைதிகளுக்கிடையில் கலவரம் ஏற்பட்டதுடன், அக்கலவரத்துக்கு மத்தியில் கைதிகள் சிலர் தப்பிச்செல்வதற்கும் முயற்சித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிலைமை மோசமடைந்ததையடுத்து விசேட அதிரடிப்படையில் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டதுடன், தீயணைப்புப் படையினரின் உதவியுடன் சிறைச்சாலையில் ஏற்பட்ட பாரிய தீயும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அங்கு ஏற்பட்ட அமைதியின்மையில் 11 கைதிகள் உயிரிழந்ததுடன், சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளடங்கலா 80 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹர சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 183 பேருக்கு கொவிட்19 தொற்று ஏற்கனவே உறுதி செய்யப்பட்டிருப்பதுடன், உயிரிழந்த 11 பேரில் 8 பேருக்கும், காயமடைந்தவர்களில் 26 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. கொவிட்19 தொற்று பரவுவதைத் தடுத்து, தம்மை அதிலிருந்து காப்பாற்றுமாறு கோரியே கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும், இந்தக் கலவரத்துக்குப் வேறு விதமான காரணங்கள் இருப்பதாக அரசியல் அரங்குகளில் கருத்துகள் கூறப்படுகின்றன. அரசு மீது களங்கம் ஏற்படுத்த அங்கு கலவரம் திட்டமிடப்பட்டதாக அரசு தரப்பு முக்கியஸ்தர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருந்ததுடன், சிறைக் கைதிகளை கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும், மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் திட்டமிடப்பட்ட ஒன்றாகும் எனவும், இரத்தத்தைப் பார்க்கத் தூண்டும் வகையிலான போதை மாத்திரை கைதிகளுக்கு வழங்கப்பட்டே கலவரம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புபட்ட ஒருவர் இவ்வாறான மருந்துகளைத் தயாரித்து வெலிக்கடை சிறைச்சாலைக்குள் விநியோகிக்க இதற்கு முன்னர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தமை இரகசியப் பொலிஸாரினால் தடுக்கப்பட்டதாகவும், அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியிருந்தார். அரசியல் நோக்கத்தில் அரசாங்கத்தின் மீது அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறன என்பது அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களின் வாதமாக உள்ளது.

குறிப்பாக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக பதவியில் இருந்த காலத்திலேயே வெலிக்கடை சிறைச்சாலையில் வன்முறை ஏற்பட்டது, தற்பொழுது அவர் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் மஹர சிறைச்சாலையில் வன்முறை ஏற்பட்டுள்ளது எனச் சித்தரிப்பதற்காக எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன என்பது அரசாங்க தரப்பின் குற்றச்சாட்டாகும்.

இவ்வாறான நிலையில் மஹர சிறைச்சாலை குறித்து விசாரிப்பதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஒருபுறம் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதுடன், நீதி அமைச்சர் அலி சப்ரி ஐவர் அடங்கிய பிறிதொரு விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மஹர சிறைச்சாலையில் கலவரம் இடம்பெற்ற சமயத்தில், சிறைச்சாலையின் மருந்துக் களஞ்சியத்தில் மனநலக் கோளாறுக்குப் பயன்படுத்தும் மூன்று வகையான 21,000 மருந்துகள் காணப்பட்டதாகவும், போதைக்கு அடிமையான கைதிகள் போதைப் பொருளுக்குப் பதிலாக குறித்த மருந்துகளைப் பயன்படுத்தியுள்ளனரா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ன பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். எதுவாக இருந்தாலும் மஹர சிறைச்சாலையின் பாதுகாப்பு தற்பொழுது முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது அவருடைய கருத்தாக இருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் என சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான முன்னாள் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாந்துபுள்ளே கூறியிருந்தார். இந்த நிலையில் குறித்த இராஜாங்க அமைச்சுப் பொறுப்பு அவரிடமிருந்து பெறப்பட்டு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தையிடம் வழங்கப்பட்டுள்ளது. மஹர சிறைச்சாலையில் எந்தவொரு துப்பாக்கிச் சூடும் மேற்கொள்ளப்படவில்லையென இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். இந்த விவகாரம் தற்பொழுது அரசியல் அரங்குகளில் பேசுபொருளாகியுள்ளது.

புதிய அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது எனக் காண்பிப்பதற்காக எதிர்க் கட்சியினர் இந்த விவகாரத்தை கையில் எடுத்திருப்பதையும் பார்க்கக் கூடியதாகவுள்ளது. கொவிட்19 தொற்றுவதற்கான ஆபத்து இருக்கும் நிலையிலும் ஜக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று மஹர சிறைச்சாலைக்குள் செல்வதற்கு முயற்சியெடுத்திருந்தது. அரசாங்கத்தின் மீது குற்றம் காணுவதே அவர்களின் விஜயத்தின் நோக்கமாக இருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

எதுவாக இருந்தாலும் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட சம்பவத்துக்கான உண்மைக் காரணம் கண்டறியப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. பொதுமக்களின் கருத்து இதுவாகவே உள்ளது. எனினும், போதைப் பொருள் பயன்பாடு புதிய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் சிறைச்சாலைகளில் அதிகரித்துக் காணப்பட்டது என்பதையும் நாம் முற்றாக மறுத்து விட முடியாது.

புதிய அரசாங்கம் போதைக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதுடன், சிறைச்சாலைகளில் போதைப் பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. போதைப்பொருட்களை சிறைச்சாலைகளுக்குள் கொண்டு செல்ல உதவும் சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் கைது செய்யப்பட்டுள்ளனர். போதை ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் சட்டத்தின் பிடியில் உள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் போதைப் பொருள் கடத்தல் வியாபாரத்தை கண்டுபிடிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போதைப் பொருள் குற்றவாளியான மாக்கந்தர மதூஷ், பொலிஸாருக்கும் போதைக் கடத்தல் காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்திருந்தார். இது போன்று போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கடந்த சில மாதங்களாக அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

போதைப் பொருளை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதால் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் வேண்டுமென்றே கைதிகளை தூண்டிவிட்டு கலவரம் ஏற்படுத்தப்பட்டிருக்குமோ என்ற கோணத்தில் வெளிவருகின்ற குற்றச்சாட்டுகளையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. போதைப் பொருள் என்பது உலகளாவிய ரீதியில் ஒரு மாபியாவாகவே கருதப்படுகிறது. போதைப் பொருள் கடத்தல்காரர்களின் உலகளாவிய வலைப்பின்னல் பல்வேறு நாடுகளில் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் பூகோள அமைவிடம் காரணமாக கடந்த காலங்களில் போதைப் பொருள்களை கடத்துவதற்கு இலங்கை ஒரு கேந்திர நிலையமாகப் பயன்படுத்தப்பட்டமை வெளிப்படையான தகவல் ஆகும். வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படும் போதைப் பொருள்கள் இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டும் உள்ளன. தொடர்ச்சியாக போதை ஒழிப்பில் அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டில் இருப்பதால் சிறைச்சாலைகளுக்குள் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு விஷமிகள் முயற்சிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. எனவே, அரசாங்கம் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் அதேசமயம், மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பிலும் ஆழமான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அது மாத்திரமன்றி, நாட்டில் உள்ள அனைவருக்கும் அச்சுறுத்தலாக மாறியிருக்கும் கொவிட்19 தொற்று கைதிகள் மத்தியில் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் சிறைச்சாலைகளில் காணப்படும் நெருக்கடிகளை குறைக்கவும் நடவடிக்கை எடுப்பது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணைகள்: கொவிட் -19 சோதனையில் உருவெடுத்த நெருக்கடி!

பி.ஹர்ஷன்...

வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தனீ

இலங்கைத் தமிழர்களுக்கு ஏமாற்றம் தருகின்ற நிலைப்பாட்டில் இந்தியா!

கடந்த வாரம் கொழும்புக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுக்கு, தமிழர் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்திக்கும் திட்டம் எதுவும் முன்கூட்டியே இருக்கவில்லை. வேறு முக்கியமான இருதரப்பு பிரச்சினைகளே அவரது வருகையின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளையடுத்து அஜித் டோவால் புதுடில்லிக்கு திரும்புவதற்கு முன்னதாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களை கடந்த சனிக்கிழமை கடைசி நேரத்தில் 'இந்தியா இல்லத்தில்' சந்தித்துப் பேசினார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு சுமார் அரை மணி நேரமே நீடித்ததாகக் கூறப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று தமிழ் மக்களுக்கு ஓரளவேனும் அதிகாரப் பரவலாக்கத்தைக் கொடுக்கும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் இல்லாமல் செய்யப்படக் கூடிய அல்லது அதில் உள்ள அதிகார ஏற்பாடுகள் கடுமையாக குறைப்புச் செய்ப்படக் கூடிய சாத்தியம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அஜித் டோவாலின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவரான ஓய்வு பெற்ற அட்மிரல் சரத் வீரசேகரவை மாகாணசபைகள் அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த பிறகு 13வது திருத்தத்தின் கதி மீது அனைவரது கவனமும் திரும்பியது. உத்தேச புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டு அது பலவீனப்படுத்தப்பட்டு விடக் கூடும் அல்லது அந்த அதிகாரங்கள் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு விடக் கூடும் என்று தமிழர்கள் பயப்படுகிறார்கள்.

1987 இந்திய_இந்திய சமாதான உடன்படிக்கையின் விளைவாக மாகாண சபைகள் நடைமுறைக்கு வந்த காரணத்தால், தற்போது 13 வது திருத்தத்துக்கு ஆபத்து நேரக் கூடிய சாத்தியத்தை இந்தியா தலையிட்டு தடுக்க வேண்டும் என்று தமிழர்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் உறுதியாக எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால், சம்பந்தனும் டோவாலும் 13வது திருத்தம் குறித்து பேசியதாகக் கூறப்படுகின்ற போதிலும், அந்தப் பிரச்சினையின் கூருணர்ச்சித் தன்மையை மனதிற் கொண்டு அதை இரகசியமாக வைத்திருப்பதற்கு இருவரும் இணங்கிக் கொண்டதாகத் தெரியவருகிறது.

மறுபுறத்தில், சம்பந்தனுடனான சம்

பாஷணையின் போது அஜித் டோவால் இலங்கையினதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களினதும் பொருளாதார அபிவிருத்தி குறித்து கூடுதல் அக்கறை காட்டியதாகவும், பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் தமிழ்க் கூட்டமைப்பு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறியதாகவுமே பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்திருந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுக்கும் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான இறுதி நேர குறுகிய சந்திப்பு புலப்படுத்தும் யதார்த்தம்

தமிழர்கள் கூடுதல் அதிகாரப் பரவலாக்கத்தை கோருகின்ற அதேவேளை, தங்கள் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று அண்மைக் காலமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியா கூறி வருகின்றது. முன்னர் கொழும்புக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் இதே செயதியையே தமிழ்க் கூட்டமைப்பிடம் கூறினார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் வெளியுறவு செயலாளராக கொழும்பு வந்திருந்த ஜெய்சங்கரிடம் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் 13வது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது குறித்து எடுத்துக் கூறியிருந்தனர். இந்திய_ இலங்கை சமாதான உடன்படிக்கையில் உள்ள ஏற்பாட்டின் பிரகாரம், வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் மீண்டும் இணைப்பதற்கு கொழும்புக்கு புதுடில்லி நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் முன்வைத்தனர்.ஆனால், ஜெய்சங்கரோ இந்திய_ இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு கடந்து போன 3 தசாப்தங்களில் எவ்வளவோ நிகழ்வுப் போக்குகள் இடம்பெற்று விட்ட நிலையில் வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் 13 வது திருத்தம் சம்பந்தமாக உள்ள பிரச்சினைகள் தொடர்பில் கொழும்புக்கு நெருக்குதல் கொடுக்க இந்தியாவினால் முடியாது என்று அடியோடு மறுத்து விட்டார். மாறி விட்ட புதிய சூழ்நிலையின் கீழ் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களை பயன்படுத்தத் தவறினால் என்றென்றைக்கும் எதையும் பெற முடியாத சமூகமாக இலங்கைத் தமிழர்கள் நிற்க வேண்டி வரும் என்றும் ஜெய்சங்கர் அன்று எச்சரிக்கை செய்தார். 13 வது திருத்தம் தொடர்பில் கொழும்புக்கு இந்தியா பெரிதாக நெருக்குதலைக் கொடுத்து முரண்பட்டுக் கொள்ள விரும்பவில்லை என்பது அன்றே தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களிடம் தெளிவாகக் கூறப்பட்டு விட்டது. வெளியுறவு செயலாளராக மோடியின் முதல் அரசாங்கத்தில் இருந்த ஜெய்சங்கர், மோடியின் இரண்டாவது அரசாங்கத்தில் வெளியுவு அமைச்சராக இப்போது இருக்கிறார். அவர் கொழும்பில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களிடம் கூறிய நிலைப்பாட்டில் இருந்து மாறுபடுவதற்கு வாய்ப்பிருக்குமா? விடை வேண்டி நிற்கும் முக்கியமான ஒரு கேள்வி இது. அது அவ்வாறிருக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் புதுடில்லிக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயங்களின் போது, அவர்களிடம் இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பகிரங்கமாக வேண்டுகோள்களை முன்வைத்ததும் அவர்கள் இருவரும் நரேந்திர மோடி முன்னிலையில் அது பற்றி ஒன்றையும் கூறாமல் வெளியில் வந்து இந்திய பத்திரிகைகளுக்கு அளித்த நேர்காணல்களில் "சிங்கள மக்கள் விரும்பாத எதையும் எங்களால் தமிழர்களுக்கு வழங்க முடியாது" என்று திட்டவட்டமாக கூறி விட்டார்கள். அவை 13 வது திருத்தம் தொடர்பான மோடியின் வேண்டுகோளுக்கு அளிக்கப்பட்ட பதில்களாகும்.

ஆனால், முக்கியமான ஒரு விடயத்தை இங்கு கூற வேண்டியிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது 13 வது திருத்தத்தை ஒழிக்க ஒருபோதும் முயற்சிக்கவில்லை."பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் அரசியல் அணிதிரட்டலுக்கான ஒரு மார்க்கமாக மாகாணசபைகளை நோக்குகிறார்கள். அதனால் அவர்கள் மாகாணசபைகள் ஒழிக்கப்படுவதை விரும்ப மாட்டார்கள். பிரதேச சபைகளுக்கும் தேசிய பாராளுமன்றத்துக்கும் இடையில் இருக்கும் மாகாணசபைகள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஒரு அரசியல் படிக்கல்லாகும். மாகாண சபைகளில் உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் உத்தியோகபூர்வ அதிகாரம், அரசியல் செல்வாக்கு மற்றும் கௌரவத்தையும் அரசியல்வாதிகள் பெறக் கூடியதாகவும் இருப்பதால் அவற்றையெல்லாம் அவர்கள் கைவிடத் தயாராயில்லை" என்று மஹிந்த ராஜபக்ஷ கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் இந்திய மூத்த பத்திரிகையாளர் ஒருவரிடம் முன்னர் கூறியிருந்தார்.

அதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் மாகாணசபைகளை ஒழிக்கப் போவதில்லை என்றும் அட்மிரல் வீரசேகரவை மாகாணசபைகள் அமைச்சராக ஜனாதிபதி நியமித்து 13 வது திருத்தத்துக்கு எதிராக பேசுவதற்கு தாராளமாக இடமளித்தது பெரும் பான்மை வாக்காளர்களை திருப்திப் படுத்தவே என்றும் சில வட்டாரங்கள் கூறுகின்றன.

மாகாணசபைகளை ஒழிப்பதில் அரசாங்கத்துக்கு நாட்டம் இருந்திருக்குமானால், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு பெருந்தொகை நிதியை 2021 பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்திருக்காது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீட்டைப் பெறுகின்ற அமைச்சுக்களில் மாகாணசபைகள் அமைச்சும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது. இத்தகைய ஒரு பின்புலத்தில் தான் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை இணங்க வைக்க இந்தியா முயற்சிக்கின்றது.வடக்கு , கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற நிதியை உச்சபட்ச செயற் திட்டங்களுக்கு உதவிகளை வழங்க இந்தியா தயாராயிருக்கிறது. தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை இதுதான்.

இதற்கு தமிழர் தரப்பு ஒத்துழைக்க முன்வராவிட்டால் இந்தியாவிடம் வேறு எதையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது. இந்தியா தனக்கு வசதியானது என்று கருதுகின்ற இந்த அணுகுமுறைக்கு இசைவாக தங்களது அரசியல் செயற்பாடுகளையும் அணுகுமுறைகளையும் மாற்றியமைப்பதே தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களின் முன்னால் உள்ள முக்கிய தேவையாகிறது. அதை எவ்வாறு அவர்கள் நிறைவேற்றப் போகிறார்கள் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

தமிழ்க்கூட்டமைப்பை பொறுத்த வரை, அவர்கள் தங்களின் பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியில் அறவே கவனம் செலுத்தவில்லை என்று கூறி விடவும் முடியாது. தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதியில் பொருளாதரச் செயற்

13வது திருத்தத்தின் எதிர்காலம் என்ன?

துவதற்கு அல்லது அதனுடன் முரண்படுவதற்கு இந்தியா தயாராயில்லை.

அதனால் ராஜபக்ஷ அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தக் கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் இந்தியா இறங்காது. அதுதான் இன்றைய புவிசார் யதார்த்த நிலை.

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களில் பெரும்பாலானவர்கள் வெறுமனே உணர்ச்சிவசமாகப் பேசி கடந்த காலத்திலேயே வாழ்கிறார்கள். மாறிவிட்ட புவிசார் சூழ்நிலையில் அதுவும் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில், தமிழ் மக்களை எவ்வாறு வழிநடத்துவது என்று தெரியாமல், புதிய அணுகு முறைகளை வகுக்கவும் இயலாதவர்களாக இருக்கிறார்கள்

அதனால்,வடக்கு, கிழக்கு தமிழரின் அரசியல் பிரச்சினைகளில் அக்கை காட்டி இலங்கை அரசாங்கத்துடன் முரண்படுவதை விடவும் பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை காட்டுவது இந்தியாவைப் பொறுத்தவரை சமயோசிதமாக அமைகிறது. அது விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வந்தால் தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்திச் திட்டங்களை முன்னெடுக்கிறார்கள். ஆனால் அந்த நிதி போதுமானதல்ல என்பது ஒரு புறமிருக்க, அவர்களின் கவனத்தின் பிரதான அழுத்தம் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மீதே இருந்து வருகிறது. தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் வெறுமனே உணர்ச்சிவசமாகப் பேசி கடந்த காலத்திலேயே வாழ்கிறார்கள்.

மாறிவிட்ட புவிசார் சூழ்நிலையில் அதுவும் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில், தமிழ் மக்களை எவ்வாறு வழிநடத்துவது என்று தெரியாமல், புதிய அணுகு முறைகளை வகுக்கவும் இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

கொழும்பு அரசாங்கங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுகின்ற ஒரு அரசியல் கலாசாரத்துக்கு தமிழர்கள் பழக்கப்பட்டவர்கள் அல்ல. சுதந்திரத்துக்குப் பின்னர் பதவியில் இருந்த அரசாங்கங்கள் சகலதுமே தமிழர்களை பாரபட்சமாக நடத்தியதால் தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு அரசியலையே முன்னெடுத்து வந்திருக்கின்றன.

அதனால், அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படுகின்ற அரசியல்வாதிகளை 'துரோகிகள்' என்று அழைப்பது தமிழர்களின் வழக்கமாகிப் போய் விட்டது. அத்தகைய அரசியல் கலாசாரத்தில் இருந்து மாறுவது என்பது தமிழர்களையும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளையும் பொறுத்த வரை கஷ்டமானதாகும். என்றாலும் போரின் முடிவுக்கு பின்னர் மாறிவிட்ட சூழ்நிலையானது அவர்களின் அரசியல் கலாசாரத்தில் மாற்றமொன்றை வேண்டி நிற்கிகிறது.

மைத்திரி_ ரணில் தலைமையிலான அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவு செயன்முறைகளை முன்னெடுத்த போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை அந்த செயன்முறையின் மூலமாக பெறுவதற்கான ஒரு முயற்சியாக அந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட்டது. அந்த அரசாங்கத்தில் கூட்டமைப்பு சேரவில்லையே தவிர, மற்றும்படி முழுமையாக ஒத்துழைத்தது. புதிய அரசியலமைப்பு வரைவு செயற்பாடுகள் வெற்றி பெறவில்லை என்பதால் தமிழர்கள் மத்தியில் தமிழ்க் கூட்டமைப்பின் செல்வாக்கு கணிசமானளவுக்கு குறையத் தொடங்கியது. கொழும்புடன் ஒத்துழைத்துச் செயற்பட்டும் கூட எந்தப் பலனும் கூட்டமைப்புக்குக் கிட்டவில்லை.

அத்தகைய ஒரு சூழ்நிலையில், தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒத்துழைத்து செயற்படுமாறு இந்தியா கேட்கும் போது தமிழ்க் கூட்டமைப்புக்கு அது சங்கடமாக இருக்கிறது.

ராஜபக்ஷ அரசாங்கம் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களை அந்த பகுதிகளின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தாமலேயே முன்னெடுக்கின்றது. தங்களுடன் பேசி மத்திய அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் அபிவிருத்தி திட்டங்களை வகுக்க வேண்டும் என்பதையே தமிழ்க் கூட்டமைப்பு உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் விரும்புகின்றன.

அரசாங்கம் அதன் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயற்பாடுகளில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்வாங்கும் ஒரு அணுகுமுறையை கடைப்பிடிக்க முன்வந்தால் இந்தியாவின் வலியுறுத்தலின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒத்துழைத்துச் செயற்படுவது அவர்களுக்கு சுலபமாக இருக்கும்.

இந்தியா அதன் நல்லெண்ணங்களை பயன்படுத்தி ராஜபக்ஷ அரசாங்கத்தை இது விடயத்தில் இணங்க வைக்க வேண்டும். அதேவேளை, தமிழ் அரசியல் சமுதாயமும் பாரம்பரியமான எதிர்ப்பு அரசியலை கைவிட்டு இன்றைய நிலைவரம் வேண்டி நிற்பதன் பிரகாரம் புதிய வழிமுறையை கடைப்பிடிக்க தன்னை இசைவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் புரிந்து கொள்ளப்பட வேண்டிய யதார்த்தம்.

கலஹா தெல்தோட்டை குறூப் தோட்டம்

நிறைவு செய்து கொடுங்களேன் இந்த வீட்டுத் திட்டத்தை!

ஜீவன் கவனத்துக்கு

கண்டி மாவட்டம் பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபைக்கு உட்பட்டதும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வருவதுமான கலஹா தெல்தோட்டை குறூப் தோட்டத்தில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் 16 தொழிலாளர் குடும்பங்களுக்கு 16 வீடுகள் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வீடு ஒன்று கட்டுவதற்காக தலா ஐந்து இலட்சம் ஷரூபாய் நிதி உதவி வழங்குவதாக கூறப்பட்டது. இதுவரையில் கட்டுமான பணிகளுக்கு 4 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்

வீடுகள் கட்டும் பணிகள் முற்றாக முடிவடையாத காரணத்தால் தொழிலாளர்கள் குடிபோகவில்லை, ஒரு குடும்பம் மட்டும் குடியமர்ந்துள்ளது. இவர்களுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இக்கடும்பங்கள் வசித்துவந்த வீடுகள் தொடர்ச்சியாக இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வந்ததாலேயே மாற்று நடவடிக்கையாக புதிய வீடுகள் இவர்களுக்காக அமைக்கப் பட்டன.

தற்போது கடும்மழை ஆரம் பித்துள்ளது. இந்நிலையில் உக்கிப்போன கூரையில் ஒழுக்குகள்; வெடிப் புக்குள்ளான சுவர்கள் எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழலாம் என்ற சூழலில் இம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாகவே இந்த வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரைகுறையாக உள்ள இந்த வீடுகள் மழை வெயில் காற்றில் மென்மேலும் சேதமடைந்து வருகின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் வீடு என்பது பெருங்கனவு. பணக்காரர்களுக்கு மட்டுமல்ல: தொழிலாளர்களுக்கும்தான். ஆபத்தான நிலையில் வாழும் இக்குடும்பங்களுக்கு இவ் வீட்டுத்திட்டத்தை நிறைவு செய்து கொடுத்தால் பெரிய புண்ணியமாகப் போகும்!

-நவராஜா

1000 ரூபா சம்பளம் சாத்தியமா அசாத்தியமா?

கொடுக்காமல் விடுவதற்கு ஆயிரம் காரணங்களை தயார்படுத்தும் கம்பனிகள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா நாட் சம்பள விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் நிதியமைச்சர் என்ற ரீதியில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அப்போது எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 1000 ரூபா தினச்சம்பளம் வழங்க தோட்ட நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடுமையான தொனியில் தெரிவித்திருந்தார்.

வழமையாக வேதனம் 1000 ரூபா கோரிக்கை முன்வைக்கும்போது கம்பனித் தரப்பு உடனடியாக கருத்து தெரிவிப்பது கிடையாது. ஆனால் இத்தடவை அப்படி வாய்மூடி இருக்கவில்லை இந்த கம்பனித் தரப்பு. பிரதமர் 1000 ரூபா வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய சில மணி நேரங்களுக்குள் கம்பனிகள் சார்பில் கருத்து முன்வைக்கப்பட்டது. அது சற்று காரசாரமாகவே இருந்தது.

இலங்கை தோட்டத்துரைமார் சங்கத்தின் பதிய தலைவர் பாத்திய புலுமுல்ல 1000 ரூபா சம்பளம் பற்றி யோசிப்பதைவிட வேறு எதையாவது செய்யலாமே என்று இறுக்கமாக பேசினார். இங்குதான் சிக்கலே ஆரம்பிக்கின்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 1000 ரூபா வழங்குங்கள் என்று ஆனையிடுகின்றார். மறுநாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை அமுத்தமாக வலியுறுத்துகின்றார். ஆனால் கம்பனித் தரப்பு இறங்கி வருவதாகக் காணோம். பெருந்தோட்டக் கம்பனிகள் தேயிலைத்துறை மூலம் உபரி வருமானத்தை ஈட்டவே செய்கின்றன. எனினும் தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் அவை காட்டும் கெடுபிடிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

குறிப்பாக சம்பள அதிகரிப்புக்கான கூட்டு ஒப்பந்தம் இன்று முழுமையாக கம்பனி வசமே தஞ்சமடைந்து கிடக்கின்றது. இதனால் கூட்டு ஒப்பந்த பங்காளி சங்கங்கள் வெறும் பம்மாத்து காட்டும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றன. இதை மறைத்துக் கொண்டு தாமே பலமிக்க சக்தி என்று வேஷம் போடுகின்றன. இதனை நம்பி பலகாலமாக தொழிலாளர்கள் ஏமாற்றம் கண்டு வருகின்றார்கள். இவர்களின் அறியாமையும் மெத்தன போக்கும் கம்பனித் தரப்புக்கு சாதகமாகவே அமைந்து விடுகின்றது.

தோட்டத்துரைமார் சங்கத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள பாத்திய புலுமுல்ல ஊடக நேர்காணலின்போது சில கருத்துக்களை பதிவிட்டிருந்தார். அதில் அவர் பெரிதும் வலியுறுத்தியிய விடயம்தான் பெருந்தோட்டங்களில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்பது. ஏற்கனவே தேயிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் உலக நாடுகள் இந்த தொழில்நுட்ப பாவனையில் இறங்கிவிட்டன. அதன் பயனாக குறைந்த செலவில் கூடிய உற்பத்தி என்னும் பெறுபேற்றினை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அதுபற்றி இப்போதுதான் பேசவே தலைப்பட்டிருக்கின்றது. வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்டத்துறையை புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் துறையாக நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருப்பது நம்பிக்கை தரும் செய்தி.

150 வருடங்களுக்கு மேல் வரலாறு கொண்டுள்ள இத்துறை இன்னும் பழைமையான உற்பத்தி முறைமைகளையே கையாண்டுக் கொண்டிருப்பது பின்னடைவுதான். இதனாலேயே உற்பத்திச் செலவினம் அதிகரிப்பதால் நட்டத்தில் இயங்க வேண்டியுள்ளதாக கம்பனித் தரப்பு காரணம் காட்டுகிறது.

இத்துறை நிலையானதொரு விவசாயத் துறையாக கட்டி எழுப்பப்பட வெண்டும் என்று பாத்திய புலு முல்ல கூறுவது சரிதான். இதில் மாற்றுக்கருத்தில்லை. இதேநேரம் புதிய தொழில்நுட்ப பயன்பாட்டினால் மனித வளத்துக்கான தேவை குறைவடையும் அபாயமும் உண்டு. குறிப்பாக தேயிலை கொழுந்து பறித்தல், கிருமிநாசினி தெளித்தல், கவ்வாத்து வெட்டுதல், மீள் நடுகைக்கான முன்னேற்பாடு போன்றவை இயந்திர மயமாக்கப்படும்போது தொழிலாளர்களுக்கான தேவை வீழ்ச்சியடையும்.

எது எப்படியிந்தபோதும் நியாயமான சம்பளம் எனும் கொள்கையை ஏற்பதற்கு இந்தக் கம்பனிகள் தயாராக இருக்கின்றதா என்பதே கேள்வி. ஏற்கனவே சம்பள சமநிலையற்றத் தன்மை நிலவுவதை ஒரு பிரச்சினையாக தோட்டக் கம்பனிகள் முன்வைக்கின்றன. கூட்டு ஒப்பந்த பொறிமுறைக்குள் இருந்து விடுபட்டு மாற்று பொறிமுறைக்குச் செல்ல வேண்டும் என்பதில் கம்பனிகள் குறியாய் இருக்கின்றன. இதேபோது பாரம்பரியக் கொடுப்பனவு முறைக்கு மாற்றம் காணப்பட வேண்டும் என்பதே உண்மை.

இப்படியெல்லாம் சிந்திக்கும் பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களில் போதுமான மனிதவளம் இல்லையென்றும் கவலை தெரிவிக்கின்றது. தோட்டத் தொழிலாளர்கள் இத்துறைசார் தொழிலை கைவிட்டு வேறு தொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொண்டு புலம்பெயரக் காரணம் வாழ்க்கைச் செலவினை சமாளிக்கக் கூடிய சம்பள அதிகரிப்பு இல்லை என்பதே. இதனை பல தடவைகளில் மூடிமறைக்கவே செய்கின்றது கம்பனித் தரப்பு.

இந்தக் கோரிக்கையின் நியாயத் தன்மையை ஏற்றுக்கொள்ள கம்பனிகள் தயாராக இல்லை. ஏனெனில் உற்பத்தித் திறன் அடிப்படையில் சம்பளம் வழங்குவதே தமக்கு சாதகமானது என்பது கம்பனிகளின் நிலைப்பாடு. சதாகாலமும் இந்த உற்பத்தி திறனுக்கான பின்புலம் ஒரே தன்மையில் அமையுமா என்பது எதிர்வாதம். அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

தவிர பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலன்புரி சேவைகள் பற்றி பெரிதும் கூப்பாடு போடுகின்றது கம்பனித்தரப்பு. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம், சம்பளத்துடன் கூடிய விடுமுறை, பிரசவ விடுமுறை, பிரசவ சகாய நிதி, ஊக் குவிப்பு போனஸ், சேவைக் காலப் பணம் போன்ற கொடுப்பனவுகள் காரணமாக நாள் ஒன்றுக்கு 1300 ரூபாய் செலவிடுவதாக கணக்கு காட்டுகின்றது.

பெருந்தோட்டத்துறையை தற்போதைய வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமானால் பயிர்ச்செய்கையை பன்முகப்படுத்தி மாற்றுப் பயிர்ச்செய்கைக்குச் செல்ல வேண்டியதன் அவசியம் பற்றி அதிகம் வலியுறுத்தப்படுகின்றது.

இப்படியெல்லாம் மாற்றங்களைச் செய்ய முடியுமானால் நிலையானதொரு சம்பள பொறிமுறையை வரையறை செய்து கொள்ளலாம். தவிர சம்பள அதிகரிப்புச் சமாச்சாரம் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டு ஒப்பந்தம் மூலம் பேசி தீர்வுகாணக்கூடிய சங்கதியல்ல என்பது கம்பனித் தரப்புவாதம். இது ஏற்றுக் கொள்ளக்கூடியது தான்.

இதேநேரம் அவ்வப்போது ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்கள் கூட்டு ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு தன்னிச்சையாக மாற்றங்களை திணிக்க முயல்வதால் முகாமைத்துவ ரீதியிலான குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்பட்டு சிறப்பான நிர்வாகத்தில் குளறுபடிகளை உண்டாக்குவதாக தோட்டத்துரைமார் சங்கத் தலைவர் கவலை தெரிவிக்கின்றார்.

இதே கண்ணோட்டத்துடனேயே தோட்டக் கம்பனிகள் அரசாங்கத்தின் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு அறிவிப்பை எதிர்கொள்ள போகின்றதா என்பதே இப்போதுள்ள கேள்வி. இத்துடன் உற்பத்தித் திறன் அடிப்படையிலே வேதன நிர்ணயம் எனும் கொள்கையில் இருந்து தோட்டக் கம்பனிகள் விடுபட இணங்காவிடில் அரசாங்கத்தின் அடுத்தக் கட்ட நகர்வு என்னவாக இருக்கும்? பெருந்தோட்டத்துறை விளைநிலங்களை சிறுசிறு தோட்டங்களாக பிரித்து தொழிலாளர்களுக்குக் கொடுப்பதால் இத்துறை பாதிக்கும் என்று கருத்து தெரிவித்துள்ளது கம்பனித் தரப்பு. இதுபற்றி அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா?

ஆக, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபா சம்பள அதிகரிப்புச் சமாச்சாரத்தில் அரசாங்கத்துக்கும் கம்பனித் தரப்புக்கும் இடையே ஒரு பனிப்போர் ஆரம்பிக்கப் போகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கத்துடன் முரண்பட கம்பனித் தரப்பு துணியுமா?.

இதேவேளை இக்கம்பனிகள் உள்ளூர் முகங்களை போட்டுக் கொண்டுள்ள பல்தேசியக் கம்பனிகளின் வார்ப்புகள் என்பதையும் மறந்து விடக்கூடாது. எனினும் 2021 ஜனவரி முதல் 1000 ரூபா நாட் சம்பளம் பெரும் அதிர்ஷ்ட த்தை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெறுவார்கள் என்பதே அனைவரது நம்பிக்கையாக இருக்கின்றது. ஆயிரம் ரூபா சம்பளம் சாத்தியமா? அசாத்தியமா?

பன். பாலா ...

வாயை மூடி பேசுங்கள் _!



இயற்கையை எதிர்ப்பானாம் மனிதன்
தன் தேவைகளை நிறைவு செய்ய
ஒரு நாள் இயற்கையும் எதிர்க்கும்
துஷ்ட நிக்ரஹம் செய்ய
அப்படி இயற்கை ஏவிவிட்ட கொலையாளியா
இந்த கொரோனா கொலையாளி...
பதினான்கு நாள் தனித்தால் தானாகவே
தளர்ந்து விடுமா தொற்று ஆனாகூடி
இருந்தால் கொத்து கொத்தாக
கொன்டு போயிடும் கொரோனா
கைசுத்தம் வாய்சுத்தம் தான்நல்ல
மனிதனுக்கு அடையாளமாம்
அதைத்தான் கொரோனாவும் சொல்கிறது
அன்று வந்த அம்மை ஒரு வைரஸ்
அப்போ அடைத்து போட்டார் தனியே
பதினான்கு நாட்கள் முறையே.
கதவு நிலையிலேயே வேப்பம் குலை
இன்றோ கதவில் தனிமைப்படுத்தல்
அறிவித்தல் அதற்கும் இதற்கும்
ஏது வித்தியாசம் இது பொது ஒழுக்கம்
வீட்டுக்குள் நுழையு முன் நீ
முழங்கால் முழங்கை வரை கழுவிவா
முற்றத்தில் முட்டியதில் நீர் வைத்தனர்
மரண வீடுசென்றால் வாசல் வரக்கூடாதென்றனர்.
எல்லாம் காரிய மாகத்தான்
கொரோனா நமக்கு புதிதல்ல
கொலரா, வைசூரி, மலேரியா என
அனுபவப்பட்டவர்கள் தான்
கட்டுப்பாடுகளை கைகொண்டால்
கொரோனாவை வென்று
கொன்று குவிக்க முடியுமே
வாசலில் வேப்பம் இலை கண்டால்
மச்சான் மாமன் மற்றவரும்
வீட்டு வாசல் பக்கம் வரமாட்டார்களே
கசப்பு இலை கண்டால்
அப் பக்கமே திரும்ப மாட்டோமே
இப் பழக்கம் கொண்ட நாம்
வெட்கம் கெட்டு வீடுவீடா போய்
வீரியம் கொண்ட இந்த
கொரோனாவை வீட்டுக்கு
அழைத்துவர நாம் என்ன மக்கா மடையனா
கூடிக் குடிக்க வேண்டாம்
கும்மாளம் போட வேண்டாம்
வாயை மூடி பேசுங்கள்
எதிர் வருவோரில் எச்சில் படாது வாய்க்கு
மூடிபோட்டு வளமான உலகுக்கு
வழிசமைத்து வாழ்வோம்...!

நவகவி நவராஜா

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமைகள்

அருட் சகோதரி யதீஸ்வரி அம்மையார்

மலையக மக்கள் மத்தியில் பெண்களின் கல்வி அறிவு என்பது மிகவும் வளர்ச்சி குன்றியிருந்த நிலையில் பெண்கள் மத்தியிலிருந்து அறுபதுகளின் முற்பகுதியில் அருந்தளாகவே பெண் எழுத்தாளர்கள் துவிர்விட்டனர். அந்த எழுத்தாளர் பேரணியில் சிவபாக்கியம் குமாரவேல், முத்துலட்சுமி கதிரேசன், நயிமா. எ. பசீர், லலிதா நடராசா, அன்னபூரணி (பூரணி), மகேஸ்வரி கிருஷ்ணன் ஆகியோர் மலையக எழுத்து துறையில் பிரகாசித்தவர்கள். அந்த வரிசையில் கண்டி, பன்விலை உடுவரை தோட்டத்திலிருந்து மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் 1964 ஆம் ஆண்டு நடாத்திய இரண்டாவது மலையக சிறுகதை போட்டியில் ஆறுதல் பரிசை பெற்று எழுத்துத்துறையில் கால்பதித்தவர்.

தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்கை அம்மன் ஆலய
முன்னாள் அறங்காவலர்

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் 1964 இல் நடாத்திய மலையக இரண்டாவது சிறுகதை போட்டியில் அன்னபூரணி ஆறுதல் பரிசைப் பெற்றுக் கொண்டு பின்னர் தனது எண்ணக் கருத்துக்களை இவ்வாறு பதிவு செய்கிறார். மலையகத்தின் மத்திய பகுதியை தாயகமாகக் கொண்ட நான் பன்விலைத் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். 1964 ஆம் ஆண்டு மலையக சிறுகதைப் போட்டியில் எனது 'மலைச் செல்வம்' சிறுகதை ஆறுதல் பரிசை பெற்றது. ஆத்ம திருப்திக்காக ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளேன். 'பூரணி' எனும் பெயரில் சில கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இந்த மலையகத்தின் மான்பினுக்காய் தம்மையே அர்ப்பணித்த தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வோ ஒரு அவலக்கதை! கடின உழைப்பு, வசதிக எற்ற சூழலில் துர்நாற்றத்தின் மத்தியில் குடியிருப்பு. புறக்கணிக்கப்பட்ட பஞ்சைகளாய் அவர்கள் வாழும் வாழ்வின் போராட்டம். அதுவோர் கண்ணீர் காவியம். மலையகத்தாரின் அவலத்திற்குமிடையே எண்ண ஊஞ்சல் பின்னி உலவும் ஒரு மலையக தமிழ் மகள் நான். எனது உணர்வனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் விளைவே என்னை எழுதத் தூண்டியது.

கலாநிதி ஆறுதிருமுருகன்
தெல்லிப்பளை துர்க்கை
அம்மன் ஆலய அறங்காவலர்

கண்டி மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பன்விலை உடுவரை தோட்டத்தில் மலையப்பர் கதிர்வேல் அவர்களுக்கும் உலகம்மாளுக்கும் மகளாக 16.10.1944 இல் பிறந்தார். பெற்றோர் சூட்டி மகிழ்ந்த பெயர் அன்னபூரணி. இவருடன் உடன் பிறந்த சகோதரர்கள் முறையே பார்வதி, நாராயனசாமி, அமுதம், அருணாசலம் என்பவர்கள் ஆவர். இவருடைய தந்தை பன்விலை உடுவரை தோட்டத்தில் பெரிய கணக்குப்பிள்ளையாக பணிபுரிந்தவர். மலையக சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளிவந்தபோது நான் பன்விலை கல்பீலி தோட்டத்தில் எனது தாய்வழி உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். அடுத்த டிவிஷனில் பூரணி வாழ்ந்தமையினால் நான் அவர்களது வீட்டிற்கு நேரடியாகச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். அவருடன் ஏற்பட்ட தொடர்பும் உறவும் மலையக கலை இலக்கியம், மலை நாட்டு எழுத்தாளர் மன்றம், ஆன்மீக பணிகளென்று இன்றுவரை நீடித்துள்ளது.

எழுத்துத்துறையில்
அன்னபூரணியாக

ஆன்மீகப் பணிகள்

பல்கலைக்கழக புகுமுக வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்று மலையக எழுத்தாளராக இருந்தாலும் இவரது ஆத்மா ஆன்மிகத் துறையில் நாட்டம்கொண்டிருந்தது. இதன் காரணமாக 1983 ஜனவரி 6ஆம் திகதி இவரது புனித பயணம் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தை நோக்கிச் செல்கிறது.

மகாதேவ ஆச்சிரமத்தில் குருதேவரிடம் உபதேசத்தினை பெற்று பல வருடங்கள் ஆன்மீக பயிற்சியினை மேற்கொண்டு அருட்சகோதரி என்ற தீட்சநாமம் பெற்று துறவறநிலையை எய்தினார். தமது புனித பணியினை மகாதேவ ஆச்சிரமத்தில் செழுமையாக ஆற்றிய யதீஸ்வரி அம்மையார் கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்பிற்குப் பாத்திரமானார்.

தனது 42வது வயதில் 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதம் துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அன்னையின் அழைப்பின் பெயரில் சென்றார். தனது பணிகளை பலதரப்பட்ட கோணத்தில் விஸ்தரித்துப் பணியாற்றி கொண்டிருந்த தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் அன்பாகவும், செல்லமாகவும் மரியாதையாகவும் 'சிஸ்ரர் அம்மா' என முதன் முதலாக அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அவரது அனைத்துப் பெயர்களும் மறைந்து 'சிஸ்ரர் அம்மா' என்றால் மட்டுமே இவரை தெரியும் நிலை ஏற்பட்டது. இவ் அன்பு பிணைப்பின் காரணமாக துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு அளப்பரிய பணியாற்றியவர்.

தேவஸ்தான மகளிர் இல்லப் பணிகள்

மகளிர் இல்லப்பணிகளில் எழுத்துருவாக்கப்பணி, ஆலயப்பணி, சமுதாயப் பணி, பஞ்சபுராணம் பாடுதல் போன்ற பணிகளுக்கு மத்தியில் இவர் எழுத்து பணிகளைத் தொடர்ந்தார். பூரணி, நிவேதிகா, மலைமகள் என்னும் புனை பெயர்களுடன் இவரது சிறுவர் கதைகள், நாடகங்கள், பாடல்கள் ஆன்மீக கட்டுரைகள் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இலங்கை வானொலியில் தமிழ் மாலை, தமிழ் பாமாலை போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி சிறப்பித்தவர். மலையகத்தில் வாழ்ந்த காலத்தில் மலையக மண் வாசனை கொண்ட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் மகளிர் இல்லத்தில் இருந்து சுமார் எழுபத்தைந்திற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய மாணவர்களுக்கான நன்னெறி கதைகளை 2011 இல் தொகுத்து 'மானிடம் வென்றது' என்ற தலைப்பில் துர்க்காதேவி தேவஸ்தானமும் சிறுவர் பாடல்களை 2015 இல் தொகுத்து 'ஆடிப்பாடுவோம்' என்று தெல்லிப்பளை கலை இலக்கியம் களமும் வெளியிட்டுள்ளது.

மலையக மக்களின் வாழ்க்கை முறைகளை இவரது சிறுகதைகளில் காணலாம்.

யதார்த்தத்தை, துன்பங்களை, துயரங்களை, மனக்கிலேசங்களை எடுத்துக் காட்டுகின்றன. பூரணி தமது வாழ்க்கை அனுபவத்தில் கண்ட மனிதர்களை தமது கதைகளின் மாந்தர்களாக எடுத்துக்காட்டி தமது கதைகளுக்கு யதார்த்த உணர்வுகளை வழங்கியிருக்கின்றார். இன்றும் அவரது கதைகளை படிக்கும்போது 60 களில் இருந்த மலையக மக்களின் நினைவுகள் எமது நினைவுக்கு வருகிறது.

மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வீட்டு வேலைக்கு, தோட்ட வேலைக்கு மட்டுமின்றி வர்த்தகர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களென பலர் சென்றிருக்கின்றார்கள். ஆனால் மலையகப் பெண்ணொருவர் ஆன்மீக பணிக்காக சென்றதில் பூரணி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

எழுபத்தாறு வயது நிரம்பிய அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார் தற்போது செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆர். திருமுருகன் தலைமையில் இயங்கும் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் செயற்படும் சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் தியானம் பிரார்த்தனைகளுடன் கூடிய சிவசிந்தனையில் வாழ்ந்து வருகின்றார்.

எச். எச். விக்ரமசிங்க ...

SriLankan Airlines

oneworld

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு மேன்பவர் (Manpower) சேவை வழங்குவதற்காக விலைமனுக்கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அழைப்பு: உசாத்துணை இலக்கம்: 201932817

ஸ்ரீ லங்கன் விமான சேவை சார்பாக, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கொள்முதல் குழுவின் தவிசாளரினால், ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு மேன்பவர் சேவையை வழங்குவதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த விலைமனுக்கள் genproctenders@srilankan.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2020/12/28 திகதி 1000 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் (இலங்கை நேரம்: GMT +0530) அனுப்பப்படல் வேண்டும். மின்னஞ்சல் முறையாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தால், அது கிடைத்தை உறுதி செய்யும் சுயமான அனுப்பப்படும் மின்னஞ்சல் அனுப்பப்படும். அதன் பின்னர் தாம் விலைமனுக்கோரிக்கையை முன்வைத்துள்ளமையை ஏலம் கோருபவர் உறுதி செய்ய வேண்டும்.

சகல விலைமனுக்களும் வழங்கப்படும் பிரிவுகளுக்கு பொருத்தமான ஆகக்குறைந்த மீளச்செலுத்தப்படக்கூடிய ஏல பிணையை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தமது விலைமனுக்கோரிக்கையுடன் குறித்த ஏலப் பிணையை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். குறித்த ஏலப் பிணையானது ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு நிபந்தனையற்ற மீளப்பெற முடியாத வங்கி உத்தரவாதமாக பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், **24 /07/ 2021** ஆம் திகதி வரை (விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் தினத்திலிருந்து 208 நாட்கள் வரை) செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். மீளச்செலுத்தப்படக்கூடிய ஏல பிணையை கொண்டிருக்காத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஆர்வமுள்ள தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் **14/12/2020** தினத்தன்று **1600** மணி வரை 0710212773 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது chintana.devapriya@srilankan.com / maheshini.kulathilaka@srilankan.com எனும் மின்னஞ்சல்கள் வாயிலாக தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். விலைமனுக்கோரல் ஆவணங்களை https://www.srilankan.com/en_uk/coporate/tender-notices எனும் இணையப்பக்கத்தில் பார்வையிட முடியும்.

ஆர்வமுள்ளவர்கள் மீளப்பெற்றுக் கொள்ள முடியாத LKR 35,000 கொடுப்பனவை ஒன்லைன் ஊடாக செலுத்தி விலைமனுக்கோரும் ஆவணங்களை **07/12/2020** தினம் முதல் **15/12/2020** அன்று **1200** மணி வரை கொள்வனவு செய்ய முடியும்.

பின்வரும் கணக்குக்கு ஒன்லைன் ஊடாக கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும்.

Bank Name:	Bank of Ceylon
Account name:	SriLankan Airlines Ltd.
Account No:	0000000227
Currency	LKR
Branch :	Corporate Branch
Branch code	660
Swift Code:	BCEYLKLX

ஒன்லைன் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது விலைமனுதாரரின் தகவல் குறிப்பில் "பதிவு செய்யப்பட்ட வியாபாரத்தின் பெயர்" தெளிவாக குறிப்பிட்டு மேலே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கொடுப்பனவை உறுதி செய்யும் சிட்டையை அனுப்ப வேண்டும். கொடுப்பனவு உறுதி செய்யப்பட்டதன் பின்னர், விலைமனு கோரல் ஆவணம் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதுடன், விலைமனுக்கோரலுக்கு முன்னரான சந்திப்பு தொடர்பான அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியிருக்கும்.

MS Teams ஊடாக மெய்நிகர் முறையிலமைந்த விலைமனுக்கோரலுக்கு முன்னரான சந்திப்பு **17/12/2020** அன்று இலங்கை நேரம் **1100** மணிக்கு (GMT +5:30 நேர வலயம்) ஏற்பாடு செய்யப்படும். விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதார / விலைமனுதாரரின் ஒரு (01) முழு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி இந்த சந்திப்பில் பங்கேற்பதற்கு அனுமதியளிக்கப்படுவார். அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் இந்த சந்திப்பில் பங்கேற்பதற்கு முன்வருவாராயின், அங்கீகாரத்தை உறுதி செய்யும் கடிதத்தை தொடர்பு கொள்ளக்கூடிய மின்னஞ்சல் முகவரியுடன் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த கடிதம் வியாபார கடித மேலுறையில் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டு உரிய முத்திரைகளுடன் விலைமனுக்கோரலுக்கான ஆவணத்தை கொள்வனவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

28/12/2020 அன்று **1030** மணிக்கு (இலங்கை நேரம்: GMT +0530) MS Teams ஊடாக விலைமனுக்கோரல்கள் திறக்கப்படும். விலைமனுக்கோரும் ஒரு நிறுவனத்தின் சார்பாக ஒரு பிரதிநிதிக்கு மாத்திரம் இந்த விலைமனுக்கோரல்கள் திறப்பில் பிரசன்னமாக வாய்ப்பு வழங்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். விலைமனுக்கோரிக்கைகளை கொள்வனவு செய்து அவற்றை சமர்ப்பித்ததை உறுதி செய்த விலைமனுதாரர்களுக்கு மாத்திரம் சந்திப்புக்கான அழைப்பு அனுப்பப்படும்

அமைச்சின் கொள்முதல் குழுவின் தவிசாளர்இ
விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுஇ
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை சார்பாக

SriLankan Airlines

oneworld

வானூர்தியில் பறப்போர் மற்றும் கெபின் குழுவினருக்கு போக்குவரத்து சேவைகளை பெற்றுக் கொடுக்க சேவை வழங்குநரை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அழைப்பு: உசாத்துணை இலக்கம்: 201932815

ஸ்ரீ லங்கன் விமான சேவை சார்பாக, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கொள்முதல் குழுவின் தவிசாளரினால், ஸ்ரீ லங்கன் விமான சேவையின் வானூர்தியில் பறப்போர் மற்றும் கெபின் குழுவினருக்கு போக்குவரத்து சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்காக சேவை வழங்குநரை தெரிவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த விலைமனுக்கோரலுக்கான ஆவணங்களை https://www.srilankan.com/en_uk/coporate/tender-notices எனும் இணையத்தளத்தில் 15/12/2020 அன்று 1200 மணி வரை பார்வையிட முடியும். ஆர்வமுள்ள தகைமை வாய்ந்த விலைமனுதார்கள் 0710212773 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது chintana.devapriya@srilankan.com / maheshini.kulathilaka@srilankan.com எனும் மின்னஞ்சல்கள் வாயிலாக தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆர்வமுள்ளவர்கள் மீளப்பெற்றுக் கொள்ள முடியாத LKR 100,000 கொடுப்பனவை ஒன்லைன் ஊடாக செலுத்தி விலைமனுக்கோரும் ஆவணங்களை **07/12/2020** தினம் முதல் **15/12/2020** அன்று **1200** மணி வரை கொள்வனவு செய்ய முடியும்.

பின்வரும் கணக்குக்கு ஒன்லைன் ஊடாக கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும்.

Bank Name:	Bank of Ceylon
Account name:	SriLankan Airlines Ltd.
Account No:	0000000227
Currency	LKR
Branch :	Corporate Branch
Branch code	660
Swift Code:	BCEYLKLX

ஒன்லைன் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது விலைமனுதாரரின் தகவல் குறிப்பில் "பதிவு செய்யப்பட்ட வியாபாரத்தின் பெயர்" தெளிவாக குறிப்பிட்டு மேலே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கொடுப்பனவை உறுதி செய்யும் சிட்டையை அனுப்ப வேண்டும். கொடுப்பனவு உறுதி செய்யப்பட்டதன் பின்னர், விலைமனு கோரல் ஆவணம் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதுடன், விலைமனுக்கோரலுக்கு முன்னரான சந்திப்பு தொடர்பான அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியிருக்கும்.

மெய்நிகர் முறையிலமைந்த விலைமனுக்கோரலுக்கு முன்னரான சந்திப்பு **17/12/2020** அன்று இலங்கை நேரம் **1400** மணிக்கு (GMT +5:30 நேர வலயம்) ஏற்பாடு செய்யப்படும். விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதார / விலைமனுதாரரின் ஒரு (01) முழு அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி இந்த சந்திப்பில் பங்கேற்பதற்கு அனுமதியளிக்கப்படுவார். அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் இந்த சந்திப்பில் பங்கேற்பதற்கு முன்வருவாராயின், அங்கீகாரத்தை உறுதி செய்யும் கடிதத்தை தொடர்பு கொள்ளக்கூடிய மின்னஞ்சல் முகவரியுடன் சமர்ப்பிக்க வேண்டும். குறித்த கடிதம் வியாபார கடித மேலுறையில் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டு உரிய முத்திரைகளுடன் விலைமனுக்கோரலுக்கான ஆவணத்தை கொள்வனவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சகல விலைமனுக்களும் வழங்கப்படும் பிரிவுகளுக்கு பொருத்தமான ஆகக்குறைந்த மீளச்செலுத்தப்படக்கூடிய ஏல பிணையை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தமது விலைமனுக்கோரிக்கையுடன் குறித்த ஏலப் பிணையை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். குறித்த ஏலப் பிணையானது ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு நிபந்தனையற்ற மீளப்பெற முடியாத வங்கி உத்தரவாதமாக பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், **24/06/2021** ஆம் திகதி வரை (விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் தினத்திலிருந்து 178 நாட்கள் வரை) செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். மீளச்செலுத்தப்படக்கூடிய ஏல பிணையை கொண்டிருக்காத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
குறித்த விலைமனு genproctenders@srilankan.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2020/12/28 திகதி 1400 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் (இலங்கை நேரம்: GMT +0530) அனுப்பப்படல் வேண்டும். மின்னஞ்சல் முறையாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தால், அது கிடைத்தை உறுதி செய்யும் சுயமாக அனுப்பப்படும் மின்னஞ்சல் அனுப்பப்படும். அதன் பின்னர் தாம் விலைமனுக்கோரிக்கையை முன்வைத்துள்ளமையை ஏலம் கோருபவர் உறுதி செய்ய வேண்டும்.

28/12/2020 அன்று **1430** மணிக்கு (இலங்கை நேரம்: GMT +0530) MS Teams ஊடாக விலைமனுக்கோரல்கள் திறக்கப்படும். விலைமனுக்கோரும் ஒரு நிறுவனத்தின் சார்பாக ஒரு பிரதிநிதிக்கு மாத்திரம் இந்த விலைமனுக்கோரல்கள் திறப்பில் பிரசன்னமாக வாய்ப்பு வழங்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். விலைமனுக்கோரிக்கைகளை கொள்வனவு செய்து அவற்றை சமர்ப்பித்ததை உறுதி செய்த விலைமனுதார்களுக்கு மாத்திரம் சந்திப்புக்கான அழைப்பு அனுப்பப்படும்.

மின்னஞ்சலுக்கு மேலதிகமாக, சகல விலைமனுதார்களும், தமது விலைமனுக்கோரல்களை கடித உறையில் இட்டு, கடித உறையின் இடது மேற்பகுதியில் IFB இலக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு சிரேஷ்ட முகாமையாளர் வணிக கொள்முதல், வணிக கொள்முதல் பிரிவு, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிடெட், எயர்லைன் சென்ரர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை எனும் எனும் முகவரிக்கு **01/01/2021** க்கு முதல் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்ப வேண்டும். மின்னஞ்சல் மற்றும் கடிதம் மூலம் அனுப்பும் பிரதிக்குமிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லாதிருப்பதை விலைமனுதார் உறுதி செய்ய வேண்டும். விலைமனுக்கோரல் மதிப்பீட்டுக்காக விலைமனுக்கோரலின் அச்சுப்பிரதியை காலதாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இடைக்கால அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் தவிசாளர்இ
சுற்றுலாத்துறை அமைச்சுஇ ஸ்ரீலங்கன் விமான சேவை சார்பாக

சுகாதார அமைச்சு

எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான பூகோள நிதிய செயற்றிட்டம் (GFATM)

தேசிய STD/எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் மூலம் சமூக அடிப்படையிலான ஒரு சேவை நிலையத்தை இயக்குவதற்காக, கொழும்பு 02, கொம்பனித்தெருவில் ஒரு பொருத்தமான கட்டிடத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்.

பொருத்தமான கட்டிடமொன்றிற்காக தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை, GFATM செயற்றிட்டம் கீழான தேசிய STD/எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தற்போது அழைக்கின்றார்

கீழேயுள்ள விபரக்குறிப்புகளை உத்தேச கட்டிடம் கொண்டிருத்தல் வேண்டும்.

- ஆகக் குறைந்தது 175 சதுர அடிகள் பரப்பளவுடனான மொத்த தரைப்பகுதியின் பரப்பளவு 200 சதுர அடிகளாகும்.
- குறித்த கட்டிடம், ஆகக்குறைந்தது 50 அடிகள் பிரதான பாதையை ஒட்டியதாக (Frontage) இருக்க வேண்டியதுடன் பிரதான பாதைக்கு முகப்பாக, நகரிற்குள் அது அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
- வாகன நிறுத்த வெற்றிடம் (02 வாகனங்களுக்கானது)
- 60 AMP 3 -கட்ட மின்சாரம், நீர் வழங்கல், ஆண்கள், பெண்களுக்கான பிரத்தியேக கழிவறைகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்
- 12 மாதங்களுக்கான குத்தகை

ஆர்வங்காட்டும் தரப்பினர், அனைத்து விபரங்களுடனான (எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை) கட்டிட திட்ட வரைபடம், நில அளவை திட்ட வரைபடம் மற்றும் உரித்தின் பிரதிகளை, 14 தினங்களுக்குள் (2020 டிசம்பர் 21 அல்லது அதற்கு முன்னதாக)

கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "சமூக அடிப்படையிலான நிலையமொன்றிற்கான கட்டிடத்தை குத்தகைக்குப் பெறல்" என தயவு செய்து குறிப்பிடுங்கள்

பிராந்திய பெறுகைக்குழுத் தலைவர்
தேசிய STD/எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்,
இல.29, டீசேரம் பிளேஸ்,
கொழும்பு -10
தொலைபேசி : 0112112756/0774540990

ஒப்பந்தக்காரர்கள், பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் வருடம்

தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டம்

கந்தகெட்டிய

நீர்ப்பாசன அமைச்சு

இலங்கையின் பிரதான பல்காரிய நீர்ப்பாசன செயற்றிட்டமாக ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டத்திற்கு சிறிய மற்றும் மத்திம தர அளவிலான நிர்மாணங்கள், பொருட்கள், மூலப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2021ஆம் வருடத்தில் பின்வருவனவற்றுக்காக பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. நீர்ப்பாசனம், பெருந்தெருக்கள் மற்றும் கட்டிட நிர்மாணம் போன்ற துறைகளின் தகைமை வாய்ந்த CIDA (ICTAD) சகிதமான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பதுளை மாவட்டத்தில் நிர்மாணத்திற்காக ஒப்புதலைப் பெற்றுள்ள சங்கங்கள்
II. நிர்மாணப் பொருட்கள் வழங்குவோர்
III. வாடகை அடிப்படையில் இயந்திரோபகரணங்கள் வழங்குவோர்
IV. தளபாடங்கள், காகிதாதிகள், மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் வழங்குநர்கள்
V. நில அளவை சேவை வழங்குநர்கள்
VI. தொழிலாளர் சேவை வழங்குநர்கள்
VII. உற்சவங்கள், கருத்தரங்குகள், கூட்டங்களுக்கான சேவை வழங்குநர்கள்
VIII. வாகனம் மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்குநர்கள்
IX. பாதுகாப்பு சேவை வழங்குநர்கள்

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கந்தகெட்டிய செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் அல்லது கொழும்பு உப செயற்றிட்ட அலுவலகத்திலிருந்து 2020-12-07ஆம் திகதி முதல் 2021-01-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இதன் பொருட்டு ஒரு விண்ணப்பப் படிவத்திற்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா வைப்பொன்று அறவிடப்படும்.

மேலும் செயலாளர் - நீர்ப்பாசன அமைச்சு எனும் பெயருக்கு இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் பேணப்படும் 7042637 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை pdthlpitigala@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2021-01-04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை கந்தகெட்டிய செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீண்டும் கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் அல்லது அன்றைய தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். தகைமை பெறும் நிறுவனம் அல்லது நபர்கள் செயற்றிட்டத்திற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களாக தகைமை மற்றும் செயலாற்றுகையின் பிரகாரம் பதியப்படுவர்.

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொறி. பீ.சீ.டி. லசந்த குருகே,
செயற்றிட்டப் பணிப்பாளர்.

செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம்,
தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டம்,
கந்தகெட்டிய.
தொ.பே. 055-2245626

உப செயற்றிட்ட அலுவலகம்,
இல. 11,
ஜாவத்த வீதி, கொழும்பு- 05.
தொ.பே. 011-2502718

The Housewives' companion
Classifieds on
Daily News

தற்பொழுது தீவு முழுவதும் வெற்றிடங்கள் நிலவும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகள் 350 இனது 2020.11.13ஆந் திகதிய இலக்கம் 2202 உடைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களினை www.rgd.gov.lk அல்லது www.documents.lk வெப்தளத்தில் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள இயலும்.

வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி: 2020.12.14

கே.ஜி. தர்மதிலக
பதிவாளர் நாயகம்.

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

2021 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

12 ஆவது மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ள கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் 2021 ஆம் ஆண்டிற்காக தகைமை பெற்ற வழங்குநர்களை பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

A. விளையாட்டுத்துறைக்கான தேவைகள்
01. அனைத்து விளையாட்டுக்களுடனும் தொடர்பான விளையாட்டு உபகரணங்கள், பாதணிகள் மற்றும் விளையாட்டு சாதனங்களை வழங்குதல்
02. விளையாட்டு ஆடையணிகள், தைத்த ஆடைகள், பயணப் பைகள் மற்றும் தொப்பிகளை வழங்குதல்.
03. வைபவங்களுக்கான தைத்த ஆடைகளை வழங்குதல்.
04. உடற் பயிற்சி நிலையங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.
05. கிண்ணங்கள், பதக்கங்கள் மற்றும் பெயர் பொறி பலகை (plaques) தயாரித்தல்
06. விளையாட்டு மைதானங்களில் அடையாளமிடுவதற்குத் தேவையான வர்ணப் பூச்சு (பெயின்ட்) மற்றும் உபகரணங்களை வழங்குதல்
07. புல் வெட்டும் இயந்திரம் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்.

B. அலுவலகத் தேவைகள்
01. எழுது பொருட்கள்
02. அலுவலக மரத் தளபாடங்கள், அலுவலக கதிரைகள், உருக்கு அலுமாரி மற்றும் உருக்கு கெபினட்
03. போட்டோ பிரதி இயந்திரம், ஸ்கேனர், கணனி மற்றும் பெக்ஸ் இயந்திரம் உட்பட்ட மின் உபகரணங்களை வழங்குதல் மற்றும் பழுதுபார்ப்பு
04. டோனர் தூள் (Toner) / அச்சிடல் இயந்திரங்களுடன் தொடர்புடைய பொருட்கள்
05. திகதி முத்திரை (Date Stamp), பதவி முத்திரைகள் (சீல்), பதவி அடையாள அட்டைகள், வருகையாளர் அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல்.
06. தொடர்பாடல் உபகரணங்களை (தொலைபேசி, இணையத்தள வசதிகள்) வழங்குதல் மற்றும் பழுதுபார்ப்பு
07. பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்
08. சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்

C. வாகனங்கள் பராமரிப்பு மற்றும் சீராக்கல் சேவை நடவடிக்கைகள்
01. வாகனங்கள் மற்றும் இயந்திர சாதனங்களை பழுதுபார்த்தல்
02. வாகனங்களை சீராக்கம் (சேர்விஸ்) செய்தல்
03. டயர்கள் மற்றும் ரியூப்களை வழங்கல்
04. வாகன பற்றரிகளை வழங்குதல்
05. வாகனங்களின் குளிரூட்டிகளைப் பழுதுபார்த்தல்
06. வாகனங்களின் குஷன் மற்றும் அபோஸ்டின் வேலைகள்
07. டின்கர் மற்றும் பெயின்ட் வேலைகள்
08. வாகனங்களின் மின்சாரத் தொழில்நுட்பவியலாளர்கள்
09. வாகனங்களின் உதிரிப் பாகங்கள்

D. நிர்மாண ஒப்பந்தப் பணிகளின் ஆலோசனை சேவைகள் மற்றும் பராமரிப்பு
01. கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
02. இரும்புச் சட்டகங்களை நிர்மாணித்தல் மற்றும் கட்டமைப்புக் கட்டிடங்களை நிர்மாணித்தல்
03. விளையாட்டு மைதானங்கள்/விளையாட்டரங்குகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
04. செயற்கை ஓட்டப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள் (Synthetic Running Track)
05. நீச்சல் தடாகங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
06. நீச்சல் தடாகங்களின் உபகரணங்களைப் பராமரித்தல்
07. நீச்சல் தடாகங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை வழங்குதல்
08. விளையாட்டுத் தொகுதிகளுக்கான இலத்திரனியல் உபகரணங்களை பொருத்துதல்
09. வடிகாலமைப்பு மற்றும் வாய்க்கால் கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்
10. பாதைகளை நிர்மாணித்தல்/பராமரிப்பு சேவைகள்
11. மின் குமிழ் கம்பங்களை நிர்மாணித்தல் மற்றும் மின் குமிழ்களைப் பொருத்துதல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
12. புல் வளர்ப்பு மற்றும் பூங்கா எழிலமைப்பு
13. மரப்பலகை தரையை நிர்மாணித்தல் (Timber Flooring)
14. செயற்கை தரையை நிர்மாணித்தல் (Synthetic Floor)
15. ஒலிம்பிக் விளக்கை நிர்மாணித்தல்
16. கண்ணாடியிழை (பைபர் கிளாஸ்) வேலைகள் (Fiber Glass Work)
17. தெளிப்பானை கட்டமைப்பை அமைத்தல் (Sprinkler System Installation)
18. பெயர்ப் பலகைகளை நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல்
19. விளையாட்டு மைதானங்களின் அளவீட்டு நடவடிக்கைகள்
20. கட்டமைப்புத் திட்டமிடல்களை தயாரித்தல்
21. மதிப்பீடுகள் மற்றும் அளவு ஆய்வு அறிக்கைகளை தயாரித்தல்
22. நிர்மாணங்கள் பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குதல்
23. குளிரூட்டிகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்
24. உடல் நலப் பாதுகாப்பு சேவைகளை வழங்குபவர்கள்
25. நீர் குழாய்கள் வழங்குநர்கள் மற்றும் பரத்துபவர்கள்
26. மண் வழங்குநர்கள்
27. அலுமீனியம் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள்
28. கண்ணாடி மற்றும் உலோகப் பொதிகாப்பு (Cladding covers) வழங்குநர்கள் மற்றும் பொருத்துபவர்கள்
29. Glass & Toilet Partitions, Fabrication & Suppliers
30. தச்சர்கள் மற்றும் தச்சுப் பொருட்களை வழங்குநர்கள் (கூரைகள் மற்றும் ஏனையவை)
31. இயந்திர வேலைகளுடன் தொடர்புடைய அனைத்து பராமரிப்பு சேவைகள் (மின் தூக்கி (லிப்ட்), அனைத்து வகையான உந்திகள் (Pumps), தீயணைப்புத் தொகுதி)
32. நிர்மாணங்களுடன் தொடர்புடைய அனைத்து இயந்திர சாதனங்களையும் வாடகைக்கு வழங்குபவர்கள் (சிறிய மற்றும் பாரியளவிலான இயந்திரங்கள்)
33. நிர்மாணங்களுடன் தொடர்புடைய அனைத்து கனரக வாகனங்களையும் வாடகை அடிப்படையில் வழங்குபவர்கள்.
34. நீர் உட்புகாத (Waterproof) உபகரணங்களை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள்
35. Shoring ஒப்பந்ததாரர்கள்
36. மேசன் ஒப்பந்ததாரர்கள்
37. மின்சார தொழில்நுட்பவியலாளர்கள் ஒப்பந்ததாரர்கள்
38. வனை ஓடுகள் (Tiles) பரத்தும் ஒப்பந்ததாரர்கள்
39. Zink Aluminum ஒப்பந்ததாரர்கள்
40. வர்ணம் பூசுபவர்கள் (பெயின்டர்ஸ்)
41. Water base வர்ணம் பூசுபவர்கள் (பெயின்டர்ஸ்)

E. உணவு பானங்கள் தேவைகள்
01. குடிநீர் போத்தல்களை வழங்குதல்
02. வைபவங்களின்போது உணவு பானங்கள் மற்றும் குறுகிய உணவுகளை (Short eats) வழங்குதல்

F. Covid-19 தடுப்புக்கான உடல்நலப் பாதுகாப்பு உபகரணங்கள்
01. Covid-19 தடுப்புக்கான உடல் நலப் பாதுகாப்பு உபகரணங்கள்
02. Surgical முகக் கவசங்களை வழங்குதல்
03. கிருமி நீக்கித் திரவம் அல்லது ஜெல் (Sanitizer liquid & gel) வழங்குதல்
04. Surgical கையுறைகளை வழங்குதல்
05. Face shield வழங்குதல்
06. Liquid Hand Wash வழங்குதல்
07. Multi Surface Cleaner வழங்குதல்

G. வைபவங்களுக்கான தேவைகள்
01. மேற்கட்டு (Canopy), தகரம், காப்புக்கள் (Covers), Marques Tents, மேடைகள், பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் VIP கதிரைகளை வாடகை அடிப்படையில் வழங்குதல்
02. ஒலிபெருக்கி உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்
03. மின்னொளியூட்டல் சேவைகளை வழங்குதல்
04. விளையாட்டுப் போட்டிகளை வீடியோ எடுத்தல்
05. வைபவங்களை ஏற்பாடு செய்யும் அலுவல்கள்

H. கணனி மென்பொருள் சேவைகள்
01. இணையத்தளப் பக்கங்களை (Websites) உருவாக்குதல்
02. கணனி அமைப்புக்களை (Computer systems) உருவாக்குதல்
03. வலையமைப்பு (Networking)
04. சமூக ஊடகங்களில் அறிக்கையிடல் (Social media coverage)

I. ஏனையவை
01. வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல்
02. இலத்திரனியல் புள்ளியிடல் பலகை (scoreboards) மற்றும் டிஜிட்டல் வீடியோ பலகைகளை (Digital video boards) வாடகை அடிப்படையில் வழங்குதல்
03. நினைவுப் பலகைகளை (Commemorative plaques) நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல்
04. விமான டிக்கட்டுக்களை வழங்குதல்
05. அனைத்து விதமான அச்சிடல் அலுவல்கள்
06. கருத்திட்டங்களுக்கான சந்தைப்படுத்தல் ஆலோசனை சேவைகள் (Marketing Consulting Services)
07. மருத்துவ வழங்கல்கள் (மருந்துகள்)

பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலுடன் தொடர்பான நிபந்தனைகள்

01. அனைத்து வழங்குநர்களும் இந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கல் சம்பந்தமாக விண்ணப்பிக்கும் துறையுடன் தொடர்பான தமது அனுபவத்தை உறுதிசெய்யும் எழுத்தாவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. வழங்குநர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (Business Registration) மற்றும் வற் (VAT) பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயம் இணைத்தல் வேண்டும்.
03. நிர்மாண ஒப்பந்ததாரர்கள் அவற்றுக்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டிற்கான ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். கட்டிடக் கலைஞர்கள், இலங்கை கட்டிடக்கலை பட்டய நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் (AIA/FIA). மேலும், கட்டிடக் கலைஞர்கள், கட்டிடக் கலைஞர்களை பதிவு செய்யும் சபையில் (Architecture Registration Board) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
04. அனைத்து வழங்குநர்களும் அமைச்சுக்கான கொள்வனவுக் கட்டளைகளை வழங்க முடியுமான அளவில் இருப்புக்களை குறித்த ஆண்டில் பேணிவரல் வேண்டும்.
05. வழங்குநர்கள் இந்த அமைச்சுக்கான கொள்வனவுக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் கட்டளையை பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வாறு கொள்வனவுக் கட்டளைகளை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்கள் அமைச்சினால் தடுப்புப் பட்டியலில் (Black List) உள்ளடக்கப்படுவார்கள்.
06. வழங்குநர்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உபகரணங்களுக்கான இலங்கையில் அதிகாரம் பெற்ற முகவர்களாயின் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
07. விற்பனையின் பின்னரான சேவைகளையும் உரிய பிரகாரம் நிறைவேற்றுதல் வேண்டும்.
08. உங்களுடைய நிறுவனம் உரிய ஊழியர்கள் மற்றும் களஞ்சியசாலை வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
09. தளச் சோதனையின் பின்னர் தகைமை பெற்ற வழங்குநர்களை பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
10. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை இந்த அமைச்சின் நிர்வாகப் பிரிவின் பெறுகைகள் பிரிவுடன் (Procurement Division) தொடர்புகொண்டு (தொ.பேசி இல. 011-2100400) பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்கள் மற்றும் ஆட்கள் கணக்குப் பிரிவின் சிறாப்பர் (காசாளர்) பிரிவிற்கு மீளச் செலுத்தப்படாத ரூ.1000.00 தொகையைச் செலுத்தி பெறுகைகள் பிரிவிலிருந்து (Procurement Division) பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து செயலாளர், கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, 12 ஆவது மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021" எனக் குறிப்பிடுதல் வேண்டும். 2020.12.07 ஆம் திகதி முதல் 2020.12.21 ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை மாத்திரமே விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2021.01.15 திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமல் திருப்பியனுப்பப்படும். இந்தப் பதிவுசெய்துகொள்ளலானது ஒப்பந்தத்தை வழங்குவதற்கான உரிமையொன்றல்ல என்பதோடு தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டும் தகைமைகள் பரிசீலனைக்கு மற்றும் மீளாய்வுக்கு உட்பட்டதாகும்.

செயலாளர்,
கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு,
12 ஆவது மாடி, மேற்குக் கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE

திவிநெகும வழக்கிலிருந்து அமைச்சர் பசில் விடுதலை

முழுமையான வழக்கு தீர்ப்பு

2வது பிரதிவாதியான திவிநெகும பணிப்பாளர் நாயகம் அமித் கித்சிரி ரணவக்கவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதால் ஏனைய பிரதிவாதிகள் அனைவரும் விடுதலை!

கடந்த நவம்பர் 30ஆம் திகதி இந்நாட்டு நீதிமன்ற வரலாற்றில் சிறப்பான வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரத்னபிரிய குருசிங்கவினால் கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பாகும்.

இந்த வழக்கு சட்டமா அதிபரினால் சு5/03/2015 என்ற வழக்கு இலக்கத்தின் கீழும், மேல் நீதிமன்ற குற்றவியல் வழக்கு இலக்கம் எச். சீ. 8222/ 2016 கீழும் முன்னாள் அமைச்சர் பசில் ரோஹனா ராஜபக்ஷ, ரணவக அராச்சிலாகே அமித கித்சிரி ரணவக, யக்தெஹியகே தொன் நிஹால் ஜயதிலகே மற்றும் ரத்நாயக்க பல்லியகுருகே பந்துல திலகசிரி ஆகியோருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்ததோடு, இவ்வழக்கில் அவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது

இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்டவர்களுள் முதலாமவர் பசில் றோஹன ராஜபக்ஷவாகும். ரணவக்க ஆராச்சிலாகே அமித கித்சிரி ரணவக இரண்டாவது பிரதிவாதியாகவும், நிஹால் ஜயதிலக மூன்றாவது பிரதிவாதி என்பதோடு, நான்காவது பிரதிவாதி பந்துல திலகரிசியாகும்.

2015ம் ஆண்டு ஏப்ரல் 22ம் திகதி காலை 10.50 மணிக்கு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவுக்குச் சென்று வாக்குமூலம் வழங்கிய பசில் ராஜபக்ஷ, அன்றைய தினம் இரவு 7.30 மணி வரைக்கும் வாக்குமூலம் வழங்கினார். அன்றைய தினம் மாலை 5.04 மணிக்கு டுவிட்டர் செய்தி ஒன்றை வழங்கிய ரொய்ட்டர் செய்திச் சேவை பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. பின்னர் இரவு 9.07 மணியளவில் கடுவளை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை மே மாதம் 05ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க இரவு 11.35 மணிக்கு உத்தரவிடப்பட்டது. எனினும் முன்னாள் அமைச்சர் பசில் உள்ளிட்ட சந்தேக நபர்களை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்காக காவலர்கள் நீதிமன்றத்திற்கு வந்தது இரவு 9.20 மணிக்காகும். நீதிமன்றத்திலிருந்து அவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டது இரவு 11.44 மணிக்கு.

இந்த முக்கிய வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். வழக்குத் தீர்ப்பின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

இந்த வழக்கின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டவர்கள் அரச அதிகாரிகளாகும். இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராகவே பிரதான குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவர் 2003ம் ஆண்டின் 01ம் இலக்க திவிநெகும சட்டத்தின் (இதன் பிறகு சட்டம் என அறியப்படும்) 3வது பிரிவுக்கு அமைய திவிநெகு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகச் செயற்பட்ட நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியாகும்.

குற்றச்சாட்டின் அடிப்படை

2014ம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதியிலிருந்து நவம்பர் 30ம் திகதி வரையான காலப் பகுதியினுள். "வளமான இல்லம்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் திவிநெகும பயனாளர்கள் 1,197,111 பேருக்கு அவர்களது வீட்டு திருத்த வேலைகளுக்காக ஒருவருக்கு 2500 ரூபாய் வீதம் 2,992,777,500 ரூபாய் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் பிரஜாமூல வங்கி கட்டமைப்புக்குரிய நிதியிலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, அந்தப் பணம் தொடர்பான நம்பிக்கையினை இல்லாமல் செய்தமையே அவர் மீது குற்றம் சுமத்தப்படுவதற்கான அடிப்படையாக அமைந்திருந்தது.

அப்போது திவிநெகும அமைச்சராக இருந்த முதலாவது பிரதிவாதியும், அந்த அமைச்சின் செயலாளராக இருந்த மூன்றாவது பிரதிவாதியும், திவிநெகும திணைக்களத்தின் நுண் நிதிப் பணிப்பாளராக இருந்த நான்காவது பிரதிவாதியுமே குற்றம்சாட்டப்பட்ட ஏயைவர்களாவர். இந்த

இரண்டாவது பிரதிவாதியினால் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார்கள் அல்லது ஒத்துழைப்பு வழங்கினார்கள் அல்லது சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களே 1, 3, 4ஆம் பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயம், இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே 1வது, 3வது மற்றும் 4வது பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் பரிசீலனை செய்யப்பட வேண்டும். 2ஆவது பிரதிவாதி மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படாவிட்டால், ஏனைய அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களும் வலுவிழந்து விடும்.

முறைப்பாட்டுத் தரப்பின் சாட்சியாளர்களது சாட்சியங்கள் முடிந்த பின்னர், பிரதிவாதிகள் சார்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 200(1) பிரிவின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்டு, பிரதிவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இது தொடர்பில் பிரதிவாதிகள் சார்பில் எழுத்து மூலமாக முன்வைக்கப்பட்டதுடன், இதற்கு பதில் வழங்கும் வகையில் அரச பிரதி சட்டமா அதிபராலும் பின்னர் எழுத்து மூலமான விடயங்கள் முன்வைக்கப் பட்டன.

வழக்கின் சிறப்பு

இந்த வழக்கின் சிறப்பு, முறைப்பாட்டாளரால் வழங்கப்பட்ட சாட்சியங்கள் நம்ப முடியாதவை எனத் தெரிவிக்கப்படாததே. இதனடிப்படையில் முதலாவது சந்தர்ப்பத்தில் இந்த வழக்கு உள்ளடக்கப்படவில்லை. பிரதிவாதிகள் கூறியது, முறைப்பாட்டுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதேயாகும்.

முறைப்பாட்டின் அடிப்படையாக இருப்பது, இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட செலவானது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியதல்ல என்பதாகும். மேலும் இதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என்பதுமாகும். இதனடிப்படையில் திவிநெகும பிரஜாமூல வங்கிகளில் ஒவ்வொரு வைப்பாளர்களின் கணக்குகளில் இருக்கும் நிதியிலிருந்து இந்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுமாகும்.

பிரதிவாதிகள் இது தொடர்பில் தெரிவித்திருப்பது, முறைப்பாட்டுத் தரப்பின் நிலைப்பாட்டிற்கு ஏற்பவே நிதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது திவிநெகும பயனாளர்களின் நிதியிலிருந்தே என்பதாலும், அந்த நிதி வழங்கப்பட்டிருப்பதும் திவிநெகும பயனாளர்களுக்கே என்பதாலும் குற்றம் நிகழவில்லை என்றாகும்.

முறைப்பாட்டின் முதலாம் இலக்க சாட்சியாளரான இத்தமல்கொட தேசப்பிரிய நதீகா சஞ்ஜீவனியின் சாட்சிக்கு அமைய, திவிநெகும பயனாளர்கள் 1,197,111 பேரிடையே ஒருவருக்கு 2500 ரூபாய் வீதம் 1,197,111 x 2500= 2,992,777,500 ரூபா பங்கிடப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையும் இத்தொகைதான். இதனடிப்படையில் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட முழுப்பணத் தொகையும் திவிநெகும பயனாளர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பது முறைப்பாட்டின் முதலாவது சாட்சியிலேயே உறுதியாகின்றது. இதனடிப்படையில் எந்த பிரதிவாதிக்கும் இந்த நிதியிலிருந்து ஒரு சதமேனும் கிடைக்கவில்லை என்பதை முறைப்பாட்டின் முதலாவது சாட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் இரண்டில், ஒன்றான சொத்துக்களைத் தமது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டமை என்ற விடயம் பிரதிவாதிகளுக்கு எதிராக எழவில்லை. அப்படியாயின் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய விடயம் யாதெனில், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது தொடர்பில் ஒரு ஒப்பந்தம் அல்லது சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாற்றமாகப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டதா என்ற விடயமாகும். அவ்வாறு குற்றம் செய்வதற்கெனில், அந்த நிதியை சட்டரீதியாகப் பெறுவதற்கு உரிமையில்லாதவர்களுக்கு அந்த நிதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

திவிநெகும வங்கிகளில் அங்கத்துவப் பணத்தைத் தவிற வேறு பணம் எதுவுமில்லை. எனினும் அதன் நிர்வாகத்தினரால் அந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டு நிதி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது அந்த வங்கிகளில் 80 பில்லியனுக்கும் அதிகமான நிதி உள்ளதாக முறைப்பாட்டுத்தரப்பின் 13வது சாட்சியினால் குறிப்பிடப்பட்டுள்ளது. 2500 ரூபாய் வீதம் அங்கத்தவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்ததும் அந்த முகாமைத்துவ சபையினாலாகும்.

திவிநெகும பிரஜாமூல வங்கிகளின் செயற்பாடுகள் சட்டத்தின் 28(ஏ) பிரிவில் "வைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் நலன்களை உறுதிப்படுத்தல்" என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2500 ரூபாய் வீதம் அங்கத்தவர்களுக்கு தமது வீடுகளைத் திருத்துவதற்காக நிதி வழங்குவது வங்கியின் பணிகளுக்குள் வரும் விடயமாகும். இதன் ஊடாக வங்கிக்கு தேவையற்ற நட்டங்கள் ஏற்படும் எனக் கூறமுடியாது. தேவையற்ற நட்டம் என எடுத்துக் கொள்ள வேண்டியது, எவருக்கேனும் சட்டத்திற்கு அமைய உரிமையில்லாத இலாபத்தைப் பெறுவதாகும். இங்கு வைப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான நலன்களை உறுதிப்படுத்துவது வங்கிச் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

திவிநெகும பிரஜாமூல வங்கிகளிலிருந்து பணம் பயன்படுத்தப்பட வேண்டியது திவிநெகும பயனாளர்களின் நலன்களுக்காக வேயாகும். இதனடிப்படையில் இந்த நிதி திவிநெகு பயனாளர்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பது சட்ட விதிகளுக்கு முரணானது அல்ல.

முறைப்பாட்டுத் தரப்பினால் முதலாவது குற்றச்சாட்டிற்கு அடிப்படையாக எடுத்துக் கொண்ட, அதாவது சதி செய்தல் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரதான சாட்சியாக இருப்பது 2014/10/30 ம் திகதி வெளியிடப்பட்ட 2019ம் ஆண்டின் 11ம் இலக்க சுற்று நிருபமாகும். இதனடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சதி என்ற விடயம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் அனைத்து பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பகிரங்கமாகவே தெரிவிக்கப் பட்டுள்ளது.

1 வீ 7 என்பது சமுர்த்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும், திரிய பியச வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் அறிக்கையாகும். இதில் கலந்து கொண்டிருந்தது, நிதி அமைச்சின் செயலாளர் பீ. பி. ஜயசுந்தர, மேலதிகச் செயலாளர் சந்திரா விக்ரமசிங்க, மேலதிகச் செயலாளர் ஹேமா தர்மவர்தன, மேலதிகச் செயலாளர் சாந்த பண்டார, பிரதான கணக்காளர் டப்ளிவ். ஏ. விமலசேன, பணிப்பாளர் நாயகம், வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் திருமதி ஏக்கநாயக்கா, வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் திருமதி சாந்தனி விஜேவர்தன, திறைசேரி நடவடிக்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரணசிங்க, வரவு செலவுத் திட்ட மேலதிகச் செயலாளர், அரச கணக்கு பிரிவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், அதாவது 4வது பிரதிவாதி ஆகியோராகும். இது இடம்பெற்றது இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட தினத்தில் அன்றி, 2013. 07. 05ம் திகதியிலாகும். இங்கு எவ்விடத்திலும் 2ஆவது பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இங்கு பேசப்பட்ட விடயங்களிடையே, புள்ளடியிடப்பட்ட பகுதிகளுக்கு அமைய, இவ்வாறான வீடமைப்பு வசதிகளுக்காக கொடுப்பனவுகளைச் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, 30, 000 ரூபாய் வரையறையின் கீழ், இன்றும் விடயங்களுக்காக 50,000 ரூபாய் வரையறையின் கீழ், மற்றொரு சந்தர்ப்பத்தில் 65,000 ரூபாய் வரையறையின் கீழ் வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு உதவிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் போதும் சமுர்த்தி நிதியிலிருந்து தேவையான நிதியைப் பெற்றுக் கொண்டுஇ பின்னர் திறைசேரியின் மூலம் அதனை ஈடு செய்தல், மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளமான வீடு வேலைத்திட்டமானது சட்டவிரோதமானது என்ற எண்ணம் ஒரு போதும் தன்னிடம் இருக்கவில்லை என முறைப்பாட்டுத் தரப்பின் முதலாவது சாட்சியாளர் குறுக்கு விசாரணையின் போது தெரிவித்துள்ளார். முறைப்பாட்டுத் தரப்பின் முதலாவது சாட்சிக்கு அமைய இந்த 2500 ரூபாய் கொடுப்பனவு திவிநெகும பயனாளர்களிடையே வழங்கப்பட்டுள்ளது என்றும், மிகவும் வறிய குடும்பங்களுக்கு கொடுப்பனவுக்காக ஆய்வுகளை மேற்கொண்டு பெற்றுக் கொண்ட முடிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட விடயத்திற்கு அமைய சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் அதிகாரங்களுக்குள் இடம்பெற்றுள்ளது எனக் கருதுகிறேன். 2வது பிரதிவாதி நேர்மையின்றி செயற்பட்டுள்ளார் என இதனடிப்படையில் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நேர்மை தவறி செயற்பட்டால்இ சட்டவிரோதமாக எவருக்கேனும் ஏதேனும் முறையற்ற நன்மைகள் அல்லது முறையற்ற தீமைகள் இடம்பெற வேண்டும். இங்கு அவ்வாறான எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. எனவே இரண்டாவது பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டு உறுதியாகவில்லை.

துஷ்பிரயோகம் அல்ல

பிரதிவாதி நம்பிக்கை வைக்கும், முறைப்பாட்டுத்தரப்பின் 22வது சாட்சியான பீ. பி. ஜயசுந்தரவின் சாட்சிகளுக்கு அமைய திவிநெகு வங்கிகளில் உள்ள நிதியானது பொதுச் சொத்து அல்ல எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அது அவரது நிலைப்பாடே தவிற, சட்டத்தின் பிரகாரம் கூறப்பட்ட கருத்து அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

திவிநெகும வங்கியானது, வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதாவது, வைப்புக்கள் பொறுப்பேற்கும் வாய்ப்புக்கள் மற்றும் அந்த வைப்பீடுகளிலிருந்து கடன் வழங்கும் வாய்ப்புக்களைக் கொண்ட வங்கியாகும் என முறைப்பாட்டுத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் எந்த ஒரு வங்கியும் மத்திய வங்கியின் கண்காணிப்புக்கு உட்படாமல் நடாத்திச் செல்ல முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முறைப்பாட்டுத் தரப்பு கூறுவது, முறைப்பாட்டுத் தரப்பின் 4வது சாட்சிக்கு அமைய, வாடிக்கையாளர்களுக்குத் தேவையான எந்த நிலையிலும் கட்டாயச் சேமிப்பை மீளப் பெற்றுக் கொள்ள முடியாது என்றாகும். அது பெற்றுக் கொள்ள முடிவது, உதாரணமாக, வைப்பாளரின் வயது முழுமையடையும் போது, அல்லது சுகயீனமடையும் சந்தர்ப்பங்களில், மாத்திரமேயாகும். எனவே பீ. பி. ஜயசுந்தரவின் சாட்சியின் பிரகாரம் இந்த சொத்து பொதுச் சொத்தா என்பதை தீர்மானிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

திவிநெகும பிரஜாமூல வங்கிகளில் இருக்கும் நிதி பொதுச் சொத்தா என ஆராய்ந்து பார்க்கும் போது, அந்தச் சாட்சியங்கள் மட்டுமின்றி சட்டத்தின் விதிகள் மற்றும் 1982ம் ஆண்டின் 12ம் இலக்க பொதுச் சொத்து கள் தொடர்பில் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பில் சட்டத்தின், பொதுச் சொத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கனத்தை கவனத்திற் கொண்டு தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்குள்ள வரைவிலக்கணம் இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வரைவிலக்கண த்தின் திவிநெகும வங்கி அதனுள் உள்ளடங்கவில்லை.

மேலும், திவிநெகு வங்கியானது அதன் அங்கத்துவ பயனாளர்களுக்காக மாத்திரம் திறக்கப்பட்டுள்ள வங்கியாகும். இந்த வங்கியில் வேறு எவராலும் பணம் வைப்பிலிடுவதற்கோ, கடன் பெறுவதற்கோ முடியாது. சட்டத்தின் 25வது பிரிவு ஆரம்பிப்பதே அதன் பயனாளிகளுக்கிடையே என்றாகும். ஆங்கிலத்தில் Among its beneficiaries எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று சட்டத்தின் 35வது பிரிவுக்கு அமைய, திவி நெகும சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வங்கி 1988ம் ஆண்டின் 30ம் இலக்க வங்கிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் 2011ம் ஆண்டின் 42ம் இலக்க நிதி வியாபார சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு உட்படாத வங்கியாகும்.

இந்த திவிநெகும வங்கிக்காக மூலதனமாக அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படவில்லை என அப்போதைய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் செயலாளராக இருந்த பீ. பி. ஜயசுந்தரவின் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயத்தைக் கவனித்துப் பார்க்கும் போது திவிநெகும பிரஜாமூல வங்கிகளில் உள்ள நிதியை பொதுச் சொத்தாகக் கருதுவதற்கு வாய்ப்பில்லை.

திவிநெகு சட்டத்தில் அரச நிதி தொடர்பில் தனியான விதிகள் உள்ளன. 8வது பகுதியின் 36 மற்றும் 37ம் பிரிவுகளில் அரச நிதி தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் குறிப்பிட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்ட நிதி இந்த 36 மற்றும் 37ம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அல்ல.

இறுதி தீர்ப்பு

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை ஆராய்ந்து பார்க்கும்போது திவிநெகும வங்கி 1982ம் ஆண்டின் பொது சொத்துக்கள் தொடர்பான சட்டத்தின் வரைவிலக்கணத்துக்கு அமைவாக பொதுச் சொத்தாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் திவி நெகும சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் 1982ம் ஆண்டின் 12ம் இலக்க பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் வரைவிலக்கணத்திற்கு அமைய 2வது பிரதிவாதியினால் குற்றம் இழைக்கப்பட்டவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட நிலைக்கு அமைய, 2வது பிரதிவாதிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படாததால் 2வது பிரதிவாதி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுதலை செய்கிறேன். 2வது பிரதிவாதி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் ஏனைய பிரதிவாதிகளால் எந்த வகையிலும் குற்றம் செய்திருக்க முடியாது. இதனடிப்படையில் 1வது, 3வது மற்றும் 4வது பிரதிவாதிகளையும் விடுதலை செய்கிறேன்" என மேல் நீதிமன்ற நீதிபதி ரத்னபிரிய குருசிங்க தனது தீர்ப்பை வழங்கினார்.

இந்த வழக்கின் சிறப்பு, முறைப்பாட்டாளர்களால் வழங்கப்பட்ட சாட்சியங்கள் நம்ப முடியாதவை எனத் தெரிவிக்கப்படாததே. இதனடிப்படையில் முதலாவது சந்தர்ப்பத்தில் இந்த வழக்கு உள்ளடக்கப்படவில்லை. பிரதிவாதிகள் கூறியது, முறைப்பாட்டுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் பிரகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதேயாகும்.

இலங்கை பொருளாதாரத்துக்கு வலு சேர்க்கும் வெளிநாட்டு உழைப்பு

இலங்கையின் வெளிநாட்டு வருவாய் உழைப்பில் ஆடைகள் ஏற்றுமதி மற்றும் தேயிலை ஏற்றுமதிகளுக்கு அடுத்த படியாக மிக முக்கிய பங்களிப்பைச் செய்வது இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் பண உட்பாய்ச்சல்களாகும்.

தற்போதைய கோவிட் 19 நெருக்கடி நிலையின் மத்தியில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் ஒரு பின்னடைவு அவதானிக்கப்பட்டுள்ள போதிலும் வெளி நாட்டில் இருந்தான இலங்கையர்களின் பணவனுப்பல்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

1977ம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் திறந்து விடப்பட்டதன் பின்னர் இலங்கையில் இருந்து தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயர்ந்து சென்றனர்.

அத்துடன் 1980களில் இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டுப் போராகக் கூர்ப்படைந்த காரணத்தால் அதிலிருந்து தப்பிப்பதற்காகவும் மக்கள் வெளிநாடுகளை நோக்கி இடம் பெயர்ந்தனர். அத்துடன் மேற்குலக நாடுகளில் பொருளாதார வசதிகளை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டும் பலர் இடம் பெயர்ந்து சென்றனர்.

இலங்கையில் திறந்த பொருளாதாரத்தின் ஆரம்ப காலங்களில் மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலிய விலை அதிகரிப்பு காரணமாக உருவாகிய திடீர் செல்வந்த வகுப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேலைக்காரர்கள் தேவைப்பட்டனர். வேலைக்காரர்களை வைத்திருப்பது ஏனைய தளவாடங்களை வைத்திருப்பது போல பொருளாதாரச் செழிப்பைக்காட்டும் ஒரு குறிகாட்டியாகக் கருதப்பட்டது.

இதனால் ஆரம்பத்தில் இலங்கையிலிருந்து வீட்டுப் பணிப்பெண்களும் வாகன சாரதிகளுமே பிரதானமாக வேலை வாய்ப்பு தேடிச்சென்றனர். கணவனும் மனைவியுமாக சேர்ந்து செல்வது ஆரம் பகால வழக்கமாக இருந்தது. இவர்கள் பெரும்பாலும் நண்பர்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் மூலம் வீசாவும் டிக்கெட்டும் வரவழைத்து அரபு நாடுக ளுக்குச் சென்றனர். ஏஜென்ஸிகள் எனப் படும் முகவர் நிலையங்களும் அரசாங் கத்தின் வேலைவாய்ப்புப் பணியகமும் பின்வந்த காலப்பகுதிகளில் இவ்வாய்ப் புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு உருவாகின.

வேலைவாய்ப்புகள் உருவாகிய நாடுகள் இஸ்லாமிய நாடுகளாக இருந் தபடியினால் இலங்கையின் முஸ்லிம் சமூகமே இவ்வாய்ப்புகளை பெருமள வில் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. பயிற்றப்படாத பணிப்பெண் களாகப் பலர் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயர்ந்தனர். டுபாயும் குவைத்தும் ஆரம்ப காலங்களில் இலங்கையர்கள் பெரும் எண்ணிக்கையில் சென்ற நாடு களாக இருந்தன. பின்வந்த காலப்பகு திகளில் இலங்கையின் ஏனைய சமூகத் தவர்களும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புகளை நாடிச் சென்ற னர்.

இலங்கையில் 1983இல் இடம்பெற்ற இனக்கலவரம் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைச் சூழல் மேற்குலக நாடுகளை நோக்கி மக்களை இடம் பெய ரத்தூண்டின. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் மேற்கைரோப்பிய நாடுகளுக்கும் கன டாவுக்கும் அத்துடன் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து போன்ற நாடு களுக்கும் இடம்பெயர்ந்தனர். இலங் கையில் ஏற்பட்ட வன்முறைச் சம்ப வங்கள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருந்த காரணத்தினால் இடம்பெய ரும் நபர்களுக்கு அகதிகளாக மேற்குலக நாடுகளில் இலகுவில் குடியேறக்கூடிய தாக இருந்தது. இதன்போது அந்நாடுகள் வழங்கிய ஆரம்ப உதவு தொகைகள் குடி பெயர்ந்தவர்களின் இலங்கையிலுள்ள குடும்பங்களின் பிரதான வருவாய் மூலா தாரமாக அமைந்தது.

இதேபோல பெரும்பான்மை சிங்கள மக்களும் பின்வந்த காலங்களில் வெளிநாடுகளை நோக்கி குடிபெயர்ந் தமையையும் காணமுடிகிறது. 1988 காலப்பகுதியில் இலங்கையின் தென்ப குதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங் கள் இதற்கொரு காரணமாய் அமைந் திருக்கக் கூடும். ஆயினும் அவர்களின் விருப்பத்திற்குரிய நாடாக இத்தாலி இருந்துள்ளது. இலங்கையின் மேற்குக் கரையூடாக புத்தளம் நோக்கிச் செல்பவர் கள் வென்னப்புவ போன்ற இடங்களில் இத்தாலிய கட்டடக்கலையின் பாணியி லான வீடுகள் பலவற்றை அவதானித்தி ருக்கலாம். இது பெரும்பான்மை மக்கள் மத்தியில் இத்தாலியின் செல்வாக்குக்கு ஒரு உதாரணமாகும். இது தவிரவும் அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற் குரிய தெரிவாக அமைந்துள்ளது.

மலையக மக்களைப் பொறுத்தவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் ஆரம் பகாலங்களில் அவர்கள் வாழ்ந்த சூழ் நிலைகளில் சாத்தியப்படாவிட்டாலும் பின்வந்த காலப்பகுதியில் அவர்களும்

'தொழிலாளர் ஒருவர் வீடொன்றைக் கட்டுவதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது. இம்முறை வரவு செலவு திட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்–புக்காக வெளிநாடு செல்ல–விரும்பும் அரச ஊழியர்க–ளுக்கு விடுமுறை வழங்கும் யோசனை முன்வைக்கப்–பட்டமைக்கு அதுவும் ஒரு காரணம். 1980களில் இதே கொள்கை அமுல்படுத்தப்பட்–டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது'

தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடுக ளுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

இவ்வாறு இலங்கையர்கள் பயிற்றப்ப டாத ஊழியர்களாகவும் அகதிகளாகவும் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயர்ந்த போதிலும் அவர்கள் அங்கிருந்து அனுப் பும் பணம் இலங்கையின் அந்நியச் செலாவணி உள்வருகையில் தொடர்ச்சி யாக நேர்க்கணியமானதொரு பங்களிப் பினை வழங்கி வந்துள்ளது.

அதேவேளை கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் தொழில் வாய்ப்புக்க ருதியும் வேறு நோக்கங்களுக்காகவும் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயரும் மக்களின் தன்மை மற்றும் மனப்பாங்கு கள் கணிசமானளவு மாற்றங்களுக்குட் பட்டுள்ளன.

தற்போதைய தரவுகளின் படி இலங் கையிலிருந்து வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை நாடிச் செல்லும் பயிற் றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. அத்துடன் பயிற்றப்படாத பெண் ஊழி யர்களின் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. மறுபுறம் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் வாண்மைத் தொழில் வாய்ப்புகளுக்காகவும் இடம்பெ யர்ந்து செல்வோரின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது.

ஆரம்ப காலங்களில் நிரந்தர குடியேற் றங்கருதி வெளியேறியோரின் இளைய சந்ததியினர் தாம் குடியேறிய நாடுகளின் சமூக அரசியல், பொருளாதார நடவடிக் கைகளுடன் ஒருங்கிணைந்து அந்நாட்டு கலாசாரங்களைப் பின்பற்றி மாற்றுத்தி ரumண பந்தங்களில் இணைந்து அவ் வப்போது தமது வேர்கள் எங்கிருந்து வந்தன என்பதை இனங்காட்டி வருகின் றனர். வேறுசிலர் குடியேறிய நாடுகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெருஞ்செல்வமீட்டி வாழ்கின்றனர். பலர் அவ்வப்போது நகைக் கடைகளாக இலங்கையில் வந்திறங்கி தங்கிச் செல் கின்றனர். இப்போதைய சந்ததி கல்வி நோக்கங்களுக்காக வெளிநாடு சென்று தொழில் புரிந்து இரட்டைக் குடியுரிமை பெறுவதில் முனைப்புக் காட்டுகிறது. சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் குடியேற முனைவோரின் எண்ணிக்கை வெகுவா கக் குறைந்துள்ளது. இதற்கு வலுவான பாதுகாப்பும் குடியேற விரும்பம் நாடுக ளில் சட்டவிரோதக் குடியேறிகள் தொடர் பான இறுக்கமான சட்ட திட்டங்களும் கார ணமாகும்.

தற்காலிகத் தொழில் வாய்ப்புக்க ருதி மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர்களின் பொருளாதார நிலையில் கணிசமான மேம்பாடுகள் ஏற் பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக தொழிலாளர் ஒருவர் வீடொன் றைக் கட்டுவதில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு கணிசமான பங்களிப்பச் செய் துள்ளது.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லவிரும்பும் அரச ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டமைக்கு அதுவும் ஒரு காரணம். 1980களில் இதே கொள்கை அமுல்படுத்தப்பட்டதை யும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

1980களில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டு நாடு திரும்பிய பலரின் சந்ததிகள் அவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் வலுவான நிலைக்கு வந்துள்ளமைக் கான வலுவான சான்றுகள் உள்ளன.

இவ்வாறு வெளிநாட்டுக் குடிப்பெயர் வும் வருவாய் ஈட்டலும் தனிப்பட்டவர்க ளுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் நாட்டுக்கும் பொருளாதார ரீதியில் நன் மைகளை கண்ணுக்குத் தெரியக்காட் டினாலும் அதன் பின்னணியிலுள்ள துன்பியல் வாழ்க்கையையும் சமூக சீர்கேடுகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

குறிப்பாக மேற்குலக நாடுகளில் நிரந்தரமாகத் தங்கிப் பொருளீட்டுவோ ரின் வாழ்க்கை வெளியில் தெரிவது போல இலகுவாகச் செல்லும் ஒன்றல்ல. மேற்குல கலாசாரத்தோடு ஒத்துப் போக முடியாமல் புழுங்கிக் கொண்டு வாழ்வோர் ஏராளம். பொருளீட்டும் பொருட்டு வாழ்க்கையைத் தொலைத்த வர் ஏராளம். மறுபுறம் மத்திய கிழக்கில் தொழிலாளர் எதிர்நோக்கும் வன்முறை கள் கெடுபிடிகள் அவற்றுக்கு எதிராக எந்த ஒரு தனிநபரோ அரச நிறுவ னமோ நடவடிக்கை எடுக்க முடியாத கள யதார்த்தங்கள் என அத்துன்பியல் நிலை தொடர்கிறது. உடலில் ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் துன்புறுத்தல் கார ணமாக கண்பார்வை இழந்த நிலையில் அவயவங்களை இழந்த நிலையில் நாடு திரும்பும் தொழிலாளர் பற்றிய செய்திக ளும் இறந்துபோன நிலையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டியுள்ள சடலங் கள் என இவை தொடர்ந்து செல்கின்றன.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் வெளிநாட்டிலிருந்தான இலங்கையர்களின் பணவனுப்பல்கள் பற்றி நாம் மகிழ்ச்சியடைந்தாலும் அதன் பின்னணியிலுள்ள கசப்பான உண் மைகள் பற்றியும் கவனம் செலத்துவது நல்லது. அண்மையில் தென்னிந்தியா வில் வெளியாகிய ஒரு தமிழ்த் திரைப்ப டம் இத்துன்பியலின் ஒரு கோணத்தைப் பற்றிப் பேசியுள்ளமை நினைவுக்கு வரு கிறது.

ஈரான் அணு விஞ்ஞானியின் படுகொலையும் மேற்காசிய அரசியலும்

கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்

ஈரான் மீதான தாக்குதல் உத்திகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. குறிப்பாக ஈராக்கின் இராணுவ மற்றும் அணுவாயுத வல்லமையை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் நகர்வானது மீண்டும் ஒரு முழு நீள போருக்கு வழிவகுக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அத்தகைய தாக்குதல்கள் ஈரானின் எதிரி நாடுகளால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றதே அன்றி ஈரானால் எத்தகைய பதில் தாக்கு தலும் சம அழிவைத் தருமளவில் மேற்கொள்ள முடியாதுள்ளது என்ப ரையும் அவதானிக்க முடிகிறது.

இக்கட்டுரையும் கடந்த 27.11.2020 அன்று ஈரானின் அணு விஞ்ஞானியும் பாதுகாப்பு அமைச் சின் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டு பிடிப்புக்கான அமைப்பின் தலை வருமான மொஹ்சென் பகிரிசாதே படுகொலை செய்யப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு ஈரான் எதிர் இஸ்ரேல், அமெரிக்க கூட்டு அரசியலை ஆராயவுள்ளது.

அணு விஞ்ஞானியின் படுகொலை தொடர்பில் முரண்பாடான தகவல் கள் வெளியாகியுள்ளன. முதலில் வெளியான தகவலின்படி 12 பேர் கொண்ட குழுவினர் இந்தப் படுகொ லையை முன்னெடுத்தனர் என்றும் வெளிநாட்டுப் பாதுகாப்புத் துறை மற்றும் புலனாய்வுத் துறையினர் மூலம் அதியுச்சமான பயிற்சி வழங் கப்பட்ட 12 பேர் கொண்ட குழு வினர் ஈரானின் தலைநகரிலிருந்து 50 கி.மீ. தொலைவில் அப்ஸார்ட் நகரில் காத்திருந்து தாக்குதல் நடத்தி யதாகவும் 50 பேர் இக்கொலைக்கு வேண்டிய அவசியமான விநியோக நடவடிக்கையினை மேற்கொண்ட தாகவும் தகவல்கள் தெரிவித்தன. மின்சாரத்தை துண்டித்ததுடன் தயார் நிலையிலிருந்த நான்கு பேர் அடங்கிய அணியினர் தாக்குதலை தொடங்கியதாகவும் இறுதியில் குண்டு பொருத்தப்பட்ட நிசான் வகை வாகனம் வெடித்துச் சிதறிய தாகவும் தெரியவருகிறது. ஆனால் இன்னோர் செய்திச் சேவையின் தகவலின் படி செயற்கைக் கோளின் வழிகாட்டல் மூலம் பல மைல்களுக் கப்பால் இருந்து தாக்கு தல் நிகழ்ந்ததாகவும் தொழிநுட்பத்தின் உ த வி யு ட ன அணுவிஞ்ஞானி கொல்லப்பட்ட தாகவும் தெரியவ ருகிறது. எதுவா யினும் ஈரானின் அணுவிஞ்ஞானி யின் படுகொலை பாரிய நெருக்க டியை ஈரானுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்தகைய துணி கரமான படுகொ லையை இஸ்ரேலும் அதன் நட்பு நாடான அமெரிக்காவுமே மேற் கொண்டுள்ளன என்றும் இது இஸ்ரேலின் பயங்கரவாதம் எனவும் ஈரானிய அரசாங்கம் அறி வித்துள்ளது. அது மட்டுமன்றி இது ஒரு சர்வதேச மட்டத்திலான ஆக்கி ரமிப்பு எனவும் ஈரானிய வெளியுறவு அமைச்சர் முகமட் ஜெவாட் ஷரீப் தெரிவித்துள்ளார். இத்தாக்குதலை கண்டித்த ஈரானிய ஆட்சியாளர்கள் பதிலுக்கு தாக்குதல் மேற்கொள் ளப் போவதாகவும் பழிவாங்கல் நிகழும் எனவும் குறிப்பிட்டுள்ள னர். ஆனாலும் ஈரானின் இராணுவத் தளபதி சுலைமானியின் படுகொ லைக்குப் பின்னரும் இவ்வாறு எச் சரிக்கை மேற்கொண்ட ஈரானிய ஆட்சியாளர்கள் அதற்கு நிகரான நடவடிக்கை எதனையும் மேற்கொள் ளவில்லை என்பது கவனத்திற்குரிய தாகும். ஆனால் இந்த தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்காவின் தேர்ந்தெ டுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஜோ பைடன் ஈரானின் அணு உடன்பாட் டிற்கு புதிய ஆரம்பம் ஒன்றினை வழங்கப் போவதாக அறிவித்துள் ளார். இரு நாட்டுக்குமான இராஜதந் திர உறவுகள் மீள ஆரம்பிக்கப்படும் என பைடன் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் ஈரானிய பாராளுமன் றம் அணுவாயுத பரிசோதனைக்கான ஒப்புதலை கோருவதுடன் இரண்டு மாதகால அவகாசத்தை கொடுத் துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தித் தளங்களை ஆய்வு செய்வதை நிறுத்தவும் பொருளாதா ரத் தடைகளைத் தளர்த்தவும் கோரி யதுடன் இவற்றை மேற்கொள்ள தவறுமாயின் ஈரான் நிர்ணயிக்கப் பட்ட எல்லையை தாண்டி யுரேனிய செறிவூட்டலை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்துள்ளது. அமெரிக்க புதிய நிர்வாகத்திடமும் ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது. குறிப்பாக அனைத்து பொருளாதாரத் தடையையும் நீக்கினால் அணுவா யுத உடன்பாட்டுக்கு திரும்புவதாக தெரிவித்துள்ளது. எனவே அணு விஞ்ஞானியின் படுகொலை மேற் காசியப் பிராந்திய அரசியலில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

முதலாவது ஈரானின் அணுகுமு றையில் ஏற்பட்டுவரும் மாற்றம் அதன் பலவீனத்தை அடை யாளப் படுத்துவதாக அமைந்தாலும் அணுவா யுதத்திற்கான முயற்சி பலமான அரசியலை ஏற்படுத்தக் கூடிய தாக தெரிகிறது. ஈரானைப் பொறுத் தவரை அதன் அணுவாயுதமே பிரதான இலக் காக உள்ளது. 2025 இல் கலா வ தி யா கும் ஈரானுடனான அ ணு வ ா யு த உடன்பாட்டினை ஜோ பைடன் புதுப் பிக்க முயலுகிறார். ஆனால் பல நிபந்த னைகளை ஈரான் முன் வைத்துள்ளமை அதன் இலக்கு அணுவாயுதம் தான் என்பதை வெளிப் படுத்தியுள்ளது. மேற்காசிய அரசியலில் ஈரானின் அணுவா யுதம் நிரந்தரமான அரசியல் கொதிநிலையை தரக்கூடிய தாக அமையவுள்ளது.

இரண்டாவது இஸ்ரேலை கட்டுப்படுத்தும் ஜோ பைடனின் ஆட்சிக்காக ஈரான் காத்திருப்பதன் மூலம் அதன் பலவீனம் தெரிகிறது. இஸ்ரே லைக் கட்டுப்படுத்தும் பலம் ஈரானிடமோ அல்லது மேற் காசிய நாடுகளிடமோ இல் லாதுள்ளமை ஈரானின் நகர் வில் தெரிகிறது. 2018 முதல் ஈரானின் அணுவிஞ்ஞானியை இஸ்ரேல் இலக்கு வைத்திருந்தது என்பது தற்போதுதான் ஈரானுக்கு தெரியவந்துள்ளது. சுலைமானி கொல்லப்பட்டதற்கு பின்பு கூட அத்தகைய கொலைகளை தடுக்க முடியாதுள்ளமை ஈரானின் பலவீன மாகவே விளங்கிக் கொள்ள வேண் டியதாக உள்ளது.

மூன்றாவது ஈரானின் தகவலின் படி 12 பேர் கொண்ட குழு தாக்கு தலுக்கு தயாராக இருந்தமையானது அதுவும் தெஹ்ரானிலிருந்து 50 கி.மீ. தொலைவில் எனபதுவும் ஈரானின் பாதுகாப்புக் கட்டமைப்பின் பலவீ னத்தைக் காட்டுகிறது. அது மட்டு மல்ல குண்டு துளைக்காத மூன்று தொடருந்துகள் நகர்ந்த போது அணு விஞ்ஞானியின் காரை இலக்குவைத் தமையானது ஈரானிய இராணுவக் கட்டமைப்புக்குள்ளேயே பலவீனம் உள்ளதைக் காட்டுகின்றது.

நான்காவது இஸ்ரேலிய அமெ ரிக்க கூட்டின் இலக்கு அணுவாயுதத் தைக் கடந்து இராணுவ தலைமைக ளையும் அணுவிஞ்ஞானிகளையும் நோக்கியதாக அமையும் போது ஒரு செய்தி வெளிவருகிறது. அதாவது ஈரானின் அணுவாயுதத்தை தடுக்கும் வலிமை குறைந்துவிட்டதென்பதே அது.

ஏறக்குறைய அணுவாயுதம் தயா ரிக்கப்படும் நிலையம் மீதே இது வரையான காலப்பகுதியில் இஸ் ரேலின் இலக்கு காணப்பட்டது. தற்போது அது மாறியுள்ளது. ஈரா னியர் குறிப்பிடுவது போல் இஸ்ரே லின் செயல் ஒரு பயங்கரவாதச் செய லாகவே தெரிகிறது.

ஐந்தாவது இஸ்ரேல் அமெரிக்க கூட்டின் நடவடிக்கைகளால் உலகம் அதிக நெருக்கடிக்குள் தள்ளப்பட் டுள்ளது. அதாவது இவ்வகையான படுகொலைகள் மேற்குலகின் சட்ட திட்டத்திற்கும் வரைபுகளுக்கும் முற் றிலும் விரோதமானவையே. மேற்கு லகத்தின் வாதங்கள் அனைத்தையும் அமெரிக்க, இஸ்ரேல் கூட்டைத் தகர்த்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. இதனால் ஏற்படப் போகும் விளைவுகள் அனைத்தும் மேற்குலகத்தையே பாதிப்புக்குள் தள்ளும்.

ஆறாவது மேற்காசிய அரசியலில் தற்போது ரஷ்யா, சீனா என்பவை அதிக முக்கியத்துவம் பெற்ற நாடு களாக காணப்படுகின்றன. இதன் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நகர்வுகளை அமெரிக்காவின் புதிய நிர்வாகம் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

ஏழாவது தொழிநுட்பத்திற்கான போர் ஒன்றினை ஈரான் மீதான நட வடிக்கை ஏற்படுத்தியுள்ளது. குறிப் பாக சுலைமானி படுகொலையும் தற்போதைய தாக்குதலும் செயற் கைக்கோள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட மையானது அதிக மாற்றத்தை தர வல்லதாக அமையவுள்ளது. மேற்கா சியா மட்டுமல்ல, உலகப் போர்களே இனி தொழிநுட்பப் போர்களாகவே அமைய வாய்ப்புள்ளது.

எனவே ஈரானிய அணுவிஞ்ஞா னியின் படுகொலை அதிக அரசி யல் அதிர்வலைகளை ஏற்படுத்தி யுள்ளது. இது வெளிப்படையாக ஈரானைப் பாதித்தாலும் அடிப்ப டையில் ஈரானின் அரசியல் பொரு ளாதார இராணுவ இருப்பினை பாதுகாக்கும் நடவடிக்கையாகவே தெரிகிறது.

புரவி

மழையையும் வெள்ளத்தையும் அள்ளிவந்த துர்தேவதை!

சூறாவளி என்றதும் நம் அனைவருக்கும் இரண்டு சூறாவளிகள் சட்டென நினைவுக்கு வரும். முதலாவது மன்னாரில் சேதம் விளைவித்து பின்னர் தனுஷ்கோடியை மூழ்கடித்து அத்துறைமுக நகரை இன்று வரை மயான பூமியாக மாற்றிய 1965 கோரப் புயல். இரண்டாவது 1978ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பேரழிவை ஏற்படுத்திய புயல். அக் காலத்தில் புயல்களுக்கு பெயர் சூட்டும் வழக்கம் இருக்கவில்லை. எனவே இவற்றை பெயர் சொல்லி அழைக்க முடியவில்லை. புரவிப் புயல் மணிக்கு 80 முதல் 150 மைல் வேகத்தில் கிழக்கில் நுழையப்போகிறது என்றதுமே 42 ஆண்டுகளுக்கு முன்னர் படாதபாடு படுத்திய கிழக்கு புயலே மீண்டும் அதே விசையுடன் வரப்போகிறது என்று பலரும் நினைத்து அரண்டு போயினர். ஆனால் கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு மேலும் துன்பம் – மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக- தந்துவிடக் கூடாது என்று நினைத்தோ என்னவோ வந்த புரவி வேகப் புரவியாக இல்லாமல் மெதுநடையாக இலங்கையை விட்டுச் சென்றுவிட்டது. சில வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தை வங்காள விரிகுடாவில் இருந்து வந்த புயல் தாக்கியது. ஆனால் பெருமளவு மழை பொழியவும் இல்லை. பலத்தகாற்று வீசவும் இல்லை. அதுபோலவே புரவி பெருங்காற்றைக் கொண்டு வராவிட்டாலும் பெருமளவு மழையை கொண்டுவந்து வெள்ளக் காடாக்கி இருக்கிறது. இவ்வாறு கடந்த இருபது ஆண்டுகளில் அறுபது புயல்கள் வங்காள விரிகுடாவில் இருந்து புறப்பட்டு வந்துள்ளன. தற்போது மற்றொரு தாழமுக்கம் அந்தமான் பகுதியில் உருவாகி வருவதாகவும் அது டிசம்பர் 10ம் திகதியளவில் தமிழகத்தைத் தாக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை அச்சத்தில் உறைய வைத்த புரவி

எம், ஏ.றமீஸ்,
அட்டாளைச்சேனை

வங்காள விரிகுடாவில் உருவாகும் பெருமளவிலான புயல்கள், இலங்கைக்கு அருகே மையம் கொண்டவாறு இந்தியாவை நோக்கி நகரந்து செல்வதே வழக்கம். இருந்தபோதிலும் புரவி புயலானது இலங்கையின் தரைப் பகுதிக்குள் ஊடுருவி தமிழகம் நோக்கி நகர்ந்தது.

கிழக்குக் கரையினை இச்சூறாவளி கடக்கவுள்ளது என அறிவிக்கப்பட்டதும் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பெரும் பீதி கொண்டனர். கடந்த கால கலண்டரின் பக்கங்களை கிழக்கு மக்களின் உள்ளங்கள் புரட்டத் தொடங்கின. இதனால்தான். கிழக்கு மாகாணத்தில் இப்புரவி புயல் பற்றிய அச்சம் மக்கள் மத்தியில் உச்சமாகவே உயர்ந்திருந்தது. கிழக்கு மாகாணத்தினை புரட்டிப் போட்ட புயல் 1978 ஆம் ஆண்டு வீசிய புயலே ஆகும். இது பாரிய இழப்புகளை ஏற்படுத்தியது. கடந்த 1978 நவம்பர் மாதம் 23 ஆந்திகதி கிழக்கு மாகாணத்தினை தாக்கிய சூறாவளியினால் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் இறந்தனர். பத்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிப்படைந்தனர். பல்லாயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. 250 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் சேதமடைந்ததோமடு பல்லாயிரக்கணக்கானோரின் சொத்துக்கள் அழிவுற்றன.

மாலைதீவு நாட்டினால் பெயர் சூட்டப்பட்ட இந்த புரவி சூறாவளியானது கடந்த புதன்கிழமை இரவு இலங்கையின் வட கிழக்கு கரையின் குச்சவெளி கரையினை அண்டிய பகுதியின் ஊடாக இரவு வேளையில் 10.30 மணிக்கும் 11.30 மணிக்கும் இடைப்பட்ட காலப்குதியில் மணித்தியாலத்திற்கு 70 முதல் 90 கிலோமீற்றர் வேகத்துடன் உள் நுழைந்தது.

இச்சூறாவளியின் அழிவிலிருந்து கிழக்கு மாகாணத்தினை பாதுகாப்பதற்கு அரசாங்கமும் அரச உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொண்டமை கவனிக்கத்தக்கதாகும். புயல்களுக்கு பெயர் சூட்டும் நடைமுறை இரண்டாம் உலகப் போர் காலத்தில்(1935-1945) புயல்களை அடையாளம் காண்பதற்காக புழக்கத்துக்கு வந்தது. ஒரே நேரத்தில் கடற்குதியில் இரண்டு புயல்கள் உருவாகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக சூறாவளிக்கு பெயர் சூட்டும் வழக்கம் வந்தது. திருகோணமலை மாட்டத்தின் ஊடாக இச்சூறாவளி கரையினை ஊடறுத்துச் செல்லவுள்ளது என பெரிதும் எதிர்பாக்கப்பட்டதனால், இம்மாவட்டத்தில் உள்ள மாவட்ட செயல கமும், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் இணைந்து பல்வேறான முன்னாயத்த நடவடிக்கைகள், தயார் படுத்தல்கள் போன்றவற்றை மேற் கொண்டிருந்தன.

இதற்கு மேலாக கிழக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நல அமைப்புக்கள் போன்றவற்றின் அர்ப்பணிப்புடனான சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதற்கு மேலாக இம்மாவட்டத்தில் உள்ள முப்படையினர், பொதுமக்கள் போன்றோரினால் மேற்கொள்ளபட்டிருந்த முன்னாயத்த ஏற்பாடுகள் பாரிய அனர்த்தம் ஏற்பட்டிருந்தாலும் கூட அதனை எதிர்கொள் வதற்கான அனைத்து வியுகங்களும் கன கச்சிதமாக செய்யப்பட்டிருந்தன. வட மாகாணம் உள்ளிட்ட சில மாவட்டங் களில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக 44 ஆயிரத்து 848 பேர் பாதிப்படைந் திருந்தனர். 50 வீடுகள் முற்றாக சேத மடைந்துள்ளன. 2148 வீடுகளுக்கு பகுதியளவில் பாதிப்பேற்பட்டுள்ளது. புரவி சூறாவளியின் பாதிப்பு முழு நாட் டிலும் இவ்வாறிருந்த போதிலும், திரு கோணமலை மாவட்டத்தில் 64 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், ஒரு வீடு முற்றாகவும் பாதிப்படைந் துள்ளது. இம்மாவட்டத்தல் 20 குடும் பங்களைச் சேர்ந்த 97 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் புரவி சூறாவளியினை எதிர்கொள்ளும் வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டதற் கமைவாக, இம்மாவட்டத்தில் அனர்த் தம் ஏற்படுகின்றபோது 237 தற்காலிக இடைத்தங்கல் நிலையங்கள் தயார் படுத் தப்பட்டிருந்தன. இந்நிலையங்களில் 21820 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் மக்களை தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டி ருந்தன. இம்மாவட்டத்தில் வீசிய பலத்த காற்றினால் சில மரங்கள் முறிந்து வீழ்ந் ததுடன், பலத்த மழை பெய்தமையால் தாழ்நிலப் பகுதிகளிலும் மழை நீர் உட்பு குந்து விவசாயச் செய்கை மக்கள் குடியி ருப்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரதான வீதிகள் உள்ளிட்ட சில கேந்திரப் பிரதேசங்களில் ஆபத்தான நிலையில் காணப்பட்ட பெரு மரங்கள் சில புயற்காற்று வீசுவதற்கு முன்னர் அகற்றப்பட்டிருந்தமையால் அசௌகரி யங்கள் பலவற்றிலிருந்து இம்மாவட்டம் பாதுகாக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

புயலின் பாதை மாறிச் சென்ற மையால் இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் ஏற்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம் பதி, காத்தான்குடி உள்ளிட்ட பிரதேசங்களில் விஷேட செயற்றிட்டங்கள் வகுக்கப் பட்டிருந்தன.

புரவி சூறாவளியின் தாக்கத்தினை கருத்திற் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 87 கிராம சேவகர் பிரிவுகளில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததோடு, அனர்த்தம்; ஏற்படுகின்றபோது மக்களை பாதுகாப்பாக தங்க வைக்கவென 165 பாடசாலைகள் இடைத்தங்கல் நிலையங்களாக அடையாளப்படுத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. அம்பாறை மாவட்டத்தில் இப்புரவி சூறாவளியின் தாக்கத்தினால் குறிப்பிடக்கூடியளவு பாதிப்புக்கள் ஏற்படவில்லை. எனினும் அனைத்து முன்னாயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் பாரியளவில் சேதத்தினை ஏற்படுத்தாத போதிலும், இம்மாகாணத்தின் கரையோர மற்றும் தாழ்நிலப் பகுதகளில் வசிப்போருக்கு பெருமளவு பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டுத்தான் சென்றுள்ளது.

மூழ்கிய வயல்கள்; இறந்து கிடக்கும் கால்நடைகள்

சாவகச்சேரி
தவராசா சுபேசன்

தென்மராட்சியில் பின்தங்கிய பிரதேசங்களான கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவின் மகிழங்கேணி மற்றும் உதய சூரியன் கிராமங்கள் மற்றும் கொடிகாமம் மத்தி நாவலடிக் கிராமம் ஆகியன வெள்ளத்தால் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன. அக் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் தங்க வைக்கப் பட்டுள்ளன. இவர்களைத் தவிர தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில், அல்லாரை, கச்சாய், மீசாலை, கெற்பேலி, நாவற்குழி, வரணி, மந்துவில் மற்றும் கைதடி என ஏராளமான கிராமங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சி மக்களின் பிரதான தொழிலான விவசாயத்தை மழை வெள்ளம் முற்றாக பாதித்துள்ளது. மேட்டு நில பயிர்கள் தொடக்கம் நெற் பயிர்ச் செய்கை வரை அனைத்துமே மழை வெள்ளத்தில் மூழ்கியும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. வயல்கள் பெருங்குளங்கள் போல காட்சியளிக்கும் அதேவேளை மேட்டு நிலங்கள் கூட வயல்களைப் போன்று தோற்றமளிக்கின்றன. இதனால் மேட்டுநிலப் பயிர்கள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மரக் கறி வகைகளின் விலைகளும் குடாநாட்டுச் சந்தைகளில் வெகுவாக அதிகரித்துள்ளது.

மக்கள் வளர்த்த கோழிகள் மற்றும் ஆடுகள் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் மாடுகளும் நோய்வாய்படும் நிலை உருவாகியுள்ளது. அத்துடன் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளில் நீர் நிறைந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மராட்சியின் மீசாலை தட்டாங்குளம் வீதியில் உள்ள காளி கோவிலின் தல விருட்சமான இருநூறு வருடங்கள் பழமையான பாலை மரம் சரிந்து வீழ்ந்துள்ளது. அதனை விட கைதடி வாலாம்பிகை அம்மன் ஆலயத்தில் காணப்பட்ட ஆல மரம் ஒன்றும் முறிந்து ஆலயத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீதும் பாரிய மரம் ஒன்று சரிந்து விழுந்து வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

தென்மராட்சியின் முக்கியமான போக்குவரத்துப் பாதைகள் பலவற்றை மூடி வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது. சாவகச்சேரி கச்சாய் வீதி,டச் வீதி மற்றும் தபாற்கந்தோர் வீதி ஆகிய முக்கியத்துவம் வாய்ந்த வீதிகளில் வெள்ள நீர் நிறைந்து போக்குவரத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் உள்ளூர் வீதிகள் பலவும் வெள்ளக்காடாக மாறி போக்குவரத்து தடைப்பட்டிருக்கின்றது.

ஒட்டுமொத்த தென்மராட்சி மக்களையும் இந்த மழை வெள்ளம் ஏதோவொரு விதத்தில் பாதித்துள்ளது.இந்த அனர்த்தத்தில் இருந்து தென்மராட்சி மக்களை மீட்டெடுக்கும் முயற்சியில் பிரதேச செயலகத்தினர், இராணுவம், பொலிஸார் முழு மூச்சுடன் செயற்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகிறது.

யாழை உரசிச் சென்ற புரவி

திருநெல்வேலி
மயூரப்பிரியன்

சமீபத்தில் வந்து சென்ற நிவர் புயல் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அது இலங்கையை கடந்துஇந்தியாவில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் புரவி புயல் இலங்கையை ஊடறுத்து செல்லும் என எதிர்வு கூறப்பட டமையால் அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 2ஆம் திகதி மதியம் புயலின் பாதையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதாகவும், அதனால் யாழ்ப்பாணத்திற்கு பாதிப்பு உண்டு என மாவட்ட செயலர் அவரசஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்து அறிவித்தார். அதன் போது, கடற்படை, இராணுவம், பொலிசார் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர்கள் இணைந்து ஒரு செயற்படுத்துகை குழுவை அமைத்தனர்.

இடம்பெயரும் மக்கள் தங்குவதற்கு எதுவாக 240 மையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அறிவித்தார். இதேசமயம் இம்முறைகோவிட் 19 நோய் தொற்று காரணமாக இடம்பெயரும் மக்களின் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கண்காணிக்க வேண்டிய சவாலும் அதிகாரிகளுக்கு இருந்தது.

எனவே தாழ் நில பகுதிகளில் வசித்த மக்களைமுடிந்தளவு உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்குமாறும், பொது இடங்களில் தங்குவதனை முடிந்தளவு தவிர்க்குமாறும் அதிகாரிகள் மக்களைஅறிவுறுத்தினார்.

அதேவேளை வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டு இருந்தவர்களுக்கு என விசேடமாக சில இடங்கள் ஒதுக்கப்பட்டு இருந்தன. அவர்கள் ஏனையவர்கள் மத்தியில் வரும் போது நோய் தொற்றுக்கு ஏதுவாகஅமைந்துவிடும். என்பதால் இடம்பெயரும் மக்கள் தொடர்பில் இம்முறைபெரும் சவால்களை சுகாதார பிரிவினர் உள்ளிட்ட அதிகாரிகள் எதிர் கொண்டனர்.

கூரைகளை பிடுங்கி எறிந்த கடந்த 2ஆம் திகதி இரவு 08.30 மணியளவில் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கடைகள் சில வற்றின் கூரைகள் திடீரென வீசியசூழல் காற்றினால் தூக்கி எறியப்பட்டன.

அதனால் அப்பகுதியை சேர்ந்த இரத்தினசாமி சாந்தரூபான் (வயது30) என்பவர் காயமடைந்த நிலையில், மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடார். பீற்றர் மகிந்தன் (வயது 35) என்பவர் ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவர்கள் தவிர இரு சிறுவர்களும் சிறு காயங்களுக்கு உள்ளாகிய நிலையில், ஊரணி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று திரும்பினர்.

அதேநேரம் சுழிபுரம் பெரியபுலோவை சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது 37) என்ற 4 பிள்ளைகளின் தந்தை 1ஆம் திகதி இரவு கடலுக்குதொழிலுக்கு சென்ற நிலையில் காணமால் போனவர் 3ஆம் திகதி சடலமாக மீட்கப்படடார்.

அதேவேளை 03ஆம் திகதி காலை கொடிகாமம் பகுதியில் கொடிகாமம் தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த மாகாலிங்கம் மகேஷ் (வயது – 28) எனும் இளைஞன் வெள்ளத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில், மீட்கப்பட்டு, கொடிகாமம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

2ஆம் திகதி முதல் 3ஆம் திகதி மதியம் வரையில் மழை பொழிவு பரவலாக யாழில் காணப்பட்டது. 3ஆம் திகதிக்கு மதியத்திற்கு பின்னர் புரவியின் தாக்கம் குறைய ஆரம்பித்து மாலை புரவி இலங்கையை கடந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

புரவியால் 54 ஆயிரம் பேர் பாதிப்பு

அந்நிலையில், 4 ஆம் திகதி காலை வரையில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் புரவி புயல் தாக்கத்தால் 16 ஆயிரத்து 250 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 163 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவித்தனர். அதேவேளை இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஆறு பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், அத்துடன், யாழ். மாவட்டத்தில் 36 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு அதில் 941 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 393 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, 55 வீடுகள் முழுமையாகவும், இரண்டாயிரத்து 443 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துளதாகவும் தெரிகிறது.

புரவி புயல் இலங்கையை 3ஆம் திகதியுடன் கடந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் 5 ஆம் திகதியும் யாழில் பரவலாக மழை பெய்தது. அதனால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் உள்ளோர் வீடு திரும்ப முடியாது தவித்து வருகின்றனர்.

இதேகால நிலை நீடிக்குமாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் பாதிப்புக்கள் அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

வெள்ளத்தில் மூழ்கியுள்ள மன்னாரின் பெரும்போக விளைச்சல்

ரெசேரியன் லம்பேர்ட்

வங்கக்கடலில் நிலை கொண்ட தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்ததையடுத்து மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பெரும் போக நெற் செய்கை பாதீப்படைந்துள்ளது.

கடும் மழை காரணமாக 90 வீதமான பெரும் போக நெற் செய்கை நீரில் மூழ்கியுள்ளது. தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்பு ஏற்படுமனானால் விவசாய செய்கை முற்றாக அழிவடையும் சாத்தியம் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை சுமார் 23ஆயிரத்து 953.5 ஏக்கர் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 'புரவி' புயல் காணிகளை வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

இங்கெல்லாம் சுமார் ஒரு அடிக்கு மேலாக வெள்ள நீர் தேங்கியுள்ளது. இது தொடருமானால் பெரும் போக விவசாயம் முழுவதுமாக பாதிப்படையலாம்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 1061 ஏக்கர் விவசாய செய்கையும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4826.5 ஏக்கர் விவசாய செய்கையும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 3274 ஏக்கர் விவசாய செய்கையும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 11925 ஏக்கர் விவசாய செய்கையும், மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் 2867 ஏக்கர் விவசாய செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதேவேளை மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் சின்ன வலயன் கட்டு சிறிய நீர்பாசனக் குளம் உடைப் பெடுத்துள்ளதோடு, முருங்கன் , நானாட்டான் இரணை இழுப்பைக்குளம் , மறிச்சுக்கட்டி ,பாலம் பிட்டி சிறிய நீர்பாசனக் குளங்கள் வான் பாய்ந்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

உன் நினைவுகள்

என் பாரத் மானிப்பாய்

நீ போ
உனக்குத் தெரியாமல்
உன் இதயத்தை
காதலித்தது
தவறுதான்
உன் இதயம்
உன்னிடம் இல்லை
போகிறேன்
உன் நினைவுகளைத் தேடி

மீடூ

என்.கே. வேணி பலாங்கொடை

இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்
இன்று போல்
அன்று
மீடூ என்ற
மீடியா
இருந்திருந்தால்
மகாபாரத கதாநாயகி
திரவுபதி
பூம்புகார் நாயகி கண்ணகி
நளமகராஜனால்
காட்டில் கைவிடப்
பட்ட நாயகி தமயந்தி
கணவனின் உயிரை மீட்ட
நாயகி சாவித்திரி
தொழு நோயுற்ற கணவனை
தலையில் சுமந்து
சென்ற நாயகி நளாயினி
மைத்துனியால்
கொடுமைபடுத்தப்பட்ட நாயகி
நல்ல தங்காள்
எல்லா பெண்
நாயகிகளும்
மீ டூ மூலம்
நியாயம் கேட்டு
இருக்கலாம்
தன் வாழ்க்கை
பற்றிய தீர்மானத்தை
தானே எடுப்பதற்கு
துணிந்து போராடியிருக்கலாம்
என்பது பெண்களின் சார்பில்
என் பேராசை
ஆதங்கம்!

என்ன செய்ய?

கம்பளையூர் மஞ்சுளா கிருஷ்ணசாமி

அச்சம் மடம்
நாணம் பயிர்ப்பெனும்
நான்கு குணங்களும்
நாற்படைகளாம்
ஐம்புலன்களும்
நல்லமைச்சர்களாம்
ஒரு கண்
வேற்படையாம்
மறுகண்
வாற்படையாம்
முகமே
முழு மதியாம்
பெண்மை அரசாளும்
அழகின் இலக்கணம்
அவள் தாயென்று
தமயந்தியின் அழகினை
நளனிடம் உரைத்த
அன்னம்
சும்மா இருக்கவில்லை
வெண் சிறகை
விரித்து
வான் வெளியில்
பறந்து
சோலையிலிருந்த
தமயந்தியிடம்
வள்ளல் பெருமாள்
பொறுமைசாலி
அன்பு இரக்கமுள்ளவன்
அறம் தவறாது
ஆள்கின்ற வீரன்
அகலமான
தோள் கொண்ட
ஆணழகன்
அவனுக்கு இணையானோன்
இந்த மண்ணுலகிலுமில்லை
அந்த விண்ணுலகிலுமில்லை
இந்தப் பெருமைக்குரியவன்
என்றே உரைத்து
கண்டதும் காதலென்ற
கணிப்பை
புரட்டிப் போட்டு
காணமலேயே
காதல் கொள்ள
அன்னமே காரணமாகிறது
சுயம் வரத்திற்காய்
தேவர்கள் வந்த போது
இடை நடுவே
மீண்டும்
அன்னம் வந்து
தடை நீங்க
துணை போனது
நாடு நகரிழந்து
காடு வந்து
ஆழ் துயிலில்
ஆழ்ந்த பின்னே
பாவையை காரிருளில்
பாழடைந்த மண்டபத்தில்
கைவிட்டுச் சென்ற போது
கைகொடுத்திடவே
அன்னம் வரவில்லை
சரீர வல்லமையும்
சாமர்த்தியமும் உடைய
நிகர் இல்லா
நிடத நாட்டு
மாவிந்தம் என்ற
மாநகரின்
மா மன்னனையே
நிலைதடுமாறச் செய்த
சனியவன் வந்தால்
பூமியே ஆடும் போது
சின்ன அன்னம்
சிறகை விரிக்காமல்
என்ன செய்யும்

எது உன் தெரிவு?

ஏறாவூர் தாஹிர்

கருவறை இருள் மனை
கரு, உரு கொண்டமை,
உருவில் உயிர்நிலை
உறைவிடம் கண்டமை,
மகவாய் மடி தொடு
மவராய் விரிந்தமை,
தொட்டிலில், கட்டிலில்
உருண்டமை, புரண்டமை,
அன்னை, பிதாக்களின்
அன்பு திரண்டமை,
கண்ட இடம், தலம்
கழிவறை யென்றமை,
குப்புறக் கிடந்தமை,
குதிகால் அடித்தமை,
தவழ்ந்தமை, எழுந்தமை
எழுந்து, விழுந்தமை,
விழுந்தும் எழுந்தமை,
தத்தி நடந்தமை,
புத்தி தொடர்ந்தமை,
புத்தகப் பையுடன்
வித்தகம் சென்றமை,
கண்டவை உண்டமை,
உண்டுநோய் கொண்டமை...
அன்று நடந்தவை
இன்று மறந்தவை!
வாலிபம் வருதலில்
வாழ்வியல் இனித்தலில்,
வயோதிபம் வந்தபின்
வாழ்வே கசத்தலில்,
முதுமையின் முகநூல்
முகவரி பதித்தலில்
மருந்து மாத்திரை
விருந்தாய் அமைதலில்,
அன்னம் குறைதலில்,
எண்ணம் மறைதலில்,
முதுமை வரிகளால்
முகவுரை வரைதலில்...
ஆடிய இளமையின்
ஆட்டம் முடிவுறும்!
இளமையை விளித்தொரு
வினாவினை விடுக்குமுன்,
அறவுரையாக ஓர்
அறிவுரை தொடுக்கிறேன்!
முதுமையின் முன், முகம்
சுளித்தலை நிறுத்துக!
முதுகு வளைவினைப்
பழித்தலை ஒதுக்குக!
முறைத்தலை விட்டு, புன்
முறுவலைப் பகிருக!
இன்றைய இளவல்கள்,
நாளைய கிழவல்கள்!
நாளை நலம் பெற,
நல்லவை இடம் பெற...
தினையை விதைத்தால்
தினையை அறுக்கலாம்!
வினையை விதைத்தால்
வினையே விளைச்சலும்!
எப்படி வசதி?
எது உன் தெரிவு?
தினையா? வினையா?
தெளிந்த சிந்தனையுடன்
தேர்ந்தெடு இளமையே!

விந்தை அழகு

நீ.பி. அருளானந்தம்

நீள் பெரும் தாமரைக்
கோபுரம் கண்டிடவும் – மனம்
மகிழ்வது பெற்று
நம் நெஞ்சத்தை
அள்ளுகிறதே
பணி செய்யப்
பல இங்கள் அங்கே
வைத்தனர் காண்பீர்
ஆயிரம் புதியன
கண்டு வாழ்
உலக மக்களும்
வானளவிற்கும்
முதல்வனாய்
நிற்கும் இதன்
தெளிவினை
கண்களை
உயர உயர்த்தியே
அதிசயமாய்
பார்ப்பவரே
மின்மினி
ஒளிகள் அங்கே
பளிச்சிடவும் கண்டு
அழகைத் தொழுதிடும்
தன்மையிலாய்
எவர்தம் மனமும்
மகிழுமே
பழமை கூறும்
கலைச் செல்வம்
யாவும் நிறைந்த
நம் தேசத்தில்
தாமரைக் கோபுரமே
நீயும் வந்து
பல நலன்களும்
தருவதற்காய்
தோன்றிட்டாய்
இலங்கையின்
தலைநகராம்
கொழும்புக்கு
மார்பணி
அழகு தந்ததுபோல
நீயும் வந்திட்டாய்
தங்கத்தாமரை போன்ற
நல் அழகுடைய
பெரும் செல்வமே
தலை நகர்க்கு
வரும் எவர்க்கும்
உன்னை அங்கு
காணாததாய்
தவறவிட்டு
கண்கள் என்ன
மறக்குமோ!

கல்லா, மனமா?

நிந்தவூர் மக்கீன் ஹாஜி

உக்கிரமடைந்த
உணர்வுகள்
உயிர்களைப் பலிகொண்ட
கனவுகள்
வானமும் அழுதது
வையகம் தொழுதது
இயேசு உயிர்த்தெழும்
நல்ல ஞாயிறு
பல நூறு உயிர்கள்
பலியானதனால்
நெஞ்சம் பதறுது
மனமேயில்லாத
மனிதர்களின் செயல்
இது ஒரு
மடத்தனத்தின் புயல்
பாதகர்களின்
பண்பில்லா கொடூரம்
இறைவனின் முடிவு
என்றாலும்
இவர்களுக்கில்லையா?
இறைதீர்ப்பு
பகுத்தறிவில்லையா?
இவர்கள் மனமென்ன?
கல்லா

அழுகைக்கு முடிவில்லையா?

கு. சண்முகம், வந்தாறுமூலை

இனிய வாழ்வு கசந்த தென்னும்
வறுமை வாழ்வில் வாட்டுதென்றும்
இல்லையென்று ஏங்கும் போதும்
கைப் பொருள் விரயம் ஆனபோதும்
இழப்பு என்று வந்த போதும்
உற்ற நண்பர் மாண்டபோதும்
இளமை இழந்து போனதென்றும்
கண்ணீர் சிந்தி அழுகின்றோமே
அன்று தான் சுகமாய் பிறந்தபோதும்
தூக்கம் விழிகளை நெருடியபோதும்
அடிவயிற்றைப் பசி வாட்டியபோதும்
கொடிபிணி வருத்திய போதும்
அரவணைக்க எவரும் இல்லையென்னும்
தாகம் உன்னை வாட்டியபோதும்
அப்பனே கால மெல்லாம் அழுகின்றாய்
இதற்குத்தான் முடிவென்பதில்லையா
காதலன் தன்னை விட்டுப்போனானென்னும்
தரணியிலே தனக்கு வாழ்வு ஏதென்றும்
காலமெல்லாம் மாறாத சோகமென்றும்
மகப்பேறு தாமதமாய் போனதென்னும்
கட்டிய கணவன் கை விட்டுப்போனானென்னும்
தனக்கு இனி எதிர்காலம் இல்லையென்றும்
காலமெல்லாம் கண்ணீர் சிந்தும் அழுகைக்கு
ஒருபோதும் வையகத்தில் முடிவேயில்லையா

அரசியல்

இராணி பௌசியா, பொலன்னறுவை

நான்
கடந்து வருகையில்
என்
காலைக்
குத்திய முட்கள்
நான்
நடந்து செல்கையில்
பஞ்சு மெத்தையிலும்
மென்மையாக
நான்
நீந்த நினைக்கையில்
கொந்தளித்த கடலும்
என்
வருகை கண்டு
குளிர் புனலென
தன்னடக்கம்
கொள்ள
நான்
குந்தி இருக்கையில்
பந்தியில்
இடம் தர மறுத்தவர்
இன்று
முந்தி அமர்ந்திட
முதல் இருக்கை
காட்ட
எனக்கு
என்ன நடந்தது
என்று
நான் யாரைக் கேட்க
எல்லாம்
அரசியல்
என்று
முரசு கொட்டிச் சொல்ல
என் முன்
வருபவர்
யாரும் இல்லை
எல்லோரும்
என் பின்னால்

மனப்பக்குவம்

அலிறிஸாப் அக்குறணை

மலிந்து போன
ஆசைகளும் விருப்புகளும்
அடைய முடியாமல்
போவது காலம்
தரும் ஏமாற்றங்களாகும்
புலம்பல்களும்
வசைபாடல்களும்
இதற்குத் தீர்வாக
அமையப்போவதில்லை
சகிப்புத் தன்மையும்
திருப்திப்படுதலும்
இசைவாக்கமும்
மட்டுமே ஆறுதலைத்தரும்
எதையும் தாங்கிடும்
இதயம் எமக்கு
அமையுமானால் அதுவே
நாம் பெற்ற
மனப்பக்குவம்

வேண்டாமே 'எயிட்ஸ்'

றுசைனா ஹாசீம், அக்கரைப்பற்று02

எமனை ஞாபகப்படுத்தும் பதம்
ஏன் தடுக்க கூடாது? இது என் வாதம்
இது உன் தலைவிதியா? யோசி
உன் மனைவியை மட்டும் நீ நேசி
படுக்கையைப் பங்குபோட
பல பேர் உனக்கு சிநேசிதம்
பாழுங்குழியில் உனைத் தள்ளி
விடப்போகிறது இப் பலதரப்பட்ட அனுபவம்
மாற்றாளை நீ நேசிப்பதன் விளைவு
மரணம் தான் உனக்கு முடிவு
மண்ணிலே மாந்தர் மகிழ்வுடன் வாழ
எயிட்ஸ் அரக்கனை இல்லாதொழிப்போம்
முகச்சவரம் செய்கையில் கரிசனம் கொள்
முழுக்க முழுக்க தனித்துவம் பேணு
குருதி மாற்றீட்டில் கவனமாயிரு
குவலயம் முழுவதும்
எயிட்ஸ் தடுப்பதில் விழிப்பாயிரு
நீ பெற்றுக் கொண்டது எயிட்ஸ்
பரிதாபமாய் பாதிக்கப்படுவது உன் சந்ததி
பாரினிலே நாமும் பவித்திரமாய் வாழ
எயிட்ஸை தடுப்போம்
சரித்திரம் படைப்போம்

சமுதாய நலன் காப்போம்

எம்.எச்.எம். மின்ஹாஜ் மதுராப்புர, வெலிகம

நாடு விட்டு நாடு தாவியே
உலா வரும் உந்தன் வேகம்
உதிரம் குடிக்கும் கொரோனாவே
உலகமே உன்னால் தினம் முடக்கம்
திமிர் பேசிய வல்லரசுகள் திண்டாட்டம்
தீர்க்கும் மருந்தின்றி மக்கள் மன்றாட்டம்
கொத்துக் கொத்தாய் மரண ஓலம்
கோழையாய் அலையவிட்டாய் ஒவ்வொரு நாளும்
மரண தாகம் உன்னில் தீரவில்லையா?
மாண்டவர் தொகையும் குறையவில்லையே
மானிடர் வாழ்வும் உன்னால் மீளவில்லையே
மண்ணில் உன் விளையாட்டு முடியவில்லையா?
பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் பூட்டு
பாதியில் கல்விக்கு வைத்தாய் வேட்டு
பரிவோடு கொஞ்சம் கருணை காட்டு
பாரினை விட்டு இன்றே நீ ஓடு
நிம்மதிதனை வாழ்வில் இழந்தோம்
நீள்துயிலும் நெடுநாள் மறந்தோம்
நிர்க்கதியோடு அனு தினம் கழித்தோம் இனி
நித்தமும் சுத்தம் பேணி வாழ்வோம்
ஓரணியாய் பேதமின்றி ஒன்றிடுவோம்
ஓயாத கொடும் நோயினை விரட்டிடுவோம்
சமூக பரவல் வராது தடுத்திடுவோம்
சமுதாய நலன் என்றும் காத்திடுவோம்!

மனிதனாய் வாழ்

கலாபூஷணம் கவிக்குயிலன், சேனையூர்



இளமையும் அழகும் சேர
இரட்டித்த அழகு கூடும்
முதுமையும் பிணியும் வந்தால்
வாழ்க்கையே வெறுத்துப்போகும்
வாலிபம் நிலைப்பதில்லை
மரணமும் வராமலில்லை
வாழ்ந்து வரும் வரைக்கும்
மனித னாய் வாழவேண்டும்
அசுரக் குணத்தை விட்டு
மிருகச் செயலை விட்டுத்தள்ளி
மனித நேயம் வளர்ந்து
வாழும் வரை வாழ வேண்டும்
அன்பை வளர்க்க வேண்டும்
அறிவைப் பெருக்க தூண்டும்
ஆறறிவு மனிதனாக
ஆனவரை வாழ வேண்டும்
மனிதப் பிறப் பெடுத்தோர்
வையத்தில் வாழும் வரை
புனிதனாக வாழா விடினும்
மனிதனாக வாழ வேண்டும்
வள்ளுவன் குறள் வழியில்
வாழ்தலே மனித வாழ்வு
நல்லோராய் வாழ்ந்திறந்தால்
இறவாது பெயர் நிலைக்கும்

தீயாய் பரவும் துயர்

மருதமுனை நிஸா

தீக்குச்சி ஒன்று
தீமூட்டியதால் இன்று
தீயாய்ப் பரவிக்கொண்டிருக்கிறது
தீயின் துயரின்று
தீர்ப்பின்றி தவிப்பில் மானிடம் யாவும்
தீயை மூட்டி விட்டு
தீர்வென நீரைத்தரப்
பார்ப்போருக்குத் தெரியுமா
தீயின் கொடுமை
தீராப்பசியோ அந்தத் தீயிற்கு
தீவிரமாய்த்தான் துரத்துகிறது
தீராத தாகமோ தெரியவில்லை
தீரும் ஒரு நாள் என்று
தீக்கு நீருற்றுகிற சில
தீர்பாளிகளினால் மட்டுமே
தீயாய் எரிகின்ற துயர்
தீர்ந்து போகிறது!

பணக்கார நாய்

பாத்திமா நளீரா

அந்தப் பணக்கார நாயை
பாரா'ப்பதற்கென்றே..
தெருவில் உள்ள நாய்கள்
ஒன்று கூடும் –அந்த
பங்களா கேட் வாசலில்...
நல்ல மதமதப்புடன்..
ஒருவித குலுக்கலுடன்
மிடுக்கான குரைப்புடன்..தன்
இனச் சமூகத்திற்கு
உயர்ந்த கௌரவத்தைக்
காட்டிக் கொண்டிருந்தது
அந்தப் பணக்கார நாய்
தெரு நாய்களோ...
கூனிக் குறுகி –அதன்
கேட் வாசலுக்கு சற்றே
தூரத்தில் பரிதாபமாகப் பாரா'த்தபடி..
ஏசி காரில் போவதும்
உயா'ரக உணவுகளைச் சாப்பிடுவதும்..
தரமான ஷாம்போவில் குளிப்பதும்
ராஜவாழ்க்கை அந்த நாய்க்கு..
தெரு நாய்கள்
ஓடிப்பிடித்து விளையாடி
சண்டை பிடித்து கூடிக்குலாவி
குட்டிகளுக்குப் பாலூட்டி மகிழ்ந்து....
பணக்கார நாயின் கண்களின்
ஓரத்தில் ஏக்கம்
அதுக்கென்று ஒரு மனசு உண்டுதானே..
பணக்கார நாயின்..
எஜமானர் வந்தா'..
தெரு நாய்களைப் பாரா'த்து
ஆங்கிலத்தில் திட்டித் தீர்த்தா'..
தெரு நாய்களுக்கு ஒன்றும் புரியவில்லை.
எது நாய்...
எது எஜமானர்..
என்று...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021

01. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படும் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து (www.slbfe.lk) தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப் படிவத்தின் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். (அவ்வாறு தயாரித்துக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

02. 2020-12-07ஆம் திகதி முதல் 2020-12-27ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவினால் விண்ணப்பங்கள் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2020-12-28ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். (அதன் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

03. பெறுகைப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதானால் இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விண்ணப்பப் படிவம்/ படிவங்களை தருமாறு வேண்டுதல் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

04. ஒவ்வொரு உருப்படிக்கும் (பொருள் மற்றும் சேவை) மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (ரொக்கப் பணமாக மட்டும் செலுத்தலாம்) அறவிடப்படும் என்பதுடன், இதன்பொருட்டு பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது எந்தவொரு கிளை அலுவலகங்களிலும் வங்கி வரவுச்சீட்டைப் (Bank slips) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்தப் பணத் தொகையை நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்தி அந்த வங்கி வரவுச்சீட்டைப் (Bank slips) இயைபுடைய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விண்ணப்ப இலக்கத்திற்கு ஒரு வங்கி வரவுச்சீட்டை (Bank slips) பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை உருப்படிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான வங்கி வரவுச்சீட்டை (Bank slips) இயைபுடைய விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு வங்கி வரவுச்சீட்டு (Bank slips) இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

05. விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் என்பன 05ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

5.1 வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி கட்டாயமாகும். (Business Registration Certificate)

5.1.1. பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு முதல் தடவையாக விண்ணப்பிப்பதானால் வியாபாரத்தைப் பதிவு செய்த நாள் முதல் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் கடந்திருத்தல் வேண்டும்.

5.1.2. வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தின் தன்மைக்கு இயைபான பொருள் மற்றும் சேவைக்காக மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

5.2 திருத்தகமொன்றுக்காக (கராஜ்) பதிவு செய்யும் போது, அது தலைமை அலுவலகம் அல்லது இயைபுடைய கிளை அலுவலகத்திலிருந்து 15 கி.மீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் BRC இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் திருத்தகம் அமைந்திருத்தல் வேண்டும். (பணியகத்தில் பதிவு செய்து முன் இயைபுடைய திருத்தகத்தை நிறுவனம் பரீட்சித்துப் பார்க்கும் என்பதுடன் பணியகத்தின் கிளை அலுவலகங்களின் முகவரிகள் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன)

5.3 அட்டவணையில் உள்ள 33, 34 மற்றும் 35வது பொருள் உள்ளடக்கத்தின் நிர்மாண வேலைக்காக நிர்மாணத்துறை அபிவிருத்தி அதிகார சபை (CIDA) உடனான பதிவு ஆவணத்தின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.4 இயைபுடைய வங்கி வரவுச் சீட்டின் பணியகத்தின் பிரதி மற்றும் நிதிப் பிரிவின் பிரதி (Bank slips) எனும் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பணியகம் - பச்சை நிறப் பிரதி, நிதிப் பிரிவு - நீல நிறப் பிரதி)

5.5 ஏனைய இயைபுடைய தகவல்கள்

06. சகல விண்ணப்பங்களையும் ஒரு உறையில் இட்டு பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு (Bank slips) போன்ற ஏனைய ஆவணங்கள் சகிதம் (காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) 2020-12-28ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கலாம். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விண்ணப்பதாரர் பொருள் மற்றும் சேவைகளுக்காக முன்வரும் போது தேவையான வேளைகளில் கடன் அடிப்படையில் பொருள் மற்றும் சேவைகளை வழங்க இயலுமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வதற்கு இணங்கவில்லையானால் அதை அந்தப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் கடன் வசதியை வழங்கக்கூடிய கால எல்லையை இயைபுடைய படிவத்தில் உறுதியாகக் காட்டுதல் வேண்டும்.

08. பதிவு செய்து கொள்ளும் இந்த வழங்குநர்களுக்குப் புறம்பாக பணியகத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் வேறு வழிமுறைகளைத் தெரிவு செய்வதற்கு பணியகத்திற்கு இயலுமை உண்டு.

09. பொய்யான தகவல்கள் / ஆவணங்களை சமர்ப்பித்துள்ளமை தெரியவந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வழங்குநரை, வழங்கல் பதிவேட்டிலிருந்து அகற்றும் அதிகாரத்தை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

10. சகல வழங்குநர்களும் விலைகளைச் சமர்ப்பிக்கும் போது இலங்கை ரூபாயில் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. விலைகளைக் கோரி அழைப்பு விடுக்கப்பட்டதன் பின் மூன்று முறை (3 முறை) பதிலளிக்காதிருத்தல், வேண்டப்படும் வழங்கல் மற்றும் சேவைகளை உரிய நேரத்தில் வழங்குவதற்குத் தவறும் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக வழங்காமை போன்ற காரணங்களினால் முன்னறிவித்தலின்றி வழங்குநரை, வழங்கல் பதிவேட்டிலிருந்து அகற்றும் அதிகாரத்தை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் விலைகளைச் சமர்ப்பிக்க முடியவில்லையானால் அதுபற்றி எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

12. காரணம் காட்டாமல் 2021ஆம் வருடத்தில் வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு விண்ணப்பப் படிவத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

தலைவர்,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,
இலக்கம், 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.

இணையதளம்- www.slbfe.lk
தொலைபேசி - 0112880550/0112887585

அட்டவணை

பகுதி I பொருட்கள்

01. வளிச் சீராக்கிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
02. பாடசாலைப் பைகள், அலுவலகப் பைகள், கைப் பைகள், சப்பாத்துக்கள் (பெண்கள் மற்றும் ஆண்கள்) மற்றும் ஆண்களுக்கான இடைவார்கள்
03. அலுவலகத்திற்கான திரைச்சீலை, மேலணை உறைகள் மற்றும் துணிவகைகள்
04. விரல் ரேகை பதிவு இயந்திரம்
05. நிலையான தொலைபேசிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
06. இடிதாங்கி
07. மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
08 பல்வேறு வகையான கனரகப் பொருட்கள் (செரமிக் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், Water Dispenser, தண்ணீர் போத்தல்கள் போன்றன)
09. கையடக்கத் தொலைபேசிகள்
10. அலுவலக மற்றும் வீட்டுத் தளபாடங்கள் (மர, உருக்கு, நாரிழை, பிளாஸ்திக்).
11. அலுவலக உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், முத்திரை இயந்திரங்கள், பணத்தாள்களை எண்ணும் இயந்திரங்கள் உட்பட)
12. அலுவலக பகுதி பிரிப்புப் பொருட்கள்.
13. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் மற்றும் வருகை தருபவர்களுக்கான அனுமதிப் பத்திரம் தயாரித்தல்
14. திகதி முத்திரை/ உத்தியோகபூர்வ முத்திரை தயாரித்தல்.
15. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்
16. விளையாட்டுப் பொருட்கள்
17. சீருடைகள்
18. காகிதாதிகள்
19. விருதுகள் / பதக்கங்கள்
20. கட்புல செவிப்புல உபகரணம் மற்றும் துணையுறுப்புகள் (பல்லூடக ஒளி உருப்படிவக் கருவிகள், வீடியோகமராக்கள் மற்றும் துணையுறுப்புக்கள், BETACAM, DV cam, Mini DV, ஒலிநாடாக்கள், இறுவட்டு, DVD, ஸ்டில் கமராக்கள் மற்றும் துணையுறுப்புக்கள், Display units மற்றும் Display Solutions)
21. கைப்பணிப் பொருட்கள் மற்றும் ஊக்குவிப்புப் பொருட்கள் (டீ சேர்ட், தொப்பிகள், பைகள், தட்டுகள், குடைகள், சாவிக் கோர்ப்புகள், பேனைகள், தேநீர் குவளைகள் போன்றன)
22. சில்லறைப் பொருட்கள் / குறோசரிப் பொருட்கள்
23. பாதுகாப்பான முறையில் முத்திரைகள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றை அச்சிடுதல்.
24. பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (உதா - வாய்க் கவசங்கள், முகக் கவசங்கள், கையுறைகள், பாதுகாப்பு உடைகள், கிருமிநாசினித் திரவங்கள் மற்றும் ஏனையவை)

பகுதி 11 சேவைகள்

25. விளம்பர பிரசார வேலை (பதாகைகள், ஆக்க வேலைகள் (Art Work) மற்றும் கூடம் வடிவமைப்பு, கண்காட்சிக் கூடம், செட் டிசைனிங், Digital Printing)
26. அலுமினிய சட்ட வடிவமைத்தல் (கதவுகள், யன்னல்கள், அலுவலக பகுதி பிரிப்புக்கள், மற்றும் சீலிங் மற்றும் அது சார்ந்த தொழில்நுட்ப சேவைகளுடன்)
27. உணவு, பான, உபசார சேவை ஏற்பாடுகள் செய்தல்
28. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல்
29. பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல்
30. தூதஞ்சல் (Courier) சேவைகள் வழங்குதல்
31. சுங்க போக்குவரத்துச் (Cargo) சேவைகள் வழங்குதல்
32. போக்குவரத்து வசதிகள் (கார், வேன், டபள் கெப், பஸ், லொறி போன்ற சேவைகள் வழங்குதல்)
33. கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள், ஆலோசனைகள்
34. தொழில்வளர் சேவைகள்
    34.1 மேசன் வேலைகள் / குழாய் வேலைகள்
    34.2 தச்சு வேலை / தளபாடங்கள் மினுக்குவோர்
    34.3 உருக்கியொட்டுவோர், கடைசல் பட்டறை / இரும்பு வேலைகள்
    34.4 கட்டிட நிறப்பூச்சு வேலைகள் / சிறிய திருத்தவேலைகள் / மின்சார முறைமை
    34.5 இயந்திர உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த சேவைகள் / மின் மற்றும நீர்ப் பம்பி மோட்டர் சுற்றுவோர்)
35. கழிவுகளை அப்புறப்படுத்தும் முறைமை நிர்மாணித்தல் மற்றும் கழிவுநீரை வெளியேற்றல் சார்ந்த சேவைகளை வழங்குதல்
36. அலுவலக கதிரைகளுக்கு மேலணை இடுதல், அலுவலக தளபாட திருத்தவேலைகள்
37. சுங்கப் பொருட்களை அகற்றும் சேவைகள்
38. விழா நிகழ்வுகளுக்கான நாட்டியக் குழுக்களை வழங்குதல்
39. கலிகளை சுத்திகரிக்கும் சேவைகள் / கழிவுகளை அப்புறப்படுத்தும் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
40. மின்சாரம் மற்றும் வளிச்சீராக்க வேலைகள் தொடர்பான சேவை
41. கணக்காய்வு சேவைகள் மற்றும் தொழில்சார் ஆலோசனை சேவைகள் வழங்குதல்
42. நிலச் சீராக்கம் / வீட்டு மலர் கன்றுகளை வழங்கும் சேவைகள்
43. கேபள் தொலைக்காட்சி சேவை மற்றும் செயற்கைக்கோல் (Satellite) தொலைக்காட்சி வசதிகள்
44. பீடை / நுளம்பு மற்றும் எலிகள் கட்டுப்பாட்டுச் சேவைகள்
45. புகைப்படக் கலை, ஒடியோ, வீடியோ பதிவு செய்தல், படம் அச்சிடல், படம் பிரேம் போடல் மற்றும் மெல்லுறையிடல், அல்பம் தயாரித்தல், Box Mount செய்தல்
46. மின் உயர்த்திகளின் திருத்தவேலை சேவைகள்
47. பணியாட்தொகுதியினருக்கான பயிற்சிச் சேவைகள் (தகவல் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் மனித வளங்கள், நிதி, தொழில்நுட்பம், சட்டம், பெறுகைகள், கணக்காய்வு, மொழி போன்றன)
48. தொலைத்தொடர்பு முறைமைகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பு முறைமை.
49. தொழிலாளர்களை வழங்கும் சேவைகள்
50. ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டுரண்ட் (இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு சகிதம்)
51. காப்புறுதி நிறுவனங்கள் (அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வாகனங்கள், கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் போன்றன)

பகுதி 111 வாகன திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள்

52. வாகனங்களுக்கான Audio Players, Video Players மற்றும் Reverse Camera வழங்குதல் மற்றும் பொருத்துதல்
53. வாகன உதிரிப்பாகங்கள்
54. வாகன வளிச்சீராக்க வேலைகள்
55. வாகன மின்னியல் வேலைகள்
56. வாகன சுத்திகரிப்பு சேவைகள், உள்ளக சுத்திகரிப்புகள் மற்றும் சேர்விஸ் வேலைகள்
57. வாகன திருத்தவேலைகள் (தகர வேலை, நிறப்பூச்சு வேலை, மின்னியல் மற்றும் இயந்திர திருத்தவேலைகள், லொறி பொடி)
58. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிக்கான சேர்விஸ்கள் மற்றும் திருத்தவேலைகள்
59. வாகனங்களுக்கு குஷனிடுதல்
60. சக்கரச் சமச்சீராக்கம் மற்றும் சக்கர சமநிலை சேவைகள்
61. வாகன பராமரிப்பு சேவைகள்
62. வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெட்டறிகள்

பகுதி IV தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள் மற்றும் சேவைகள், மின்சார உபகரணங்கள் மற்றும் சேவைகள்

63. மென்பொருள் பொதிகள் மற்றும் (System Software and Application Software) கொள்வனவு செய்தல்.
64. கணனிகள் மற்றும் கணனி அச்சுப் பொறிகள், அது சார்ந்த வன்பொருள்கள், கடவுச் சீட்டுகளை வாசிக்கும் கருவிகள் (Passport scanners) பணியக பாதுகாப்பு குறியீடு வாசிக்கும் கருவிகள் (Barcode Reader) மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்
65. கணனிகள் மற்றும் கணனி அச்சுப் பொறிகள், அது சார்ந்த வன்பொருள்கள், கடவுச் சீட்டுகளை வாசிக்கும் கருவிகள் (Passport scanners) பணியக பாதுகாப்பு குறியீடு வாசிக்கும் கருவிகள் (Barcode Reader) மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
66. Toners, Cartridges, Ink, Ribbons (கணனி அச்சுப் பொறிகள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்கானவை)
67. UPS கொள்வனவு செய்தல், பட்டறிகள் கொள்வனவு செய்தல், UPS முறைமை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், UPS இயந்திர திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்
68. பிரதான கணனி சேமிப்பகம் (Server) மற்றும் தொடர்பான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், ஆலோசனை சேவைகள், பராமரிப்பு சேவைகள், திருத்தவேலைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் மற்றும் பிரதான கணனி வன்பொருள்களைக் கொள்வனவு செய்தல்
69. டொங்கல்கள் (Dongle) மற்றும் கம்பியில்லா இணைய இணைப்புச் சேவைகளைக் கொள்வனவு செய்தல்
70. கணனி வலையமைப்புக்கான கம்பி இணைப்பு சார்ந்த சேவைகள், வலையமைப்புச் சேவைகளுக்கான துணைப்பாகங்கள் வழங்குதல், தொலைத்தொடர்பு முகாமைத்துவ முறைமை (PABX) வலையமைப்பு வேலைகள் IP/VPN ரவுட்டர், சுவிட்ச், கணனி சேர்வர் தொடர்பான வேலைகள், நிறுவல்கள், கணனி சேர்வர் தரையமைப்பு (Floor) கம்பியில்லா இணைப்பு, கம்பி சகிதமான இணைப்பு சேவைகள் வழங்கல்
71. தகவல் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் வழங்குதல்
72. கணனி மென்பொருள் வடிவமைப்பு அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் அது தொடர்பான சேவைகள்
73. CCTV முறைமைகளைக் கொள்வனவு செய்தல், பராமரிப்பு சேவைகள் மற்றும் அது சார்ந்த சேவைகள் வழங்குதல்
74. மின்சார சாதனங்கள் (மின்விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் DVD வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் சமையலறை சாதனங்கள் உட்பட)
75. மின்சார சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
76. மின்னுயர்த்தி மற்றும் உதிரிப்பாகங்கள்
77. மின்பிறப்பாக்கிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் வாடகைக்கமர்த்துதல், திருத்தவேலைகள் மற்றும் சேவைகள் வழங்குதல்
78. மின்சார/இயந்திர/சிவில் ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில்நுட்ப (Technical) சேவைகளை வழங்குதல்

பகுதி V ஏனைய சேவைகள்

79. கொண்டாட்டங்களுக்கான முகாமைத்துவ வேலைகள்
80. கொண்டாட்டங்களுக்கான ஒளியமைப்பு மற்றும் அலங்கார வேலைகள் / ஒலிபெருக்கி வேலைகள்
81. அலுவலக உள்ளக அலங்கார வேலைகள்
82. ஊடக சாதனங்கள் மற்றும் தொகுப்புச் சாதனங்கள்
83. அச்சு வேலைகள் (Off-set, Letter Press, Digital, Fabric, Design Printing, கோவை மேலட்டைகள், நாட்காட்டிகள், தினக் குறிப்புகள், சஞ்சிகைகள், செய்திப்பத்திரிகைகள்)
84. இறுவட்டுக்களை பிரதி பண்ணல்.
85. தட்டச்சு இயந்திரத் திருத்தவேலைகள்
86. மொழிபெயர்ப்புச் சேவைகள் (சிங்களம். ஆங்கிலம், தமிழ், அரபு, கொரியா, ஜப்பான் மற்றும் இத்தாலி)
87. விசேட நிகழ்ச்சிகளுக்கான பொருட்கள் வழங்குதல். (தற்காலிக குடில்கள், கூடாரங்கள், கதிரைகள், மேசைகள், ஒலியமைப்புகள், தரை விரிப்புகள், ஒலியமைப்புகள் Podium (போடியம்) கொடி தூண்கள்)
88. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு, தொலைக்காட்சி விளம்பரங்கள் தயாரித்தல், ஊடக பிரசார வேலைகள், வீடியோ தயாரிப்புகள், வீடியோ வசன பதங்களைத் தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல், விவரணச் சித்திரம் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரித்தல்
89. அப்புறப்படுத்தப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் (காகிதங்கள் / அலுவலக உடைந்த பொருட்கள் உட்பட)
90. விமான சேவை நிறுவனங்கள் / விமானப் பயணச் சீட்டு முகவர் நிறுவனங்கள்
91. முன் கட்டமைக்கப்பட்ட கட்டிடங்கள் (கொள்கலன் வழங்குநர்கள்)

மாதிரி விண்ணப்பம்

வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2021

01. விண்ணப்பதாரரின்/ நிறுவனத்தின் பெயர்:.....
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியை தயவு செய்து இணைக்கவும்)

02. விண்ணப்பதாரரின் / நிறுவனத்தின் முகவரி: .....
(வழங்கிய முகவரி, வியாபாரப் பதிவின் பிரகாரம் மாற்றமடைந்தால் அதுபற்றி பதிவுத் தபால் மூலம் பெறுகைப் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.)

03. வழங்கல் / சேவைகளின் தன்மை: .....
உருப்படி இலக்கம்:..... தொடரிலக்கம்:.....

04. தொலைபேசி, தொலைநகல் இல. மற்றும் மின்னஞ்சல் முகவரி:
தொலைபேசி: .....
தொலைநகல்: .....
மின்னஞ்சல் முகவரி: .....

05. தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயர், பதவிப் பெயர் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள்
பெயர்: .....
பதவிப் பெயர்: .....
கையடக்க தொலைபேசி இல: .....

06. வங்கியாளரின் பெயர்: .....

07. பிரதான வியாபார அலுவல்கள் மற்றும் வியாபாரத்தின் தன்மை: (நிறுவனம், தனி நபர் வியாபாரம் போன்றவை)
....

08. தற்போது பொருட்கள்/ சேவைகள் வழங்கப்படும் அரச மற்றும் தனியார் துறை அமைப்புக்களின் பட்டியல் (விசாரித்தறிவதற்கான தொலைபேசி இலக்கத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்).....

09. கொள்வனவுச் செயற்பாடுகளின் போது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கேள்விப் பிணைமுறி/ செயலாற்றுகைப் பிணையை வழங்க சம்மதமா என்பது பற்றி :.....

10. வழங்க முடியுமான கடன் வசதிகள் (கால அளவு/ தொகை): .....
(தேவையான வேளைகளில் கேள்விப் பிணை முறி (Bid Security) மற்றும் செயலாற்றுகைப் பிணையை (Performance bond) வழங்க இணங்குதல் வேண்டும்)

11. பெறுமதி சேர்வரி (VAT) பதிவெண் (இருப்பின்): .....

12. பதிவுக் கட்டண விபரங்கள் - பணப் பற்றுச்சீட்டு இல: .....

என்னால்/எம்மால் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விபரக்குறிப்புகளுக்கமைய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இத்தால் இணங்குகிறேன். அவ்வாறே வழங்கப்படும் பொருள் மற்றும் சேவை என்பவற்றை விபரக்குறிப்புகளுக்கமைய வழங்கத் தவறும் பட்சத்தில் 2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் பெயர்ப்பட்டியலில் இருந்து எமது நிறுவத்தின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும் என்பதை நாம் அறிவோம்

கையொப்பம்: .....
பதவிப் பெயர்: .....
இறப்பர் முத்திரை:.....
திகதி: .....

வாரமஞ்சரி சிறு விளம்பரம்

வர்த்தகம்

207
வியாபார ஸ்தலம்
விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கியி னால் கை யேற்கப்பட்ட, களு த்துறையில் 30.68 பேர்ச் கட்டிடத்துடன் காணி விற்பனைக்கு. வி லை பேசித் தீர்ப்பத ற்கு கொழும்பு 2 யூனி யன்பிளேஸ் 242ஆம் இ ல க் க த் து டன் 20.12.2020 அல்லது அதற்கு முன்னராக விசாரிக்கவும். 8.5 மி ல்லியனுக்கு மேற்பட்ட வர்கள் மாத்திரம் விசா ரிக்கவும். 0772361243, 0773427535 074391

வேலைவாய்ப்பு

308
வெற்றிடங்கள்
சந்தைப்படுத்தல்

முக்கியமான வேலை சம்ப ளம் மாதம் 55000 இலிருந்து. உயர்ந்த சம்பளம் ஆண்/ பெண் வரலாம். தொலைபேசி. 0789646699 , 0785695938 074389

316
வெற்றிடங்கள்
ஆடை தயாரிப்பு/ புடவைகள்

யாழ்ப்பாணம், மாணிப்பா யிலுள்ள ஆ டைத்தொ ழிற்சாலையொன்றில் வேலை வாய்ப்புகள். மு காமையாளர் (தையல் இயந்திர, திருத்த வேலைகள்) பெண் மேற்பார்வையாளர்க ள், பெண் தையல் இயந் தி ர இயக்குன ர்க ள், யாழ்ப்பாண ம் மற்றும் அதற்கு அண்மித்த பிரதேசங்க ளில் உள்ளவர்கள் வி ரும்பப்படுவர். தங்குமிட வசதி வழங்கப்படும். தொடர்பு கொள்ளு ங்கள் - 0777100165, 0112301035. 072354

318
வெற்றிடங்கள்
டிரைவர்கள்

குருநாகலையிலுள்ள தோ ட்டமொன்றிற்கு ட்ரக்டர் மற்றும் கனரகவாகன சாரதிகள் தேவை. (55 வயதிற்குக் குறைந்த வர்கள்/ தங்கியிருந்து வேலை செய்ய முடியு மானவர்கள்) உணவு/ தங்குமிடம்/ மருத்துவ வசதிகள் இலவசம். தொட ர்பு0778711913. 073608

319
வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்

நாய்களை அன்போடு பா ர்த்துக்கொள்வதற்கும் உணவு சமைப்பதற்கு ம், குளிப்பாட்டவும் கரு ணை யுள்ளம் கொண்ட ஒருவர் தேவை. சம்ப ளம் 25000 இற்கு மேட்படும். உணவு/ தங்குமிடம்/ மருத்துவ வசதிகள் இலவசம். தொட ர்பு0778711913. 073608

321
வெற்றிடங்கள்
தோட்டத்துறை

இறப்பர் பால் வெட்டுதல், தோட்ட வேலைக்கு 35 வயதிற்கு மேலான சிங்களம் பேசக்கூ டிய ஆண் தேவை. தங்குமிடம், சம்பளம் பேசித்தீர்க்கலாம். 071-7858548 074379

323
வெற்றிடங்கள்
தொழிலாளர்கள்

ஹோமாகம டெம்பள் பர்க் கைத்தொழில் புரத்தின் உ ற்பத்தி நிறுவனமொ ன்றுக்கு தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத ஊழிய ர்கள் 18 22 வயதிற்கி டையில் தேவை. உய ர்ந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பன வுகள். 0778869803 074384

325
தொழில்துறை
பொது

உயர் நிலையான சொக்கலேட் தயா ரிப்பிற்கு ஊழியர் தேவை. உணவு, தங்குமிட த்துடன் 45, 000/ - உயர்ந்த சம்பளம். 0772513860, 0707912000 074403

நா டு பூ ராவும் எமது நி றுவனத்தின் புதிய கி ளைகளுக்கு வேலை பரீட்சிப்பவர், உதவி முகாமையாள ர், வாடி க்கையாளர் தொடர்பு அலுவலர் முகாமை யாளர்கள் ஆகியோர் புதிதாக பயிற்சி வழங்கி வேலையில் சேர்த்துக் கொ ள் ள ப் ப டு வ ா ர் க ள். நீங்களும் 1830 வயதிற்குள்ளும் O/ L, A/ L பரீட்சைகளு க்கு தே ாற்றி சிங்கள மொழி பேசும் திறமை யிருந்தால் இன்றே அழைக்கவும். பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், உணவு போன்றவை இலவசம். 15000 - 25000 இற்கு இடைப்ப ட்ட சம்பளம் மற்றும் பின்னர் 75, 000/ - சம்பளம் வெளிநாட்டு பயணம் மற்றும் மரு த்துவ காப்புறுதியும் உண்டு. தொடர்பெ ண்கள். 0719777595, 0113698979 074381

காணி/தோட்டம்

616
வீடு சொத்து
கொழும்பு
மாவட்டம்
விற்பனைக்கு

இராஜகிரிய 4.5 பேர்ச் வீடு விற்பனைக்கு கீல்ஸ் இற்கு அருகில் தொலைபேசி. 075 5478265 074218

கல்கிசை, காலி வீதிக்கு 40M தூரத்தில் ரயில் நிலைய ம் , சென்தோ மஸ், உ யர் மகளிர் க ல்லூ ரி, தபாலகம், பெரிய ஹோட்டல், நீதி மன்றிற்கு நடைதூரம் சகல நகர வசதிகளுடன் சி க்கலற்ற வீடு, காணி 0719724145. 074249

தெஹிவ ளையில் என்ட ர்ஸன் வீதியில், 8 பர்ச்சு காணி, வீடு விற்பனை க்குண்டு. தரைமா டி இரண்டு அறைகளையும் வாகன பார்க்கிங் ஒன்றையு ம் கொண்டுள்ளது. முதலாம் மாடி பூர்த்தி செய்யப்பட்ட ஸ்லெப் மாத்திரமேயாகும். 38 மில்லியன். தொடர்பு 0772945268. 073686

பொரளை ராஜகிரிய வீதியில் கோத்தமி வீதியில் 25.80 பேர்ச் காணி உடன் விற்பனை க்கு 0713292838. 073728

வீடு காணி விற்பனைக்கு. தெஹிவளை சந்தி யில் 3 மாடி வீடு 4 கோடிக்கு விற்பனைக்கு ண்டு. இரத்மலானை யில் 7 1/2 பேர்ச்சர்ஸ் வீடு விற்ப னைக்கு ண்டு. 1 கோடி 10. தொடர்பு 0763347313, 0775034154 (Kadija) 074252

617
வீடு சொத்து
கம்பஹா
மாவட்டம்
விற்பனைக்கு

கடவத்த அதிவேக பாதைக்கு அண்மையி ல் கண்டி வீதிக்கு முக ப்பாக நகரின் மத்தியில் 60 பேர்ச் காணியுண்டு. துண்டுகளாக அல்லது முழுவதுமாக விற்பனை க்குண்டு. 0777630512 074393

கந்தான நகரின் மத்தியில் நீர்கொழும்பு வீதிக்கு தெரியும் தூரத்தில் 8 பேர்ச் காணித் தொகுதி 3 விற்பனைக்கு பேர்ச் 9/ 75. 0711179950 074394

ஜாஎல நகரின் மத்தியில் நீர்கொழும்பு வீதிக்கு முகப்பாக 28 பேர்ச் பெறுமதியுள்ள காணி விற்பனைக்கு. பேர்ச் ஒன்று 9/ 75 இலட்ச ம். 077 8160206 074395

நீர்கொழும்பு 15 பேர்ச், 7 AC அறைகள், TV, வெந் நீர், 2 மாடி கள், தளபாடம் 250 இலட்ச ம் பே சித் தீர்க்கலாம். எட்வின்ஸ் ஏர்போர்ட் ஸ்ரே 0717508485 074188

619
வீடு சொத்து
குருணாகல்
மாவட்டம்
விற்பனைக்கு

கு ரு நா க ல் லி லி ருந் து 22 கி.மீ., கெப்பெட்டிக ல் வீதி யில், 6 ஏக்கர் ச ம தரை தென்னங் காணி வி ற்பனைக்கு. ஏக்கரொன்றிற்கு 2.8 மில்லியன் ரூபா பே சித் தீர்க் க ப் ப ட லா ம். தொடர்பு கொள்ளு ங்கள் 0772945268. 073678

629
வீடு சொத்து
இரத்தினபுரி
மாவட்டம்
விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி யினால் கையேற்கப்ப ட்ட, பலாங்கொடையில் 29.3 பேர்ச் வீடும் காணியும் விற்பனை க்கு பேசித் தீர்ப்பதற்கு விஷேட முகாமைத்துவ பிரிவு, 242 யூனியன் பிளே ஸ் கொழும்பு 2 என்ற முகவரிக்கு 2020.12.27ஆம் திகதி யன்று அல்லது அதற்கு முன்னராக விசாரிக்கவு ம். 4,300,000/- ரூபா விற்கு மே ற்பட்டவர்கள் மாத்திரம் பரிசீலிக்கப்ப டுவார்கள். 0771542693 074375

கேள்விப்பத்திர அறிவித்தல்

மக்கள் வங்கி
வன்னி பிராந்தியம்

சுத்திகரிப்பு சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் வன்னி பிரதேசத்தை சேர்ந்த **முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிகுளம் ஆகிய கிளைகளிலும் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை** ஆகிய சேவை நிலையங்களிலும் வன்னி பிராந்திய காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்களிடம் மூடப்பட்ட கேள்வி பத்திரம் கோரப்படுகின்றன.

மீள செலுத்தப்படாத 2000/= ரூபா கேள்விப்பத்திர படிவக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2020 மார்கழி மாதம் 07 திகதி திங்கட்கிழமை தொடக்கம் எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 - 4:00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் கேள்விப்பத்திர விபரங்களை விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களை நன்கு பரிசீலிக்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு ஆவணங்களுக்குரிய வைப்பிலிடப்பட்ட குறிப்பிட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி உரிய கட்டிட வளாகங்களைப் பார்வையிடுமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

2020 மார்கழி மாதம் 24 வியாழக்கிழமை பி.ப 2:00 வரை அல்லது அதற்கு முன்பு கிடைக்கப்பெறுமாறு எல்லா கேள்விப் பத்திரங்களும் நேரடியாக பிராந்திய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடப்படுவதன் மூலம் அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமைக் காரியாலயம், வன்னி.
இல - 9,1/1 புகையிரத நிலைய வீதி
வவுனியா

Telephone : 024 2222972/024 2225054
Fax : 024 2222713
Email : wanrho@peoplesbank.lk

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

பெருந்தோட்ட அமைச்சு
இலங்கை தேயிலைச் சபை

பதவி வெற்றிடங்கள்

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் ஒழுங்கு, அபிவிருத்தி, விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செயற்படும் முன்னோடி அரச நிறுவனமான இலங்கை தேயிலை சபையில் அங்கீகாரம் பெற்ற ஊழியர் எண்ணிக்கைக்குள் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த, செயல்திறன் மிக்க, ஆக்கத்திறனுள்ள மற்றும் நன்னடத்தையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிப்பாளர் - பகுப்பாய்வு சேவைகள் பதவி - (HM 1-1)

தொழில் விபரம்
இலங்கைத் தேயிலைச் சபையின் அதிகாரம் வாய்ந்த அலுவலரின் கண்காணிப்பின் கீழ் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தில் செயற்படுத்தப்படும் மாதிரிகள் மற்றும் பரீட்சிக்கும் அலகு, நுண்ணுயிர் ஆராய்ச்சி ஆய்வுகூடம், இரசாயனப் பகுப்பாய்வு ஆய்வுகூடம் மற்றும் பீடை நாசினி எச்சங்கள் பகுப்பாய்வு ஆய்வுகூடங்களினால் தேயிலைக் கைத்தொழில் தரப்பினருக்கு சேவை வழங்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல், உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கான தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கு பிரயோக ரீதியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட சிபாரிசுகளின் பிரகாரம் இலங்கைத் தேயிலைச் சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தை நடாத்திச் செல்லல்.

கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்
வெளிவாரி விண்ணப்பதாரிகள் (அ மற்றும் ஆ வகுதி)
(அ) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து இரசாயனவியல் அல்லது நுண்ணுயிரியலை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக்கொண்ட ஆரம்ப விஞ்ஞான பட்டம்
அத்துடன்
இரசாயனவியல் அல்லது நுண்ணுயிரியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் பட்டப் பின்படிப்புப் பட்டம்.
அத்துடன்
ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயையுடைய துறையில் குறைந்தபட்சம் முகாமைத்துவ மட்டத்தில் 15 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் இதில் குறைந்தபட்சம் 05 வருட காலம் அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வு அல்லது நுண்ணுயிர் ஆய்வுகூடமொன்றில் முகாமைத்துவ பதவியில் சேவையாற்றியிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்
(அ) மேற்படி வெளிவாரி வகுதியில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
அல்லது
(ஆ) இலங்கைத் தேயிலைச் சபை சேவையின் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் (MM – 1ஆந் தரம்) குறைந்தபட்சம் ஐந்து (5) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்த அதிகாரியொருவராக இருத்தல்.

சம்பள அளவு
HM 1-1 02/2016: ரூபா 80295/-, ரூபா 2270x15- ரூபா 114,345
02/2016 இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 80,295.00 ரூபா ஆரம்ப மாதாந்த சம்பளத்தில் அமர்த்தப்பட்டு அதற்குப் புறம்பாக 7800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும். 01/2015ஆம் இலக்க அரச தொழில் முயற்சி சுற்றுநிருபத்தின் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு சகிதம் சபையினால் பராமரிக்கப்படும் சாரதி சகிதமான வாகனத்தை வழங்குவதற்கு அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வயது:
35 வயதுக்குக் குறையாமலும் 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

முறைமை பகுப்பாய்வாளர் பதவி - JM 1-1 (IIந் தரம்)

தொழில் விபரம்
இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரம் வாய்ந்த அலுவலரின் மேற்பார்வையின் கீழ் இலங்கை தேயிலைச் சபையின் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளின் கீழ் வரும் சகல கடமைகளை நிறைவேற்றுதல்.

கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்
வெளி விண்ணப்பதாரர்கள்
(1) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி விஞ்ஞானம் அல்லது கணிதம் தொடர்பான விசேட விஞ்ஞானமாணிப் பட்டம்.
மற்றும்
அந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச நிறுவனம் மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில குறித்த துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரிகள்
i. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
அல்லது
ii. இலங்கைத் தேயிலைச் சபையின் IIஆந் தர முகாமைத்துவ உதவியாளர் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
முறைமை நிர்வாகி பதவிக்கு ஆங்கில மொழி தொடர்பில் சிறப்பான ஆற்றல் இருத்தல் வேண்டும்.

* பால் ஆண் / பெண் *குடியியல் நிலை விவாகம் / அவிவாகம்
* தொலைபேசி இலக்கம்
* பாடசாலை பற்றிய விபரங்கள்
* கல்வித் தகமை (க.பொ.த (சாத) க.பொ.த (உத))
* விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம்
* பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள்
* வான்படை சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும்
* ஏனைய தகமைகள்

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என எனமீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன்.

திகதி:– ....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

- மேலதிகத் தகவல்களுக்காக 2020 நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று இலக்க 2204 அரச வர்த்தமானியைப் பார்க்கவும். மற்றும் <www.documents.gov.lk>.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வான் படை வீரர் / வீராங்கனைகளுக்கான விண்ணப்பம். ..... எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ப்படும் கடைசித் திகதி 2020 டிசம்பர் 14

இணையத்தளம் ஊடாக விண்ணப்பம் அனுப்ப முடியும். <www.airforce.lk> or <http://airforce.observerjobs.lk>

கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி
தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, இலங்கை விமானப்படை
கொடுகொட.

மேலதிக தகவழ்களுக்காக +94 11 307 7852, www.airforce.lk

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

பாதுகாப்பு அமைச்சு

விலைமனுக்கோரல்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் KDU CARE க்கான அல்ட்ரா - உயர் செயல்திறன் திரவ குரோமடோகிராபி மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர் (UHPLC-MS/MS) ஐ விநியோகித்தல், நிறுவுதல், ஆணைகளையிடுதல், பயிற்சியளித்தல் மற்றும் பராமரித்தல்

ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/CAP/ 300/2020

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர் என்ற வகையில் தகுதியான மனுதாரர்களிடமிருந்து **1 (ஒன்று) இலக்க, அல்ட்ரா - உயர் செயல்திறன் திரவ குரோமடோகிராபி மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர்** வழங்கல்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோருகின்றார். மனுக்கோரல் செயல்முறை தேசிய போட்டி மனுக்கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.3,500.00** கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **07.12.2020** ஆம் திகதி தொடக்கம் 04.01.2021 ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **மு.ப 0900** மணி தொடக்கம் **பி.ப 1500** மணித்தியாலம் வரை இயக்குனர் வழங்கல், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கையி ல் சமர்ப்பித்தன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை எவ்வித கட்டணம் செலுத்துகையும் இன்றி **07.12.2020** ஆம் திகதி தொடக்கம் **04.01.2021** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **மு.ப 0900** மணி தொடக்கம் **பி.ப 1500** மணித்தியாலம் வரை பரிசீலித்துக்கொள்ளலாம். (தொலைபேசி - 011-2632430 / 0710219384 பெக்ஸ் - 0112-2632430)
4. பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் மனுக்கோரல் திகதி மற்றும் நேரம் முடிவதற்கு முன் இட வேண்டும் அல்லது குறித்த முகவரிக்கு கிடைக்க பெறுமாறு அனுப்பிவைக்க வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த உடனேயே மனுக்கள் திறக்கப்படும்.
5. மனுக்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானையில் **05.01.2021** ஆம் திகதியன்று **மு.ப 10.00** மணிக்கு திறக்கப்படும்.
6. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக விபரங்களை இயக்குனர் நிலையம், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி - 011-2632430 / 0710219384 பெக்ஸ் - 0112-2632430, மற்றும் *www.kdu.ac.lk/oclc/- tender-notices* இல் **"மனுக்கோரலுக்கான அழைப்பு"** பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

தலைவர்,
திணைக்கள வழங்கல் குழு,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை, இலங்கை.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடங்கள்

நிர்வாக பணியாளர்கள்

1. உதவி பதிவாளர் வெற்றிடம்
2. உதவி நிதி மேலாளர் வெற்றிடம்
3. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி வெற்றிடம்

எழுத்தர் மற்றும் அதை சார்ந்த தரங்கள்

1. தனிக்கை உதவியாளர் பதவி வெற்றிடம் தரம். II
2. முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடம் (வீரராக்ப் சேவைகள்) தரம். III
3. மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம் (பூங்கா) தரம். III

சம்பள அளவு

நிர்வாக பணியாளர்கள்

1. உதவி பதிவாளர் வெற்றிடம் மற்றும் உதவி நிதி மேலாளர்
U-EX I (II) Rs. 50,625 – 3x1,125 – 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m.
2. பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி வெற்றிடம் :- U-MO I (II) Rs. 55,350 – 10x1,335; 1x1,630 – 70,330 p.m.

எழுத்தர் மற்றும் அதை சார்ந்த தரங்கள்

1. தனிக்கை உதவியாளர் பதவி வெற்றிடம் தரம்.II :- U-MN 2 (II) Rs. 37,275 – 18x495 – 46,185 p.m.
2. முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடம் (வீரராக்ப் சேவைகள்) தரம். III :- U-MN 1 (III)A Rs. 30,725 - 17x300 – 35,825 p.m.
3. மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம் (பூங்கா) தரம். III :- U-MT 1 (III)A Rs. 31,625 – 07x300;10x355 – 37,275 p.m.

தெரிவு செய்யும் முறைமை

திறனாய்வு சோதனை மற்றும் நேர்காணல் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

வேறு பிரதிலாபங்கள்

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, இலவச சுகாதார காப்பீடு, வருடாந்த ஊக்கத்தொகை, ஊழியர்களின் குழந்தைகளுக்கான உதவித்தொகை, பல்கலைக்கழக மருத்துவமனையில் முன்னுரிமை அடிப்படையிலான சிகிச்சைகள் மற்றும் பிற சலுகைகள்.

பொது நியந்தனைகள்

1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இணைத்துக்கொள்ளல் மற்றும் பதவி உயர்வு நடைமுறைக்கிணங்கவும் நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர்.
3. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகளினால் ஒவ்வொரு தரத்திற்கும்/ பதவிக்கும் அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களுக்கு மட்டுமே தெரிவு இடம்பெறும்.
4. குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
5. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியலை தீர்மானிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.
6. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ளக் கூடிய விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். பிரதிகிடைக்கும். பூரணப்படுத்தப்படாத அல்லது குறித்த மாதிரிக்கமையாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
7. புதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சம்பள படிவத்திற்கமைய சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
8. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலின் மூலம் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் ,இரத்மலானை எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பிக்கும் பதவி வெற்றிடத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.
9. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் படிமுறை 15/2017, 05/2020, 12/2018 மற்றும் அவற்றின் விசேட குறிப்புகள் மற்றும் குறித்த சட்டங்களுக்கேற்ப விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.
10. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
11. பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்கள்/ அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ கட்டுப்பாட்டு வாரியங்களின் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் முன்வைக்கவேண்டும்.

இறுதித்திகதி 2020 டிசம்பர் 21

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :
பதிவாளர்
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை **10390,**
இலங்கை
மின்னஞ்சல்: **staffrecruit@kdu.ac.lk**

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும்:
www.kdu.ac.lk.

தொழிலாளர்கள்
குருநாகல் தோட்டத்திற்கு பயிர்செய்கை மேற் கொள்ள மற்றும் தோட்டத்தின் ஏனைய வேலைகளுக்கு 55 வயதிற்குக் குறைந்த, தங்கி வேலை செய் வதற்கு தொழிலாளர்கள் தேவை.
உணவு/தங்குமிடம்/ மருத்துவ சிகிச்சை இலவசம்
சம்பளம் - 25000/- முதல் அதற்கு மேல்
தொடர்புகளுக்கு
077 — 6443062

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

நகராட்சி மன்றம் திருகோணமலை

2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும், ஒப்பந்தக்காரர்களையும், பதிவு செய்தல்

திருகோணமலை நகர சபைக்கு 2021ஆம் ஆண்டுக்காக தேவைப்படும் கீழ்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிராக காட்டப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்களுடன் உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரச் சான்றிதழின் பிரதியுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 2021ம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல் என குறிப்பிட்டு 2020.12.30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னதாக எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். செயலாளர் நகராட்சி மன்றம், திருகோணமலை (Secretary, Urban Council, Trincomalee) என்னும் பெயருக்கு காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம் பதிவுக் கட்டணம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இல	பொருட்கள் சேவைகள் விபரம்	மீளளிக்கப்படாத வைப்புப்பணம்
1	காகிதாதிகள், எழுதுகருவிகள், போட்டோ கொப்பி கடதாசி, ஆகியவை	1,000.00
2	அலுவலக உபகரணங்கள், மரம் மற்றும் உருக்கு தளபாடங்கள் ஆகியவை	1,000.00
3	சீருடை, காற்சட்டை துணிகள் ஆகியவை	1,000.00
4	பெயின்ற் வகைகளும் அதனோடு சம்பந்தப்பட்ட பொருட்களும்.	1,000.00
5	பதிவேடுகள், படிவங்கள், இறப்பர் முத்திரை அச்சிடல் விநியோகித்தல்	1,000.00
6	மின்பொருட்கள், மின்கம்பிகள், மின்குமிழ்கள், மின்விசிறி போன்றவை	1,000.00
7	இரும்புப் பொருட்கள், கட்டிடப்பொருட்கள் போன்றவை	1,000.00
8	தொற்று நீக்கிகள், கிருமிநாசினிகள், சுத்திகரிப்பு பொருட்கள் ஆகியவை	1,000.00
9	வாகன உரிமத் தகடுகள் ஆகியவை	1,000.00
10	கணினி போட்டோபிரதி பக்ஸ் மற்றும் அலுவலக இயந்திரமும் அதனோடு தொடர்புடைய உதிரிப்பாகங்களும் ஆகியவை	1,000.00
11	PVC பொருட்கள் ஆகியவை	1,000.00
12	அனைத்து ரக அரிந்த மரங்கள் பலகைகள் ஆகியவை	1,000.00
13	டயர்கள், ரியூப்கள் ஆகியவை	1,000.00
14	டயர்கள், ரியூப்கள் பொருத்துக்கள் ஏணிகள் ஆகியவை	1,000.00
15	அனைத்து ரக உழவு இயந்திரங்களும் உதிரிப்பாக விநியோகமும்	1,000.00
16	அனைத்து வகையான உதிரிப்பாகங்களும்	1,000.00
17	நூலக புத்தகங்கள் பருவ வெளியீடுகள்	1,000.00
18	பொருட்கள் ஏற்றியிறக்கல் ஏனய மாவட்டங்கள் - திருகோணமலை	1,000.00
19	வாகன மின்கலங்கள் ஆகியவை	1,000.00
20	சல்லிக்கற்கள், கருங்கற்கள், செங்கற்கள், கிரவல் ஆற்றுமணல் விறகு ஆகியவை	3,000.00
21	பாதுகாப்புச் சேவை வழங்கல்	1,000.00
22	மழை அங்கி, மட்பூட்ஸ் பாதணிகள் மற்றும் காலுறை வகைகள்	1,000.00
23	வாகன திருத்தம்	1,000.00
24	வாகன சேவிஸ்	1,000.00
25	கட்டிட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல். 5,000,000/- (ஐந்து மில்லியன்) வரை (CIDA) நிறுவனத்தின் நிருமானதாரர்களை பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தகாரர்)	3,000.00

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களை தவிர்ந்த வேறு வழங்குநர்களின் விலைமனுக்களை தேவைப்படுமிடத்து ஏற்றுக்கொள்வதற்கு சபைக்கு அதிகாரமுண்டு. அவசியம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் வழங்குநர்களால் பொருட்கள் சேவைகள் வழங்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 45 நாட்களுக்கு கடன் வசதி சபைக்கு வழங்கப்படல் வேண்டும். பற்றுச்சீட்டு கிடைக்கப்பெற்ற பின்னர் கொடுப்பனவுகள் காசோலை மூலம் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு
026-2222074 தலைவர்
026-2222274 செயலாளர்
026-2222458 கணக்காளர்
026-2222275 அலுவலகம்
026-2220552 தொலைநகல்

நா. இராஜநாயகம்,
தலைவர்,
நகராட்சி மன்றம், திருகோணமலை.

அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் [ஆண் / பெண்]

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் தொழில்நுட்ப, தொழில் நுட்பம் சாரா உத்தியோகபூர்வ ஆவணங்கள், உத்தியோகபூர்வ உரைகள், செய்திவெளியீடுகள் ஆகியவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பினை தொழில் முறை தரத்துடன் வழங்குபவராக இருத்தல் வேண்டும். கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும் சந்தர்ப்பங்களில் சமகால உரைபெயர்ப்பை வழங்க வேண்டும்.

வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.
மாதாந்த கொடுப்பனவு: 127,373/-

தேவையான தகைமைகள்:

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி. தொழில் சார் மொழிபெயர்ப்பாளரின் சான்று அவசியம்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் இரண்டு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன்.சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது.மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேவைப்படும் ஆவணங்கள்:

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னனு பிரதிகளுடன் மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- குறிப்பிட்ட கல்விச்சான்றிதழ் (பட்டதாரி சான்றிதழ் மற்றும் வகுப்புச்சான்றிதழ்)
- தொழில் சான்றிதழ்
- குறிப்பிட்டசேவை.்.செயற்பாட்டு அனுபவச்சான்றிதழ்
- பிரஜாவுரிமைச்சான்றிதழ்
- (தேசிய அடையாள அட்டை.்.கடவுச்சீட்டு.்.அல்லது தொழில் சான்றிதழ்.

அல்லது

1. **கல்வி:** இரண்டாம் நிலைக்கல்வி (க.பொ.த.உயர்தரம்)முழுமையாகப்பூர்த்தி செய்திருப்பதுடன் பல்கலைக்கழகத்திலோ அல்லது உயர்கல்வி நிறுவனத்திலோ குறைந்தது இரண்டு வருடம் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் நான்கு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன். சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது. மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேவைப்படும் ஆவணங்கள்:

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னனு பிரதிகளுடன் மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- குறிப்பிட்ட கல்விச்சான்றிதழ் (க.பொ.த.உயர்தர பெறுபேற்றுச்சான்றிதழுடன் பல்கலைக்கழகத்தில் குறைந்தது இரண்டுவருடகாலம் கல்விகற்றதற்கான சான்றிதழ் அல்லது வகுப்புச்சான்றிதழ் பிரதி)
- குறிப்பிட்ட சேவை.்.செயற்பாட்டு அனுபவச்சான்றிதழ்
- பிரஜாவுரிமைச்சான்றிதழ் (தேசிய அடையாள அட்டை.்.கடவுச்சீட்டு அல்லது தொழிற்சான்றிதழ்)

விண்ணப்பிக்கும் முறை:

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

உங்கள் விண்ணப்பங்கள் **2020** டிசெம்பர் **18** ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

வீடு விற்பனைக்கு

கின்ஸி வீதி, கொழும்பு -08

கொழும்பு -08, கின்ஸி வீதிக்கு முகப்பாக, 8.7 பர்ச்சு முக்கோண வடிவக் காணியில், கராஜ், அழகிய கார்டின் மற்றும் கிணற்றுநீர் உள்ளிட்டதாக, கழிவறைகள் மற்றும் ஏனைய அவசியப்படும் பகுதிகள் இணைந்த 04 படுக்கையறைகள் கொண்ட இரண்டு மாடிவீடு, இருதய சிகிச்சைப்பிரிவு மற்றும் பொது வைத்தியசாலைக்கு சமீபமாக உள்ளது. இருந்த போதிலும் இது ஒரு அமைதியான இடமாகும். விசாரணைகளுக்கு, பி.ப.4-6 இடையே,

0773322442/0112574459 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுங்கள்

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

கொமர்ஷல் வங்கி சீலோன் பி.எல்.சி. சொத்துக்கள் விற்பனை

1. அவிசாவளை - ஹற்றன் வீதி, கரவனெல்ல, கபுலுமுல்லவில் அமைந்துள்ள வதிவிடத்திற்கேற்ற காணி

காணியின் விஸ்தீரணம் : 0A : 2R : 5.6P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகரைத் தொடர்புகொள்ளவும்.

ஜயநாத் : 077-3659390/ 011-2486877

2. கேகாலை அம்பன்பிட்டியவில் , கொழும்பு - கண்டி வீதிக்கு முகப்பாக அமைந்துள்ள இரண்டு மாடி வதிவிடத்திற்கேற்ற கட்டிடம்

காணியின் விஸ்தீரணம் : 0A: OR : 17P
கட்டிட பகுதி : 3,160 sq ft

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

ருவன் : 035-2230232
பிமல் : 011-2486786
ஜயநாத் : 011-2486877 / 077-3659390

3. பலாங்கொடையில் உடகந்த வீதியில் உள்ள வதிவிடத்திற்கேற்ற காணி

காணியின் விஸ்தீரணம் : OA : OR: 20P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

சானக்க : 045-2286747 / 045-2286697
பிமல் : 011-2486786
ஜயநாத் : 011-2486877 / 077-3659390

4. பலபிட்டிய, ஜம்புவத்தை வீதியில் உள்ள வதிவிடத்திற்கேற்ற காணி

காணியின் விஸ்தீரணம் : 0A : 01R : 21.87P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகரைத் தொடர்புகொள்ளவும்.

ஜயநாத் : 011-2486877 / 077-3659390

5. எல்பிட்டிய, குருந்துகஹா ஹெட்டம்பே, எல்ல வீதி, சமகி மாவத்தையில் அமைந்துள்ள வதிவிடத்திற்கேற்ற காணி

காணியின் விஸ்தீரணம் : OA : OR : 28.5P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

திமுத் : 091-2290283/ 091-2290284
ஜயநாத் : 077-3659390/ 011-2486877

6. உக்குவளை, மாத்தளை வீதி, 154/2/A, என்ற விலாசத்தில் அமைந்துள்ள வதிவிடத்திற்கேற்ற இரண்டு மாடிக் கட்டிடம் (உக்குவளை மக்கள் வங்கிக் கிளைக்குப் பின்னால்)

காணியின் விஸ்தீரணம் : 0A : OR : 20P
தரைப்பகுதி : 3,204 sq ft

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

ஜனித் : 011-2486985
ஜயநாத் : 077-3659390/ 011-2486877

7. திகன, அம்பகோட்டே வீதி - அலுத்வத்தையில் உள்ள வெற்றுக்காணி

காணியின் விஸ்தீரணம் : OA : 1R : 33.32P (ஒரே விஸ்தீரணத்தில் இரண்டு காணிகள்)

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

தெவிந்த : 081-2499836/ 081-2498341
ஜனித் : 011-2486985
ஜயநாத் : 011-2486877/ 077-3659390

8. நாவலப்பிட்டி, கொத்மலே வீதியில் உள்ள வதிவிடத்திற்கேற்ற காணி (நாவலப்பிட்டி நகருக்கு 900 மீட்டர்கள்)

காணியின் விஸ்தீரணம் : OA : OR : 36.5P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

சிந்தக்க : 054-2223962 / 054-2223961
ஜயநாத் : 011-2486877 / 077-3659390

9. அம்பலாந்தோட்டை, தங்கல்ல வீதி, பட்ட அத்தவில் அமைந்துள்ள வதிவிடத்திற்கேற்ற காணி

காணியின் விஸ்தீரணம் : OA : 03R: 00P

பார்வையிடுவதற்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு, அலுவலக நேரத்தில் பின்வரும் அலுவலகர்களைத் தொடர்புகொள்ளவும்.

திவங்க : 047-2223818/ 047-2223819
ஜயநாத் : 011-2486877 / 077-3659390

விலைக் கோரிக்கை அடங்கிய, சீல் வைக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சொத்தின் அமைவிடத்தை குறிப்பிட்டு, மீளப்பெறக்கூடிய ரூபா.5,000/- (ஒவ்வொரு சொத்துக்கும் வெவ்வேறாக) வைப்புடன் 2020 டிசம்பர் 18ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொமர்ஷல் வங்கி பி.எல்.சி. யின் மத்திய மீட்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டும்.

விலைக் கோரிக்கையில் வெற்றிபெறுபவரின் பெயர் அறிவிக்கப்படுவதுடன், சொத்தை பரிமாற்றம் செய்வதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விலை மதிப்புத் தொகை வைப்பிலிடவேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

மேலும், விலைக் கோரிக்கையில் வெற்றிபெறுபவர், குறிப்பிட்ட சொத்து விற்பனை தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள வரிகள் மற்றும் கட்டணங்களை செலுத்தவேண்டும்.

எந்தவொரு விலைக் கோரிக்கையையும் அல்லது அனைத்து விலைக் கோரிக்கைகளையும் நிராகரிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

மீட்புப் பிரிவுத் தலைவர்
மத்திய மீட்பு பிரிவு
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. (பதிவு இல. PQ116)
21, சேர் ராஸிக் பரீட் மாவத்தை,
கொழும்பு 01.

COMMERCIAL BANK

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை
(நீதி அமைச்சு)

2015 இல் 05 குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள் சாட்சிகளுக்கு உதவுவதன் மற்றும் பாதுகாப்பிற்கான சட்டத்தை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கும் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபையில் வெற்றிடங்களுக்கு சேர்த்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பணிப்பாளர் நாயகம் HM 2-3 (01 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்

வெளிவிண்ணப்பதாரிகள்

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், குற்றவியல் அல்லது சட்டம் செயற்படுத்தல் பற்றிய ஆரம்ப பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகவிருத்தல்

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் (Criminology) குற்றவியல் நீதி (Criminal Justice) குற்றவியல் சட்டம் (Criminal Law) அல்லது வேறு குறித்த பாடத் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் (இளமாணி) பெற்றிருத்தல் அல்லது அரச நிர்வாகம் பற்றிய பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது வியாபார நிர்வாகம் பற்றிய பட்டப்பின்படிப்பு பட்டத்தை பெற்றிருத்தல்

அத்துடன்

பட்டத் தகைமையைப் பெற்றதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபையில் அல்லது குறித்த அரச சார்பற்ற அல்லது வர்த்தக நிறுவனமாக 'முகாமைத்துவ மட்டத்தில்' பதவிகளில் குறைந்த பட்சம் இருபது (20) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (குறைந்த பட்சம் இதில் 5 வருடங்களாவது 'சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில்' (HM தொடரில்) இருத்தல் வேண்டும்.

உள்ளக விண்ணப்பதாரிகள்

நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் சேவை வகையில் (HM தொடரில்) பதவியொன்றில் குறைந்த பட்சம் 5 வருடம் குறித்த விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

பல்வகை செயற்பாடுகளில் ஈடுபடும் குழுக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குவது போலவே மனிதவள மற்றும் ஏனைய வளங்களை செயற்பாட்டுடன் முகாமைத்துவம் செய்யும் நிலையான திறமை.

சம்பள அளவு:

HM 2-3 ரூ. 98,215 - 12x2,700 - 130,615

வயதெல்லை:

35 வருடத்திற்கு குறையாத 55 வருடத்திற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

02. பணிப்பாளர் (பாதுகாப்பு) HM 1-3 (01 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவிண்ணப்பதாரிகள்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம், குற்றவியல் (Criminology) அல்லது சமூகவிஞ்ஞானம் ஆகிய பாடத்துறைகளில் விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு குறித்த பாடத்துறையில் பட்டப்பின்படிப்பை பெற்றிருத்தல்

மற்றும்

முதல் பட்டதாரி தகைமை பெற்றுக்கொண்டபின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது குறித்த அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனத்தில் 'நிறைவேற்று/ முகாமைத்து மட்டத்தில்' பாடத்துறையில் குறித்த பதவிகளில் குறைந்த பட்சம் 15 வருட அனுபவத்தை பெற்றிருத்தல்

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப்பெற்றிருத்தல்

அத்துடன்

இலங்கை பொலிஸ் சேவையில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பதவிக்கு குறையாத பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரியாக இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழ்க்காணும் 01 அல்லது 02)

01. இப் பதவிக்கான மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

02. முகாமைத்துவ சேவை (MM) வகையில் 1ம் தரத்தில் பதவியொன்றில் குறைந்த பட்சம் 05 வருடத்திற்கு குறித்த பாடத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு:

HM 1-3 ரூ. 86,865 - 15x2,270 - 120,915

வயதெல்லை:

35 வருடத்திற்கு குறையாத 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

03. சட்ட அதிகாரி JM 1-1 (01 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவிண்ணப்பதாரிகள்:

(அ) உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல் அத்துடன் சட்டத்தரணி தொழிலில் குறைந்த பட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழ்க்காணும் 01 அல்லது 02)

01. இப் பதவியுடன் சம்பந்தப்பட்ட மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

02. முகாமைத்து உதவியாளர் - தொழில்நுட்பம் தவிர்ந்த (MA 1) சேவை வகையின் IIஆம் தரத்திலான பதவியில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்

சம்பள அளவு:

JM 1-1 ரூ. 42,600 - 10x755 -18x1135 - 70,580

வயதெல்லை:

22 வருடத்திற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

04. பாதுகாப்பு அதிகாரி MA 4 (10 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவிண்ணப்பதாரிகள்:

(அ) சட்டம்/ குற்றவியல்/ உளவியல் பாடங்களை உள்ளடக்கிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் பரிசோதகர் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கின்ற பொலிஸ் அதிகாரியாக இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழ்க்காணும் 01 அல்லது 02)

01. இப் பதவியுடன் சம்பந்தப்பட்ட மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

02. முகாமைத்து உதவியாளர் - தொழில்நுட்பம் தவிர்ந்த (MA 1) சேவை வகையை உள்ளடக்கிய துறையில் பதவியொன்றில் குறைந்த பட்சம் எட்டு வருட (08) திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு:

MA 4 ரூ. 37,970 - 10x755 -15x930 5x1135 - ரூ. 65,145/-

வயதெல்லை:

22 வருடத்திற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

05. தொலைக் தொடர்பு அதிகாரி MA 4 (1 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவிண்ணப்பதாரிகள்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து தொலைத் தொடர்பு அல்லது வேறு குறிப்பு பாடங்கள் வரைகளில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள்:

01. இப் பதவியுடன் சம்பந்தப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கு பொருத்தமான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

02. முகாமைத்துவ உதவியாளர் - (தொழில்நுட்பம் தவிர்ந்த (MA 1) சேவை வகையில் குறித்த துறையில் பதவியொன்றில் குறைந்த பட்சம் எட்டு வருட (08) திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

சம்பள அளவு:

MA 4 ரூ. 37,970 - 10x755 -15x930 5x1135 - ரூ. 65,145/-

வயதெல்லை:

22 வருடத்திற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

06. முகாமைத்துவ உதவியாளர் MA 1-1 (04 பதவி)

தகைமை மற்றும் அனுபவம்:

வெளிவிண்ணப்பதாரிகள்:

(அ) கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில்

i. சிங்களம்/ தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) பரீட்சையில் குறைந்த பட்சம் மூன்று பாடங்கள் (சாதாரண பொது பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரிகள்:

(அ) ஆரம்ப தரம் - திறன் அற்ற, பாதி திறன் மற்றும் திறன் உடைய சேவை வகையில் கீழ்க்காணும 'ஆ', 'இ', 'ஈ' இல் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில்

i. சிங்களம்/ தமிழ்

ii. கணிதம்

iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04)பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்

மற்றும்

கணனி தரவுகளை தயாரித்தல்/ தட்டச்சு பற்றிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியைப் பயின்றிருத்தல்.

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தை வகிப்பதுடன் அவ் நியமனங்களில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) குறித்த தினத்திற்கு கிட்டிய நிரந்தர பதவியில் மேற்கண்டவர்கள் 05 வருட தொடரான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவு:

MA 1-1 ரூ. 27,910 - 10x300 -7x350 4x495 20x660 - ரூ. 48,540/-

வயதெல்லை:

18 வருடத்திற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

நிபந்தனைகள்

01. கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு -

நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வு - சபையினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு நடத்தப்படும். தகைமை பெற்றுள்ளவர்களில் குறைந்த பட்சம் வெற்றிட எண்ணிக்கையை விட இரு மடங்கு எண்ணிக்கையாளர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். கூடுதல் புள்ளிகள் பெறுபவர்களில் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்குதல் கீழ்க்காணுமாறு அமையும்.-

குறித்த அனுபவம்	- 30 புள்ளிகள்
குறித்த மேலதிக கல்வி/ தொழில்சார் தகைமைகள்	- 30 புள்ளிகள்
ஏனைய குறித்த செயற்பாடுகள் மற்றும் திறமைகள்	- 15 புள்ளிகள்
நேர்முகத் தேர்வில் செயற்பாடுகள்	- 25 புள்ளிகள்
முழுப் புள்ளிகளின் எண்ணிக்கை	- 100 புள்ளிகள்

02. சகல விண்ணப்பதாரிகளும்

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

ii. பதவிக்காக ஒப்படைக்கப்படும் செயற்பாடுகளை சரியாக நிறைவேற்றுதல் பேலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றத் தேவையான உடல் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நல்ஒழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

03. தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்கள தலைமையூடாக விண்ணப்பிக்க வேண்டியதுடன் அவர் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்க முடியும் என்பதை நிறுவன தலைவரின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. அறிவித்தலில் பிரகாரம் அடிப்படைத் தகைமையைய் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

05. மேற்படி தகைமைகள் மற்றும் பதவியுடன் சம்பந்தப்பட்ட அனுபவத்தை உறுதி செய்யும் சான்றிதழ்களில் போட்டோப் பிரதியை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

06. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

07. கொழும்பு 01, 02 இன் கீழ் தரப்பட்டுள்ள பதவிகளுக்கு அரசு அனுமதித்த கொடுப்பனவுகள் மற்றும் பதவிக்கு உரிய சலுகைகள் கிடைக்கும்.

08. விண்ணப்பதாரர்களால் தேவையற்ற வற்புறுத்தல்கள் அல்லது தொடர்புகளை மேற்கொள்ளல் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

09. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு கிடைக்காத சகல விண்ணப்பங்களும் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், அனுபவம் மற்றும் சகல தகவல்களும் அடங்கிய சுயதரவுக் குறிப்புகளுடன்,

தலைவர்,
குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை,
428/11 ஏ, முதலாம் மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,
பத்தரமுல்ல.
தொ.பே. இல. 0112879539
திகதி: 2020.12.06

சிறுவர் உலகம்

- சிங்கம் -

குறுக்கெழுத்துப் போட்டி இல. 300

01	02	03	04		05
	06	07		08	09
10			11	12	
13		14	15		16
17	18	19		20	21
22		23	24	25	26

பெயர் .....

வகுப்பு .....

பாடசாலை பெயர் .....

பாடசாலை முகவரி .....

.....

....

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(1) பெரும் சமுத்திரங்களின் மேற்பரப்பில் உருவாகின்ற தாழமுக்கம் காரணமாக ஏற்படும் இயற்கை அனர்த்தம். உயிர், உடைமை அழிவுகளை ஏற்படுத்த வல்லது.
(6) அறுசுவைகளில் ஒன்று.
(8) காணியொன்றுக்கு எல்லையாகவும், பாதுகாப்பாகவும் அமைவது.
(11) உழவனின் சாதனம். நிலத்தைப் பண்படுத்த உதவுவது.
(14) உள்ளத்தில் துணிச்சல் இல்லாத, பயந்த சுபாவம் கொண்டவர்.
(17) பகல் முழுக்க இயங்கித் திரிகின்ற எமக்கு இரவில் ஓய்வைத் தருவது. (தலைகீழான சொல்)
(20) முட்டைக்கு உள்ளே காணப்படும். (தலைகீழான சொல்)
(23) பெற்றோருக்கு இவன் செல்வம்.

மேலிருந்து கீழ்

(2) சமாதானத்தின் சின்னம் இப்பறவை. (தலைகீழான சொல்)
(3) திணிவும், இடத்தை அடைக்கும் இயல்பும் கொண்ட சடப்பொருளாக இருந்த போதிலும் கண்களால் இதனைப் பார்க்க இயலாது.
(5) உலகெங்கும் பெருமளவு தானியங்களை தின்று தீர்க்கும் இந்தப் பிராணி அணில் போன்று சிறியது. பாலூட்டி உயிரினமான இது இரவில்தான் உணவு தேடும்.
(8) தாவரம் நிலத்தில் கெட்டியாக நிற்பதற்கும், நீரையும் கனியுப்புகளையும் உறிஞ்சிக் கொள்வதற்கும் அவசியமான பகுதி.
(10) நறுமணம் வீசும், வெண்ணிற மலர். (தலைகீழான சொல்)
(11) வறியவரைக் குறிக்கும் பொதுப்பாற் சொல்.
(14) நெல் போன்று உலக மக்களால் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் தானியம்.
(16) யானையைப் பராமரிப்பவன்.
(20) மரத்தின் ஒத்தபொருட் சொல். (தலைகீழான சொல்)

போட்டி இல. 300

சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834,
கொழும்பு

குறுக்கெழுத்துப் போட்டி இல. 299

விடைகள்

இடமிருந்து வலம்

01. அமெரிக்கா 09. பகை 11. பாலம் 16. முதலை 20. கான் 22. கழுகு

மேலிருந்து கீழ்

01. அழுகை 03. பாரி 05. காவலன் 10. பரதன் 16. காலை 19. குடை

குறிப்பு : கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளால் குறுக்கெழுத்துப் போட்டிகளில் பரிசு பெறுபவர்களின் பெயர் விபரங்கள் இடம்பெறமாட்டாது.

குறளமுதம் :

இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறு படும்

தெளிவுரை : *இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம்போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்.*

இவ்வார மழலை

சஷ்வின்

விஜய் / ஆஷா
நுகேகொட.

நத்தார் தாத்தாவுக்கு கடிதம் எழுதும் சிறுவர்கள்

சி.கே. முருகேசு

இயேசுபிரானின் ஜயந்தியை உலகம் மகிழ்ச்சியோடு கொண்டாடும் நாள் அண்மித்துக் கொண்டிருக்கின்றது. இறைமகன் இயேசுவின் பிறப்பாகிய நத்தார் நெருங்கி வரும்வேளை சிறுவர்களின் மனம் கவர்ந்த ஒரு நபர் இருக்கின்றார். அவர் நாம் அனைவருமே அறிந்த நத்தார் தாத்தாவாகும்.

சிவப்புநிற நீண்ட அங்கியும், கூரான தொப்பியுமாக காட்சிதரும் நத்தார் தாத்தாவுக்கு முகமெல்லாம் வெண்தாடி. பரிசுப் பொருட்களடங்கிய உறையை தோளில் தொங்கவிட்டபடி துருவமான்கள் இழுத்து வரும் வண்டியிலேறி வெள்ளி மணியோசையுடன் நத்தார் தாத்தா வருவதாக சின்னஞ்சிறுவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நத்தார் தாத்தா கோட்பாடு துருக்கியில் புனித நிக்கலஸ் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டதாகும். தங்களுக்குத்

தேவையான பரிசுப்பொருட்கள் பற்றி உலகின் பல நாடுகளில் சிறுவர்கள் நத்தார் தாத்தாவுக்கு கடிதங்கள் எழுதுவது வழக்கம்.

"கடந்த வருடம் தாங்கள் எனக்கு அன்பளிப்புச் செய்த பொம்மை இப்போது பெரிதாக வளர்ந்துவிட்டது. தயவு செய்து அது படுத்து உறங்குவதற்கு ஒரு தொட்டிலைக் கொண்டுவந்து தரவும்". நத்தார் தாத்தாவின் பெயருக்கு அஞ்சல்மூலம் வந்த ஆயிரக்கணக்கான கடிதங்களில் ஒன்று இவ்வாறு தெரிவித்தது. உலகம் முழுதும் உள்ள அஞ்சலகங்கள் வாயிலாக நத்தார் தாத்தாவின் பெயருக்கு ஏராளமான கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

சிறுவர்கள் இக்கடிதங்கள் மூலமாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இவர்களின் கடிதங்களை 'ஜசிக்லே மாளிகை, சுவர்க்கத்தீவு, துருவமான் இல்லம், விளையாட்டுப் பொருள் தீவு முதலிய கற்பனை முகவரிகளுக்குச் சிறுவர்கள் எழுதுகின்றனர். இவர்கள் குறிப்பிடும் இவ்விடங்கள் வடதுருவம், கிரீன்லாந்து, எஸ்கிமோலாந்து ஆகிய நாடுகளில் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

அஞ்சல் சேவையின் லண்டன் தலைமை அஞ்சலகத்திற்கு ஒவ்வொரு நத்தார் சமயமும் சுமார் பத்தாயிரம் வரையிலான மடல்கள் கிடைப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இக்கடிதங்களை அஞ்சல் ஊழியர்கள் திறந்து வாசிக்கின்றனர். மிகவும் வறுமையில் வாழும் சிறுவர்கள் என அஞ்சலக ஊழியர்கள் கருதும் கடிதங்களை பல்வேறு நலன்புரி நிலையங்களுக்கும், சமூக சேவையாளர்களுக்கும் வழங்குகின்றனர். இச்சிறார்களின் எதிர்பார்ப்புகளை உதாசீனம் செய்யாது நத்தார் தாத்தாவைப் போன்று பதில் கடிதங்களை எழுதியும், பிள்ளைகள் எதிர்பார்த்த பொருட்கள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு அவ்வறக்கட்டளை நிறுவனங்களும், கொடை வள்ளல்களும் வழி வகுப்பதாக அறிய முடிகிறது.

அமெரிக்காவில் சகல அஞ்சலகங்களிலும் நத்தார் தாத்தா பெயரில் வரும் கடிதங்களுக்காக பிறிதொரு கிளை திறக்கப்படுகின்றது. இக்கடிதங்களை வாசிப்பதற்காக விசேடமான அதிகாரியொருவரை அரசு நியமிக்கின்றது. இக்கடிதங்களை வாசித்து ஏழ்மையானவர்களென கருதப்படும் சிறார்களுக்கு அவர்கள் விரும்பும் அன்பளிப்பு அனுப்பப்படுகிறது. இப் பரிசுப் பொருட்களுக்கான செலவுத்தொகை அஞ்சல் ஊழியர்கள் அனைவரிடமிருந்தும் சேகரிக்கப்படும் நிதியின் மூலம் நிரப்பப்படுகிறது.

வசதியான குடும்பத்துப் பிள்ளைகளென கருதப்படும் சிறார்களின் கடிதங்கள் அவர்களின் பெற்றோருக்கு திருப்பியனுப்புகிறதாம். பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தெரியாமல் அவர்கள் ஆசைப்படும் பொருட்களை வாங்கி நத்தார் தினத்தில் கொண்டுவந்து அவர்களது படுக்கை அறையிலோ அல்லது நத்தார் மரத்தின் கீழோ வைத்து விடுவார்கள்.

நத்தார் தாத்தாவுக்கு கடிதம் எழுதும் வறிய சிறார்களுக்கு உதவுவதற்காக பிரித்தானியாவில் ஒரு நிறுவனம் முப்பது வருடங்களுக்கு மேலாக செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு டென்மார்க் நாட்டில் இயங்கிவரும் தேசிய சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் அனுசரணையும் கிடைத்து வருகின்றது. இந்நிறுவனம் நத்தார் தாத்தாவின் பதில் கடிதத்துடன் ஹேன்ஸ் எண்டர்சனின் சிறுவர் கதைப் புத்தகமொன்றையும் அனுப்பி வைக்கின்றது. அத்தோடு, கிறிஸ்மஸ் பண்டிகை நிறைவுற்ற பின்னர், கிடைக்கப்பெற்ற கடிதங்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட நூற்றியிருபது சிறுவர்களுக்கு டென்மார்க் நாட்டில்

சுற்றுலா மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

லெப்லாந்து (பின்லாந்தின் வடபகுதி) நாட்டில் கிருணநகரில் நத்தார் தாத்தாவுக்காக விசேடமான அஞ்சலகமொன்று திறக்கப்படுகின்றன. நத்தார் தாத்தாவுக்கு கடிதம் எழுதுவதற்காக நத்தார் தாத்தாவின் பெயரில் மூன்று தீவுகள் இருப்பதாகவும் அறியமுடிகின்றது.

இத்தீவுகளில் ஒன்று ஜாவா தீவிலிருந்து இருநூறு மைல் தொலைவில் அமைந்துள்ளது. மற்றொரு தீவு 1777ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி கெப்டன் குக் கண்டுபிடித்த பசுபிக் சமுத்திரத்தில் உள்ள தீவாகும். மேலும் ஒரு நத்தார் தாத்தா தீவு நோவா ஸ்கொட்யானி பிரிட்டிஷ் முனையில் அமைந்துள்ளது.

நமது நாட்டிலும் வறிய சிறார்களுக்காக நத்தார் தாத்தாவின் அன்பளிப்புகளை வழங்கும் நிறுவனங்கள் ஆங்காங்கே உருவாக வேண்டுமென்பது இவ்வருட நத்தார் சிந்தனையாக இருக்கட்டும்.

ஊக்கமது கைவிடேல்

ஓர் ஊரில் ஏழை விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நான்கு பிள்ளைகள். விவசாயிக்கு தன் குடும்பத்தை கொண்டு நடத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. இருப்பினும் அவன் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் செய்வதில்லை. எல்லோரும் அவனை இந்த விவசாயத்தை நம்பியிராமல் வேறேதாவது தொழில் செய்யுமாறு வற்புறுத்தினார். ஆயினும் அவன் மனந்தளரவில்லை. விவசாயத்தில் பலமுறை நட்டமடைந்தான். தன்னிடமிருந்த சிறுசிறு பொருட்களை விற்க கிடைத்த பணத்தைக் கொண்டு மீண்டும் விவசாயம் செய்தான். அப்போதும் இயற்கை சதி செய்தது. ஒரே வரட்சி விதைத்த பயிர் அனைத்தும் கருகிவிட்டது. விவசாயி தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட்டான். "இனி நான் என்ன செய்வேன், எப்படி என் குடும்பத்திற்கு உணவளிப்பேன்" எனப் புலம்பத் தொடங்கினான்.

பிள்ளைகள் நால்வரும் அப்பாவிடம் வந்தனர். "அப்பா நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு உதவிக்கு வருகிறோம். தொழிலைத் தொடருவோம். இறைவன் நமக்குத் துணை இருப்பான்" என்று பிள்ளைகள் நால்வரும் ஆறுதல் வார்த்தைகளை கூறினர். அதன்படியே 'ஊக்கமது கைவிடேல்' என்னும் ஔவையார் வாக்குக்கிணங்க தொழிலைத் தொடர்ந்தனர்.

இறைவன் எங்களைப் பார்த்து கண்திறந்து விட்டான். இம்முறை காலத்துக்கு மழை பெய்து பயிர் செழித்து வளர்ந்தது. நல்ல விளைச்சல் விவசாயி குடும்பத்திற்கு ஒரே மகிழ்ச்சி. ஊக்கம் உயர்வளிக்கும் என்ற உண்மையை உணர்ந்தனர். அவர்களின் வாழ்வும் வளம்பெற்றது.

அப்துல் ரசாக் பாத்திமா ரஸ்மினா,
ப/ அல் இர்ஷாட் மகா வித்தியாலயம்,
ஹாலி எல.

மனித வாழ்வில் தோன்றும் சிக்கல்கள்

இன்றைய வாழ்வில் தோன்றும் சிக்கல்களுக்குக் காரணம் மனிதனின் எல்லை கடந்த உணர்வேயாகும். தனி மனிதனானாலும், பிற சங்கங்களானாலும், மதமானாலும், ஆட்சியானாலும், அவரவர் விருப்பங்கள், செயல்கள், கருத்துக்களை சிறிதுகூட மாற்றிக் கொள்வதில்லை. பிறருக்காகவோ, சமுதாயத்திற்காகவோ சிறிதும் விட்டுக் கொடுக்கவோ, தியாகம் செய்யவோ தயாராக இல்லை. மற்றவர்கள் இவர்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பிடிவாதத்தோடு இருக்கிறார்கள்.

இந்த கடினமான மனநிலை எல்லோரிடமும் பரவலாகவும், அழுத்தமாகவும் இருந்து வருகிறது. மனிதப் பண்பாட்டையே சீர்குலைக்கக்கூடிய இந்த முனைப்புதான் எல்லா துன்பங்களையும் மனித வாழ்வில் பெருக்கிக் கொண்டு வருகிறது.

இத்தகைய தன்முனைப்பிற்கு உதவவும், தூபம் போடவும் ஏற்றவர்களோடு மட்டும்தான் அவர்களுடைய நட்பு மற்றும் குழு உணர்வு ஓங்குகின்றனவே தவிர வேறு எந்தவிதத்திலும் நல்லவர்களோடும், அறிஞர்களோடும் குழுக்கள் உருவாவதில்லை. இயற்கை அறிவின் விளக்கம் ஒன்றினால்தான் கடினமான மன நோயை குணப்படுத்த முடியும்.

சோ. வினோஜ்குமார்,
தொழில்நுட்ப பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி.

வெலன்கல்ல தமிழ் வித்தியாலய மாணவி சித்தி

சு. ஒஷினியா

பின்தங்கிய பாடசாலையான கே/தெஹி/வெலன்கல்ல தமிழ் வித்தியாலய மாணவி சு. ஒஷினியா புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் வெலன்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சுப்பிர மணி சரோஜா தம்பதிகளின் புதல்வியாவார்.

புலமைப்பரிசில் ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவர்கள்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அவிசாவளை புவக்பிட்டிய ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவர்களான (மேல் வரிசை இடமிருந்து வலமாக) சுதாகர் அவினாஸ் தனுஜ் (180), செல்வராஜா ஷெய்லி (180), சரவணகுமார் பிரதிக்ஷியா (175), மனோகரன் அஷ்மிதா (168), சுபாஸ்கரன் விதுஷிகா ஹர்ஷனி (165), (கீழ் வரிசையில் இடமிருந்து வலமாக) மனோகர் அனந்திகா (165), காளிதாஸ் கவிஷா (163), கனகரட்னம் நவோஜினி (162), விநாயகமூர்த்தி கபிலேஷ் (162) ஆகியோர் சித்தியடைந்து பாடசாலைக்கு புகழ்தேடி தந்துள்ளனர்.

(தகவலும் படங்களும் : தினகரன் அவிசாவளை குறூப் நிருபர்)

சிறுவர் சித்திரங்கள்

ரஞ்சன் அரஞ்சிகா,
தரம் 11,
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்,
குமரன்புலம் மூளாய், சுழிபுரம்.

க. கிஷாலன்,
தரம் 05, லசாலி ஆங்கில பாடசாலை,
கொட்டாஞ்சேனை.

ராஜேந்திரன் அமிர்தா,
தரம் 04 C,
கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு 04.

கி. அக்ஷயன்,
தரம் 08, கொ/ பெனடிக் கல்லூரி,
கொட்டாஞ்சேனை.

க. டேன்,
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ.

விளையாட்டு

பீ.எப். மொஹமட்

உபாதை, சர்ச்சைகள் சூழ்ந்த

லங்கா ப்ரீமியர் லீக் இன் முதல்பாதி ஆட்டங்கள்

இலங்கை கிரிக்கெட் சபையினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள லங்கா ப்ரீமியர் லீக் தொடர் வெற்றிகரமாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருவதுடன், இதில் முதல் பாதி ஆட்டங்கள் நிறைவுக்கு வந்துவிட்டன.

முன்னதாக, இந்தப் போட்டித் தொடரை தம்புள்ள மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், கொரோனா பாதுகாப்பு காரணங்கள் கருதி ஹம்பாந்தோட்டையில் மாத்திரம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஜப்னா ஸ்டாலியன்ஸ் மற்றும் தம்புள்ள வைகிங் அணிகள் இந்த தொடரில் மிக முக்கியமான அணிகளாக உருவெடுத்து உள்ளது. இரண்டு அணிகளும் புள்ளிகள் பட்டியலில் முதல் இரண்டு இடங்களில் உள்ளது.

இந்த இரண்டு அணிகளில் இதுவரை நான்கு போட்டிகளில் விளையாடி நான்கு வெற்றிகளைப் பெற்றுக்கொண்டுள்ள ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணி, இன்னுமொரு வெற்றியைப் பெற்றுக்கொண்டால் அரையிறுதிக்கு செல்வது உறுதியாகிவிடும்.

மூன்றாவது இடத்தில் கொழும்பு கிங்ஸ் அணியும், 4ஆவது மற்றும் 5ஆவது இடங்களில் முறையே கண்டி டஸ்கர்ஸ் மற்றும் கோல் க்ளேடியேட்டர்ஸ் ஆகிய அணிகள் உள்ளன.

மொத்தம் 23 போட்டிகள் கொண்ட எல்.பி.எல் தொடரில் 10 லீக் போட்டிகள் முடிந்துவிட்டன. மறுபுறத்தில் பெரும்பாலான அணிகள் தலா 5 போட்டிகளை விளையாடி முதல் பாதியை முடித்துள்ளனர்.

இதில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராக கோல் க்ளேடியேட்டர்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்கவும், அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரராக கண்டி டஸ்கர்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சாளரான நவீன் உல் ஹக்கும் இடம்பெற்றுள்ளனர்.

கொவிட் 19 வைரஸ் பாதுகாப்பு வளையத்திற்குள் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் நடைபெற்று வருகின்ற இம்முறை எல்.பி.எல் தொடரில் இதுவரை இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் மற்றும் சர்ச்சைகள் என்னென்ன என்பது பற்றிய தொகுப்பை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

இர்பான் பதானின் உபாதை

இம்முறை லங்கா ப்ரீமியர் லீக் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் கண்டி டஸ்கர்ஸ் மற்றும் கொழும்பு கிங்ஸ் அணிகள் மோதின.

பரபரப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற இந்தப் போட்டியில் கண்டி டஸ்கர்ஸ் அணியை எதிர்கொண்ட கொழும்பு கிங்ஸ் அணித்தில் வெற்றியை பதிவுசெய்தது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், இரண்டு அணிகளும் அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி தலா 219 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, சுப்பர் ஓவரின் மூலம் கொழும்பு கிங்ஸ் அணி வெற்றியை பதிவுசெய்தது.

குறித்த போட்டியில் கண்டி டஸ்கர்ஸ் அணிக்காக விளையாடிய இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரரான இர்பான் பதான் உபாதைக்குள்ளாகினார்.

குறித்த போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் இரண்டாவது ஓவரை வீசிய இர்பான் பதான் தொடைப்பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக மைதானத்திலிருந்து வெளியேறினார்.

குறித்த போட்டியின் பிறகு கண்டி டஸ்கர்ஸ் அணி விளையாடிய நான்கு போட்டிகளிலும் அவர் விளையாடவில்லை. மீண்டும் அவர் அணியில் இடம்பெறுவாரா என்பது குறித்த எந்தவொரு தகவலும் இதுவரை வெளியாகவில்லை.

சதீர உள்ளே..! ஓசத வெளியே..!

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்று வருகின்ற அங்குரார்ப்பண லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் கண்டி டஸ்கர்ஸ் அணிக்காக விளையாடி வருகின்ற இலங்கை அணியின் முன்னணி வீரர்களான ஓசத பெர்னாண்டோ, கண்டி டஸ்கர்ஸ் அணியுடன் நடைபெற்ற 3ஆவது லீக் ஆட்டத்தின் போது உபாதைக் குள்ளானார்.

குறித்த போட்டியில் தம்புள்ள வைகிங் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் தம்புள்ள அணிக்காக நிரோஷன் டிக்வெல்ல வுடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ஓசத பெர்னாண்டோ, போட்டியின் 3ஆவது ஓவரின் நான்காவது பந்தில் சிக்ஸர் ஒன்றை பந்துவீச்சாளரின் தலைக்கு நேராக அடித்தார்.

எனினும், அடுத்த பந்தில் ஒரு ஓட்டத்தை எடுக்க முற்பட்ட போது கால் தடுக்கி கீழே விழுந்தார். கணுக்கால் சுளுக்கியதால் மைதானத்தில் வைத்து மிகவும் வேதனைக்குள்ளாகிய அவர், உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேறினார்.

இதனையடுத்து ஓசத பெர்னாண்டோவுக்கு மேற்கொள்ளப்பட்ட எம்.ஆர்.ஐ பரிசோதனையில் அவருக்கு ஒரு வாரம் ஓய்வு அளிக்க வேண்டும் என வைத்தியர்கள் குழு அறிவித்தது.

எனவே, ஓசதவின் உபாதையினை கருத்திற்கொண்டு பிரதியீட்டு வீரர்களில் ஒருவராகவே தம்புள்ளை அணியில் சதீர சமரவிக்ரம இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு நடைபெற்ற இளையோர் உலகக் கிண்ண இலங்கை குழாத்தில் இடம்பெற்ற சதீர சமரவிக்ரம, இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்காக அறிமுகம் பெற்ற போதிலும் அவர் கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து எந்தவித சர்வதேச போட்டிகளிலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தம்புள்ள வைகிங் அணியில் இணைந்திருக்கும் சதீர சமரவிக்ரம சுயதனிமைப்படுத்தலில் உள்ளார். சுயதனிமைப்படுத்தல் நிறைவடைந்த பின்னர் அவருக்கு தம்புள்ளை வைகிங் அணி விளையாடுகின்ற வாய்ப்பு இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்தாப் அலாம் திடீர் விலகல்

லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் தம்புள்ள வைகிங் அணிக்காக விளையாடி வருகின்ற ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான அப்தாப் அலாம், தனிப்பட்ட காரணங்களுக்காக இம்முறை லங்கா ப்ரீமியர் லீக் தொடரிலிருந்து விலகினார்.

தம்புள்ள வைகிங் அணியில் இடம்பெற்ற 28 வயதான ஆப்கானிஸ்தானின் வலதுகை வேகப்பந்துவீச்சாளரான அப்தாப் அலாம்;, இம்முறை லங்கா ப்ரீமியர் லீக்கின் 5ஆவது லீக் ஆட்டத்தில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் அணிக்கெதிராக விளையாடியிருந்தார்.

குறித்த போட்டியில் 3 ஓவர்கள் பந்துவீசிய அவர், 22 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்ததுடன், வனிந்து ஹஸரங்கவின் விக்கெட்டினை எடுத்தார்.

எதுஎவ்வாறயினும், கொழும்பு கிங்ஸ் அணிக்கெதிராக கடந்த முதலாம் திகதி நடைபெற்ற 7ஆவது லீக் ஆட்டத்தில் அப்தாப் அலாம் விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக கசுன் ராஜித் விளையாடியிருந்தார்.

இந்த நிலையில். தம்புள்ள வைகிங் அணியின் ஊடகப்பிரிவு வெளியில் ஊடக அறிக்கையில், அப்தாப் அலாம் தனிப்பட்ட காரணங்களுக்கான நாடு திரும்பவுள்ளதால், தம்புள்ள வைகிங் அணியின் எஞ்சிய போட்டிகளில் அவர் விளையாட மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அப்தாப் அலாம் தம்புள்ள அணியில் இருந்து விலகியுள்ளதால், அவருக்குப் பதிலாக பிரதியீட்டு வீரரொருவர் இதுவரை அறிவிக்கப்படவில்லை. பெரும்பாலும் இலங்கையின் உள்ளூர் வீரரொருவருக்கு தம்புள்ள வைகிங் அணியில் வாய்ப்பு வழங்கப்படலாம் என கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மலிந்த புஷ்பகுமாரவிடம் விசாரணை

இம்முறை லங்கா ப்ரீமியர் லீக்கில் தம்புள்ள வைகிங் அணிக்காக விளையாடி வருகின்ற சுழல்பந்துவீச்சாளரான மலிந்த புஷ்பகுமாரவிடம் ஐ.சி.சி இன் ஊழல் தடுப்பு பிரிவு விசாரணை நடத்தியிருந்ததாக கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

கண்டி டஸ்கர்ஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் அவர் பந்துவீசிய விதம் சந்தேகத்தை ஏற்படுத்தியதாகவும், அதன்பிறகு குறித்த விசாரணைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டன.

அப்ரிடி, நவீன் உல் ஹக் முறுகல்:

இம்முறை லங்கா ப்ரீமியர் லீக்கில் கோல் க்ளேடியேட்டர்ஸ் மற்றும் கண்டி டஸ்கர்ஸ் அணிகள் மோதிய 6ஆவது லீக் போட்டியின்போது சஹீட் அப்ரிடிக்கும், ஆப்கானிஸ்தான் வீரர் நவீன் உல் ஹக்குக்கும் சிறிய மோதல் ஏற்பட்டது.

இந்தப் போட்டியின் 18ஆவது ஓவரில் கோல் அணிக்காக விளையாடிய பாகிஸ்தான் வீரர் மொஹமட் ஆமீருக்கும், கண்டி டஸ்கர்ஸ் அணியில் இடம்பெற்ற ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இளம் வீரரான நவீன் உல் ஹக்கிற்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்நிலையில் போட்டியின் 18வது ஓவரை கண்டி டஸ்கர்ஸ் அணி சார்பில் நவீன் உல் ஹக் வீசிய போது அந்த ஓவரில் காலி அணியை சேர்ந்த மொஹமட் ஆமிர் பவுண்டரிக்கு விளாசினார். அப்போதே இருவருக்கும் ஒரு வாக்குவாதம் போன்று ஒரு சிறிய முறுகல் காணப்பட்டது.

இருப்பினும் போட்டிக்கு பின்னர் குறித்த இரண்டு வீரர்களும் மீண்டும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், கண்டி அணி வீரர்கள் அதை தடுத்து நிறுத்தினார்கள்.

குறித்த போட்டி முடிந்த பிறகு கோல் க்ளேடியேட்டர்ஸ் அணியின் தலைவர் சஹீட் அப்ரிடி நவீன் உல்ஹக்கிடம் எச்சரிக்கை விடுக்கின்ற காணொளி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதன்காரணமாக குறித்த சம்பவம் வைரலாக பரவியது.

ஆனால், இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் அப்ரிடி வெளியிட்டிருந்த பதிவில், இளம் வீரர்களுக்கு எனது அறிவுரை எளிதானது. இதனை யாரும் பெரிது படுத்த வேண்டாம். எங்களுக்கும் ஆப்கானிஸ்தான் அணிக்கும் நல்லுறவு உள்ளது. எதிரணி வீரர்களை மதிப்பது தான் போட்டியின் அடிப்படை என தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பிய அப்ரிடி

இம்முறை லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் விளையாடிவந்த கோல் க்ளடியேட்டர்ஸ் அணித் தலைவரும், சகலதுறை வீரருமான அவ்றிடி தனிப்பட்ட காரணத்துக்காக அவசரமாக நாடு திரும்பியுள்ளார். தான் நாடு திரும்புவதற்கான காரணத்தை தனது டுவிட்டரில் அவர் பதிவிட்டுள்ளார்.

'துரதிஷ்டவசமாக, தனிப்பட்ட அவசர தேவை ஒன்றை கவனிக்க வேண்டியுள்ளது. இந்த தேவையை நிறைவேற்றிய உடனேயே எல்பிஎல்லில் எனது அணியினருடன் இணைய திரும்புவேன். சகலமும் நலமாக அமையட்டும்' என தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். அப்ரிடி எப்போது திரும்புவார் என்பது தெரியவரவில்லை. ஆனால் அவர் இலங்கைக்கு மீண்டும் வருகைதந்தவுடன் குறைந்தது 3 தினங்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும்.

லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் ஏற்கனவே 4 போட்டிகளில் தோல்வி அடைந்து கடைநிலையில் இருக்கும் கோல் க்ளடியேட்டர்ஸ் அணிக்கு அப்ரிடி இல்லாதது பெரிய இழப்பாகும். அவருக்குப் பதிலாக உதவித் தலைவர் பானுக்க ராஜபக்ஷ அணித் தலைவராக செயப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 டிசம்பர் மாதம் 06ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

வாழ்வாதாரமா சேதாரமா 158

தமிழ்க் கவி பேசுகின்றார்

எப்படியாகுமோ இந்த நாடும் கல்வியும்?

பாடசாலைகள் திறந்தும் திறவாமலும் சிக்கலுக்குள் இருக்கிறது. பாடசாலைகளை மட்டுமே கல்விக்கான நிலையங்களாக பார்த்த காலம் முடிந்து வெகு நாட்களாகி விட்டது. கல்வி என்பது கௌரவ அமைச்சர் கன்னங்கர வின் காலத்தில் இலவசமாக வழங்கப்பட தொடங் கியது. அதற்கு முன்னம் பணவசதி படைத்தவர்கள் மட்டுமே படித்தார்கள் கிராமங்களில் தீண்ணை யில் கற்றவர்கள் பாடசாலைக்கு நகரங்களை நாட வேண்டியதாக வந்தபோது வாகன வசதி உடைய வர்கள் மட்டுமே படித்தார்கள். தொலை தூரத்துக்கு நடந்து போக வல்லமை இருந்தாலும் மக்களில் சிலர் கல்வியிலிருந்து தள்ளி வைக்கப்பட்டார்.

அப்போது கல்வி உயர் சாதியினருக்கென்று வரையறை செய்து இருந்தாலும் ஆங்கிலேய ரின் ஆட்சியில் சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பது உறுதி செய்யப்பட்ட பின் பெரும்பாலும் ஓதுக்கி வைக்கப்பட்ட மக்களும் கல்வி கற்றார்கள். அந்தக்கல்வி அவர் களை உயர்த்தியது. அரசாங்கத்தின் உயர் பதவிகளில் இவர்கள் தம்மை நிலைப்படுத்தினார்கள் மேலும் கலை இலக்கியம் போன்ற துறைகளி லும் முத்திரை பதித்தார்கள். கல்வியால் தமது அடிமைத் தளையை உடைத்துப் போட்டார்கள்.

அறிவை விருத்தி செய்ய படித்த காலம் போய் அர சாங்க உத்தியோக த்துக்காக படிக்கும் காலம் வந்தது. அரசாங்க உத்தியோகம் இல்லாத போதும் தனியான பல தொழில்கள் கல்வியாளர்களை வேண்டி நின்றது. நவீன விஞ்ஞானம் கல்வியிலும் மாற்றத்தை கொண்டு வந்தது. வெறுமனே புராணங்களை யும் இதிகாசங்களையும், மட்டுமே கல்வியாக வரித்துக் கொண்டிருந்த காலம் போய் இப்போது நவீன கருவிக ளும் வைத்திய முறையும் விவசாயமும் வளர்ந்தது போல ஏன் கிருமிகளும் புதுப்புது நோய்களும்கூட எம்மை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

இன்று கல்வி என்பது சக லருக்கும் ஒரு கவுரவப் பிரச் சினையாக மாறிவிட்டது, இதனை நாம் கொலர்சிப் பரீட்சையின் போது துலக் கமாக காண்கிறோம். பிள்ளைகள் பாடசா லைப் பருவத்தை அடையு முன் னமே பாடசாலை. தனியார் கல்வி நிலையங்கள் என்று அலைக்கழிக் கப்பட்டு நொந்து நூலாகிப்போகிறார்கள்.

போர் நடந்தகாலத்தில் இப்போதுள்ளதை விட, அதாவது கொரனா காலத்தைவிட வன்னிப்பகுதி மாணவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டார் கள். பல பாடசாலைகள் குண்டு வீச்சுக்கு இலக்காகின. ஏழை மாணவர் கள் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து தமது கல்வியை நிரவ முடியாமல் இடைநிறுத்தினார்கள். ஒரு வகுப்பை நான்கு ஐந்து பாடசாலைகளில் படித்தவர்கள் அவர்கள். அதைப்பற்றி நான் ஒரு நூலே எழுதக்கூடிய அளவுக்கு விடயம் இருக்கிறது. அப்படியும் பாடசாலைக்கு வந்த மாணவர் களை படிப்பில் மூழ்க விடாமல் போருக்கு ஆட்சேர்ப்பவர்கள் பாடசாலை களுக்குள் அவர்களுக்கு பிரச்சாரம் செய்து ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார்கள். பாடசாலை தொடங்கி காலை பிரார்த்தனை முடிந்ததும் பாடசாலைக்குள் புகுந்தால் பாடசாலை முடிவடையும் போதுதான் அவர்கள் வெளியேறு வார்கள். அதுவரை மாணவர்களுக்கு போர் பற்றி விளக்கமளிப்பார்கள். ஆசிரியர்கள் எதுவும் செய்ய முடியாமல் கைகளைப் பிசைந்து கொண் டிருந்தார்கள்.

ஆனால். பணவசதி படைத்தவர்களும் உயர் பதவிகளிலிருந்தவர்க ளும் பிள்ளைகளை பாடசாலைக்கே அனுப்பாமல், வீடுகளில் வைத்தே திறமையான ஆசிரியர்களை வைத்து கற்பித்தார்கள். இவர்களது வரவு பாடசாலைகளில் இவர்கள் வராமலே பதியப்பட்டது. பரீட்சை பெறுபேறு கள் வந்து போது இந்தப்பிள்ளைகளே கணிசமான புள்ளிகளை பெற் றிருப்பார்கள் என்பது தெரியாதா? ஆனால் மற்ற மாணவர்களினதும் பெற்றோரினதும் வயிற்றெரிச்சலை கொட்டிக்கொள்வது போல, திற மைச்சித்தி அடைந்த பிள்ளைகளை இயக்கமே பரிசளித்து பாராட்டிய கொடுமையும் நடந்தது.

இதை ஏன் இப்போது சொல்கி றேன் என்றால், கொரானா காலத்தி லும் அதே நடைமுறை தொடர்கிறது என்பதை சொல்லத்தான். தனியாக கற்பிக்கும் ஆசிரியர்களின் மாதக் கொடுப்பனவு இருபதாயிரம் வரை ஏறிவிட்டது. அது முழுநாள் சம்பளம் அல்ல, மணித்தியாலக் கணக்குத் தான். இந்த நேரசூசி பல இடங்களை சமாளித்து தொகை மீறும். பாவப்பட்ட பிள்ளைகளுக்கு தனியார் கல்வி நிலையங்களும் மூடியாயிற்று. கொஞ்சம் வசதி படைத்தோர் தமது பிள்ளைகளின் கல்வியை தொடரவே செய்கிறார் கள். இந்த நிலையில் பாடசாலைகள் நின்று நின்று நடக்கும்போது பாடத்திட்டங்களை எப்படி முடிப்பார்கள். பிள்ளைக ளுடைய பரீட்சைகளும் தொண்ணூறுகளில் நடந் தது போல எப்போது நடக் கும் என்பதை சொல்ல முடியாமல் உள்ளது. எங் களது நடவடிக்கைகளை தீர்மானிப்பது கொவிட் 19தான் என்பது உலக நடைமுறையாகிவிட்டது.

சாதாரணமாக பிள்ளைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருக் கிறார்கள். அம்மாக்களுக்கான எடுபிடி வேலைகளை செய்கிறார்கள். எப்போதாவது புத்தகத்தையும் திறந்து கொள்கிறார்கள். முற்றாக முழு வகுப்புகளும் ஒழுங்காக நடக்கிற போதே பல பிள்ளைகள் கிரகிக்காமல் கோட்டைவிட்டு விடுவதுண்டு. இப்போது வகுப்புகள் இல்லை. எல்லாவற் றுக்கும் மேலாக பாலர் வகுப்புகள் கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. உயர்வகுப்பினருக்கான வகுப்புகளை கவனமெடுத்து செய்கிறார்கள். எமது பாடத்திட்டத்தில் பத்து பதினொன்று பன்னிரண்டு ஆகிய வகுப்பு கள் ஒரளவுக்கு தொடர் வகுப்புகளாகவே இருக்கிறது. இந்த வகுப்புக ளுக்கு முன்னரான வகுப்புகளே இதற்கு அடித்தளம் இட்டுகொடுக்கும் இடமாகும்.

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு படிப்பவர்கள் மட்டும் சென்ற வருடம் கவனிக்கப்பட்டார்கள். அதுவும் தனியாக அத்துடன் அவர்களுக்கான கதவு இப்போதுவரை மூடப்பட்டுவிட்டது. எதாவது செய்து அவர்களது கல்வியை தொடராது போனால் ஒரு கட்டத்தில் நாடே இருளில் முழ்கிவிடலாம். உணவு உடை உறையுள் என்பவற் றுக்கு மேலாக இன்றைய உலகின் பொருளாதாரம் கல்வியில்தான் தங் கியுள்ளது. ஆனால் வீட்டுக்கு வீடு பிள்ளைகளுக்கு ஒன்லைன்கல்வி என்ற பெயரில் கைபேசிகளை பெற்றோரே கொடுக்க, அவர்கள் அதை வைத்துக் கொண்டு விளையாட்டுகளையும் யூ ரியூப்பையும் பார்த்துக் கொண்டு பொழுதைக் கழிக்கின்றனர்.

இப்போது என்னாடாவென்றால் அத்திவாரத்தை போடாமல் கட்டடம் கட்ட முடிவெடுத்தது போல இருக்கிறது. சிறுவர்களுக்கு பாடசாலைகள் இல்லை. அவர்களுக்கு தனியார் கல்வியும் இல்லை. வீட்டிலும் எந்தப் பிள்ளையும் படிக்கப்போவதில்லை. எப்படியாகுமோ இந்த நாடும் கல்வியும்.

ஓர் அருஞ்செயலாகக்கருதப்பட்டு உளவியல் ரீதியான பெரும் பலன்களை அளிக்கக்கூடும்.

இவ்வாறான 'பிரார்த்தனை க்ளப்' முறை சிலநாடுகளிலும் சில நட்பு வட்டங்களிலும் இருந்து வருகின்றன:சாதி, மத, இன பேதங்களுக்கப் பால் இயங்கிவந்த 'குமுதம்'சஞ்சிகை 'பிரார்த்தனை க்ளப்' பற்றி நீங்கள்

நலம்தானா?

முகநூல் பிரார்த்தனை கிளப்

அறிந்திருப்பீர்கள்;நேரில்சென்று பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்யமுடியாதவர்கள் 'குமுதம்'பிரார்த்தனை க்ளப் ஊடாக தூர இடங்க ளிலிருந்தவண்ணம் பிரார்த்தனை செய்து வந்த ஒரு முறைமை அன்று இருந்து வந்தது; இப்போது அது தொடர்கிறதோ தெரியவில்லை.

இன்று காலை நடைபெற்ற ஒரு சம்பவத்தின் மூலம் இது எனது சிந்த னையில்பட்டது;அதாவது நாம் அனைவரும் அறிந்த மூத்த எழுத்தாளரும் சிறந்த விமர்சகருமாகிய கே.எஸ்.சிவகுமாரன் நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டு கொம்பனித்தெருவில் உள்ள 'ரத்னம் தனியார் வைத்திய சாலை' விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார் என்பதை அறிந்து அவரை சுகம் விசாரிக்கச்சென்றேன்; நானும் ஒரு மருத்துவர் என்பதனால் அவரைப்பார்க்க அனுமதி கிடைத்தது;அவர் இப்போது ஒட்சிசன் ஏற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்; என்னை அறிமுகப்படுத்தியதும் அவரை வார்ட்டைவிட்டும் வெளிவராந்தைக்கு தள்ளு வண்டியில் வைத்து அழைத்துவந்து காட்டினார்கள்; அவர் ஆபத் தான நிலையில் இல்லை; என்னைக்கண்டதும் மிக்க மகிழ்ந்து சிரித்துப் பேசினார்; நான் அதிகநேரம் எடுக்கவில்லை;நெருக்கமாக நிற்காது தூரத்தில் நின்று பேசியவனாக கை அசைத்துக் காட்டிவிட்டு உடன் திரும்பி விட்டேன் அவர் முகநூலில் அடிக்கடி அவரது ஆரோக்கிய நிலைபற்றியும்ப திவிட்டு வருவதுடன் பின்னூட்டங்களுமிட்டு வருகிறார்.

எனது மருத்துவ நிலையமும் வதிவிடமும் கொம்பனித்தெருவில் கொரோனா பாதிப்புக்குள்ளான முடக்கநிலையில் மூடிய நிலையில் உள்ள து;எனக்கு முக்கிய தேவைகளுக்கு சென்றுவர அனுமதியுண்டு;

கே.எஸ்.சிவகுமாரன் ஒரு சிறந்த இலக்கிய ஆய்வாளர், சினிமா விமர் சகர், இருமொழிப்புலமையுள்ளவர், பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர், 'நவமணி'பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர், சிறந்த படைப்பு களை பேதம் பாராது தெரிவு செய்து இரசனைக்குறிப்பு விமர்சனம் எழு துபவர், எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த பண்புகள் கொண்டவர், வயது பேதம் காட்டாது பழகுபவர் இவ்வாறான சிறப்பம்சங்கள் கொண்ட மானுட நேயம் உள்ள ஒருவரின் நோய் நொம்பலங்கள் நீங்கி ஆயுள் நீடிக்க பிரார்த்தித்தவனாக இப்பதிவை யிடுகிறேன். மனித நேயமிக்க என் அன்பு உறவுகளே என்னுடைய இந்தப்பதிவு பற்றிய பயனுள்ள கருத்துக் களை பதிவிடும்படி இதயபூர்வமாக வேண்டுகிறேன்.



தாஸிம் அகமது

நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

ஆலாத்திக்காரி

எனது வான வெளியில் இப்போதெல்லாம் கொத்துக் கொத்தாக மேகங்கள் அலைவது கிடையாது; மத்தியான வேளையில் மரங்களில் அமர்ந்து அப்படி எதையோ பேசிக் கொண்டிருக்கும் குரல்களும் மறைந்து போயின; ஒன்றை ஒன்று பேன் பார்த்துத் திரியும் காகங்கள் கூட வருவதில்லை; அண்டங் காக்கை கூட என் குழந்தைகளுக்கு இன்னமும் தெரியாது; நான் கண்டவரை பறவையியலாளர்கள் தங்கள் நாட்குறிப்பேட்டில், 'இன்று காலையில் அழகிய காகம் ஒன்றைக் கண்டேன்.." எனக் குறித்ததே இல்லை; நான் காகத்தைப் போலவே வெறும் மேலோடு பின்னாலே ஓடி ஓடி ஓரக் கண்ணால் கவனித்துப் பார்த்த ஆலாத்தி இன்று என்னை விட்டும் தூரமாகி விட்டது.

தலையில் அரசில வட்டாவைச் சுமந்து கொண்டு ஓட்டமும் நடையுமாகச் செல்லும் செய்னம்பு லாத்தா எங்கு போனாவோ? அவ நல்ல மா நிறம்; குரல் என்ற சுரக் குடுவையிலிருந்து வெளியே றும் குரவை ஒலியுடன் கீழே இறங்கும் ஆலாத்தி வட்டாவின் அடிப்பாகத்தில் சுற்றி வைத்திருக் கும் கூந்தல் மட்டும் சிக்கெடுத்து முக்காடிட வெகு நேரம் பிடிக்கும்; பூமியின் இருட்டே அவளது கூந்தல்தான்; மஞ்சள் பூசிய முகம்; காது, மூக்கு, கழுத்துயென எங்கும் பாசி மணிகள் பவளங்கள் அப்படியொரு முகலட்சணம்; கல்யாண வீடுகளுக்குப் பெண்டுகள் கூட்டிப் போவது, அரசியல் தலைவர்கள், சுன்னத்து (விருத்தேச னம்) மாப்பிள்ளை வருகை என்றால் அவ்விடத்தில் முதல் பெண் அவவே தான்.

ஆலாத்திக் காரியென்று எப்போ தும் உம்மா செய்னம்பு லாத்தாவை அப்படித்தான் அழைப்பது; எங்கள் ஊரின் தெற்கே அமைந்த அவர் வீட்டின் சுற்றுப் புறமெல்லாம் ஜரிகைத் துகள்கள்தான் சுழன்றபடி திரியும்; விறாந்தையின் நடுவில் கம் பீரத்துடனே அன்றைய வைபவத்துக் கான ஆலாத்தி வீற்றிருக்கும்; சென் னம்பு மிகவும் அவசரமாய் தேசியும் சாம்பலும் சேர்த்து மேலுமொரு வட்டாவை மினுக்கிக் கொண்டிருக்க என் உருண்ட விழிகளுடன் நானும் நின்றிருப்பேன் ..

ஆலாத்தி குத்துவதென்பது முதலில் ஒரு மயில் நிற ஓலைப் பெட்டியில் அரிசி மாவு பிடி பிடியாய் இருக்கும்; மாவைப் பிடித்து வைத்துச் சிறு சிறு தூண் கள்போல் அரசிலை தொங்கும் வட் டாவின் மேல் நிறுத்தி வைப்பார் கள்; அது ஓரளவு காய்ந்ததும் பல வர்ணச் சரசரக்கும் ஜரிகைத் தாளில் இலை இலையாய் காய் காயாய் பூப் பூவாய் செய்து, ஈர்க்குகளில் கட்டி, மாத் தூண்களில் குத்தி விடுவார்கள்; பெரும்பாலும் மூன்று நான்கு நிறங்களில் பள பளவென்று அசையும்..

ஒரு ஆலாத்தி வட்டா செய்ய முப்பது ரூபாய்தான்; ஆனாலும் ஒற்றைத் தட்டு, இரட்டைத் தட்டு எனச் செய்பவர்களும் இருக்கின்றார்கள்; உச்சியில் "w" போன்ற ஒரு கொடி இருக்கும்; அதில் உரியவர்கள் தங்கள் பெயரோ அல்லது வேறு படமோ குத்துவதென்றால் செலவு இரண்டு மடங்காகும் ..

சில ஆலாத்திகள் கருமை, கரும் பச்சை வெளிர் பச்சை, வட்டம், நீள் வட்டம், செவ்வகம், சதுரம், அலையாக, நெளி நெளியாக, சுருள் சுருளாகவும் வடிவங்கள் மாறின; இதனைத் தலையில் தூக்கி வைத்ததும் குரவை தொடங்கும்; பின்னால் நீளப்பாட்டில் பெண்கள் நடந்து கொண்டிருப் பார்கள்;

ஒவ்வொரு தெருவாகச் சென்று பல்வேறு சூழல்களில் இருந்து அழைத்து வரப்பட்ட பெண்கள் ஒன்றாகக் கலந்து, உணர்வுகளையும் திறன்களையும் பகிர்ந்து தங்களுக்குச் சமூக ஆதரவு இருக்கி றது என்ற உணர்வுடன் சொல்லும் கூடுகை நிகழ்ச்சி அது.

அந்த நிகழ்வை இன்னும் அழகு படுத்த வசதி படைத்தவர்கள் விழாக்களென்றால் ஆலாத்தி பின்னே வர முன்னேறி முன்னேறி வண்ணார்கள் வெள்ளை விரித்துக் கொண்டு வருவார்கள்; இடையில் மேளம் கொட்டி நாதஸ்வரமும் ஒலிப்பதை வேலி ஓரத்தில் ஒட்டி நின்று ரசித்திருக்கி றேன்..

மேளம் கொட்டுபவரும் நாதஸ்வரம் வாசிப்பவரும் இருவருமாக அந்த விழா நிறைவடைய யார் காரணமாக இருக்கின்றாரோ அவரை நகர விடாமல் மறுப்பார்களாம்; அந்த வேளை அவர்க ளின் தோளிலே வேட்டி சால்வையை அன்பளிப்பாக எறிந்து, நட்டு முட்டுக் காரர்களைச் சந்தோ சப்படுத்துவதில் சம்பந்தப்பட்டோர் குறியாக இருப்பார்கள்..

சில இடங்களில் ஸலாம் வாரிஸ் போட்டு ஆரம்பமாகும் கம்பு சுழற்றல், தீப்பந்தம் விசுக்குதல், சீனடி சிலம்படி உடல் அசை விளையாட்டுகள்; றபான் ஒலியுடன் துவங்கும் "பைத்" என்னும் புகழ் பாடல்கள் நிகழ்வினைப் பொறுத்து அடுத்தடுத்த நாட்களிலும் தொடரும் ..

எனக்கென்றால் ஆலாத்தி சுமக்க அலாதியான விருப்பம்; உம்மாவின் முந்தானையை பிடித்துக் கொண்டு அந்த நாளில் ஆலாத்தி அணி உரிய வீட்டை அடையும் வரை நானும் நடப்பேன் ..

இருந்திருந்து விட்டு எங்கள் வீட்டுக்குக் கதைத்திருக்க வரும் சென்னம்பு லாத்தாவிடம் உம்மா மூலமாக என் ஆசையைச் சொல்ல எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திற்று..

அன்றையப் பயணத்தில் ஆலாத்தி என் தலையில் ஏறியும் நீண்ட நேரம் அந்த அரிய சுகத்தை என்னால் அனுபவிக்க முடியாமல் போயிற்று; பின்னால் குரவை விடுகின்ற பெண்கள் கூட்டம் எனக்குப் பலத்த எதிர்ப்பைக் காட்டியதே அதற்குக் காரணமானது..

நான் சுமக்கின்ற ஆலாத்தி அவர்கள் விடுகின்ற குரவை ஓசைகளுக்கு ஒப்ப அசைய வேண்டு மாம்; ஏழு வயதில் அந்த உடல்மொழிப் பயிற்சி எனக்கு எப்படிக் கை கூடும்?

இதற்கு மாற்றீடாக ஒரு வழியைக் கையாண்டேன்; என்னோடு கூடிக் குலாவும் என் வயதை யொத்தவர்களுடன் இணைந்து, மாப்பிள்ளை ஊர்வலம் ஆலாத்தி என்ற ஒப்பனையில் நேரில் இல்லாதவற்றை இருப்பதாக நினைத்துத் தன் வயமானேன்..

வானத்தின் மேகங்கள் வெள்ளைக் குதிரைகளாய் பாய்ந்து கொண்டிருந்தன; அன்று நான்தான் மாப்பிள்ளை; பழைய வட்டா, ஜருகைத்தாள், முத்தம்மாவின் சோமன் புடவை, எங்கள் ஆலாத்தி எடுப்பில் பெரிதும் உதவின..

மனித உடல்கள் வீடுகளாகவும் இருக்கைகளாகவும் ஏன் நதியாகவும் பாலமாகவும் வீதியாகவும் மலையாகவும் நெருப்பாகவும் தென்றலாகவும் புயலாகவும் காட்சிப்படுத்தும் இன்றைய நவீன காலத்தில், அன்று பரஸ்பரம் ஏற்படும் உறவுப் பரிமாற்றத்தை ஒரு யதார்த்த நிலைக் காட்சியை ஒரு தாக்கத்தை எவ்வாறு வெளிக் கொணர்ந்தோம் என்பதை இன்று நினைக்கையில் ஆச்சரியமாக இருக்கிறது ..

குழந்தைப் பருவத்தில் கூட எங்கள் கற்பனை உலகை எப்படியெல்லாம் தகவமைத்தோம்; ஒரு பொருளை வைத்துக் கொண்டு, அதையே பல்வேறு பொருட்களாக பாவித்து விளையா டினோமே; எதுவும் இல்லாதபோதும் எல்லாம் தம் கண்முன்னே இருக்கின்ற பாவனையில் சமைப்போம், சாப்பிடுவோம், ஊர்வலம் வருவோம், சைக்கிள் விடுவோம், திருமணம் நடத் துவோம், பஸ்ஸில் ஏறுவோம்; புகை வண்டியில் பயணிப்போம் எங்களைச் சுற்றி நடக்கும் அத்தனை நிகழ்வுகளையும் பாவனையால் செய்து மகிழ்வோம்..

இத்தகு நிகழ்வுக்குள் நெஞ்சில் பதிந்து தெரிவதுதான் ஆலாத்தியும் சென்னம்பு லாத்தவும் ..

ஆலாத்தி எடுக்கின்றபோது சில பாடல்களும் ஒலிக்கும்; அதிலுள்ள கேலியும் கிண்டல்களும் பெருமைகளும் கத்திபோல கூர்மையானவை; சரளமாக முகிழ்த்து நின்று பெண்களே இதனை ஓசையெழுப்பிப் பாடுவார்கள் ..

"கலியாணம் கலியாணம் /எங்க கலந்தருக்குக் கலியாணம் /இன்றைக்குக் கலியாணம் /எங்க இளம் கொடிக்குக் கலியாணம் /கலியாணம் என்று சொல்லி நான் /கடவேறிப் பார்க்க வந்தேன்.." என்று தொடங்கிச் சற்று நக்கலாக "மாவடிப் பள்ளியிலே /மாடு மேய்க்கும் எங்க மச்சான் /எட்டுப் பாய் அடுக்கினிலே /எப்படித்தான் தூங்குவாரோ.. /கறிச் சட்டி கறிப் பானை / கழுவத் தெரியாது /எங்க கவனர்ரு வாசலுக்கு / இவராமோ மருமகனார்.. /

உட்கார்ந்து பால் கறக்க / முக்காலி சீதனமாம் / குத்து விளக்காமோ கூடக் கூடச் சீதனங்கள் / ஏரி நிறைந்திருக்கும் /எருமை மாடு சீதனங்கள் /பட்டி நிறைந்திருக்கப் பால்பசுக்கள் சீதனங்கள் / தேனா ஆலாத்தி தெரிந்தா எடுக்கீங்க../ கொட்டுகள நிறுத்துங்க / குரவைகளப் போடுங்க /நாதஸ் வரம் வாசிங்க /நம்ம துரை மச்சானுக்கு ..

அந்நாளில் உம்மா நான் ரசிக்கும் பொருட்களை வாங்கித் தருவதில் மிக ஆர்வமாக இருந்தார்; அதிலொன்று ஆலாத்தி; எனக்கும் அதிர்ச்சியாகவே இருந்தது; அதனைத் தலையிலென்ன; தரை யிலும் அழுத்தி உறவாடிக் கரைந்தே போனேன்; ஆனால் அது ஏற்படுத்திய விம்பம் இன்னும் உடையவே இல்லை.

உள்ளூர் மோட்டார் வாகன பொருத்துகை துறையில் புதிய புரட்சி – செய்யும் SLACMA

2021 பாதீட்டை இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி யாளர் சம்மேளனம் வரவேற்றுள் ளது. உள்நாட்டு வாகன உற்பத்தி யாளர்களுக்கு புதிய புரட்சியாக இது அமைந்திருப்பதாக சம்மே ளனம் தெரிவித்துள்ளது. உள் நாட்டு வாகன உற்பத்தித்துறையில் தொழில் முயற்சியாளர்களை ஊக் குவிக்கும் நோக்கில் அரசாங்கத்தின் தீர்மானத்தை வரவேற்று இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி யாளர் சம்மேளனத்தின் தலைவர் திமந்த ஜயவர்தன கருத்துத் தெரி விக்கையில், 2021 ஆம் ஆண்டு பாதீட்டினூடாக பின்வரும் கொள் கைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப் படும் 30% புத்தம் புதிய உதிரிப்பா கங்களைக் கொண்டு, உள்நாட்டில் வாகன உற்பத்தி. அரசாங்க விலை மனுக் கோரல்களின்போது உள் நாட்டு வாகன தயாரிப்புகளை ஊக்கு விப்பது (உள்நாட்டு தெரிவுகளுக்கு முக்கியத்துவம்) இறக்குமதியாளர் களால் குறைந்த விலையிடுவதால் உள்நாட்டு வாகன உற்பத்தியாளர் களுக்கு காணப்படும் அசாதாரண போட்டிகரத்தன்மையை தவிர்ப் பது.

உள்நாட்டு வாகன உற்பத்தி மற்றும் உதிரிப்பாகங்கள் விநியோ கத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வது தொடர்பாக 10 ஆண்டு கால திட்டத்தை நிதி அமைச்சுக்கு இலங்கை வாகன உதிரிப்பாகங் கள் உற்பத்தியாளர் சம்மேளனம் சமர்ப்பித்து, வளர்ச்சியை ஊக்கு விப்பதற்காக பிராந்தியத்தின் ஏனைய நாடுகளிலிருந்து தரச்சான்றிதழை எதிர் பார்த்துள்ளது.

இக்கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு நிதி அமைச்சர், தொழிற் துறை மற்றும் விநியோகத்தொடர் அமைச்சு, வாகன ஒழுங்குபடுத்தல், பயணிகள் போக்குவரத்து சேவைகள், புகையிரத பெட்டிகள் மற்றும் வாக னங்கள் தொழிற்துறை அமைச்சு, மோட்டார் போக்குவரத்து திணைக் களம், ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மற்றும் முதலீட்டு சபை ஆகியவற் றின் உதவிகள் முக்கியமானதாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு பொருத்தப்பட்ட வாகன உதிரிப்பாகங் களை விநியோகிப்பதற்காக உலகின் ஏழு புகழ்பெற்ற வாகன நிறுவனங்க ளுடன் தற்போது இலங்கை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர் சம் மேளனம் பேச்சுவார்த்தைகளை முன் னெடுத்த வண்ணமுள்ளது.

உலகில் முதன்முதலாக அறிமுகமாகும் காப்புறுதித் திட்டம்

"Janashakthi Covid Guard"

தற்போதைய அவசரகால நிலைமை காரணமாக வாழ்வில் எழுந்துள்ள நிச்சயமற்ற சூழ்நிலை களுக்குப் பதிலளிக்கும் வகையில், ஜனசக்தி இன்சூரன்ஸ் பீஎல்சி நிறு வனம், "ஜனசக்தி கொவிட் கார்ட்" (Janashakthi Covid Guard) காப்புறு தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள் ளது. இந்த சவாலான காலகட்டங் களில் தேசத்தின் பாதுகாப்பையும் காப்பீட்டையும் உறுதி செய்வதற் குத் தக்க தருணத்தில் அறிமுகமாகும் காப்புறுதித் திட்டமாக இது காணப் படுகின்றது.

இந்த புத்தாக்கமான காப்புறுதித் தீர்வு நிதியியல் ரீதியாக ஸ்திரத்தன் மையையும், மேம்பட்ட ஆயுள் காப்பீட்டையும் வழங்குவதுடன், வாடிக்கையாளரின் தேவைகளுக்கு ஏற்றவாறு பிரத்தியேகமாக வடிவ மைக்கப்படக்கூடியது.

"ஜனசக்தி கொவிட் கார்ட்" என்பது சில்வர் (Silver), கோல்ட் (Gold) மற்றும் பிளாட்டினம் (Platinum) போன்ற பல வகைப் பிரிவுகளைக் கொண்டுள்ள ஒரு விரிவான காப்புறுதித் திட்டம் என்பதுடன், தேவைக்கேற்ப பிரத் தியேகமாக வடிவமைத்துக் கொள் ளவும் முடியும். குறிப்பாக இந்த அவசரகால சூழ்நிலையில் மிகவும் தேவையான நிதி உதவியைப் பெற் றுக்கொள்ள உதவும் வகையில் இந்த காப்புறுதித் திட்டம் வடிவ மைக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 அல்லது விபத்து கார ணமாக ஏற்படும் மரணத்திற்கான காப்பீடு, அரசாங்க அங்கீகாரம் பெற்ற இடங்களில் தனிமைப்படுத் தப்படுவதற்காக மருத்துவமனை யில் சேர்க்கப்படுவதால் ஏற்படும் வருமான இழப்பு மற்றும் கொவிட் 19 காரணமாக அவசர சிகிச்சைப் பி ரி வெ ன் றி ல் அ னு ம தி க் க ப் படு வதற்கான காப்பீடுஆகியவை அடங்கலாக பல முக்கி யமான நன்மைகளை இத்திட்டம் கொண்டுள்ளது. மேலும், இந்தத் திட்டமானது பி.சி.ஆர் சோதனைக் கான செலவையும், மிக முக் கியமாக கொவிட்19 தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அதற்கான செலவையும் உள்ளடக் கியுள்ளது.

இந்த தனித்துவமான காப்புறு தித் தீர்வு குறித்து, ஜனசக்தி இன்சூ ரன்ஸ் பீஎல்சி இன் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ரவி லியனகே அவர்கள் கூறுகையில், "இது காலத்தின் தேவை என்பதை நாங்கள் உணர்வு துடன், நோக்கத் தினால் வழிநடாத் தப்படும் காப்புறுதி சேவை வழங்குனர் என் ற வகையில் நமது தேசத் திற்கு உதவ நாங்கள் அர்ப்பணிப்பு டன் உள்ளதாக குறுப்பிடுவோம்.

விளையாட்டுப் பொருட்கள் காட்சியறை கொழும்பு யூனியன் பிளேஸில்

உலகின் மிகப்பாரிய விளையாட் டுப் பொருட்கள் சில்லறை விற்ப னையாளரான Decathlon சமீபத்தில் கொழும்பு நகரத்தின் மையத்தில் தனது 2 ஆவது மிகப் பாரிய விளை யாட்டுப் பொருட்கள் காட்சியறை யைத் திறந்து வைத்துள்ளமையை கொண்டாடியுள்ளதுடன், உடற்ப யிற்சி மற்றும் விளையாட்டு மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறை களைப் பின்பற்றுவதற்கு மக்களை ஊக்குவிப்பதற்கான தனது அர்ப்ப ணிப்பைத் தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்து வருகிறது. இப்புதிய கிளை 500 சதுர மீட்டர் பரப்பள வில் விசாலமான உயர்தர உற்பத்தி வரிசையை வழங்குவதுடன், இலக் கம் 323 யூனியன் பிளேஸ் கொழும்பு 02 என்ற முகவரியில் இக்காட்சி யறை அமைந்துள்ளது.

விளையாட்டு மீதான தனது பேரார் வத்தை வெளிப்படுத்தும் வகையில், தனித்துவமான ஒரு விளையாட்டு காட்சியறை எண்ணக்கருவை ஹுந உயவாடழா வழங்குவதுடன், இது அனைத்து வாடிக்கையாளர்களுக் கும் அவர்களின் தேவைக்கேற்ற பிரத்தியேகமான சேவையுடன் ஒரே கூரையின் கீழ் 50 இற்கும் மேற்பட்ட விளையாட்டுகளுக்கான பொருட்க ளையும், உபகரணங்களையும் வழங் குகிறது. ஆரம்ப நிலை முதல் மேல் நிலை வரை அனைத்து நிலை விளை யாட்டு ஆர்வலர்களுக்கும் தேவை யானவற்றை இக்காட்சியறை வழங் குவதுடன், ஆண்டில் 365 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை வியாபார நடவடிக்கைகளுக் காக இது திறந்திருக்கும்.

இந்த விஸ்தரிப்பு நடவடிக்கை குறித்து, Decathlon Sri Lanka வின் இலங்கைக்கான முகாமையாளரான மெலிஸ் குர்டில்மாஸ் கூறுகையில், "Decathlon Sri Lanka ஏற்கனவே இலங்கையில் ஒரு தசாப்த கால அடிச்சுவட்டைக் கொண்டுள்ள துடன், தனது முக்கிய உற்பத்தி தொழிற்சாலைகளில் ஒன்றையும் இங்கே தளமாகக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் 18 தொழிற்சாலை களில் 15 வழங்குனர்கள் உட்பட 20,000 ஊழியர்களை Decathlon கொண்டுள்ளது. இந்நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் உலகளவில் 2000 இற்கும் மேற்பட்ட கொள்கலன் களை ஏற்றுமதி செய்துள்ளது, என்று குறிப்பிட்டார்.

சுவதேசி கொஹம்ப பேபியின்

'நல்ல பழக்கவழக்கங்கள்' விழிப்புணர்வுப் பிரசாரம்

Swadeshi Industrial Works PLC உலக சிறுவர் தின கொண்டாட்டங் களை முன்னிட்டு, இலங்கையின் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக் கென புதிய சுகாதார விழிப்புணர்வு பிரசாரமொன்றை ஆரம்பித்துள்ளது.

'சுவதேசி கொஹம்ப பேபி நல்ல பழக்கவழக்கங்கள்' (Swadeshi Khomba Baby Hoda Purudu) எனப் பெயரிடப்பட்டுள்ள நல்ல பழக்கங் களை ஊக்குவிக்கும் இந்த விழிப் புணர்வு நிகழ்வில், சபுகஸ்கந்த சோபித்த வித்தியாலயத்தின் (ஆரம் பப் பிரிவு) தரம் 3 ஐச் சேர்ந்த மாண வர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

Swadeshi Industrial Works PLC இன் ஊடகப் பேச்சாளார் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரை யாற்றுகையில், 12 நல்ல பழக்கவழக் கங்கள் தொடர்பில் விளக்கமளித்தி ருந்ததுடன், அதன் பின்னர் யுனிசெப் நிபுணர் (நீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்) நிலுஷா பட்டபெந்தி 12 படிமுறைகளில் கைகளைக் கழு வுதல் தொடர்பில் விளக்கமளித்தி ருந்தார். இதன் போது நல்ல பழக் கவழக்கங்களின் முக்கியத்துவத்தும் தொடர்பில் அரங்கேற்றப்பட்ட நாட கத்துடன் கை கழுவுதல் தொடர்பான பாடலொன்றும் பாடசாலைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை சிறுவர்கள் நன்கு அனுபவித்து மகிழ்ந்தனர். இந் நிகழ்வானது 50 மாணவர்கள் தமது கலைத் திறனை வெளிப்படுத்திய 'நல்ல பழக்கவ ழக்கங்கள்' சித்திர போட்டியுடன் நிறைவு பெற்றது.

'நல்ல பழக்கவழக்கங்கள்' விழிப் புணர்வு பிரசாரத்தின் ஓர் அங்கமாக, சுவதேசி கொஹம்ப பேபி குழுவா னது யுனிசெப் வழிகாட்டுதலின் அடிப்படையில் கை கழுவுவதற் கான சரியான 12 படிமுறைகளைக் காட்சிப்படுத்தும் 12 விழிப்புணர்வு பலகைகளை பாடசாலையில் பொருத்தியதோடு, கை கழுவும் 12 படிமுறைகளைக் காட்டும் கை கழுவும் தொட்டிகளையும் நன்கொ டையாக வழங்கியது.

2019 ஆம் ஆண்டில், Swadeshi நிறுவனம் யுனிசெப் அமைப்பின் BetterParenting.LK உடன் ஒரு புரட் சிகர பங்குடமையில் இணைந்து கொண்டதன் ஊடாக குழந்தை பரா மரிப்பு, அபிவிருத்தி, உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த நிபுணர்களின் தக வல்களை வழங்கும் இந்த ஒன்லைன் தளத்துக்கு சுவதேசி ஆதரவளித்தது.

Sri Lanka Brand Leadership Awards 2020 நிகழ்வில் விருது வென்ற HUTCH

இலங்கையின் மிகவும் விரும் பப்படும் மொபைல் புரோட் பேண்ட் சேவை வழங்குனராகத் திகழும் HUTCH, அண்மையில் நிறைவடைந்த Sri Lanka Brand Leadership Awards 2020 நிகழ் வில் விருதுகளைப் பெற்ற ஒரே தொலைத்தொடர்பாடல் வர்த்த கநாமம் என்ற அரிய அங்கீகார த்தைப் பெற்றது.

ஏனைய பல முன்னணி வர்த் தகநாமங்களும் விருதுகளை வென்ற இந்த நிகழ்வில், ஒரு விருதல்ல, இரு விருதுகளை HUTCH தனதாக்கியது. 'வருடத் துக்கான சிறந்த சந்தைப்படுத் தல் பிரசாரம்' (Best Marketing Campaign of the Year) மற்றும் வருடத்தின் வளர்ந்து வரும் வர்த்தகநாமம் (Emerging Brand of the Year) ஆகிய இரட்டை விருதுகளை Hutch இந்த நிகழ் வில் வென்றது.

HUTCH நிறுவனத்தின் "Be Anywhere" 4G வலையமைப்பு பிரசாரத்திற்கான அங்கீகாரமாக 'வருடத்திற்கான சிறந்த சந் தைப்படுத்தல் பிரசாரம்' என்ற விருதும், 2020 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வர்த்தகநாமத்தின் செயல் திறனுக்கான அங்கீகாரமாக 'வருடத்தின் வளர்ந்து வரும் வர்த்தகநாமம்' என்ற விருதும் வழங்கப்பட்டிருந்தன.

HUTCH இன் பிரதான சந் தைப்படுத்தல் அதிகாரி, ரம்ஸீனா மொர்செத் லாய், இது தொடர்பில் கருத்து தெரிவிக் கையில், "உலகின் மிகவும் விரும்பப்படும் விருது நிகழ் வொன்றிலிருந்துஇரண்டுபாரிய விருதுகளைப் பெற்றதில் நாங்கள் உண்மையிலேயே கௌரவமடைவதுடன், பெரு மைப்படுகின்றோம். எங்கள் முழு அணியின் அர்ப்பணிப்பும் இந்த விருதுகளை எங்களுக்கு பெற்றுத் தந்துள்ளன. இந்த விரு துகள் முன்னோக்கிச் செல்ல வும், கட்டுப்படியாகும் மற்றும் தனித்துவமான மொபைல் தீர் வுகளுடன் தேசத்துக்கு சேவை செய்யவும் எங்களுக்கு ஊக்கம ளிக்கின்றன," என்றார்.

"Sri Lanka Brand Leadership" என்பது சந்தைப்படுத்தல் துறை யினரின் சிறந்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் முதற்தர தளமான CMO Asiaவினால் ஏற்பாடு செய் யப்படும் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வாகும். என மேலும் குறிப்பிட்டார்.

'அனைவருக்கும் வங்கி' என்ற தனிச்சிறப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள DFCC வங்கி

ஆசியா மற்றும் பசுபிக்கில் உள்ள அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் சங் கத்தின் வருடாந்த விருதுகள் வழங் கும் நிகழ்வில் இரண்டு மதிப்புமிக்க விருதுகளைப் பெற்று இலங்கையின் முதன்மையான வணிக வங்கியான DFCC வங்கி அனைவருக்கும் வங்கி என்ற தனது தொடர்ச்சியான தனிச்சி றப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள் ளது. தற்போதைய தொற்றுநோய் நெருக்கடி நிலைமை காரணமாக மெய்நிகர் முறையில் இடம்பெற்ற 43ஆவது ADFIAP வருடாந்த பொதுக்கூட்டத்தில் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டுக்கான இந்நி

கழ்வில் DFCC வங்கியானது மிகச் சிறந்த அபிவிருத்திச் செயற்திட்ட விருதுகளின் கீழ் இரண்டு சிறப்பு பாராட்டு விருதுகளைப் பெற்றுள் ளது. முதலாவதாக, மனித மூலதன மேம்பாட்டுப் பிரிவின் கீழ் Together We Grow"என்ற செயற்திட்டத்திற் காகவும், மற்றும் வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுப் பிரிவின் கீழ் "Samata English" என்ற செயற்திட் டத்திற்காகவும் இவ்விருதுகள் வழங் கப்பட்டுள்ளன.

அனைவருக்கும் ஆங்கிலம் (Samata English) என்ற முன்னெடுப் பானது 2017 ஆம் ஆண்டில் DFCC வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு முக்கியமான செயற்திட் டமாகும். உதவி தேவைப்ப டும் இளைஞர், யுவதிகளை இனங்கண்டு, அவர்களின் ஆங்கில மொழித்திறன்களை மேம்படுத்துவதற்காக இச்செ யற்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில் செயன் முறை செயற்பாடுகள், விளக் கப் படைப்பாக்க காட்சிகள், திறன் மேம்பாடு மற்றும் இலவச போதனா பயிற்சி கள் ஆகியவற்றை இத்திட் டம் உள்ளடக்கியுள்ளது. கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்க ளில் ஒரு முன்னோடிச் செயற்திட் டமாக ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 2018 ஆம் ஆண்டில் குருணாகல், கண்டி மற்றும் காலி மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அதேசமயம் 2019 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் யாழ்ப்பாணம், பொலன்னறுவை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை மாவட்டங்களுக் கும் விஸ்தரிக்கப்பட்டது.

ஹொரணை யூனிலீவர் ஸ்ரீலங்கா தொழிற்சாலைக்கு தர அங்கீகாரம்

இலங்கையில் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் உற்பத்திப் பொருட்களின் மிகப் பாரிய நிறுவனங்களில் ஒன்றான யூனிலீவர் ஸ்ரீ லங்கா, ஹொறணையிலுள்ள தனது உற்பத்தித் தொழிற்சாலைக்கு இலங்கை கட்டளைகள் நிறு வனத்திடமிருந்து (Sri Lanka Standards Institute SLSI) மதிப்புமிக்க ISO 9001 தரச்சான்று அங்கீகா ரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. இது சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கான (Good Manufacturing Practices GMP) தரச்சான்று அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமைக்கு மத்தியில், அதற்குச் சமாந்தரமாக கிடைக்கப்பெற்றுள்ள மற் றுமொரு தரச்சான்று அங்கீகாரமாக அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் பெறுபேறாக, இந்த தொழிற்சாலையில் தயா ரிக்கப்படுகின்ற சன்லைட், லைஃப்போய், சிக்னல், லக்ஸ், பெயர்ஸ் பேபி, சன் சில்க், வொண்டர்லைட், லீவர் ஆயுஷ், க்ளோஸ் அப், டவ், க்லியர், க்ளோ அன்ட் லவ்லி, பொண்ட்ஸ் மற்றும் வாஸ்லீன் போன்ற 14 யூனி லீவர் உற்பத்திகளை உள்ள டக்கிய 256 தயாரிப்புகள் இப்போது ISO 9001 தரச்சான்று அங்கீகாரத்துடன் உற்பத்தி செய்யப் படுகின்றன.

ISO 9001 என்பது தரத் தைப் பேணுவதற்கான ஒரு சான்று அங்கீகாரமாகக் காணப்படும் அதே சமயம், GMP தரச்சான்று தேவையான தராதரங்களுக்கு அமைவாக தயாரிப்புகள் தொடர்ச்சி யாக உற்பத்தி செய்யப்ப டுவதை உறுதி செய்கிறது. அத்துடன், தேவையான கட்டுப்பாடுகள் பின்பற்றப் பப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, உற்பத்திகளையும், சேவைகளையும் நிறுவனம் வழங்குவதையும் இது உறுதிப்படுத்துகிறது.



மேஷம்

மேஷம் (அஸ்வனி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

உங்கள் இராசிநாதன் செவ்வாய் இதுவரை மீன இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரித்து வந்தார். நவம்பர் 24 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகின்றார். இராசிநாதன் பலம்பெறும் இந்நேரம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் .

இணைந்து செயற்பட சகோதரர்கள் முன்வருவார்கள். சொத்துக்கள் வாங்குவது அல்லது விற்பதில் இருந்த தடைகள் நீங்கும். மேலும் துணிந்து சில முடிவுகளை எடுத்து தொழில்வளத்தை மேம்படுத்துவீர்கள். 7ஆம் இடத்தில் சஞ்சரித்துவந்த புதன் நவம்பர் 25ஆம் திகதி 8 ஆம் இடத்திற்கு வருகின்றார். புதனால் நிறைந்த தனலாபம் ஏற்படும். அதாவது மறைந்த புதன் நிறைந்த இலாபத்தை தரும். உங்கள் இராசிக்கு 3 , 6 ஆம் இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 6க்கு அதிபதி 8க்கு வரும்போது இல்லம் தேடி நல்ல மாற்றங்கள் வரும்.

ரிஷபம்

இடபம் (கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)

நவம்பர் 24 ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். விரயாதிபதி இலாபஸ்தானத்தில் பலம்பெறும்போது விரயத்திற்கேற்ற வரவு இருக்கும். திருமண முயற்சிகள் கைக்கூடும். உத்தியோகத்தில் நீண்டதூர பயணங்களும் சம்பள உயர்வும் ஏற்படும். நவம்பர் 25 ஆம் திகதி புதன் விருச்சிக இராசிக்கு செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சப்தமஸ்தானத்தில் 7ஆம் இடத்தில் புதன் சஞ்சரிக்கின்றார்.

குடும்பத்தில் நல்ல நிகழ்வுகள் இடம்பெறும். திருமணம் போன்ற சுபகாரிய பேச்சுகள் திடீரென உருவாகி இல்லத்தில் மங்கள ஓசை கேட்க வழிபிறக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு தொடர்பாக எடுத்த முயற்சிகளும் தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளும் கைக்கூடும். மேலும் வெளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு திரும்ப முடியாதவர்கள் சொந்த ஊருக்கு வந்துசேரலாம்.

மிதுனம்

மிதுனம் (மிருக சீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம்; பாதம்)

நவம்பர் 24 ஆம்; திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 6 , 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் வக்கிர நிவர்த்தியாகும்போது நன்மைகள் அதிகம் இடம்பெறும். எதிர்பார்த்த இலாபம் தொழிலில் கிடைக்கும். மூத்த சகோதரர்களுடன் இருந்த பகை அகலும். தொழில்வளம் சிறப்பாக இருக்கும். நவம்பர் 25ஆம் திகதி புதன் விருச்சிக இராசிக்கு வருகின்றார்.

உங்கள் இராசிநாதன் புதன் 6ஆம் இடத்திற்கு வரும்போது எதிரிகள் பலம் குறையும். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள். உத்தியோகம் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றியடைவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சுகஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

கடகம்

கடகம்(புனர்பூசம் 4ஆம் பாதம் பூசம், ஆயிலியம்)

நவம்பர் 24ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்களுக்கு யோகமான நேரம். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் கருத்துக்கு செவிசாய்ப்பார்கள். விரோதித்தவர்கள் கூட உங்களுடன் ஒத்துவருவர். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வரலாம். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3 , 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 5ஆம் இடத்தில் பஞ்சமஸ்தானத்திற்கு வரும்போது சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாக அமையும்.

புதிய ஆதித்ய யோகம் ஏற்படும். பிள்ளைகளின் மேற் படிப்புக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றியடைவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள்.

சிம்மம்

சிம்மம்(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

நவம்பர் 24ஆம் திகதி மீனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். இந்நேரத்தில் சற்று விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது. அஷ்டமத்தில் செவ்வாய் பலம்பெறும். இந்நேரத்தில் ஆரோக்கிய தொல்லைகள் ஏற்படலாம். அதிக முயற்சிகள் எடுத்தாலும் கூட சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம். முறையான வழிபாடுகளும் பரிகாரங்களும் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார்.

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான தனலாபாதிபதியான புதன் சுகஸ்தானத்திற்கு வரும் நேரம் நல்லநேரம் தான்.

எதிர்காலம் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. சம்பள உயர்வும் பதவி உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பழைய வாகனங்களை கொடுத்து புதிய வாகனங்கள் வாங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு.

கன்னி

கன்னி(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)

உங்கள் இராசிக்கு 3ஆம், 8 ஆம் இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் இப்பொழுது மீன இராசியில் குரு வீட்டில் வக்கிரம் பெற்று சஞ்சாரம் செய்கின்றார்.

நீங்கள் எதிர்பார்க்கும் நல்ல பலன்களை இது கொடுக்காது. செவ்வாய் உங்கள் இராசிக்கு நேர்பார்வையில் இருப்பதால் உங்களுக்கு கோபம் அதிகம் வரலாம். உணர்ச்சிவசப்பட்டு எதையாவது பேசி விட்டு உறவினர்களின் பகையைத் தேடிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படலாம். மேலும் கட்டிய வீட்டுக்கு போய்ச் சேரவில்லையே என்ற மனோநிலையும் உங்களுக்கு இருக்கும்.

சில சொத்துக்கள் விற்கப்படாதிருப்பதையிட்டு மனதில் கவலை இருக்கும். அயலவர்களுடனும் உறவினர்களுடனும் அனுசரித்து செல்லுங்கள்.

துலாம்

துலாம் (சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மாத தொடக்கத்தில் வக்கிரம் பெற்று மீன இராசியில் சஞ்சரிக்கின்றார். எனவே, உங்கள் திறமைக்கேற்ற பலன் கிடைக்காது. சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு எதிராக செயற்படுவர். கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படலாம். உங்களுக்கோ உங்களை சார்ந்தவருக்கோ மருத்துவ செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்லும்போது முழுக்கவனம் தேவை. மேலும் உங்கள் இராசிநாதன் புதன் நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து புது ஆதித்ய யோகத்தை ஏற்படுத்துகின்றார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைக்கூடும். பட்டமேற்படிப்புக்கு இடம் கிடைக்கவில்லையென கவலைப்பட்டவர்களுக்கும் வெளிநாட்டில் சென்று படிக்கவேண்டுமென நினைத்தவர்களுக்கும் நல்ல தகவல் வந்துசேரும்.

விருச்சிகம்

விருச்சிகம் (விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

நவம்பர் 24ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் வக்கிர நிவர்த்தியாவது உங்களுக்கு மிகுந்த நன்மைகளை கொடுக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். குடியிருந்த வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். திருமண முயற்சியில் இருந்த தடைகள் அகலும். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இவர் இப்பொழுது தனஸ்தானத்திற்கு வருகின்றார். விரயாதிபதியான புதன் தனஸ்தானத்திற்கு வந்துசேரும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ப பணவரவு கிடைத்துக் கொண்டேயிருக்கும். வீடு மாற்றமும் உத்தியோக மாற்றமும் விரும்பியபடி அமையும். வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்திகளும் வந்துசேரும்.

தனுசு

தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

நவம்பர் 24 ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். புத்திரஸ்தானாதிபதி செவ்வாய் பலம்பெறும் இந்நேரத்தில் பிள்ளைகளால் பெருமைசேரும். தொழில்வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உடன்பிறந்தவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு அனுகூலமான தகவல் வந்துசேரும். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் செல்கின்றார். இதன்மூலம் மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கள நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். தொழில்புரியும் இடத்தில் இருப்பவர்பளால் பிரச்சினைகள் ஏற்படலாம். இட மாற்றம், ஊர்மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். பயணத்தால் விரயம் உண்டு.

மகரம்

மகரம் (உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1 ஆம் 2ஆம் பாதம்)

நவம்பர் 24 ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகும் இந்நேரத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். வாடகை கட்டிடத்தில் நடத்திய தொழிலை சொந்த கட்டிடத்துக்கு மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். அரச வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல செய்தி வந்துசேரும். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது ஜீவனஸ்தானம் பலப்படும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட மீண்டும் பணியில் சேரும் வாய்ப்புவரும். வெளிநாட்டு முயற்சிகள் கைக்கூடாவிட்டாலும் வெளி இடங்களிலிருந்து அழைப்புகள் அல்லது உதவிகள் ஏதோவொரு விதத்தில் வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த பிரச்சினை அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படலாம்.

கும்பம்

கும்பம் (அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

நவம்பர் 24 ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலத்தில் இடம், பூமி ஆதாரம் கிடைக்கும். உடன்பிறப்புகளில் உடல்நலம் சீராகும். வழக்குகள் சாதகமாக அமையும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாக்குஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் கோபம் சற்று அதிகரிக்கலாம். கோபத்தை குறைத்துக்கொள்வது நல்லது. நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் சஞ்சாரம் செய்கின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டம அதிபதியானவர் புதன். அவர் தொழில்ஸ்தானத்திற்கு வரும்போது பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைகள் அகலும். தடைப்பட்ட கட்டுமாணப் பணிகள் தானாக நடைபெறும். அரசியல், பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் வந்துசேரும்.

மீனம்

மீனம் (புரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

நவம்பர் 24ஆம் திகதி மீன இராசியான உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். தொழில் ரீதியாக அரச வழியில் அனுகூலம் கிடைக்கும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாங்கிய சொத்தை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு தொழிலை விரிவுசெய்வீர்கள். நவம்பர் 25ஆம் திகதி விருச்சிக இராசியில் உள்ள புதன் உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். புதன் அதன் 9ஆம் இடத்துக்கு வரும்நேரம் நல்ல நேரமாகும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். குடும்பத்தினருடன் ஏற்பட்ட வாக்குவாதங்கள் அகலும்.

சிறந்த தொழில்புரியும் 40 இடங்களுக்கான பட்டியலில் எயார்டெல் லங்கா

இலங்கையிலுள்ள இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்துள்ள தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான எயார்டெல் லங்காவை Great Place to Work நிறுவனம் நான்காவது தடவையாக இலங்கையில் சிறந்த தொழில்புரியும் 40 இடங்களுக்குள் பட்டியலிட்டுள்ளது.

இந்த மதிப்பீடு குறித்து கருத்து தெரிவித்த எயார்டெல் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான அஷீஷ் சந்திரா, 'இறுதியில், கலாச்சாரத்திற்கு உயிர் கொடுப்பதும் அந்த கலாச்சார பெருமைக்கு வழி வகுப்பதும் மக்கள் தான். ஆகவே, எமது இந்த தொடர்ச்சியான வெற்றிக்கு காரணம், எமது ஆர்வமுள்ள வலுவான அணிகளின் தயாரிப்புக்கள், அவர்களது செயற்பாடுகள், கூட்டிணைந்து அவர்கள் உருவாக்கும் தொடர்புகளே ஆகும்.' என தெரிவித்தார்.

விசேடமாக கொவிட்19 தொற்று நோய் பரவும் அபாயத்துடன், வர்த்தக ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்திடமுள்ள தொழில்நுட்ப மற்றும் ஒழுங்கமைப்புக்களில் உள்ள துரிதத் தன்மையை பயன்படுத்தி 'புதிய இயல்பு' நிலைமைக்கு ஏற்ற விதத்தில் நடவடிக்கைகளை மீளமைத்துக் கொள்ளும் சவால்களை ஊழியர்கள் பொறுப்பேற்பதனால் எயார்டெல்லின் நடவடிக்கைகள் துரிதமாகவுள்ளது. இந்த காலத்திற்கு ஏற்றபடி மாற்றமடைந்ததனால் எவ்வித தடைகளும் இன்றி வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் முக்கிய வேலையை செய்து முடித்தது மட்டுமன்றி தொழில்புரியும் இடங்களில் பல்வேறு தீர்வுகளுக்காகவும் வசதிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒன்லைன் தளங்களை நோக்கிய உள்அலுவலக தொடர்புகளின் மாற்றம் மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் மனிதவள தீர்வுகள் ஆகியவை இதில் அடங்கும். ஆட்சேர்ப்பு முதல் டிஜிட்டல் onbording, வேலை ஈடுபாடு, தகவல் தொடர்பு, திறன் மேம்பாட்டுத் திட்;டங்கள் வரை எயார்டெல் அதன் தொழில் நுட்ப மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை எவ்வித இடையூறும் இல்லாமல் மற்றும் திறமையான பணி அனுபவத்தை எளிதாக்குகிறது.

அத்துடன், Great Place to Work மதிப்பீட்டின் மூலம் எயார்டெல் நிறுவனம் ஒரு சிறந்த இடத்தில் பட்டியலிடப்பட்டதன் மூலம் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தி படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கங்களுக்கு ஊக்கம் அளித்து அதனை மேம்படுத்த ஏற்ற தொழில்புரியும் சூழலை உருவாக்குவதற்கு அந்த நிறுவனம் காட்டும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு இதன் மூலம் பிரதிபலிக்கிறது.

ஆண்டின் 'மிகவும் ஈடுபாடு கொண்ட பங்காளியாக' கொமர்ஷல் வங்கி தெரிவு

டராஸின் 2020ம் ஆண்டுக்கான விற்பனையாளர் உச்சி மாநாட்டில் இந்த ஆண்டின் 'மிகவும் ஈடுபாடு கொண்ட பங்காளியாக' கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. டராஸ் அலிபபா குழுமத்தின் பிரதான இணைய வழி விற்பனைத் தளமாகும்.

ஒரே கார்ட் தளத்தின் மூலம் அதிகளவான கொடுப்பனவுகளைக் கையாண்ட செயற்பாட்டு முறைக்காகவும் அத்தோடு அதிகளவான டெபிட் மற்றும் கிரடிட் கார்ட் வைப்பாளர்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளமைக்காகவும் வங்கிக்கான இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தனது கார்ட் பணப்பரிமாற்றங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக டராஸ் உடனான கொமர்ஷல் வங்கியின் கார்ட் ஊக்குவிப்பு மற்றும் அலிபபா குழுமத்தின் இணை நிறுவனமான சிங்கப்பூரின் ஆன்ட் பினான்ஸியல் நிறுவனத்துடனான ஒத்துழைப்பு என்பன வங்கி இந்த இலக்கை எட்டி தனக்கான சிறப்பு விருதை பெற்றுக் கொள்ள காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு பிரசார அடிப்படையிலும், தவணைக்கட்டண முறைகளை தினசரி அடிப்படையில் வழங்கும் வகையிலும், இணைய வழி கொள்வனவாளர்கள் தமது செயற்பாட்டை அதிகரிக்கும் வகையிலான ஊக்குவிப்பாக கொடுப்பனவு கழிவுகளை வழங்கும் வகையிலும் வங்கி டராஸ் உடன் பங்குடைமையில் ஈடுபட்டது.

வர்த்தக மஞ்சரி

OPPO இரசிகர் விழா: விடுமுறை கால தள்ளுபடிகள்

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் புதுமையான கையடக்கத் தொலைபேசி தரக்குறியீடான OPPO, எதிர்வரும் விடுமுறை காலத்துடன் இணைந்ததாக, தங்களது பருவகால சலுகையான 'O Fans Festival' திட்டத்தை அறிவித்துள்ளது. இதில் பல்வேறு தயாரிப்புகளுக்கு அற்புதமான தள்ளுபடிகள் மற்றும் சலுகைகளை இந்த டிசம்பர் மாதத்தில் வழங்குகிறது.

இந்நிகழ்வில் அற்புதமான சலுகைகள் மற்றும் பாடல், நடனம் மற்றும் பல அம்சங்களைக் கொண்ட மாலைப் பொழுதாக 'O Fans Night' இடம்பெறவுள்ளது. இது தரக் குறியீட்டின் தனித்துவமான முன்மொழிவுக்கு ஏற்ப இளம் தலைமுறையினரால் மறுக்கமுடியாத விருப்பத்திற்குரிய அம்சமாகவும், பிரபலமான கலைஞர்களினாலும் சிறப்பாக அமையவுள்ளது.

O Fans Fest இன் போது, OPPO F17 இன் ஒவ்வொரு கொள்வனவின்போதும், OPPO Enco Free W11 ஹெட்ஃபோன்களுக்கு 50% வரை விலைத் தள்ளுபடி வழங்கப்படவுள்ளது..

இன்றுவரை தரக்குறியீட்டின் மிகவும் ஸ்டைலான மாடல்களில் ஒன்றான OPPO F17, இந்த ஆண்டின் பிற்பகுதியில் சமூக ஊடகத்தின் ஊடாக ஆரம் பிக்கப்பட்டது. இக்கைடயக்கத் தொலைபேசியானது, இலகுரகமானதும் தோல் போன்ற வெளிப்புற அமைப்பையும் கொண்டதாக அமைந்துள்ளது. அது தவிர 30W VOOC Flash Charge, சமூக ஊடக ஆர்வலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் சிறந்த செயல்பாட்டிற்கான Hyper Boost 2.1, கேமிங்கின் போதான பிரச்சினைகளின்றி இயங்கும் வகையில் அமைந்துள்ளது.

W11 Enco Free ஹெட்போன் ஆனது, அறிமுகப்படுத்தப்பட்ட திலிருந்து இரசிகர்களின் விருப்பமாக அமைந்துள்ளதோடு, உயர் தரமான, இணையற்ற ஒலி வெளியீட்டை வழங்கும் அம்சங்களின் வகைப்படுத்தலைக் கொண்டுள்ளது. இது தொழில்நுட்பம் மற்றும் அழகியல் ஆகியவற்றின் தடையற்ற கலவையை வழங்குகிறது.

அது தவிர சமிக்ஞை குறுக்கீட்டைத் தடுக்கும் வகையிலான Bluetooth 5.0 சிப், 8mm dynamic drivers, நேர்த்தியான காது இணைப்பு வடிவமைப்பு, தூசி மற்றும் தண்ணீருக்கு எதிர்ப்புத் தன்மை ஆகிய அம்சங்கள் அடங்குகின்றன..

பாடசாலைகளை ஆரம்பித்தல்: அவசரம் ஏன்?

பாடசாலை கொத்தணியை உருவாக்காமல் இருப்பதே உத்தமம்

எஸ்.எஸ். தவபாலன்

இலங்கையில் பாடசாலை முறை ஆரம்பிக்கப் பட்ட பின்னர் ஒரு வருடத்தில் மிகக் குறைவான பாடசாலை தினங்களைக் கொண்ட வருடமாக இவ் வருடம் கருதப்படுகிறது. இது பாடசாலை மாணவர் களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு புது அனுபவம்.

கொரோனா தாக்கம் பற்றிய புதிய பள்ளி விபரப் படி உலக நாடுகளில் ஒட்டுமொத்தமாக 55.6 மில் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் 35.8 மில் எண்ணிக்கையிலானவர்கள் இந்த நோயிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் 1.34மில் எண்ணிக்கையிலானோர் உயிரி ழந்திருக்கிறார்கள். நமது நாட்டைப் பொறுத்தவரையில் 19771 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் 13590 பேர் இதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள் அதே நேரத்தில் 110 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இற்றைவரை 83 பேர் இதனால் பாதிக்கப்பட்டி ருக்கிறார்கள். 50 பேர் குணமடைந்திருக்கிறார்கள். இறப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை. இங்கு கொரோ னாவுக்கென சிகிச்சையளிப்பதற்காக இரண்டு வைத் தியசாலைகள் இப்போது இயங்கி வருகின்றன அவற்றில் ஒன்று கறடியனாற்றிலும் மற்றையது காத் தான்குடியிலும் செயற்படுகின்றன. இவற்றில் கறடி யனாற்றில் 8 பேரும் காத்தான்குடியில் 87பேரும் தங் கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவருமே வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இப்போது பெரியகல்லாற்று வைத்தியசாலை கொரோனா வைத்தியசாலையாக மாற்றப்படுவதற் கான செயற்பாடுகள் நடைபெறுவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். பாடசாலைச் சமூகம் என்பது ஒரு விசாலமான எண் ணிக்கையைக் கொண்டது. அது பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அதில் பிரதானமாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்வி யியலாளர்கள், பாடசாலைகளின் உத்தியோகத்தர் கள் என்போர் அடங்குவர். இது சிறு தொகையல்ல. விசாலமான எண்ணிக்கையைக் கொண்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 361 அரச பாடசாலைகள் உள்ளன. அதில் கற்கைகளுக்காக 1,29,413 மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கி றார்கள். இவர்களுக்கு கல்வி புகட்டும் செயற் பாட்டில் 8000 பேர் அதிபர்கள் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். இவற்றைத்தவிர 13 தேசிய பாட சாலைகள் செயற்படுகின்றன. இப்பாடசாலைகளில் 6ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் ஆண்டுவரை யும் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளை மாத்திரமே இப்போதைக்கு திறப்பதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது. இது ஒரு பரீட்சார்த்தமான நடவடிக் கையாக இருக்கலாம் அதில் தவறில்லை. இச் செயற் பாட்டினூடாக ஏற்படும் விளைவுகளை அரசு எடை போட்டு பார்க்கப் போகிறது என்று ஊகிக்க முடிகிறது. அரசு விதித்திருக்கும் கொரோனாவுக்கான சுகாதார விதிகள் கடுமையானவை. அதை மீறுவோருக்கு எதிராக நீதி மன்றத்தில் சுகாதார அதிகாரிகளும் முப்படை யினரும் பொலிஸாரும் வழக்குத் தாக்கல் செய்யலாம். அவற்றில் பிரதானமானது சமூக இடைவெளி, கை கழுவுதல் முகக்கவசம் அணிதல் என்பன. ஏனெனில் கொரோனா வைரஸ் பிரதானமாக தொடுகை மூலமும் மூக்கிலிருந்து வெளியேறும் "மூக்குச் சிந்துத லிலும்", வாயிலிருந்து வெளியேறும் உமிழ்நீரி லும் பரவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது பாடசாலை மாணவர்கள் இவற்றை கடைப்பிடிப்பார்களா என்ற சந்தேகம் மேலிடவே செய்கிறது. விசாலமான எண் ணிக்கையைக் கொண்ட பாடசாலைச் சமூகத்தில் எவ்வாறு மாணவர்களை காப்பாற்றிக் கொள்வது என்று மட்டக்களப்பு வாழ் பாடசாலை மாணவர்க ளின் பெற்றோர்கள் வாய்விட்டு தமது மனப்பயத்தை தெரிவிக்கிறார்கள். பெற்று வளர்ப்பவர்களுக்கல்லவா பிள்ளைகளின் அருமை தெரியும். ஒரு மாணவனுக்கு தொற்று ஏற்பட்டாலே அப்பாடசாலைக்கான கொரோனா கொத்தணி உருவாகிவிடும். இதற்குப் பின்னால் தனி மைப்படுத்தல் பி.சி.ஆர். பரிசோதனை செய்தல் என்று அதன் செயற்பாடுகள் நீண்டு செல்லும். இத்த கைய செயற்பாடுகளை கையிலெடுத்துச் செய்வதற்கு எத்தனை சுகாதாரப் பணியாளர்கள் தேவைப்படுப வர்; அவற்றைச் செய்து முடிப்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருக்கின்றனவா? பணிப்பாளர் அவற்றை பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சிடம் அனுமதி கேட்டுள்ளாரா? வற்புறுத்தியிருக்கிறாரா? மட் டக்களப்பு வைத்தியசாலையும் அதன் ஊழியர்களும் துடிப்பாக இயங்குவார்களா? என்ற கேள்விகள் எழுகின் றன. சில தினங்களுக்கு முன்பு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஐ.சி.யூவில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி ஒருத்தி இறந்துவிட்டாள். அச் சிறுமியின் இறப் பக்கான காரணங்கள் பற்றியும் எவரது கவலையீ னத்தால் இம் மரணம் ஏற்பட்டிருக்கிறது என்ப தையும் கண்டறிய விசாரணைகள் நடக்கின்றன. இக்காலப்பகுதியில் கதிரியக்க தொழில்நுட்பவியல் பிரிவினர் பணிப்பக பிரிவில் இருந்ததாக அறிய முடிகி றது. இதிலிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசா லையின் தற்போதைய நிலையை ஊகித்துப்பார்க்கலாம். கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தப்பி ஓடுகிறார்கள், கொரோனாவை ஒரு நோய்த் தொற்றா கப் பார்க்காமல் ஏதோ, ஒரு அசிங்கமான பேய் பிடித்த திருப்பதாக எண்ணி மனிதர்கள் மருளும் நிலையில் தொற்று அபாயம் இருக்கக் கூடிய இடங்களில் பாட சாலைகளைத் திறப்பது சரிதானா? பிள்ளையைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர். துரதிர்ஷ் டமாக ஒரு பாடசாலை மாணவனுக்கோ அல்லது மாணவிக்கோ தொற்று ஏற்பட்டு எதிர்பாராத துக்க சம்பவம் ஏற்பட்டால் அது எங்கு கொண்டு போய்விடும் என்பதையும் முன்கூட்டியே எண்ணிப்பார்க்க வேண்டும். சில கல்வியாளர்கள் கொரோனா இன்றோ, நாளையோ நின்றுவிடப் போவதில்லை அதற்காக பாடசாலை மாணவர்களின் கல்வியை பின்போ டுவதா என்கிறார்கள். நாங்கள் இத்தனைக்கும் மத்தியிலும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை யையும், க.பொ.த உயர்தர பரீட்சையையும் நடாத்தி முடித்திருக்கிறோம் என்று வீறாப்பு பேசுகிறார்கள். பாடசாலைகளை திறந்தார்களா? ஆயிரக்கணக்கான மாணவர்களை ஒரே வளாகத்தினுள் சுதந்திரமாக நடமாட விட்டார்களா? அப்படி விட்டால்தான் அதன் எதிரொலியை அறிய முடியும்.

மாணவர்களின் கல்வி பாழாகிறது என்பது உண்மை. இந்த ஆண்டு மொத்தமும் வீணாகிவிட்டது. தடுப்பூசி பெப்ரவரியாகும் போது வந்து விடலாம் என்கிறார்கள். அதுவரை கொஞ்சம் பொறுத்தால் என்ன என்பது பெற் றோரின் கேள்வி. ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுத்தால் என்ன என்பார்கள். தினசரி சராசரியாக ஐந்நூறு தொற்றாளர் கள் கண்டுபிடிக்கப்படும், நாட்டில் இலட்சக்கணக்கான மாணவர்களையும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களையும் கட்டடங்களுக்குள் ஒன்று கூடச் செய்யலாமா என்பதை பள்ளிக் கல்வித் துறையினர் ஆழமாக சிந்திக்க வேண்டும். மட்டக்களப்பு கல்விப் பிரிவையும் சேர்த்தே சொல்கிறோம்.



சிறையில் எழுத்தாளராகி சாகித்திய விருதுபெற்ற அரசியல் கைதி !

அரசியல் கைதியாக கடந்த 12 வருடங்களுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் மொரட்டுவ பல்கலைகழகத்தின் பொறியியல் பட்டதாரியான பொறி யியலாளர் சிவ. ஆரூரன் . B.Sc.Eng.Hons (Moratuwa) சிறைக்குள் இருந்து நாவல்களை எழுதி வருகின்றார்.



சாகித்திய விருது பெற்ற நாவல் ஆங்கில நாவல் உட்பட நாவல்களை எழுதியுள்ளார். தற்போது துரியோத னன் துயரம் எனும் நாவலை எழுதி முடித்துள்ளார்.

ஆரூரன், வடமராட்சியை சேர்ந்த ஆ. சிவலிங்கம் தம் பதியினருக்கு மகனான 1980ஆம் ஆண்டு தை மாதம் 05ஆம் திகதி பிறந்தார்.

சிறுவயதிலையே நல்ல குணங்களுடனும், சகோத ரர்கள் மேல் அன்பும் பாசமும் கொண்டவர். ஆன்மீகத் தின் மீதும் பற்றுக்கொண்டவர். சிறுவயதில் கல்வியி லும் சிறந்து விளங்கினார். அப்போதே அவரது பேனார், அவரது தந்தையிடம் எதிர்காலத்தில் இவனொரு சிறந்த மேதையாக வருவான் என கூறியுள்ளார்.

தனது கல்வியினை ஹாட்லிக் கல்லூரியில் கற்றார். உயர்தர பரீட்சை நேரம் மலேரியா காய்ச்சலால் பீடிக் கபட்டு இருந்ததால், உயர்தர பரீட்சையில் முதற் தரம் சிறந்த சித்தியை பெற தவறியமையால், பல்கலைக்கழக வாய்ப்பை தவறவிட்டார்.

பல்கலைகழக வாய்ப்பை பெற்றுக்கொள்ள விடா முயற்சியுடன் , படித்து இரண்டாம் தரம் உயர்தர பரீட் சைக்கு தோற்றி மொரட்டுவ பல்கலைகழகத்தில் பொறி யியல் பீடத்திற்கு தெரிவானார்.

மொறட்டுவ பல்கலைகழகத்தில் பொறியியல் சிறப்பு மாணி பட்டத்தினை பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் வன்னியில் தொண்டு நிறுவனம் ஒன்றில் பொறியியலாளராக பணியாற்றினார்.

பின்னர் மேல் படிப்பை தொடரும் முகமாக M.Sc கற்கையை தொடர்ந்தார்.

M.Sc கற்கையை தொடர்வதற்காக மொறட்டுவ, சொய்சாபுரம் பகுதியில் தங்கியிருந்த போது, 2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி சந்தேகத்தின் அடிப் படையில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டார்.

M.Sc முடித்து அவுஸ்ரேலியா சென்று P.Hd , கற்று மேல் படிப்புகளை முடித்து கலாநிதி கற்கையை முடித்து கலா நிதியாக வருவார் என பெற்றோர் எதிர்பார்த்து இருக்க பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு 12 வருடங்களாக சிறையில் தன் வாழ்வை கழிக்கின்றார்.

இவரது தந்தை சிறையில் உள்ள தனது மகனை பார்க் கச் சென்ற போது " தான் தற்போது வாசிப்பு மீது நாட்டம் கொண்டுள்ளதாகவும். சிறையில் புத்தகங்களை வாசிக்க தொடங்கியுள்ளதாகவும் தந்தையிடம் கூறினார்.

வெளியில் இருக்கும் போது கல்வி மீது அதிக நாட்டம் கொண்டிருந்த போதிலும், சிறுகதைகள், நாவல்கள் வாசிப்பதில் அவ்வளவாக அவருக்கு நாட்டம் இருந்த தில்லை. எழுத்தாளர்களையும் பெரியளவில் அவருக்கு தெரிந்திருக்கவில்லை. சிறையில் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொண்டமையால் எழுத்தாளர்கள் பற்றி அறிந்து கொண்டார். குறிப்பாக ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைகளை விரும்பி வாசிக்கத் தொடங்கி னார்.

சிறைக்குச் செல்லும் தந்தையிடம் நூல்களை வாங்கி வருமாறே கேட்டார். சில வருடங்களின் பின்னர் ஒரு நாள் தந்தையிடம் ஆங்கில அகராதி (டிக்ஷனரி) கேட்டுள் ளார். தந்தை அது எதற்கு என கேட்ட போதும் சொல்ல வில்லை. பின்னர் சிங்கள எழுத்தாளர்களின் ஆங்கில நாவல்களை வாங்கி வருமாறு தந்தையிடம் கோரினார். தந்தையார் மறுப்பேதும் கூறாது அவற்றை வாங்கி கொடுத்தார். அதன் பின்னர் இந்திய எழுத்தாளர்களின் ஆங்கில நாவல்களை வாங்கி தருமாறு கோரினார். அவற் றையும் தந்தையார் வாங்கி கொடுத்தார்.

நாவல்களை வாங்குவதில் தந்தையார் சிரமங்களை எதிர்கொண்டார், பொருளாதார ரீதியிலும் அவற்றை தேடி வாங்குவதிலும் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்தார். ஆனாலும் மகன் வாங்கி தருமாறு கேட்ட நூல்களை வாங்கி கொடுக்க தந்தை யார் பின் நிற்கவில்லை.

எதற்காக தற்போது ஆங்கில நாவல் களை படிக்கிறாய் என தந்தையார் கேட்ட போது , தான் ஒரு ஆங்கில நாவல் எழுத போவதாகவும், அதற்காக ஆங்கில நாவல்களின் எழுத்து நடை எவ்வாறு உள்ளது என்பதனை அறியவே ஆங்கில நாவல்களை படிப்பதாகவும் கூறியுள்ளார். அதற்கு தந்தையார் ஆங்கில நாவல் எழுத ஆங்கில அறிவு இருந்தால் மாத்திரம் போதாது எனக் கூறியுள்ளார். அதனையும் பொருட்படுத்தாது, The Innocent Victims எனும் ஆங்கில நாவலை சிறைக்குள் இருந்து எழுதியுள் ளார்.

பத்து வயதில் மகன் உள்ள வேலைக்குச் செல்லும் ஒரு விதவைத் தாய் மீது காதல் கொள்ளும் ஒருவர் அவரை மறுமணம் செய்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டது அக்கதை. அவரது நாவல்கள் எவற்றிலும் அர சியல் இல்லை. மக்களின் வாழ்வியலை பேசும் நாவல் கள். அவரது தமிழ் நாவலான 'யாழிசை' நாவல் 2015ஆம் ஆண் டுக்கான சிறந்த நாவலுக் கான சாகித்திய மண்டல பரிசினை பெற்றுக்கொண் டுள்ளது.

'துரியோதனன் துயரம்' எனும் நாவலை எழுதி முடித் துள்ளார். அது தற்போது அச்சில் உள்ளது.

நாவலுக்கான விருதினை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் கைகளால் ஆரூரனின் தந்தை பெற்றுக்கொண்டார்.

அப்போது, ஜனாதிபதியிடம் தனது மகனை சிறையி லிருந்து விடுவிக்குமாறு மன்றாட்டமாக கேட்டுள்ளார். அதற்கு அப்போதைய ஜனாதிபதி சாதகமாக பரிசீலித்து முடிவெடுப்பதாக உறுதி அளித்துள்ளார். ஆனாலும் அவரது விடுதலை சாத்தியமாகவில்லை.

தன் மகன் திருமணம் முடித்து குடும்ப வாழ்வில் சிறப்பாக வாழுவான், கற்கையை முடித்து கலாநிதியாக வருவான் என எதிர்பார்த்த தந்தையின் ஆசை நிறைவேற வில்லை.

ஆனாலும், சிறையில் இருந்த மகன் ஒரு எழுத்தாள னாக , அதுவும் சாகித்திய விருது பெற்ற எழுத்தாளனாக வருவான் என தந்தை கனவிலும் நினைக்கவில்லை.

தற்போது கொரோனோ பாதிப்பு உச்சம் பெற்று வரும் நிலையில், கொரோனோதன் ஆயுளை குறைத்து விடுமோ எனும் அச்சத்துடன் தந்தையார் வாழ்கின்றார். அவரது அவா , ஆசை தன் மகனுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதே தற்போதைய ஜனாதிபதியிடமும் மகனின் விடுதலை தொடர்பில் கோரிக்கைகளை பல தடவைகள் கடிதங்கள் மூலம் முன் வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மகனின் விடுதலை தொடர்பில் பரிசீலித்து, விடுதலையை சாத்திய மாக்குவார் எனும் நம்பிக்கையுடன் மகனின் வருகையை எதிர்பார்த்து யாழ்ப்பாணம் வடமராட்சியில் அவரது தந் தையான ஆ. சிவலிங்கம் காத்திருக்கிறார்.

மயூரப்பிரியன்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

பதவி வெற்றிடங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் வெற்றிடங்களாக நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமாகும்.

01. வீடியோ சாட்சி பதிவு செய்யும் அதிகாரி - JM 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனோதத்துவம் / சமூகக் கல்வி / வெகுசனத் தொடர்பு / குற்றவியல் / சமூகவியல் பட்டம் சகிதம் கட்புல / செவிப்புல விடயங்களை பதிவு செய்யும் அரங்கமொன்றில் ஒரு (1) வருட பதவிக்குப் பின்னரான தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறையில் தேசிய தொழிற்திறமை தகைமையின் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ் சகிதம் கட்புல / செவிப்புல விடயங்களை பதிவு செய்யும் அரங்கமொன்றில் ஒரு (1) வருட பதவிக்குப் பின்னரான தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறையில் தேசிய தொழிற்திறமை தகைமையின் (NVQ) ஆறாம் (06) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   குறைந்தபட்சம் கட்புல / செவிப்புல விடயங்களை பதிவு செய்யும் அரங்கமொன்றில் ஐந்து (5) வருட பதவிக்குப் பின்னரான தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறையில் தேசிய தொழிற்திறமை தகைமையின் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   குறைந்தபட்சம் கட்புல / செவிப்புல விடயங்களை பதிவு செய்யும் அரங்கமொன்றில் பத்து (10) வருட பதவிக்குப் பின்னரான தகைமை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரர்கள்: (பின்வரும் 1 அல்லது 2)

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரித்தான விடயத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (MA2) தரம் 11 பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

ஏனையவை:

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 - JM 1-1 - ரூ. [42,600 - 10x755 - 18x1,135 - 70,580.00]

  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் 01-01-2020ஆம் திகதியில் ஆரம்ப சம்பள நிலை 42,600.00 ரூபாவாகும்.
- **வயது :**
  22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை**
  நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

02. ஆலோசனை (Counselor) உதவியாளர் - MA 03 (02 பதவி வெற்றிடங்கள்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனோதத்துவம் / சமூகவியல் / சுகாதார மேம்பாடு / விசேடத் தேவைக் கல்வி / உரையாடல் மற்றும் செவிமடுத்தல் தேவைப்பாடுகள் / நாடகமும் அரங்கியற் கல்வி போன்ற துறைகளில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மதியுரை டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

03. விசாரணை உதவியாளர் - MA 03 (02 பதவி வெற்றிடங்கள்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

04. இணையதள கண்காணிப்பு (Cyber Watch) உதவியாளர் - MA 03 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஆரம்பப் பட்டம் சகிதம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

ஏனையவை:

மேற்படி 2, 3 மற்றும் 4 பதவிகளுக்கான பொது விடயங்கள்:

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 - MA 3 - ரூ. [32,200 - 10x455 - 11x660 - 10x730 - 5x750 - 54,960.00]

  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் 01-01-2020ஆம் திகதியில் ஆரம்ப சம்பள நிலை 32,200.00 ரூபாவாகும்.
- **வயது :**
  23 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை**
  நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

05. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) - MA 2-1 (06 பதவி வெற்றிடங்கள்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறையில் தேசிய தொழிற்திறமை தகைமையின் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். (தகவல் தொழில்நுட்பம் / அலுவலக முகாமைத்துவம்)

உள்வாரி விண்ணப்பதாரர்கள்:

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏனையவை:

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 - MA 2-1 - ரூ. [30,310 - 10x300 - 7x350 - 4x495 - 50x660 - 50,940.00]

  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் 01-01-2020ஆம் திகதியில் ஆரம்ப சம்பள நிலை 30,310.00 ரூபாவாகும்.
- **வயது :**
  18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை**
  நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

06. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) - MA 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கல்வித் தகைமைகள்:

க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

ஏனையவை

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

07. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாதது - (தட்டச்சு வேலைகள்) சிங்கள மொழிமூலம் - MA 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கல்வி

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) தட்டச்சு / கணனிக் கல்வி தொடர்பில் ஆறு (06) மாத சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கல்வித் தகைமைகள்:

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) தட்டச்சு / கணனிக் கல்வி தொடர்பில் ஆறு (06) மாத சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

ஏனையவை

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாதது - (தட்டச்சு வேலைகள்) தமிழ் மொழிமூலம் - MA 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கல்வி

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) தட்டச்சு / கணனிக் கல்வி தொடர்பில் ஆறு (06) மாத சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கல்வித் தகைமைகள்:

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) தட்டச்சு / கணனிக் கல்வி தொடர்பில் ஆறு (06) மாத சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

ஏனையவை

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

09. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாதது - (ஒப்பு நோக்கும் வேலைகள்) சிங்கள மொழிமூலம் - MA 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கல்வி

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கல்வித் தகைமைகள்:

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) தட்டச்சு / கணனிக் கல்வி தொடர்பில் ஆறு (06) மாத சான்றிதழ் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

ஏனையவை

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

10. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாதது - (ஒப்பு நோக்கும் வேலைகள்) தமிழ் மொழிமூலம் - MA 1-1 (01 பதவி வெற்றிடம்)

தகைமைகள்

வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

கல்வி

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கல்வித் தகைமைகள்:

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஏனையவை

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சேவை வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 - MA 1-1 - ரூ. [27,910 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 - 48,540.00]

  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் 01-01-2020ஆம் திகதியில் ஆரம்ப சம்பள நிலை 27,910.00 ரூபாவாகும்.
- **வயது :**
  18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை**
  நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.
- **அனுகூலங்கள்**
  மேற்படி சகல பதவிகளுக்கும் அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி உரித்தாகும் அதேபோல் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அதிகார சபையினால் பங்களிப்புச் செய்யப்படும்.

பொது நிபந்தனைகள்

சகல அபேட்சகர்களும் இலங்கைப் பிரஜையாகவும் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் பதவியின் பொருட்டு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் நாட்டின் எப்பாகத்திலும் தமது கடமைக்குரித்தான சேவைகளைச் செய்வதற்குரித்தான உடள் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமையைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.childprotection.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2020 டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் மட்டும் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைக் கோரும் காலப்பகுதியில் தமது பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் / அல்லது வரையறுக்கப்பட்ட நடமாட்டம் காரணமாக விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முடியாத விண்ணப்பதாரர்கள் மட்டும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் / அல்லது வரையறுக்கப்பட்ட நடமாட்டம் விலக்கப்பட்டதன் பின் 07 நாட்களுக்குள் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம்.

சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பப் படிவத்துடன் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுபடுத்திய பிரதி, தேசிய அடையாள அட்டை / வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்புதல் வேண்டும். யாராவது விண்ணப்பதாரரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பதாயின் அந்தந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை வெவ்வேறு உறைகளில் இட்டு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் என்பதுடன அரச திணைக்களம் / அரச கூட்டுத்தானம் / நியாயாதிக்கச் சபையிலிருந்து விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணக்கமில்லாத முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எவ்வகையிலாவது ஆதரவைப் பெறுவது தகுதியீனமாகக் கருதப்படும். குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். இவ் ஆட்சேர்ப்பு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பணிப்பாளர் சயின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,
இல. 330, தலவத்துகொட வீதி,
மாதிவல, ஸ்ரீ ஜயவர்தனபுர.

தொலைபேசி இலக்கம்: 0112778911-14
இணையதளம்: www.childprotection.gov.lk

நான் உன்னை அழைக்கவில்லை

பாலா சங்குப்பிள்ளை

உதய நிலவன் – சாய்வு நாற்காலியை விட்டு எழுந்தார். அவருக்கு வயது 60 இருக்கலாம். மெதுவாக யன்னலருகே சென்றார். அதை திறந்தார். அதிகாலை ஆறு மணி – யன்னலுக்கு வெளியே வானம் சிவந்துக் கிடந்தது. குளிர் காற்றுடன் பனி வந்து முகத்தை வருடியது. மலைமுகடுகளில் மேகம் பொதிப் பொதியாக தொங்கிக்கொண்டிருந்தது.

அவர் உணர்ச்சியற்ற பதுமையாய் என்றும் பெயர்ச்சி யற்ற மலைமுகடுகளைப் போல அப்படியே நின்றிருந் தார். அவர் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தன.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஆறுமாதங்களிலேயே நிலவனுக்கு தனியார் வங்கியில் கைநிறைய சம்பளத்துடன் வேலை கிடைத்தது. அங்கே தான் அவன் கண்மணியை சந்தித்தான். அவள் ஏற்க னவே கொழும்பில் தலைமைக் காரியாலயத்தில் பணி புரிந்தாள். அவளின் திறமைக்கு உடனடியாகவே உதவி முகாமையாளராக பண்டாரவளையில் கிளைக் காரியால யத்தில் வேலைமாற்றம் கிடைத்தது. அதில் அவளுக்கு அளவற்ற சந்தோஷம் ஏனென்றால் அவள் பண்டார வளையில் ஒரு தோட்டத்தில் பிறந்தவள். அவளுக்கு அப்பா இல்லை. அம்மா தேவகி தோட்டத்தில் வேலை. அவளுக்கு ஒரே தங்கை பெயர் செல்வி. கண்மணி பிறந்து இரண்டாவது வயதில் பிறந்தவள் செல்வி. எனவே அவர் கள் பார்ப்பதற்கு கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருப்பார்கள். செல்வி ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை. அவள் நுவரெலி யாவில் ஒரு பிரபல பாடசாலையில் பணிபுரிந்து வந்தாள்.

உதயநிலவன் – கண்மணியுடன் பணிபுரியும் போது அவனுக்கு தொழில் சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் தோன்றும் போது அதை அவளிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வான். அவர்களின் நட்பு வெறும் நட்பாக மட்டுமே இருந்தது. அதுவும் சில காலம் தான்.

இந்த நிலையில்தான் ஒருநாள் வெள்ளிக்கிழமை கண்மணி ஏதோ வேலையாக வெளியே சென்றிருந்தாள். உதயநிலவன் – காலை பதினொரு மணிபோல வங்கியை விட்டு வெளியே வந்தான். அவன் பிறந்து வளர்ந்ததெல் லாம் நுவரெலியாவுக்கும் கந்தபளைக்கும் இடையிலி ருந்த ஒரு பின்தங்கிய தோட்டத்தில் தான். அவனுடன் கூடப்பிறந்தவன்தான் அவனுடைய தம்பி கலையரசன். கலையரசன் நுவரெலியா விவசாயத் திணைக்களத்தில் வெளிக்கள உத்தியோகஸ்தனாக இருந்தான். அவன் அநே கமாக சிறு தோட்ட உரிமையாளர்கள் மறக்கறி உற்பத்தி யாளர்களுடனே அதிகமாக இருப்பான். அவனுக்காக ஒரு வாகனத்துடன் உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டி ருந்தார். கலைரசனும் உதயநிலவனும் பாசமானவர்கள். அப்பாவின் இறப்புக்குப்பின் உதயநிலவன் தன் தம்பி மேல் அதிகமாக அன்பு செலுத்தினான். அவனுடைய சகல இன்ப துன்பங்களிலும் உதயநிலவன் பிரதான பங் காளியாக இருந்தான். அதிலும் அவர்களின் தாயாரின் திடீர் மறைவானது அவர்களை மேலும் பலப்படுத்தியது.

உதயநிலவன் பண்டாரவளையில் ஒரு சிறிய வீட்டில் வாடகைக்கு இருந்தான். வெள்ளிக்கிழமை நுவரெலியா போனால் விதவிதமான சமையல் ஆட்டம், பாட்டம், திரைப்படமென்று ஒரே கொண்டாட்டம் தான், பண் டாரவளையிலிருந்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் தம்பியுடன் பேசுவான் உதயநிலவன். அதே போலத் தான் கலையரசனும். உதயநிலவன் – வங்கியை விட்டு மெதுவாக வெளியே வந்து நடந்தவாறு கைபேசியை உயிர்ப்பித்தான் "ஹலோ... கலை... என்ன செய்யிறே... உனக்கு அவசரமாக பேசினேன். என்னன்னா இந்த வெள் ளிக்கிழமை எனக்கு அங்கே வரமுடியாது.

முக்கியமான செமினாரொன்று இருக்கு. உனக்குத் தான் சனி, ஞாயிறு லீவே அதுனால நீ புறப்பட்டு இங்கே வந்திடு, திங்கட்கிழமை காலையில போகலாம்... என்ன சரிதானே...? ஒண்ணும் பிரச்சினையில்லையே? "ஓகே அண்ணா... என்னாலயும் இங்கே தனியா இருக்கமுடி யாது... நான் வெள்ளிக்கிழமையே வந்திடுறேன்... அப் புறம் இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கு அதை நேர்ல சொல்லுறேன்..."

கைபேசி இணைப்பு துண்டிக்கப்பட உதயநிலவன் மனதில் பட்டாம்பூச்சிகள் படப்படத்தன. அவன் – பண்டாரவளை வந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இந்த ஆறுமாதத்தில் உதயநிலவனும் கண்மணியும் ஒன்றாக உணவருந்துவது, ஒன்றாக ஷொப் பிங்செய்வது என சகஜமாக பழகத் தொடங்கினார்கள். கண்மணி அவனை விட நான்கு வயது குறைந்தவள். படிப்படியிலும் பண்பிலும் உயர்ந்தவள். மிக மிக கடுமை யான உழைப்பாளி. அழகிலும் அப்படித்தான். இரக்கக் குணம் மிகுந்தவள். பல்கலைக்கழகத்தில் கல்விக்கற்கும் மிக வறுமையான இரண்டு பெண்களுக்கு கல்விக்கான உதவிகளை செய்கிறாள் மேலும் செய்வாள்.

அவளை பார்த்த முதல் நாளே அவன் இதயத்தில் மின்னல் தோன்றியது. ஆனால் அது காதலா என்று தெரியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல அவன் மனதில் மாற்றம் ஏற்பட தொடங்கி யது. காதலின் தாக்கம் கண்களில் தோன் றியது. ஆனால் அதை எப்படி அவ ளிடம் சொல்வது? அவளும் அவளை நேசிக்கிறாளா அல்லது வெறும் ந ட் பு மட்டும் தானா? அவன் மேல் அவள் வைத்திருக்கும் நம் பிக்கை அவன் சொல்லும் ஒரு வார்த்தையால் முறிந்து போய் விடுமா? அவளுடைய நட்பை அவன் எந்த நிலை யிலும் இழக்க விரும்ப மாட்டான். அதைவிட அவன் உயிரை விட்டு விடுவான். ஆகவே அவன் ஒரு முடி வுக்கு வந்தான். இந்த விஷயத்தைப் பற்றி தன் தம்பியு டன் பேசுவது. அதற்கு முன் எப்படியாவது தம்பியிடம் கண்மணியை அறிமுகப்படுத்தி விடுவது அதற்கான ஒரு திட்டம் தான் தம்பியை பண்டாரவளைக்கு அழைத்தது. அது மட்டுமல்ல தம்பியின் விருப்பம் மற்றும் திருப்தி மிக முக்கியமானதாகும்.

கலையரசன் மேல் உதயநிலவன் உயிரையே வைத்தி ருந்தான். அவனுக்கு ஒன்றென்றால் அவனால் தாங்கவே முடியாது. ஆனாலும் கண்மணியை அவனுக்கு நிச்சய மாக பிடிக்குமென்று உறுதியாக நம்பினான். ஒருமுறை உதயநிலவன் சாலை விபத்தொன்றில் சிக்கி அதிக இரத் தம் வெளியேறியமையினால் ஆபத்தான நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். உடனடியாக அவனுக்கு இரத்தம் தேவைப்பட்டது. அவனுடைய ரத்தம் குறிப்பிட்ட வகையினைச் சேர்ந்தது. எல்லோ ரிடமும் அது இருக்காது வைத்தியர்கள் என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்து நின்ற போதுதான் கலைய ரசன் பைத்தியக்காரனைப் போல அங்கே வந்தான். தலை கலைந்து கண்ணீர் பெருக கைகூப்பியவண்ணம் வைத்தி யரைப் பார்த்தான்.

"டொக்டர் இவர் என் அண்ணன்தான் விஷயம் கேள் விப்பட்டு நிலை தடுமாறி தலை தெறிக்க ஓடிவந்தேன். என் உயிர் போனாலும் பரவாயில்லை அண்ணாவை மட்டும் எப்படியாவது காப்பாத்திடுங்க...?"

கலையரசன் சொன்ன அந்த வார்த்தைகள் யாவும் மயக் கத்திலிருந்த உதயநிலவனின் காதுகளில் விழுந்த போது அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது...

உதயநிலவன் – மறுபடியும் வங்கிக்குசென்ற போது கண்மணி அவளை அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

இவ தான் என்னோட ஒரே தங்கச்சி பேரு செல்வி நுவ ரெலியா பாடசாலையில ஆசிரியையா இருக்கச் சரியான குறும்புக்காரி... மூணுநாள் என்னோடத்தானிருப்பா..." செல்வி குறும்புடன் அவனைப் பார்த்தாள்.

"ம்.... பார்க்க அம்சமா மாப்பிள்ளை மாதிரிதான் இருக் கீங்க... பேர் என்ன கால் கட்டுப்போட்டு கல்யாண கடலில் விழுந்திட்டிங்களா?

"என் பேரு உதயநிலவன்... ரெண்டாவது கேள்வி எதற் காம்?

"இன்னமும் கால் கட்டு போடாட்டி கல்யாணம் பண் ணிக்கத்தான்..."

அவள் அது வங்கியென்றும் பாராமல் கலகலவெனச் சிரித்தாள்....

அடுத்த நாள் – மாலை பூங்காவில் அமர்ந்து அரட் டையடித்துக் கொண்டிருந்த கண்மணி மற்றும் செல்வியை நோக்கி நடந்துவந்தான் உதயநி லவன். அவனுடன் அவன் தம்பி கலைய ரசனும் வந்து கொண்டிருந்தான். கலை யரசனை கண்டு கண்மணி புருவத்தை உயர்த்தினாள். அவனை எங்கேயோ பார்த்ததைப் போலிருந்தது.

அடுத்துவந்த மூன்று நாட்களும் மிகமுக்கியமானவையாகும். அவர்கள் நால்வரும் ஒன்றாக நிறைய இடங்களுக்கு சென்றார் கள். கலையரசனுக்கு கண்ம ணியை நிரம்பப் பிடித்து விட் டதைக் கண்டு உதயநிலவன் சந்தோஷப்பட்டான். அவன் நினைத்தது நினைத்த படி நடக் கப்போவதைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அதே சமயம் உதயநிலவனை செல்வி சுற்றிச் சுற்றி வந்தாள். அவனுக்கு தேவையானதை ஓடி ஓடி செய்த துடன் அவனைக் கேலி, கிண்டல் செய்து கலாய்த்தாள். விடுமுறை முடிந்து அவரவர் இடங்களுக்கு சென் றார்கள். உதயநிலவனுக்கு நாள் தவறா மல் செல்வி கைபேசியில் பேசினாள். அதைப் போல கலையரசன் கண்மணியுடன் பேசினான். இதை உதயநிலவனும், கண்மணி யும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள். நாட்கள் ஓடின. அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை கண்மணிக்கு சில பொருட்கள் வாங்க வேண்டியிருந்தமையினால் உதயநிலவனுக்கு வந்திருந்தாள். அந்தசமயத்தில் அவள் உதயநி லவனைக் கண்டாள்.

"அட நீங்களா... எப்போ பதுளையில இருந்து வந் தீங்க...? "நான் நேற்று இரவே வந்துட்டேன். உங்களை இங்கே பார்த்ததும் நல்லதா போயிடுச்சி... உங்கக்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்... வாங்களேன் அந்த ஹோட்டல்ல தேநீர் அருந்திக்கிட்டே பேசலாம்.

அவர்கள் அந்த ஹோட்டலை அடைந்தார்கள். இன்று எப்படியாவது தன் காதலை அவளிடம். சொல்லி விடு வதென்று அவன் முடிவு செய்துவிட்டான். இனியும் தாமதிக்காமல் தன் மனதிலுள்ளதை வெளிப்படுத்திவிட வேண்டும். இது அருமையான சந்தர்ப்பம்..."

உதயநிலவன் – தேநீரை சுவைத்தவாறு அவளை நிமிர்ந் துப் பார்த்தான். மனதில் தைரியத்தை வரவழைத்தவாறு மெதுவாக வாய் திறந்தான்.

"கண்மணி உங்கக் கிட்ட நான் முக்கியமான ஒரு விஷயம் பேசணும். ரொம்ப நாளா மனசுல பூட்டி வச்ச அந்த விஷயத்தை சொல்ல இப்பத்தான் எனக்கு சந்தர்ப் பம் அமைஞ்சிருக்கு..."

"நானும் ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..."

"அட அப்படியா... அப்படின்னா நீங்களே சொல் லுங்க..."

"வ.... வந்து அதை எப்படி சொல்லுறதுன்னு தெரியலை... நானும் பெண்தானே...?"

"நீங்க என் கிட்ட தாராளமா சொல்லலாம்..."

"இவ்வளவு காலமும் இறுகிப் போயிருந்த என் மனசு உங்களோட நட்புக்கு அப்புறம் இளகிடுச்சி. வாழ்க்கை யில ஒரு பிடிப்பு வந்திருச்சி. அதுக்காக முதல்ல உங்க ளுக்குத்தான் நன்றி சொல்லணும்..."

உதயநிலவன் மனம் குதூகலத்தால் துள்ளி குதித்தது. மகிழ்ச்சியினால் மனம் குளிர்ந்து போனது.

ஆசைப்பட்டவள் எந்தவிதமான பிரச்சினையுமில்லா மல் மிக இலகுவாக கிடைப்பதென்பது எல்லோருக் கும் கிடைக்குக்கூடிய பாக்கியமா? அவள் அவனுடைய உயிர்ப் பொக்கிஷம்...

"நான் யாரை நேசிக்கிறேனோ அவரை என் இதய கோயிலில் வைத்து பூசிக்கிறேன். நேசிக்கிறேன்... சுவா சிக்கிறேன்..."

"சரி கண்மணி புதிர் போடுறதை விட்டுட்டு உங்க ளோட கண்ணாளனை கண்ணுல காட்டுங்களேன்... யார் அந்த அதிர்ஷ்டசாலி...?"

"வ. வந்து... வந்து..."

அவள் அவனை நேருக்கு நேர் பார்த்தவள் வெட்கத்து



டன் தலை குனிந்தாள்.."

"என்ன கண்மணி இது எதையும் சொல்லாம இப்படி வெட்கப்பட்டா என்னவாம்? சொல்லுங்க யார் அது...?

"அது... அது... வேற யாருமில் லை...உ... உங்க தம்பிதான்..."

"எ... என்ன சொல்லுறீங்க... என் தம்பி கலையரசனா... உண்மையாகவா சொல்லு றீங்க....?

"ஆமா.... அவரோட கலகலப்பான பேச்சு... கள்ளங் கபடமில்லாத குணம்.... முக்கியமா அவரு உங்கமேல வச்சிருக்க ஆழமான தூய்மையான அன்பு எல்லாமே என்னை அவருக்கு அடிமையாக்கிடுச்சி.... அவரும் மனசார என்னை நேசிக்கிறாரு... உங்கக்கிட்ட சொல்ல கூச்சப்படு றாரு....?

உதயநிலவன் தலையில் இடி இறங்கியதை போல இருந் தது. அவன் உயிர் உடலை விட்டு பிரிந்ததைப் போல உணர்ந்தான். இதயம் வேகமாக துடித்தது. மயக்கம் வருவதை போலிருந்தது. கண்கள் கலங்கி கண்ணீர் கொட்ட போவதைப் போலி ருக்கவே தலைகுனிந்தவன் மிக கஷ்டப்பட்டு தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

"என் தம்பி ரொம்ப குடுத்து வச்சவன். முதல்ல என் தம் பிக்கு நல்ல ஒரு பெண்ணா பார்த்து மணம் முடிச்சிட்டுத் தான் நான் மணம் முடிக்க நினைச்சேன். உங்களை விட ஒரு பெண் நிச்சயமா அவனுக்கு கிடைக்க மாட்டாங்க ஜோடிப் பொருத்தம் கூட நல்லாவே இருக்கு..."

"எல்லாத்துக்குமே நீங்கத்தான் காரணம். ஆமா நீங்க என்னமோ முக்கிய விஷயம் பேசணும்னீங்களே...?

"அ... அது வந்து...கொழும்புல வேறொரு தனியார் வங்கியில பணிபுரிய கூப்பிடுறாங்க... இதை விட அதிக சம்பளம்... எல்லாத்துக்கும் மேலா அந்த வங்கியோட கிளைகள் நிறைய வெளிநாடுகள்ல இருக்கு... மூணு மாசம் மட்டும் கொழும்பில் வேலை செஞ்சிட்டு அப்பு றம் வெளிநாடு போயிட வேண்டியதுதான்..."

"உண்மையாகவா சொல்லுறீங்க... அப்ப உங்களோட கல்யாணம்...?"

"அதெல்லாம் பார்ப்போம். அநேகமா இரண்டொரு நாள்ல நான் கொழும்புக்கு போகலாமுன்னு நினைக்கி றேன். எப்படியோ என்னோட எட்வான்ஸ் வாழ்த்துகள்... நீங்க நல்லா இருக்கணும்.."

உதயநிலவன் – சட்டென நாற்காலியை விட்டு எழுந் தவன், மெதுவாக நிதானமாக நடந்து வெளியேவந் தான். முச்சக்கரவண்டியொன்றை நிறுத்தி அதில் ஏறி அமர்ந்தான். கை குட்டையினால் முகத்தை அழுத்தமாக துடைத்தவன் வாயை மூடியவாறு சத்தமில்லாமல் அழத் தொடங்கினான். கொழும்பு வேலை விஷயம் உண்மை தான். கண்மணி கண் அசைத்த அந்த நொடியே அந்த வேலையை கை விட எண்ணியிருந்தான். எல்லாமே தலைகீழாக மாறி விட்டது.

அவன் – வீட்டையடைந்தான். உள்ளே கலையரசன் இருந்தான்.

"அண்ணா எங்கே போனீங்க.... ஏன் முகம் ஒரு மாதிரியா இருக்கு...? மழையில நனைஞ்சீங்களா?

"தம்பீ..... இன்னைக்கிதான் அந்த விஷயம் கேள்விப் பட்டேன்... உண்மையா... உனக்கு பூரண சம்மதமா?

"ஆமாண்ணே... உங்க கிட்ட சொல்லிடுச்சா? நான் அப்புறம் ஆறுதலா சொல்லாம்னு நெனைச்சேன். எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... நாம ரெண்டு பேரோட அன்பு, பாசம் பிரியாம ஒற்றுமையா ஒண்ணா இருக்கணும்னா அதுக்கு அவங்கத்தான் பொருத்தமா இருப்பாங்க. ஆனா உங்களோட திருமணத்துக்குப்புறம் தான் நான் மணம் முடிப்பேன்..."

"தம்பி... நீ சொன்னது சரிதான். அவங்க உனக்கு ஏத்தவங்கத்தான். எனக்கு பூரண சம்மதம் தான். ஆனா நீ எனக்கு ஒரு உறுதிமொழி தரணும்..."

"சொல்லுங்கண்ணா உங்களுக்காக நான் எதுவும் செய்வேன்..."

"நான் உன் கிட்ட ஏற்கனவே சொன்னது ஞாபகம் இருக்கா.... எனக்கு வேறொரு பேங்கல இன்னமும் அதிகம் சம்ப ளம்ன்னுறதை விட என்னோட லட்சிய கனவான வெளிநாட்டுக்குப் போற சந்தர்ப்பமும் கிடைச்சிருக்கு. இதை நான் தவற விடமுடியாது. அதுனால நீ இன்னும் ஒரு வாரத்துல பதிவு திருமண மும் அப்புறம் ஆறுதலா மண்டபத்திலும் திருமண செய்யிறதுக்கான ஏற்பாடுகளை செஞ்சிடு. நான் நாளைக்கு காலையிலயே கொழும்பு போயிட்டு ஆக வேண்டிய வேலைகளை செஞ்சிட்டு பதிவுத்திரு மணத்திற்கு முதல் நாள் வந்து சேர்ந்திடு றேன்.."

"என்னண்ணா திடீர்ன்னு இப்படி பேசு றீங்க... எங்களை விட்டுட்டு வெளிநாடு போறேன்னு வேற சொல்லுறீங்க...?

அப்புறம் வெகுநேரம் அண்ணன் தம்பி பேசி னார்கள். கடைசியாக அண்ணனின் அன்புக்கட்ட ளைக்கு தம்பி பணிந்தான். உதயநிலவன் – அடுத்த நாள் அதிகாலையில் கொழும்புக்குப் புறப்பட்டான். சரியாக தன் தம்பியின் நிச்சயதார்த்தம் நடக்கவிருந்த கடைசி நேரத்தில் தன்னால் வரமுடியாமல் போய் விட்டதாகவும் அடுத்தநாள் விடியற்காலையில் கட்டாயம் வந்து விடுவ தாகவும் வைபவத்தை எந்தப் பிரச்சினையுமில்லாமல் செய்துவிடுமாறும் சொல்ல கலையரசன் அழுது அடம் பிடிக்க ஒருவாறு அரைமனதுடன் அண்ணனின் கட்ட ளைக்கு அடிபணிந்தான்.

உதயநிலவன் – தன்னுடைய கைபேசியிலிருந்த 'சிம்' கார்டை தீயிலிட்டு கொளுத்தினான்.

கைபேசியிலிருந்த எல்லா எண்களையும் அழித் தான். தங்கியிருந்த அறையின் கதவை மூடி விட்டு கட்டிலில் அமர்ந்து 'ஓ' வென அழுதான் வெகு நேரம் அழுதான். அப்படியே உறங்கி விட்டான். அடுத்த இரண்டு மாதங்களில் 'கனடா'வுக்கு பயணமானான். அங்கிருந்த கிளைகாரியால யத்தில் பணி புரிய தொடங்கினான். வரு டாந்த விடுமுறையை அங்கேயே கழித் தான். யாருடனும் எந்த தொடர்பும் இல்லை. வேலையில் அதிக கவனம் செலுத்தினான். அவன் மனம் ஆன்மிகத்தை நாடியது. அதில் அமைதி கிடைப்பதைப் போலிருந்தது.

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 21

1	2		3	4	5	6	■
7		■	8				9
10		11		■	12		
■	■		■	13			
14		■	■	15			
	■	16	17		■	■	■
18	19			■	20		21
22				■		■	

திரு/திருமதி/செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி .....
.....
.....

....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 21

இடமிருந்து வலம்

1. நத்தார் தினத்தை இப்படியும் சொல்வர்.
7. நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலப்பகுதி
8. சாது (குழம்பியுள்ளது)
10.நள்ளிரவு (குழம்பியுள்ளது)
12. தர்க்கம் (திரும்பியுள்ளது)
13. இகழ்ச்சி, பரிகாசம்
14. இந்தியாவிலுள்ள ஓர் ஆறு
15. ஆரவாரம் (திரும்பியுள்ளது)
16. முனிவர்கள் மனதை ஒருநிலைப்படுத்தி செய்யும் தியானம் (குழம்பியுள்ளது)
18. உயிருக்கு நேரிடக்கூடிய ஆபத்து.
20. சௌக்கியம்
22. பகுத்தறிவு (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. வரவு செலவுத் திட்டம்
2. திங்கள் ஒளி சிதறிவிட்டது
3. கடலில் காணப்படும் (தலைகீழ்)
4. ஏனைய அல்லது வேறு (தலைகீழ்)
5. சோற்றுணவுக்கு சுவை சேர்ப்பது (குழம்பியுள்ளது)
6. பழைமைவாய்ந்தது
9. வியாபாரம் (குழம்பியுள்ளது)
11.மத்தி
13.ஒன்றைச் செய்யுமாறு விடுக்கும் கட்டளை (குழம்பியுள்ளது)
14. உலகம்
16. நடிப்புக்காக பாத்திரத்துக்கு ஏற்ப செய்துகொள்ளும் ஒத்திகை (தலைகீழாக)
17. வகை (குழம்பியுள்ளது)
19. பார்வை உறுப்பு (கீழிருந்து மேல்)
20. தழும்பு
21. மனிதர்களையும் விலங்குகளையும் பிரிக்கும் பகுப்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 20

விடைகள்

இடமிருந்து வலம்

1. சுயம்பு 5. நாசம் 8. புத்திரன் 9. துலா 10. தில்லானா 11. கரவு 12. ஈரம் 13. வில் 15. இனம் 17. மதுரம் 19. ஓசி 20. மாதிரி 21. தட்டை 22. வசை 23. கடும்

மேலிருந்து கீழ்

1. சுத்தியல் 2. புயல் 3. அலாரம் 4. புதினா 6. சதுரம் 7. கலாம் 11. இரவு 12. ஈனம் 14. விமரிசை 15. உதிரம் 16. உசிதம் 18. மாது 19. ஓட்டு 21. கடை

சாய்ந்தமருதின் சரிதை

(24/11/2020 அன்று இறையடிசேர்ந்த தென்கிழக்கின் பெண்கவிஞர் மர்ஹூம். கலைமகள் ஹிதாயா ரிஸ்வி அவர்கள் நினைவாக..)

தம்பி என்று அழைத்தாயே..
தமிழுக்காக உழைத்தாயே.
வெம்பி நின்றோம் கலைத்தாயே– எம்மை
தவிக்கவிட்டு மறைந்தாயே.

மரபுக்கவியில் சிறந்தாயே
மணியாய் கவிதை சுரந்தாயே
மழலைபோன்ற மனம்தாயே–என்றும்
மற்றவர் வெற்றியில் மகிழ்ந்தாயே..

தடாகம் தந்த கவித்தாயே
தமிழால் பகழைக் குவித்தாயே
தனியாய் நின்று ஜெயித்தாயே–எங்கள் தாயாய்
நெஞ்சில் நிலைத்தாயே..
(வேறு)

அரச பாட நூலில் கூட
உன் கவிதை இருக்கு..
ஆனால் உன்னில் கண்டதில்லை ஒருபொழுதும் செருக்கு..!

இளம்கவிஞர் பலருக்கு
கலைமகள்தான் திறப்பு..
இன்னும் பல சொல்லிடலாம்
இவர் பணியின் சிறப்ப ..!

எதிரியையும் அரவணைக்கும்
ஏற்றமிகு சிரிப்பு..
எல்லோரையும் உயர்த்துகையில் கண்டதில்லை களைப்பு..!

என்பாடல் கேட்டதுமே
எடுப்பாரே அழைப்பு...
அவர் பண்பாடாய் நடந்ததால்தான் அழுகிறதென் வலைப்பூ..!

கடல்கடந்து கலைமகளால்
புகழ்பரப்பி நின்றார்
கவிதை, கதை, பாடல்களால்
பரிசுகளை வென்றார்..!

நாம்காணும் இவ்வாழ்வு நிலையற்றதென்றார்..
நாடறிந்த பெண்கவிஞர்
எமை விட்டுச்சென்றார்..!

அரபு மொழிதனில்கூட
பெயர்ந்ததுந்தன் கவிதை...
நீ யாருக்கும் தெரியாத
சாயந்தமருதின் சரிதை!

கவிதைக்காய் ஜனாதிபதி விருதுபெற்றாய் அன்று..
கவிதைக்காய் பழமாகி
வீழ்ந்தது மண்ணில் இன்று..!

உனக்கு சொர்க்கத்தில்
இடம் கிடைக்க வேண்டுமென்று
இறைஞ்சுகிறோம் அனைவரும் நாம் ஓரணியில் நின்று...

கவிஞர் பொத்துவில் அஸ்மின்

ஈழத்துச் சிறுகதை முன்னோடி
பண்டிதர் க. சச்சிதானந்தன்..!

ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரும் சிறந்த கவிஞருமான பண்டிதர் க. சச்சிதானந்தன் (ஆனந்தன்) ஈழத்து இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அறிஞராவார்.

'சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்'

என்ற உணர்ச்சிகரமான கவிதையை எழுதிய வர்.

மாவிட்டபுரத்தில் கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகனாக 1921 ம் ஆண்டு சச்சிதானந்தன் பிறந்தார்.

இவர் மகாவித்துவான் நவநீதகிருஷ்ண பாரதியி டம் தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். சமஸ் கிருதமும் நன்கு கற்றுக்கொண்டார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்றார்.

முதுகலைமாணிப் பட்டமும் (இலண்டன்) பெற்றார். நீர்கொழும்பு புனிதமேரி கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ் பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கணித தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரி வுரையாளராகவும் உப அதிபராகவும் பணியாற்றி னார். அரசினர் பாடநூற் சபையிலும் பணியாற்றி யுள்ளார்.

சுவாமி விபுலானந்தரின் ஆய்வுப்பணிகளின் போது மாணவராக உடனிருந்தும் உதவியுள்ளார்.

'ஆனந்தன்' என்ற புனைப்பெயரில் சிறந்த சிறு கதைகளை எழுதியுள்ளார். பண்டிதர், சச்சி ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

இவர் 1938 - 1944 வரையிலான காலப்பகுதி யில் பத்துச் சிறுகதைகள்வரை எழுதியுள்ளார்.

பின்னர் கவிதைத்துறையிலும், காவியம் படைப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டார்.

'ஈழகேசரி'யில் இவர் எழுதிய அவிந்த தீபம், கண்ணீர், நான் அரசனா.., சாந்தியடையுமா..?, தண்ணீர்த்தாகம் ஆகிய கதைகள் குறிப்பிடத்தக் கன.

ஈழத்து உன்னத சிறுகதைகளில் ஒன்றாக இவர் எழுதிய 'தண்ணீர்த்தாகம்' இடம்பெறுமென விமர்சகர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றைய காலகட்டத்தில் (1939) இத்த கைய முற்போக்கான சிறுகதையை எழுதிய ஆனந்தன் பாராட் டுக்குரியவராகக் கணிக்கப்ப டுகி

சாதி ரீதியான அடக்குமுறை மேலோங்கியி ருந்த அக்காலகட்டத்தில் முற்போக்குச் சிந்த னையுடன் சிறந்த இச்சிறுகதையைத் துணிவுடன் இவர் படைத்துள்ளார்.

'ஆனந்தன்' (பண்டிதர் க. சச்சிதானந்தன்) கவி தைகள் உணர்ச்சியைத் தூண்டிச் சிந்திக்க வைப்ப வையாகும்.

'ஆனந்தத்தேன்' இவரது கவிதைத் தொகுதியா கும்.

'சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன்
சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்'

என்ற உணர்ச்சிகரமான வரிகள் இவரது கவிதை யில் வருவதாகும்.

இந்த வரிகளைத் தமிழகத்திலும் மலேசியாவி லும் சிலர் பாரதிதாசனின் கவிதை வரிகளெனப் பிழைபடக் கூறிவருகின்றனர்.

ஈழகேசரியில் 'அன்னபூரணி' என்ற நாவலைத் தொடராக எழுதியுள்ளார்

தமிழரசுக் கட்சித் தலைவர் 'கோப்பாய்க் கோமான்' கு. வன்னியசிங்கம் குறித்து 'தியாகமா மலை' என்ற நூலையும் இவர் எழுதி வெளியிட் டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் வன்னியசிங்கத்தின் பங்களிப்பு எத் தகையது என்பதனை எடுத்துரைக்கும் வகையில் இந்நூல் விளங்குகிறது.

இவர் எமது மூத்த சகோதரர் நாவேந்தனின் முதல் சிறுகதைத் தொகுதியான 'வாழ்வு' தொகு திக்கு (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது – 1964) அணிந்துரை வழங்கியுள்ளமை ஞாபகத்தி லுண்டு.

ஆய்வுத்துறையிலும் ஆர்வமாக ஈடுபட்ட பண் டிதர் சச்சிதானந்தன் 'தமிழர் யாழியல்' என்னும் சிறந்த ஆய்வு நூலைப் படைத்தார்.

'பருவப் பாலியர் படும்பாடு' என்னும் காவி யத்தையும் 'மஞ்சுகாசினியம் இயங்கு தமிழியல்' என்றொரு இலக்கண நூலையும் இறுதிக் காலத் தில் எழுதியுள்ளார்.

இவரது 'யாழ்ப்பாண காவியம்' இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு மற்றும் வடக்கு கிழக்கு மாகாண இலக் கியப் பரிசு, சம்பந்தர் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளமை குறிப்பி டத்தக்கது.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழி களில் நன்கு தேர்ச்சிபெற்ற பண்டிதர் சச்சிதானந் தன் சிறுகதை, கவிதை, கட்டுரை, சிறுவர் இலக் கியம், நாவல், இலக்கணம், வானியல் ஆகிய துறைகளில் படைப்புகளைத் தந்துள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் உளவியல் கட்டு ரைகளையும், வானியல் ஆய்வுக் கட்டுரைகளை யும் எழுதியுள்ளார்;

இவரது இலக்கியப் பணிகளுக்காக யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம் 'இலக்கிய கலாநிதி' பட்டம ளித்துக் கௌரவித்துள்ளது.

கலாகீர்த்தி தேசிய விருதும் பெற்றார்.

இலங்கை அரசு வழங்கும் இலக்கியப் பணிக் கான உயர்விருதான 'சாகித்திய இரத்தினா' விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

முதுமையடைந்த போதிலும் ஓயாது எழுதிவந்த இவர் 2008 ம் ஆண்டு இயற்கை எய்தினார்;

ஈழத்தின் சிறுகதை முன்னோடிக ளில் ஒருவர்;, சிறந்த கவிஞர், தமிழ் அறிஞர், ஆய்வாளர் எனத் திகழ்ந்த பண் டிதர் சச்சிதானந்தன் நாமம் ஈழத்து இலக் கிய வரலாற்றில் நீடித்து நிலைத்து வாழும்...

வி.ரி. இளங்கோவன்

வாழ்க ஆனந்தராணி

ஆனந்தராணி உங்களை உங்களின் 16 ஆவது வயதில் 1973 ஆம் ஆண்டில் கார்த்திகா கணேசரின் நாடக ஒத்திகை ஒன்றில் கொழும்பு செண்ட் பிரிட் ஜஸ் கொன்வென்டில் சந்தித்தமை பசுமையாக ஞாபகம் உண்டு.

ஓரு நாட்டிய நாடக ஒத்திகை அது. நாடகத்தின் பெயர் 'கானகம் ஏகிய ராகவன்', ஒல்லியான, அழகான , துரு துருவென்ற ஆர்வம் மிகுந்த சிறு மியாக நீங்கள் எனக்கு அறிமுகமாகினீர்கள். அப்போது நீங்கள் முறையாக கார்த்திகா கணே

சரிடம் பரதம் பழகிக் கொண்டிருந்தீர்கள் என நினைக்கிறேன்

அப்போது கார்த்திகா கணேசர் பல மரபுரீதி யான பரத நர்த்தகிகளின் எதிர்ப்பையும் கிண்ட லையும் பொருட்படுத்தாது பல புதிய நாட்டிய நாடகங்களைத் தயாரித்துக்கொண்டிருந்தார்.

உதயம், எல்லாளன், துட்டகாமினி என்பன சில. கானகம் ஏகிய ராகவன் என்ற அந்த நாட்டிய நாடகத்தில் நீங்கள் இராமனுக்கு நடித்தீர்கள். இராமனுக்கு சரியான தேர்வு என நான் கார்த்திகா விடம் கூறினேன்,

நாட்டிய நாடகத்தில் கூத்தையும் இணைக்க கார்த்திகா நினைத்தார் என்னையும் அழைத்தார் ஒத்திகை பார்க்க வந்தபோதுதான் உங்களை முதலில் கண்டேன் . இராமனும் விஸ்வாமித் திரரும் காடு செல்லும் காட்சியை நாம் மட்டக் களப்பு வடமோடித் தேராட்ட தாளக்கட்டில் அமைத்து பயிற்சியும் தந்தோம். அந்த நாடகம் கார்த்திகா கலையகத் திற்கும் பாடசாலைக்கும் பெரும் பெயர் பெற்றுத் தந்தது. அந்த நாடகத்தின் வெற்றி கார்த்திகாவுக்கு முழு நீள இராமாயாணம் தயாரிக்கும் தைரியம் தந்தது. முழு நீள இராமயண நாட்டிய நாடகம் தயரிக்கப்பட்டது. அது கொழும்பு, யாழ்ப்பாணம் எங்கணும் 1975 இல் மேடையேறிய ஞாபகம். இராவணன் வருகை, அனுமர் ஆட்டம் இராம இராவண யுத்தம். எல்லாம் வடமோடித் தாளக் கட்டுகளின் அடியாக அமைக்கப்பட்டன.

அனைவருக்கும் பயிற்சியும் தரப்பட்டது. மிருந் தங்கபுயல் ரத்தினத்தின் மிரு தங்க வாசிப்பில் வடமோடிக் கூத்து தாளக்கட்டுகள் இன்னோர் வடிவம் பெற்றன. முறையாக நடனப்பயிற்சி பெற்ற உங்களின் உடலூடு கூத்து புகுந்து வெளிப் பட்டமை கூத்துக்கு இன்னு மோர் அழகும் தந்தது

அந்த யுத்தக் காட்சி அனை வரையும் ஈர்த்தது, அந்நடனக் குழுவில் நல்ல சில நடனச் சிறுமிகளும் இருந்தனர். வட மோடிக்கூத்து பரத நடனக் கலவை அந்த இராமாயணம் நாட்டிய நாடகத்திற்கு ஒரு கவர்ச்சி கொடுத்தது. இராமாயா ணத்தில் இராமனுக்கு வந்த அச்சிறுமி பெரும் பேர் எடுத்தாள் அவளே ஆனந்தராணி

அர்ப்பணிப்பு மிக்க சிறுமி. பின்னாளில் நீங்கள்

பேராசிரியர்
சின்னையா மௌனகுரு

பாலேந்திராவின் துணையுமானீர்கள்

இவ்விணைப்பு ஈழத்தமிழ் நாடக உலகுக்கு பெரு வரவானது. நாடகர் . பாலேந்திராவின் துணை உங்களின் திறன் வெளிப்பட பல வகைகளி லும் உதவியது.

உங்கள் திறனை யாழ்ப்பாணத்தில் மேடையேறிய அவைக் காற்று கழக நாடகங்க ளில் கண்டு மகிழ்ந்தோம். ஈழத்து மேடைநாடக வரலாற் றில் ஆனந்தராணி எனும் ஒருரு அழுத்தமாகப் பதிக்கப்பட்ட ஓர் உருவம் ஆகிற்று.

நாடக உலகுக்கு நாடகங்களை மாத் திரமல்ல ஒரு வாரிசையும் அளித்தீர்கள் உங்கள் மகள் இங்கு வந்து என்னுடன் நின்ற போது அவளின் நாடக ஆர்வத் தையும் திறனையும் கண்டு கொண்டேன்.

திருமணம் ஆனதும் மிக சிறந்த நடிகைகள் எல்லாம் மெல்ல மெல்ல மேடையி னின்று ஒதுங்கி விடும் தமிழ் சூழலில் உங்களின் தொடர் செயற்பாடு உங்கள் மீது மிகுந்த மரியாதையை ஏற்படுத்துகிறது.

ஏன் இத்தனை துன்பங்களை யும் தாங்கிகொண்டும் நாம் இந்த சோதனைமிகுந்த நாடக உலகில் சஞ்சரிக்கிறோம்/ காரணம் நாம் அதனை நேசிக்கிறோம்.

அதனால் உயிர்ப்படைகிறோம் சவால்களை எதிர்கொண்டு இன்றுவரை செயற்படும் உங்க ளின் அக்குணாம்சம் என்னைப்பெரிதும் கவர்கி றது,

மனம் நிறைந்த வாழ்த்துகள் ஆனந்தராணி
நீண்ட நாட்கள் வாழ்ந்து மேலும் பணிபுரிக
இன்புறுக பிறரையும் இன்பத்திலாழ்த்துக
மற்றவரை மகிழ்விக்கும் குணாம்சம் ஓர் வாழ் வுக்கொடை அது உங்களுக்கு வாய்த்திருக்கிறது.

யாவரும் கேளீர்

பல்சுவை இலக்கியத் திரட்டு 19

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்!)

ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியில் மார்க்சியக் கருத்தியலை முன்வைத்த முதல்வர் பேராசிரியர் கைலாசபதி

பேராசிரியர் க. கைலாசபதி மார்க்சியக் கருத்தியல் கொண்டவர். தேசிய இலக்கியம் என்னும் கருதுகோளை முன்வைத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். மார்க்சிய அறிவியல் தளத்திலிருந்து தமிழ் இலக்கியங்களையும் அவற்றின் சமுதாயச் சூழலையும் காலகட்டங்களாக வகைப்படுத்தியவர். தமிழ் இலக்கியப்பரப்பில் ஏறத்தாழ எல்லாக் காலகட்ட இலக்கியங்களையும் சங்ககாலம் முதல் நவீன இலக்கிய காலகட்டம் வரை மார்க்சியக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்தவர். இலக்கியத்தில் சமூகவியல் நோக்கிற்கு அழுத்தம் கொடுத்தவர். ஒப்பியல் ஆய்வினை மேற்கொண்டவர். இலக்கியங்களை வரலாற்றுச் சூழலில் பொருத்தி நோக்கியவர். இலக்கியம், இலக்கியத்திறனாய்வுத் துறையில் இருபது நூல்கள் வரை எழுதியவர்.

பேராசிரியர் கைலாசபதி மலேசியா கோலாலம்பூரில் 05.04.1933இல் கனகசபாபதி தில்லைநாயகி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் பெற்ற இவர், 1945இல் இலங்கை வந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பயின்றவர். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை நிறைவு செய்தவர்.

பின்னர் தினகரன் பத்திரிகையில் பொறுப்பாசிரியராக 1957 முதல் 1961வரை பணியாற்றியவர். அக்காலத்தில் தினகரனை ஓர் இலக்கிய இதழாக மாற்றிய பெருமை பேராசியருக்கே உரியது.

பேராசிரியர் பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பை நிறைவு செய்து, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமயபீடத்திற்குத் தலைவராகப் பணியாற்றினார். 1974இல் அவர் யாழ்.பல்கலைக் கழகத்தின் தலைவராகப் பணியேற்றார். பேராசிரியர் கைலாசபதி தனது 49ஆவது வயதில் 06.12.1982 இல் அமரரானார். (இன்று) டிசம்பர் மாதம் ஆறாம்திகதி அவரது நினைவு நாளாகும்.



கரிகாலன் விருதுபெற்ற தி. ஞானசேகரனின் எரிமலை நாவல்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அயல்நாட்டுக் கல்வித்துறையில் சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை சார்பாக நிறுவப்பட்டுள்ள தமிழ வேள் கோ. சாரங்கபாணி ஆய்விருக்கையின் மூலம் அளிக்கப்படும் 2018ஆம் ஆண்டிற்கான கரிகாலச்சோழன் விருது தி. ஞானசேகரன் எழுதிய 'எரிமலை' என்ற நாவலுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நாவல் பற்றிய ஓர் அறிமுகம் கீழே தரப்படுகிறது.

இந்த நாவலில் அரசியலே பேசுபொருளாக விளங்குகிறது. இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினைபற்றி விரிவாகவும் விளக்கமாகவும் பேசும் இந்நாவல், இந்நாட்டின் இனப்பிரச்சினை பற்றி ஒரு முழுமையான பார்வையை வாசகருக்கு தருகிறது.

நாவலின் உள்ளடக்கம் 1980களின் யாழ்ப்பாணத் தமிழரின் அரசியல் போராட்டத்தைப் பிரதிபலிப்பதில் ஆரம்பிக்கிறது. அக்காலப்பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் எவ்வாறு ஈவிரக்கமின்றி அப்பாவித் தமிழர்கள் மீது பாய்ந்தது என்பதை விளக்குகின்றது. தனித்து தீவிரவாதப் போராளிகளின் நியாயங்களை மட்டும் வைத்து நாவலை முன்னெடுத்துச் செல்லாது, மாற்றுக் கருத்துக்களுக்கும் உரிய இடத்தை நாவல்; வழங்கிச் செல்கிறது. இதற்காகவே நாவலில் சிங்கள, மலையக கதாபாத்திரங்களும் அறிமுகமாகின்றன. தனிச் சிங்களச் சட்டம், தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம், இந்தியத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை, ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், தனிநாட்டுக் கோரிக்கை, யாழ். நூல் நிலைய எரிப்பு, காலத்துக்குக் காலம் இடம்பெற்ற இனக்கலவரங்கள், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பல்வேறு அணுகுமுறைகள் போன்ற இன்னும்பல விடயங்கள் நாவலில் உள்ளடங்கியுள்ளன.

1972 அரசியல் யாப்பின் தீவிரத்தன்மைதான் இன்றைய பிரச்சினைக்கான உடனடிக் காரணமாக அமைந்தமையும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதன் தொடர் வளர்ச்சிதான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கம், இளைஞர்களது தீவிரத்தன்மை எல்லாம் ஏற்பட்டது என்பதாகக் கதை நகர்கிறது. இடையிடையே கதை நகர்வில் மாற்றங்கள் ஏற்பட்டு, யாழ்ப்பாண நகரில் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் இழந்தோர் நினைவுத் தூபி, எரியுண்ட நூலகம், சிதைக்கப்பட்ட தமிழறிஞர் சிலைகள், விடுதலைப்போராளி சிவகுமாரனின் சிலை, என்பன காண்பிக்கப்பட்டு அது தொடர்பான பின்னணிகளும் விளக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட நிலவரங்களின் இறுதி வடிவம் தவிர்க்க முடியாதவகையில் இந்தப் பிரிவினைப் போராட்டம் உருவாகியது என்பது விளங்கப்படுத்தப்படுகின்றது. சான்றாதரங்களோடு வரலாற்றை எடுத்துச்சொல்லும் இந்த நாவல் ஒரு நாவலுக்குரிய தகுதி இழக்கப்படாமல், சுவை குன்றாமல் கதையை நகர்த்திச் செல்கிறது. அதேவேளை மலையக மக்களையும் முஸ்லிம் மக்களையும் அவர்தம் பிரச்சினைகளையும் குறிப்பிட்டு தென்னிலங்கையில் வாழும் தமிழர் வாழ்வையும் கருத்திலிருத்தி எல்லோரும் சுபிட்சமாக வாழும் வகையில் சுயநிர்ணய உரிமையோடு கூடிய பிரதேச சுய ஆட்சியே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என முன்மொழிந்து நாவல் நிறைவு பெறுகிறது.

'எரிமலை' நாவல் இலங்கையில் 2018இல் வெளிவந்த சிறந்த நாவலுக்கான கொடகே சாகித்திய விருதினையும் பெற்றது. இந்நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு கொடகே நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது என்பதும் இந்நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு தற்போது அச்சில் உள்ளது விரைவில் வெளிவரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் மாநகரில் ஒரு குட்டி யாழ்ப்பாணம்

எனது சுற்றுலாப்பயண அனுபவத்தில் மேற்குலக நாடுகள் எவற்றிலுமே காணமுடியாத தமிழர்களின் வியாபாரத் தலங்கள்; செறிந்து காணப்படும் ஓர் இடத்தைப் பாரிஸ் நகரில் கண்டேன். லாசப்பல் (La Chapelle) என்ற இடந்தான் அது. இங்கு தமிழரின் வணிக நிறுவனங்கள் குவிந்து காணப்படுகின்றன. அவை சாதாரண சிறிய கடைகள் அல்ல. பிரமாண்டமான பல கட்டிடத் தொகுதிகள். அவற்றைப் பார்த்தபோது எனக்குப் பெரும் மலைப்புத்தான் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில்கூட தமிழர்களுக்கான இத்தகைய கட்டிடத் தொகுதிகள் இல்லையென்றே சொல்லலாம்.

இந்த வணிக நிறுவனங்கள் புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழர்களாலும் பிரெஞ்சுக் கொலனியாக இருந்த பாண்டிச்சேரியில் இருந்து வந்த தமிழர்களாலும் நடத்தப்படுகின்றன. இது தொடர்பான எனது அவதானிப்பை அங்குள்ள கடைக்காரர் ஒருவருடன் கலந்துரையாடினேன். அவர் கடைவாசலில் முன்பகுதியில் திருநீற்றுப் பூச்சுடன் அமர்ந்திருந்தார். வாய்க்குள் அதக்கியிருந்த வெற்றிலைபாக்குக் குதப்பலுடன் கதைத்தார். அவருக்கு வயது 60 வரை இருக்கலாம் 25வருடங்களாக வெற்றிலை பாக்கு புகையிலை வியாபாரம் செய்கிறாராம்.



இந்தக் கடையின் முன்னால் தெருவோரமாக இருந்த குப்பைத் தொட்டியின் அருகே சிவப்பு நிறத்தில் வெற்றிலைத் துப்பல்களையும் காணமுடிந்தது. மேலை நாடொன்றில் இங்குதான் நான் வெற்றிலைத் துப்பலைக் கண்டேன். தமிழரின் கலாசாரம் தாம்பூலத்துடன் தொடர்புடையது அல்லவா!

இங்குள்ள அச்சுக்கூடம், அறிவாலயம், ஏனைய நூல் விற்பனை நிலையங்கள், உணவுச்சாலைகள் போன்றவற்றையும் சென்று பார்த்தேன். நூல விற்பனை நிலையங்களில் இலங்கையில் பெற்றுக்கொள்ள முடியாத ஈழப்போராட்டத்தோடு தொடர்புடைய பல தமிழ் நூல்களைக் காணமுடிந்தது. இவை பெரும்பாலும் தமிழகத்தில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட நூல்களாக இருந்தன.

இந்த லாசப்பல் என்ற குட்டி யாழ்ப்பாணத்தின் தனித்துவப் பெருமையை அறிந்து கொள்ள ஓர் உதாரணத்தைக் கூறலம். 1985இல் கட்டப்பட்ட ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் பிரான்ஸில் கட்டப்பட்ட முதலாவது இந்து ஆலயம் என்ற பெருமைக்குரியது. இந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெறும். பிரான்ஸின் பலபகுதிகளிலிருந்தும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் இந்துக்கள் இந்தத் தேர்த்திருவிழாவைக் கண்டுகளிக்க லாசப்பலில் கூடுவார்கள். தெருவெங்கும் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கடைகளின் முன்னால் நிறைகுடங்கள் வைக்கப்பட்டிருக்கும். காவடி ஆட்டம், கரக ஆட்டம், கற்பூரச்சட்டி எடுத்தல், அடியளித்தல், அங்கப்பிரதட்சணம் எனப் பல நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றப்படும்.

தெருவோரங்களில் மேடை அமைத்து மேளக் கச்சேரி, சங்கீதக்கச்சேரி என்பனவும் இடம்பெறும். வியாபாரத்தலங்கள் அனைத்திலும் மக்கள் கூட்டம் அலைமோதும். அங்குள்ள பிரபல தமிழ் ஊடகங்கள் தேர்த்திருவிழாவினை நேரடி அஞ்சல்செய்யும். தமிழரது வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள வீதி வழியாக சுமார் ஐந்து கிலோமீட்டர் தூர இரதவனி வரும்போது ஆயிரக்கணக்கான தேங்காய்கள் கும்பல் கும்பலாக அடிக்கப்படும். பின்னர் அவற்றை அகற்றுவதற்கும் வீதிகளைச் சுத்தப்படுத்தவும் ஆயிரக்கணக்கான யூரோ பணம் மாநகர சபைக்குக் கோயில் நிர்வாகத்தால் செலுத்தப்படுவதாகவும் அறிய முடிந்தது.

(இனி அடுத்த வாரம்)

படித்ததும் பகர்வதும் 23

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

கொரோனா! வருமுன் காப்போம்

இலங்கையில் இப்போது கொரோனாவின் இரண்டாவது அலை தாக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது. ஒருசில மாவட்டங்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் அதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளும் சிக்கலான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தற்போது நாட்டில் பதிவாகும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றமை கவலைக்குரியது.

இத்தகைய சூழலில் பொதுமக்கள் மிகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். எல்லா சந்தர்ப்பங்களிலும், எல்லா விடயங்களிலும், மிகுந்த கட்டுப்பாடுடனும், கவனத்துடனும் செயல்படவேண்டும். எமக்கு நாமே பொருத்தமான, சரியான விதிமுறைகளை வகுத்துகொண்டு பாதுகாப்போடு செயல்படுவது முக்கியமானதாகும்.

வீட்டிலிருந்து வெளியே செல்வது 'அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம்தான்' என வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

வர்த்தக நிலையங்களுக்கு செல்வதாயினும் இருவராகவோ, கூட்டாகவோ செல்லாமல் ஒருவர் மாத்திரம் செல்வதே பொருத்தமானதாகும். இது தொடர்பில் வீட்டில் உள்ள அனைவரும் தமக்குள் கலந்துரையாடி, தற்போதைய நிலைமையை உணர்ந்து செயல்பட வேண்டும். அத்துடன் நாட்டின் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் வைபவங்கள் ஏற்பாடு செய்வதையும், குடும்ப ஒன்றுகூடல்கள் நடத்துவதையும் இயன்ற அளவில் தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது.

தனிமைபடுத்தல் சட்டதிட்டங்களையும், சுகாதார வழிமுறைகளையும் முறையாகவும், கவனமாகவும், பொறுப்புணர்வோடும் பின்பற்றுதல் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதையும், அது எம்மை பீடிப்பதையும் கட்டுப்படுத்த முடியும்.

கொரோனா பற்றி கதைப்பதையும், அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதுபற்றி ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்குவதையும் வீண் பொழுதுபோக்காகவோ, வேடிக்கையாகவோ கருதாமல் அவற்றை எமது நன்மைக்கான வழிகாட்டல்களாக ஏற்றுக்கொண்டு நடைமுறைபடுத்தி நன்மைபெற முன்வரவேண்டும்.

கொரோனா ஒரு பயங்கர ஆட்கொல்லி நோய். 'வருமுன் காப்போம்' என்ற பொன்மொழி ஏற்று அது வருவதை தடுத்து, நாமும், நம் குடும்பத்தினரும், நம் உறவுகளும் ஆபத்துக்குள் விழுவதைவிட்டும் பாதுகாப்பு பெரும் வகையில் முறையாக, சரியாக செயல்படுவோம்.

நீத்தார் நினைவு

கலபூஷணம் கவிஞர் ஏ. எம். எம். அலி

இலங்கையின் மற்றுமொரு இலக்கிய ஆளுமை கலபூஷணம் கவிஞர் மர்ஹூம் ஏ. எம். எம். அலி கடந்த வாரம், தனது 72வது வயதில் எம்மை விட்டும் பிரிந்தார். 1976 இல் எழுதத் தொடங்கிய இவரது மரபுக்கவிதைகள், சிறுகதைகள், மெல்லிசைப்பாடல்கள், விமர்சனம் என நூற்றுக்கணக்கான ஆக்கங்கள் இலங்கையின் அனைத்துத் தேசியப் பத்திரிகைகளிலும் சிரித்திரன், சுடர், மல்லிகை, ஞானம், ஜீவநதி, யாத்ரா, போன்ற சஞ்சிகைகளிலும், இலங்கை வானொலி, தொலைக்காட்சி, இணையதளங்களிலும் இடம் பிடித்துள்ளன..

பாண்துண்டுப் பாவலன், கொலனியூரான், துறை முகத் துறைமகன் போன்ற பல புனைப் பெயர்களிலும் எழுதிய இவர் மரபுக் கவிதையில் பாண்டித்தியம் பெற்ற வராக திகழ்ந்தார். பல கவிதைப் போட்டிகளில் விருதுகளைப் பெற்றுள்ள இவர், 2002 இல் உலக இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார்.

'குடையும் அடைமழையும்', 'ஒரு திராட்சைக்கொடி தேம்பியழுகின்றது' என்பன இவரது கவிதைத் தொகுதிகள். 'ஒரு தென்னைமரம்' இவரது சிறுகதைத் தொகுதி. தனது நண்பர், இராஜதந்திரி சட்டத்தரணி ஏ. ஸி. எம். இப்ராஹீம் அவர்களின் சரித்திரத்தையும் ஒரு நூலாக்கித் தந்திருக்கின்றார்.

கவிஞர் அண்ணலுக்குப் பின்னரான கிண்ணியாவின் கவிதைப் பரம்பலுக்கு முன்னுதாரண புருஷராக, வழிகாட்டியாக மட்டுமல்லாது, கிண்ணியா அமீர் அலி உட்பட பல கவிஞர்களை உருவாக்கிய குருநாதராக மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஏ. எம். எம். அலி. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. முகநூல் வழியாக அவரது அகம் அழுத இறுதிக் கவி வரிகள் இவை.

" எழுபதுக்கு மேலாச்சு..! இனி
எல்லாமே போச்சு..!
விழுவதற்கு நாளாச்சு ..!
விழுந்திடுமே மூச்சு..!

மருத்துவமும் தரும் மருந்தும்
மரணத்தை நிறுத்திடுமா?
குறித்த தினம் வந்து விட்டால்
கூப்பாடுஞ் சரிவருமா?

யார் யாருக்கு எந்நாட்கள்..?
யாமறிய மாட்டோமே!
போவார்க்குத் தெரியாமல்
புலர்ந்துவரும் அந்நாளே..!

நொருக்குத் தீனி

சிரிப்பவர்கள் எத்தனை பேர்?

- ***போரினில் சிரிப்பவன் மாவீரன்***
- ***போதையில் சிரிப்பவன் குடிகாரன்***
- ***மமதையில் சிரிப்பவன் அதிகாரி***
- ***இன்பத்தில் சிரிப்பவன் ஏமாளி.***
- ***நினைவோடு சிரிப்பவன் அறிவாளி.***
- ***தெரியாமல் சிரிப்பவன் பசப்பாளி.***
- ***இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் கோமாளி.***
- ***குழைந்து சிரிப்பவன் சந்தர்ப்பவாதி.***
- ***நிலைகண்டு சிரிப்பவன் காரியவாதி.***
- ***அருளுக்கு சிரிப்பவன் ஆண்டி.***
- ***தற்பெருமையில் சிரிப்பவன் கோமை***
- ***துன்பத்தில் சிரிப்பவன் நம்பிக்கையாளன்.***
- ***சண்டையில் சிரிப்பவன் வன்முறையாளன்.***
- ***நிலை மறந்து சிரிப்பவள் காதலி.***
- ***காதலால் சிரிப்பவள் மனைவி.***
- ***அன்பால் சிரிப்பவள் அன்னை.***

பேசும் படம்



பொன்மொழி அது பொய்யா மொழி

பன்னாட்டுப் பழமொழிகள்

காதல், இருமல், கஸ்தூரி, பெருங்காயம் இவை நான்கையும் என்றும் மறைத்து வைத்துக் காப்பாற்ற முடியாது. என்றாவது ஒருநாள் வெளிப்பட்டே தீரும்.

பொலிவியா நாட்டுப் பழமொழி

வசைமொழிகள், ஊர்வலம் போன்றவை, அவை ஆரம்பித்த இடத்திற்கே இறுதியில் வந்து முடிகின்றன.

செக் நாட்டுப் பழமொழி

அதிகமாகச் சத்தம் செய்யும் டமாரத்தின் உள்ளே நிறைந்திருப்பது வெறும் காற்றுத்தான்.

ஸ்கொட் நாட்டுப் பழமொழி

துரதிர்ஷ்டத்துக்கு ஒருவனைத் தூக்குமேடை வரையில் கொண்டு போகக் கூடிய வலிமையிருந்தால், அதிர்ஷ்டத்துக்கு அவனை அந்த மேடையிலிருந்து நொடிப் பொழுதில் இறக்கும் வல்லமை இருக்கின்றது.

பிரஞ்சு நாட்டுப் பழமொழி

வைத்தியர்களின் தவறுகள் மண்ணில் புதைக்கப்பட்டு மறைக்கப்படுகின்றன. பணக்காரரின் தவறுகள் இலஞ்சத்தில் அமுக்கப்பட்டு மறைக்கப்படுகின்றன.

பிரித்தானிய பழமொழி

பேசும் கவிதை

பட்டுக்கோட்டையார் பாடல்

பட்டுக்கோட்டையார் பாடல் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 29 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்த மக்கள் கவிஞர். மிகக் குறைவான பாடல்களையே எழுதியிருந்தாலும் அவை அத்தனையும் மக்கள் மனதில் ஆழப்பதிந்துள்ளன. நல் அறிவுரை கூறும் புகழ்பெற்ற அவரது பாடல்களில் ஒன்று இங்கே பேசும் கவிதையாக.

சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா
நான் சொல்லப் போற வார்தையை நல்லா
எண்ணிப்பாரடா நீ எண்ணிப்பாரடா

ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதாண்டா வளர்ச்சி
உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி
நாளும் ஒவ்வொரு பாடம் கூறும் காலம் தரும் பயிற்சி
உன் நரம்போடுதான் பின்னி வளரனும் தன்மான உணர்ச்சி

மனிதனாக வாழ்திட வேனும் மனதில் வையடாதானே
எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா
வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது சொல்லி வெப்பாங்க
உன்தன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வெப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட நம்பிவிடாதே நீ
வீட்டிற்குள்ளே பயந்துகிடந்து வெம்பிவிடாதே

அன்றும் இன்றும்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 டிசம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.